1226

Tamil Nadu Legislative
Assembly Debates,
Official report,
V.14. No. 3. 3 May 1989.


V. 1'3,31'N89
N89.14.3
144930

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

சென்னை-600008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 3, 1989 - தொகுதி 14 - எண். 3
Wednesday, the 3rd May, 1989-Volume 14-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St George
Madras-600 009

விலை ரூ. 3.00 Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

3—5—1989.


பக்கங்கள்.

1. தகவல் கோரல்—

மே தினத்தன்று கடலூருக்கருகில் வன்னியர் தொழிற்சங்க ஊர்வலத்தின்போது ஏற்பட்ட அசம்பாவிதங்களையொட்டி நடைபெற்ற துப்பாக்கிச் சூடு .. .. 451–471

2. கவன ஈர்ப்பு—

(அ) அரக்கோணம் காந்தி சாலை மார்க்கெட் அருகே ஏற்பட்ட தீ விபத்து .. 471–473

(ஆ) பேராவூரணித் தொகுதியிலுள்ள நவக்கொல்லைக்காடு கிராமத்தைச் சேர்ந்த சிலர் கர்நாடக மாநிலத்தில் கொத்தடிமைகளாக இருப்பது குறித்து .. .. .. .. 474–476

3. அறிவிப்பு—

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989 .. .. .. 476

4. சட்ட முன்வடிவுகள்—

(அ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989 ... .. 476

(ஆ) மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989 .. 477

5. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள் .. } 477–534,
(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. } 537–603

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி .. 477–479, 573–602

*பேராசிரியர் க. பொன்னுசாமி .. 479–485

*திரு. பா. மனோகரன் .. .. 486–490

திரு. வெ. கோபாலகிருஷ்ணன் .. 491–494

| | பக்கங்கள். |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| திரு. பி. எச். பாண்டியன் .. .. | 494–500 |
| திரு. பெ. சீனிவாசன் .. .. | 500–505 |
| *திரு. உ.ரா. வரதராசன் .. .. | 505–515 |
| *திரு. கே. அங்கமுத்து .. .. | 515–519 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. .. | 519–526 |
| திரு. கோ. பூவராகன் .. .. | 527–534 |
| திரு. பொன். விஜயராகவன் .. .. | 537–549 |
| *திரு. ரா. சொக்கர் .. .. | 551–558 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு .. .. | 559–573 |
| 6. ஒழுங்குப் பிரச்சினை— | |
| ஆளுங்கட்சி ''லாபி''யில் உள்ள தொலைபேசி சரியாக வேலை செய்யாதது குறித்து | 534–537 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 603–604 |


144830

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 மே 3, புதன்கிழமை

சித்திரை 20, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

*'' பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால் ஆற்ற விளைவது நாடு.''*

*மிக்க பொருள்வளம் உடையதாய், எல்லோரும் விரும்பத் தக்கதாய், கேடு இல்லாததாய், மிகுதியாக விளைபொருள் தருவதே நாடாகும்.*

*[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

### 1. தகவல் கோரல்.

**மே தினத்தன்று கடலூருக்கருகில் வன்னியர் தொழிற்சங்க ஊர்வலத்தின்போது ஏற்பட்ட அசம்பாவிதங்களையொட்டி நடைபெற்ற துப்பாக்கிச் சூடு.**

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு வினா நேரம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் தாங்கள் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் போல் 2, 3 பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். நேற்றே அப்பொருள்பற்றி இந்த அவையில் விவாதிக்கப்பட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு ஒரு ஒழுங்குப் பிரச்சினை மூலமாக இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் நான் கொடுத்திருப்பது துப்பாக்கிச் சூடு ஏற்பட்டிருப்பதையொட்டிய ஒத்திவைப்புத் தீர்மானமாகும். மிக முக்கியமான பிரச்சினை. துப்பாக்கிச் சூட்டைவிட பதட்ட நிலையை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினை வேறு எதுவும் இருக்க முடியாது. மிக முக்கியமான பிரச்சினை ஒத்திவைப்புப்

பிரச்சினை. அதற்கு முதலமைச்சர் அவர்கள் அநேகமாக
பதிலைப் பெற்றுத் தயாராகத்தான் இருப்பார்கள். எனவே
அதை உடனடியாக எடுப்பதுதான் நியாயமானதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம்
என்ற முறையில் நான் இப்போது அனுமதிக்கவில்லை. வேண்டு
மானால் ஒன்றிரண்டு வரிகள் நீங்கள் அவற்றைப் பற்றி
எடுத்துச் சொல்வதற்கு நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் முடித்து விடுகிறேன்.
நீங்கள் பிறகு பேசுங்கள். ஏன் என்னுடன் சண்டைக்கு
வருகிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் உங்கள்கூடச்
சண்டைக்கு வந்தால் என்னவாகும் ? (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : அவர் பெரியவர். மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மே தின நாள் அன்று
1 ஆம் தேதி வன்னியர் சங்கத் தலைவர் டாக்டர் ராமதாஸ்
அவர்கள் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே
பாட்டாளி தொழிற்சங்கத் துவக்க விழா என்று சொல்லி,
தொழிற்சங்கத் துவக்க விழாவிற்கு தேதி கொடுத்துவிட்டு, கொடி
யேற்றி வைத்துவிட்டு, அவர் சென்றதற்குப் பின்னர் தொழி
லாளர் தினத்தன்று அங்கே கூடி இருந்த தொழிலாளர்கள்
மேல் காவல் துறையினர் புகுந்து லத்தி சார்ஜ் நடத்தி,
நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமுற்று இருக்கிறார்கள்.
அதைக் கண்டிக்கிற விதத்தில், அடுத்த நாள், 2 ஆம் தேதி
கடலூர்—பரங்கிப்பேட்டை சாலையிலுள்ள புதுச்சத்திரம் என்ற
இடத்திலே அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் ஒன்று
திரண்டு, சுமார் ஆயிரம் பேர் பஸ் மறியலில் ஈடுபட்டிருக்
கிறார்கள். அங்கேயும் திடீரென்று காவல்துறையினர் தோன்றி
எந்தவிதமான முன்னெச்சரிக்கையும், 'வார்னிங்' இல்லாமல்
நேரடியாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கின்ற காரணத்
தால், அந்த இடத்திலேயே ராஜேந்திரன் என்ற வாலிபர்
குண்டடி பட்டு, 'ஆன் தி ஸ்பாட்' மரணமடைந்திருக்கிறார்.
பல பேர் துப்பாக்கிக் குண்டுகளால் மிக பயங்கரமாகக் காயமுற்று
மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவ
மனைக்குக் கொண்டு வந்தகுருப் பின்னர் மருத்துவமனையில்
ஒருவர் இறந்துபோயிருக்கிறார் என்ற தகவல் கிடைத்திருக்
கிறது. இன்னும் சில பேருடைய உயிர் ஊசலாடிக்கொண்
டிருக்கிற நிலையில் படுகாயத்தோடு, மருத்துவமனையில் இருப்ப
தாகப் பத்திரிகைகளிலிருந்தும் மற்ற வகைகளிலிருந்தும் செய்தி
கள் கிட்டியிருக்கின்றன.



தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்
தினத்தன்று பலவற்றை அறிவித்திருக்கிறார்கள். அதே நேரத்
தில் தொழிலாளர்கள் ஒன்றுகூடி கொடியேற்றுகிறபோது
அமைதியாக இருந்த சூழ்நிலை— எனக்குச் சொல்லப்பட்ட
தகவலை நான் தருகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கும்
காவல்துறையினர் தந்திருப்பார்கள். முதலிலே வன்னியர் சங்
கத்தைச் சேர்ந்தவர்கள், தொழிற்சங்கத்தைச் சார்ந்த
வர்கள் எந்த வன்முறையிலும் ஈடுபடாமல் வெறும் கொடி
யேற்றிவிட்டு அமைதியாக ஊர்வலம் வந்து, பொதுக்
கூட்டம் நடப்பதாக இருந்து இருக்கின்றது. ஆனால்
ஊர்வலம் வருகிற பாதையில், அதற்கு முன்னாலேயே,
கூட்டம் வரக் கூடாது என்ற நோக்கத்தோடு அது மறிக்கப்பட்டு,
தடுக்கப்பட்டு, பேருந்துகள் எல்லாம் வழியிலேயே மறிக்கப்பட்
டிருப்பதாக செய்திகள். ஊர்வலம் சென்றபோது காவல்
துறையினர் அங்கே புகுந்து சிலபேரைத் தாக்கி, அதனால்தான்
இந்த அசம்பாவிதங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. அதற்குப்
பின்னாலே பொதுக்கூட்டம் கூட நடந்து, பொதுக்கூட்டத்தை
1/2 மணி நேரத்திலே டாக்டர் ராமதாஸ் அவர்கள் முடித்து
விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அடுத்த நாள் அதைக் கண்டிக்கிற விதத்திலே நடவடிக் கையில்
ஈடுபட்ட போது அமைதியாக, சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்ப்ப
தற்குப் பதிலாக உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது
மிகவும் கண்டனத்திற்குரிய ஒன்றாகும். மனித உயிர் அவ்வளவு
மலிவானது அல்ல. எப்படியோ திராவிட முன்னேற்றக் கழகத்
திற்கும் வன்னியர் சங்கத்திற்கும் இடையே ஒரு கசப்பு
உணர்ச்சி தொடர்ந்து பல நாட்களாக இருந்து வருகிறது.
அவர்களோடு சமரசம் செய்து அவர்களுடைய பிரச்சினைக்கு
தீர்வு கண்டு இருக்க வேண்டுமே தவிர துப்பாக்கிக் குண்டுகளால்
பரிகாரம் காண முடியாது. எனவே இந்தத் துப்பாக்கிச்
சூட்டை நாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வன்மையாகக் கண்டிக்
கிறோம். அதுவும் பொதுமக்கள் மேலே இந்தத் துப்பாக்கிச்
சூடு நடத்தப்பட்டிருக்கிறது.

சட்டம் ஒழுங்கு மாறுபடுகிறபோது நடவடிக்கை எடுத்து
சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவது என்பது ஒரு பக்கம்.
ஆனால் எடுத்த உடனேயே துப்பாக்கிக் குண்டுகளினால்
சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த அரசு முயற்சிக்கக் கூடாது
என்ற விதத்திலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின்
கருத்துக்களை எடுத்துச் சொல்லி அதைக் கண்டிப்பதற்காகத்
தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.
அவையை ஒத்தி வைத்து விவாதிக்க 'வேண்டுமென்று கேட்
டோம். அதற்குத் தாங்கள் அனுமதிக்கவில்லை என்றாலும்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான பதிலைத்
தந்து இனிமேலாவது வருகிற காலங்களிலே இது
போன்ற அசம்பாவிதங்கள், துப்பாக்கிச் சூடுகள் நடைபெறா

வன்னாம்--உங்கள் ஆட்சி வந்ததற்குப் பின்னாலே 3 மாதங்களுக்குள்ளாகவே 2, 3 இடங்களிலே இப்படி நடந்திருக்கிறது. சென்ற ஆண்டு அறிக்கையிலே கூட போலீஸ் மானியத்திலே 8 இடங்களிலே துப்பாக்கிச் சூடு. ஆனால் இந்த ஆண்டு, 2, 3 துப்பாக்கிச் சூடு இதுவரையிலும் நடந்துவிட்டது. காவல் துறையினர் அவசரப்பட்டாலும் சரி, ஆத்திரப்பட்டாலும் சரி—முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை செய்து துப்பாக்கிச் சூடுகள் இனிமேல் நடைபெறாத அளவுக்கு இந்த அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து பொதுமக்கள் மேலே, அது எந்தச் சங்கமாக இருந்தாலும், பிரிவாக இருந்தாலும், அந்தப் பிரிவுகள் அவர்களுடைய உரிமைகளுக்காக, கடமைகளுக்காகப் போராடுகிற போது, பேச்சு வார்த்தை மூலமாகத் தான் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டுமே தவிர, வன்முறை மூலமாகவோ, துப்பாக்கிக் குண்டுகள் மூலமாகவோ தீர்வு காண முயலக்கூடாது. எனவே அதை அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் சார்பிலே நான் வன்மையாக ஆட்சேபித்து, கண்டித்து இனிமேல் இது போன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாது இருக்க வேண்டுமென்று நான் கேட்டு, மருத்துவமனையில் இருப்பவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்க வேண்டுமென்றும், இதையொட்டி கைது செய்திருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஆனால் நேற்று முதலமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலுக்கு அப்புறமும் வன்முறை இன்னும் அங்கே ஜாஸ்தியாகிக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. போக்குவரத்துக்கு எந்தவிதமான வசதியும் இல்லை. பாதுகாப்பும் சரியான முறையில் கொடுக்க முடியவில்லை. கொடுத்தாலும் சரியான முறையில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். அந்த வன்னியர் போராட்டத்தில், வன்னியருக்கும், இந்த தி.மு.க. அரசுக்கும் ஏதோ பிடிக்கவில்லை என்பது போலச் சொன்னார்கள். இந்தப் போராட்டம் கவர்னர் ஆட்சியிலேயும் நடந்தது. அதற்கு முன்னாலே எம்.ஜி.ஆர். ஆட்சியிலேயும் அவர்கள் தொடர்ந்து போராடி வந்தார்கள். இன்றைக்கும் அது தொடர்ந்து வருகிறது என்று தான் சொல்லியிருக்க வேண்டும். இன்றைக்குத்தான் இருப்பது போல் சொன்னதை நான் மறுக்கிறேன். ஆகையினால் வன்னியருக்கும், தி.மு.க.வுக்கும் ஏதோ விரோதம் என்று சொல்வது சரியில்லை. தற்போது 24 சீட்டிலே 23 சீட்டுதான்........



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலை எதிர்பார்ப்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து தான். என்னைப் போன்ற இன்னொரு கட்சியான, தோழமைக் கட்சியாக இருப்பவர்களிடத்திலிருந்து அல்ல என்பது ஒன்று. இரண்டாவது, இந்தப் போராட்டம் இப்போதுதான் ஆரம்பித்தது என்று சொல்லவில்லை. எப்படியோ தொடர்ச்சியாக ஒரு கசப்பு உணர்ச்சி இருக்கிறது. அதை மாற்ற முயற்சிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே அந்தக் கருத்தைச் சொன்னேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** அவர் எனக்கு வேண்டுமானால் பதில் சொல்லட்டும். நான் அவர் சொன்னதற்குப் பதில் சொன்னேன். அது தப்பாக இருந்தால் சொல்லச் சொல்லுங்கள். இந்தப் போராட்டம் இன்றைக்கு ஏற்பட்டது அல்ல என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் அல்ல. மறுபடியும் இன்றைக்கு பந்த் ஏற்படுத்தி ஜனங்களிடையே தொந்தரவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எங்கள் திருச்சி ஜில்லாவிலே அரியலூர், மீன்சுருட்டி, ஜெயங்கொண்டம் வரையில் இருக்கிற வட்டாரம், வன்னியர் ஏரியா பூராவிலுமே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த இடங்களுக்கு பஸ் போக்குவரத்து இல்லை. என்னிடத்திலே 10 பேர் கெஸ்ட்டாக வந்தார்கள். அவர்கள் இன்றைக்குக் கிளம்ப வேண்டுமென்று பார்த்தால் பஸ் இல்லை. மறியல் என்று சொல்லிவிட்டார்கள். ரயிலைப் பார்த்தால் அதுவும் பயமாக இருக்கிறது. இதற்கெல்லாம் ஒரு முடிவு ஏற்படுத்துவதற்கு ஒரு சமாதான முறையில் வந்தால் நேரிடையாக எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். எல்லோரும் உட்கார்ந்து கூட பேசத் தயாராக இருக்கிறோம். அதை எப்படியாவது சுருக்கமாக இன்றைக்குள் தீர்த்துவிட்டால் தான் ஜனங்களுக்கு நல்லபடியாக இருக்கும். ஒரு நெருக்கடியான பதட்ட நிலை இல்லாமல் இருக்கும். அதற்குப் பதில் சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடத்திலே ஏற்கெனவே இசைவு பெற்றவர்கள் தான் பேசுகிறார்கள் என்பதை மற்றவர்கள் உணர வேண்டும்.

**திரு. கே. ரமணி:** தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கெனவே இது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததை இன்றைக்கு எடுக்கவில்லை என்று சொன்னீர்கள். இப்போது நீங்களே கொண்டு வந்திருப்பதால் நாங்கள் அதைப்பற்றி சில விவரங்கள் சொல்லும்படியாக வந்திருக்கிறது. இப்படிப்பட்ட அபாயம் ஏற்படும் என்கிற ஒரு அச்சம், அந்த மாதிரி சூழ்நிலை, ஒரு சிச்சுவேஷன் உருவாகி இருக்கிறது என்பது குறித்து எங்களுக்கு பல இடங்களிலிருந்து ரிப்போர்ட் வந்திருக்கிறது. எங்களுடைய கட்சிக்கு அந்த விவரங்கள் வந்திருக்கின்றன.

[திரு. கே. ரமணி] [1989 மே

மே தினம் உலகம் முழுவதும் நடத்தப்படுகிற பாட்டாளி மக்களுடைய ஒரு தினம். அன்றைய தினம் ஊர்வலம் நடத்தியிருக்கக்கூடிய இடங்களிலே, அந்த ஊர்வலம் நடக்கும்போது எந்தவிதமான அசம்பாவிதங்களும் ஏற்படக்கூடாது என்று அனைத்துக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் கவனமாக இருந்து பிரம்மாண்டமான இயக்கமாக தமிழகம் முழுவதும் நடந்திருக்கிறது.

(முற்பகல் 9-10)

அதிலே எல்லோரும் பங்கு எடுத்திருக்கிறோம். அமைச்சர்களிலிருந்து இந்த அவையினுடைய உறுப்பினரிலிருந்து, தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேரும் பங்கு எடுத்திருக்கிறோம். எந்த இடத்திலும் வன்முறை தலைதூக்கவில்லை. எவ்வளவோ வித்தியாசங்கள் இருந்தும், தனித்தனியாக இருந்து நடத்தியும் கூட வன்முறை தலைதூக்கவில்லை. ஆனால் வன்னியர்கள் தொழிலாளர் சங்கங்களை வைத்திருக்கிறார்களா? இருக்கலாம். ஆனால் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இந்த மே தினத்தன்று அவர்கள் ஊர்வலம் நடத்தும்போது அங்கே போய்க் கொண்டிருந்த பஸ்களில் இருக்கக்கூடிய பிரயாணிகளா நமக்கு விரோதிகளா? அவர்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? அந்த பஸ்ஸிலே பயணம் பண்ணிக்கொண்டு இருக்கக்கூடிய பயணிகள் நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும்—ஊர்வலம் வந்த போது தனியாக ஓரத்திலே நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அந்த டஜன் கணக்கான பஸ்களை அடித்து உடைத்து இருக்கிறார்கள். அது எப்படி சமாதானம் ஆகும்? அது எப்படி? இப்படி நடந்திருக்கிறது. இது நடந்திருக்கிறது. நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்—நேற்றையதினம் நமது சபாநாயகர் அறையிலே வந்து அவருக்கு ஏற்பட்டிருக்கும்படியான சங்கடத்தைச் சொன்னார். கொஞ்சம் ஏமாந்திருந்தால் அவர் நேற்றைய தினம் உயிர் பிழைத்து இருக்க மாட்டார். சாம்பலாகியிருப்பார். அவர் ஏறிச்சென்ற பஸ்ஸை நிறுத்தி அந்த பஸ்ஸுக்குள்ளே பெட்ரோலை ஊற்றி அதில் நெருப்பு வைத்து இருக்கிறார்கள். வெளியிலிருந்து 100, 150 பேர்கள் முழுக்கால் சட்டை போட்டுக் கொண்டு, தலையிலே துண்டு கட்டிக் கொண்டு, அடையாளம் தெரியாத முறையில் அவர்கள் சட்டை போட்டுக்கொண்டு வந்து, யார் அடிக்கிறார்கள் என்று தெரியாத வண்ணம் அடித்து கண்ணாடி முழுவதும் நொறுங்கி, அந்த ஜனங்கள் பயந்து போய் உள்ளே இருக்கின்ற சமயத்தில் பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்திருக்கிறார்கள். இது என்ன ஜனநாயகம்? என்ன பிரச்சினை இதிலே தீரும்? இதிலே பிரச்சினை தீராது. வன்னியர் சம்பந்தப்பட்ட அவர்களுடைய நியாயமான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நமக்கு இரண்டு அபிப்பிராயம்



1989 மே 3] [திரு. கே. ரமணி]

அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் நமக்கு
கிடையாது. சொன்னார்—இப்போது நாங்கள்
எடுத்துச் சொல்லும்போது இந்த முடிவு மட்டும் அல்ல, இதை
கொடுத்திருக்கும்படியான நடைமுறையில் என்ன
அமலுக்குக் கொண்டு வரும் போது அதை கணக்கில் எடுத்துக்கொண்டு
அனுபவம் கிடைக்கின்றது. தயாராக இருக்கிறோம்—என்று
திருத்திக்கொள்வதற்குத் அப்படிப்பட்ட நிலைமையில் இந்த
சொல்லியிருக்கிறார். எப்படிச் சரியாகும்? அந்தக் காரியத்தை நிறை
நடவடிக்கை வேற்றுவதற்கு இப்படி ஒரு போர் வடிவம், ஒரு போராட்ட
வடிவம், a form of struggle. இந்தமாதிரி கையாள
முடியுமா? எப்படிக் கையாள முடியும்? அதற்குப் பிறகு
அந்த பஸ் எரிய ஆரம்பித்தது. அதில் இருக்கின்ற
பிரயாணிகள் முழுவதும் எரிந்து சாம்பலாகியிருப்பார்கள். அவர்
கள் எப்படித் தப்பித்தார்கள்? அந்த விஷயத்தை அவர் சொன்
னார். ஒரு பஸ்ஸுக்குப் பின்னால் இன்னொரு பஸ் வருகிறது.
அதை அடிப்பதற்கு பலாத்கார கூட்டம் இதை விட்டு விட்டு அங்கே
ஓடியவுடனே எரிந்துகொண்டிருந்த நெருப்பிலிருந்து இந்த
ஜனங்கள் குதித்து வெளியே வந்து அதிலிருந்து தப்பியிருக்கிறார்
கள். 4, 5 பஸ்கள் தீக்கிரையாகியிருக்கின்றன. டஜன் கணக்
கான பஸ்கள் அடித்து உடைக்கப்பட்டிருக்கின்றன.
இது ஒரு பக்கம். இது திட்டமிட்டே செய்யப்பட்ட
அடிப்படையில்தானே. இதிலே ஒன்றும் சாட்சியமே தேவை
யில்லை. அந்த இயக்கத்தினுடைய மாபெரும் தலைவர் டாக்டர்
ராமதாஸ் அவர்கள் வெளியிட்ட அறிக்கையைப் பற்றித்தான்
நான் இங்கே குறிப்பிட்டேன். அதிலே தெளிவாக விவரம்
இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து சுருக்கமாக முடிக்க வேண்டுகிறேன்.

திரு. கே. ரமணி : உயிர் போய்க் கொண்டிருக்கிறது. எந்த
உயிரானாலும் மனித உயிர். இட் ஈஸ் ப்ரஷ்ஷியஸ். அதை நாம்
திரும்பப் பெற முடியாது. அதனால்தான் சொன்னேன். இல்லை
யென்றால் சொல்ல மாட்டேன். அப்படிப்பட்ட முறையில் அவர்
வெளியிட்ட அறிக்கை இருக்கிறதே அது வெறும் வாய்ச் சொல்
மட்டும் அல்ல. ஏன் கத்தி வைத்திருக்கவில்லை? ஏன் தடி
வைத்து இருக்கவில்லை என்று கேட்கிறார். அப்படி சொல்
லக்கூடிய வார்த்தையை நிறைவேற்றுவதற்கு கத்தியும், தடியும்
பலாத்காரமாக அதனுடைய வடிவங்களாக ஆக்கி அதை உப
யோகப்படுத்துங்கள், அதிலே எந்த ஜனங்கள் உயிர் போய்விட்
டாலும் அதைப்பற்றிக் கவலை இல்லை. எத்தனை சொத்துக்கள்
அழிக்கப்பட்டாலும் அதைப்பற்றிக் கவலைஇல்லை என்று சொல்
லக்கூடிய நிலைமை நடைபெற்று இருக்கிறது. சமாதானத்தை,
உலக சமாதானத்தை வேண்டி, உலக யுத்தத்தை எதிர்த்து
நிற்கக்கூடிய மக்களுடைய மேன்மையான வாழ்க்கை, உழைப்பாளி

[திரு. கே. ரமணி] [1989 மே 3

வர்க்கம் சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்கான கோஷங்களை வைத்து இயக்கம் நடத்துகின்ற அன்றைக்கு இந்த நிலைமை நடக்கிறது என்று சொன்னால் இது பொறுக்க முடியாத ஒரு நிலைமை. ஆகவே இந்த நிலைமை வளரும். அதனால் தான் அன்றைக்கு இந்தப் பிரச்சினையைக் கிளப்பினேன். எந்த விதத்திலும் வன்னியர் சங்கத்தினுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இந்த வடிவங்கள் ஒத்துவராது. இது அநேக சகோதர ஜனங்களை கலகத்திற்கும், சண்டைக்கும் இரையாக்கும். அவர்கள் உயிர் நீக்கும்படியான நிலைமையும் ஏற்படலாம். அந்த அபாயம். அதோடு துப்பாக்கிப் பிரயோகங்களை உபயோகப்படுத்தி அதிலும் பல பேருடைய உயிர் போகக்கூடிய நிலைமை ஏற்படலாம். அதனுடைய தோற்றுவாய், ஆரம்பம் எங்கிருந்து என்று, சபாநாயகர் அவர்களே, நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை நீடிக்கக் கூடாது. உடனடியாக இதன் பேரில் அவர்களுடைய குறைகளை அவர்கள் நேரில் வந்து பேசட்டும். இது பேசுவதற்கு இருக்கிற விஷயமே தவிர, இது அடக்குவதற்கு இருக்கிற விஷயம் அல்ல. இது யுத்தப் பிரகடனம் அல்ல. இது சமாதானமாகத் தீர்க்க வேண்டிய கொள்கைப் பிரகடனமாக இருக்கட்டும். அப்படி வந்து, அரசிடத்திலே பேசி சமாதானமாக அதைச் செய்ய வேண்டும். அதற்கு நமது முதலமைச்சர் அவர்களும், நாம் எல்லோரும் அதற்கு உதவி செய்யலாம். அந்த முறையில் முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பில் அவர்களோடு பேசி, இதற்கு முடிவு காண வேண்டும். இதைச் சொல்லும்போது, எந்தக் காரணத்தைக் கொண்டும், பொது ஜனங்களில் ஒரு உயிருக்குக் கூட அபாயம் ஏற்படக் கூடாது. போக்குவரத்தை அடித்து உடைக்கக் கூடாது. போக்குவரத்து நிறுத்தப்படக் கூடாது. ஏற்கெனவே நடந்த அனுபவம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது). முடித்து விடுகிறேன். அந்த அனுபவத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒரு சமாதானமான பேச்சு வார்த்தையின் மூலமாக இது நடக்க வேண்டும். பலாத்கார கோஷங்களை அமல்படுத்துவதற்கு எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கக்கூடாது என்ற உறுதியை வைத்துக் கொண்டே இந்தப் பேச்சு வார்த்தையை நடத்தி முடிவு காண வேண்டும் என்று கோருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கோ. பூவராகன். (குறுக்கீடு) இது விவாதம் இல்லையே; அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். (குறுக்கீடு) இது விவாதம் என்றால் இங்கே ரொம்பப் பேர் கை தூக்குகிறார்கள், எப்போது நடத்தி முடிக்க முடியும்? இது என்ன முறை? நீங்கள் வேறு வாய்ப்பு வரும்போது பேசுங்கள்.



1989 மே 3]

*திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று என்னுடைய மாவட்டத்தில் நடந்த நிகழ்வினைக் குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தங்களிடம் கேட்டு இருக்கின்றேன். நேற்றைய தினமும், நேற்றைய முன் தினமும் இரவு நேரங்களில் நடந்த நிகழ்ச்சி, ஒரு துப்பாக்கிச் சூடு ஏற்பட்டது. அதன் விளைவாக இன்றையதினம் தென்னாற்காடு மாவட்டம் முழுமைக்கும் கடையடைப்பு; போக்குவரத்து பாதிப்பு. இதிலே இன்றையதினம் ஏதோ ஒரு சமுதாயப் பிரச்சினைக்காக ஒரு சமூகத்தவர் ஏற்படுத்தியிருக்கின்ற பிரச்சினை மட்டும் அல்ல. சில அரசியல் கட்சிகள் உள்ளே புகுந்து ஆளுகின்ற கட்சிக்கு ஒரு தொல்லை கொடுக்க வேண்டும் என்று செய்கிறார்கள். குறிப்பாக எதை வைத்து நான் சொல்கிறேன் என்று சொன்னால், அவர்கள் மே தினம் கொண்டாடுகிறார்கள். மே தினத்திற்கு வருகின்றவர்கள் பல பகுதிகளிலிருந்து வந்திருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து வந்திருக்கிறவர்கள் மட்டும் வன்முறைச் செயலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஊர்வலம் நடைபெறாத பாதைகளிலே கூட பஸ்களை மறித்துக் கொளுத்தி இருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இதிலே சம்பந்தப்பட்டவர்கள் தான் செய்து இருக்கிறார்
களா என்பது தெரியவில்லை. மேற்கொண்டு சில அரசியல்
கட்சிகள் இந்தச் சமயத்தைப் பயன்படுத்தி, ஆளுகின்ற கட்சிக்கு
ஏதாவது ஒரு தொல்லை கொடுத்து, மேலும் அவர்கள் கொடுத்
திருக்கின்ற அந்த இருபது சதவிகிதத்தை எடுத்து விடுவதற்கோ,
அது நடைபெறாமல் தடை பெறுவதற்கோ, மேலும் கொடுக்
காமல் தடை விதிப்பதற்கோ ஒரு முயற்சி நடைபெறுவதாக
நான் அறிகின்றேன். ஏதோ மறைமுகமாக அவர்களுக்கு அனு
சரணையாக நடப்பது போன்று அறிவித்து இடையிலே குறுக்கே
புகுந்து நல்ல நிலை, சூழ்நிலை ஏற்படுத்த முடியாத ஒரு நிலையை
ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள்,
அவர்களை அழைத்துப் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்,
நான் அறிந்த அளவிலே. என்ன அவர்களுக்குக் குறை இருக்கிறது
என்பதைக் கண்டு, அதைப் போக்குவதாகக் கூட இந்த மன்றத்
திலே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி
இருக்கின்றபோது, அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வெளிப்
படையாக இவ்வாறு எல்லோருக்கும் தொல்லை கொடுக்கக்
கூடிய ஒரு சூழ்நிலையில் ஈடுபட்டு இருப்பது நமக்கு
எல்லோருக்கும் வருத்தத்தைக் கொடுக்கின்றது. நமது
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னது போல,
முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, எந்த
நேரத்திலும் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசுவதற்குத்
தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இடையிலே
இருக்கிறவர்கள், இதுமாதிரி சமாதானத்திற்கு நீங்கள் போக

வேண்டாம், இதை அப்படிச் செய்தால் நல்லது, இப்படிச் செய்தால் நல்லது என்று சொல்கிற போக்கிலே இன்றையதினம் இருப்பதை நாம் பார்க்க முடியும். குறிப்பாக, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது, ஏற்கெனவே நிரந்தரமாக ஒரு சமூகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பகை இருப்பது போன்று அவர்கள் வெளிப்படையாகச் சொல்லியிருப்பது, அது ஏதோ மனதிலே இருப்பதை தவறி அவர்கள் சொல்லி விட்டார்கள் என்ற நிலைக்குத் தான் வருகிறது. அவ்வாறு உற்சாகப்படுத்துவது, தனிப்பட்ட முறையிலே ஒரு சமூகத்திற்கும், ஆளுகின்ற கட்சிக்கும் விரோதம் இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே சொல்லியிருப்பது வெளியிலே இருக்கின்ற மக்களுக்குத் தவறான ஒரு எண்ணத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும். அதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்வேன். அது மட்டுமல்ல. (குறுக்கீடு) எல்லோருக்கும், இதிலே குறிப்பாக ........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடிக்கட்டும், முடித்தவுடன் சொல்லலாம். (குறுக்கீடு).

THIRU G. BHOOVARAGAN : I am not yielding. (Interruption) Whatever you want to say, you can say afterwards. (Interruption)

(முற்பகல் 9-20)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ துப்பாக்கிச் சூடு சம்பவம் நடைபெற்று இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஒரு அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தப் பிரச்சினையை எழுப்பினோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது தன் விருப்பம் போல் பேசட்டும். அதைப் பற்றி பிரச்சினை இல்லை. நான் ஏதோ மனதிலே வைத்துக் கொண்டு பேசுவதாக அவர் களங்கம் கற்பித்துப் பேசுகிறார். அவர் தான் எப்படி பேசுவது என்று தெரியாமல் தடுமாறுகிறார். மனதில் ஏதோ வைத்துக் கொண்டு அந்தப் பக்கமும் திருப்திப்படுத்த வேண்டும், இந்தப் பக்கமும் திருப்திப்படுத்த வேண்டும், ஆளுங்கட்சியையும் திருப்தி செய்ய வேண்டும், முதலமைச்சரையும் திருப்தி செய்ய வேண்டும். தன்னுடைய சமுதாயத்தையும் திருப்தி செய்ய வேண்டும் என்று அதற்காக இரட்டை நிலையில் அவர்தான் பேசுகிறாரே தவிர நான் பேசவில்லை. நான் உண்மையான பிரச்சினையை எடுத்துச் சொன்னேன். பரிகாரம் காண வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்படி களங்கம் கற்பித்துப் பேசுவதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது. அவர் ஏற்கெனவே பேசுகிறபோதே சொன்





னார்.—நான் ஏற்கெனவே சொன்னது, நடந்ததைச் சொன்னேன். 1987 இல் இந்த மாதிரி ஒரு சம்பவம்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வன்னிய சங்கத்திற்கும் ஒரு தகராறு நடந்தது, பிரச்சினை இருந்து கொண்டே இருக்கிறது, மாறி மாறி அறிக்கைகள் எல்லாம் வந்து கொண்டே இருக்கின்றன என்று நடந்த சம்பவத்தைப் பற்றிச் சொன்னேன், இல்லாததை சொல்லவில்லை, நடந்ததைச் சொன்னேன். அந்தப் பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்ற முறையில் நான் சொன்னேன். அவர் எதிர்க் கட்சியினர் தூண்டினார்கள் என்ற முறையில் முதலில் சொன்னார். நான் அப்போதே அப்ஜெக்ஷன் சொல்லலாம் என்று பார்த்தேன், சரி வேண்டாம் என்று விட்டு விட்டேன். அதற்குமேல் இன்னும் தொடர்ந்து கொண்டே போய் மேலும் மோட்டிவ் கற்பித்துப் பேசுவது நல்லது அல்ல. அவற்றைத் தயவு செய்து நீங்கள் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து நான் உங்களுக்குத் தருகிற வாய்ப்பைப் பயன்படுத்திக் கருத்துக்களை வரம்பு மீறாமல் எடுத்துச் சொன்னால் மட்டும் தங்களை நான் தொடர்ந்து அனுமதிக்க முடியும். திரு. திருநாவுக்கரசு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வன்னிய சங்கத்திற்கும் தொடர்ந்து பிரச்சினை இருக்கிறது என்ற தொடரில் சொன்னார்கள். அதற்கு நீங்கள் உள்நோக்கம் கற்பிப்பதாக அவர் கருதுகிறார். அருள்கூர்ந்து அதுபோல் உள்நோக்கம் கற்பிக்காமல் உங்களுடைய செய்தியை மட்டும் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இப்போது பேசியது எனக்கு பதில் உரைக்கின்ற அளவில் பேசுகின்ற பேச்சு. எந்த அளவிற்கு உள்நோக்கம் இல்லை என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். நான் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன், அதுவும் உண்மையிலேயே அந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற குறைகளை நன்கு அறிந்தவன், தெரிந்தவன், ஆளுங்கட்சிக்காக அல்லது சமுதாயத்திற்காகப் பேசுகிற எண்ணம் எனக்கு எப்போதும் கிடையாது. அந்த அளவில் நான் பேசியதும் கிடையாது. என்னுடைய அரசியல் வாழ்க்கையில் நீங்கள் தொடர்ந்து பார்த்தீர்களானால் அந்த நிலையில் நான் இருந்தது இல்லை. அந்த உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபோது ஒரு பொறுப்புள்ள உறுப்பினர், இன்றையதினம் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அந்தச் சமுதாயத்திற்கும் நல்ல உறவு இல்லை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அந்தச் செய்தியை விட்டு அடுத்த செய்திக்கு வாருங்கள் (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கேட்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம். (குறுக்கீடு).

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி தடுமாறுகிற நிலையில் நான் இல்லை. நான் தடுமாறவும் மாட்டேன். நான் எதையும் எதிர்பார்த்து இருப்பவனும் இல்லை. தடுமாறுகிற நிலை எனக்கு ஒன்றும் இல்லை. தடுமாறுகிற நிலையில் இருக்கின்ற தலைமையின் கீழ் நான் வளர்ந்தவனும் இல்லை. நான் வளர்ந்தது எல்லாம் நல்ல முறையில் ஒரு நல்ல நிலையில் இருந்து. அதேபோல் தடுமாறுகிற நிலையில் இருக்கின்றவர்களோடு நான் பழகியதும் இல்லை. அந்தத் தலைமையின் கீழ் வளர்ந்தவனும் இல்லை. அதனால் நிதானமாகவும், நல்லவிதமாகவும் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகநான் இந்தச் சம்பவத்தைப் பற்றி எடுத்து வைக்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதிலே அரசியல் கட்சிகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நன்றாக இந்தப் பிரச்சினையை தீர்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அதைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக நான் சொல்லுகிறேன். இதில் கற்பனையாகச் சொல்லுவதாக அவர் சொன்னார். எனக்கு நன்றாகத் தெரியும். என்னைத் தேடிக்கொண்டு வந்தவர்கள் சிலபேர், இந்த மன்றத்தில் இருக்கின்ற திரு. திருநாவுக்கரசு அவர்களைப் பார்க்க வேண்டும் என்றும், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்களைப் பார்க்க வேண்டும் என்றும் கேட்டார்கள். என்னவென்று நான் கேட்டபோது அவர்கள் விவரம் எல்லாம் சொன்னார்கள், என்னிடம் அந்த விவரங்களைச் சொல்லக்கூடாதா? நான் கேட்கக் கூடாதா? என்ன என்று கூடக் கேட்டேன் அதிலே இருந்து அவர்கள் முன் எச்சரிக்கையாக எல்லாம் அறிந்து வைத்து இருக்கிறார்கள் என்பதற்காக நான் இதைச் சொல்லுகிறேன். அரசியல் தலைவர் ஒருவர் கூட இதிலே சம்பந்தப்பட்டு இருக்கிறார். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடாது. தொடர்ந்து இந்தப் பிரச்சினை இருந்து தீர வேண்டும் என்பதற்காக இந்த முயற்சி நடைபெறுகிறது. இதை தவிர்க்க வேண்டும் என்பதற்காக நான் இன்றைய தினம் சொல்லிக்கொள்வது— அவர்கள் என்னைப் பற்றித் தவறாக பல கருத்துக்களை சொல்லுகின்றபோது நீங்கள் அனுமதித்தீர்கள். ஆனால் அவர்களை பற்றி நான் தனியாக ஒன்றும் சொல்லவில்லை. என்னிடம் வந்த தகவலை தெரிவிக்கிறேன். அந்த தகவலை இந்த மன்றம் அறிய வேண்டும் என்பதற்காகவும், வெளியிலே இருக்கிற மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் தான் நான் சொல்லுகிறேன். அப்படி இருக்கின்றபோது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு—வெளியில் பதட்ட நிலை இருக்கிறது. நாளை மறுதினம் நெய்வேலியிலும் அதை ஒட்டியிருக்கின்ற பகுதியிலும் ஒரு போராட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால் அந்தப் பகுதியில் மின்சாரம் தடைபட்டால் ஏற்கெனவே தடைபட்டு இருக்கின்ற மின்சாரத்தை ஒட்டி பல குழப்பங்கள் ஏற்படும் என்பதற்காக இவ்வாறு எல்லாம் தொடர்ந்து முறையாக ஒரு நாள் விட்டு



ஒருநாள், மறுநாள் என்ற முறையில் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு இது சம்பந்தப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களை எல்லாம் அழைத்து எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து ஒரு சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி வாய்பபுக்கு நன்றி கூறி வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இங்கே அமர்ந்து இருக்கிறோம். எல்லாம் சுமூகமாக, சமாதானமாக, சக வாழ்வுக்காக நடக்க வேண்டும் என்று சொல்லுகிறோமே அந்த எண்ணமே நமது உள்ளத்தில் மேலோங்கி நிற்கிறது. பல வல்லரசுகள் கூட ஒருவருக்கொருவர் பேசித் தீர்க்க முடியுமா என்று பார்த்துப் பேசித் தீர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இந்தப் பிரச்சினையை பேசித் தீர்க்க முடியும் என்றே நான் கருதுகிறேன். வேதனை தரக்கூடிய பல சம்பவங்கள் நடந்துவிட்ட போதிலும் கூட இன்று நான் பணிவன்போடு ஒரு வேண்டுகோளை இங்கே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் இங்கே வைக்க விரும்புகிறேன்.

மீண்டும் முதல்வர் அவர்கள் பேசித் தீர்ப்பதற்குரிய வழி வகைகளை ஆய்ந்து, பேசுவதற்கு அவர்களை அழைக்க வேண்டும், சுமூகமாக முடிப்பதற்கு வழி தேட வேண்டும். அதுவே எங்கள் ஆசை என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய இந்த மிகுந்த பதட்டமான சூழ்நிலை தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு என்றைக்குமே கவலை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. வன் முறையை ஆயுதமாக எடுத்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்றைக்குமே அது உதவாது என்பதை இந்த மன்றத்தில் மூல மாக இந்தப் பிரச்சினையிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப் பவர்களுக்கு நான் வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். பேச்சு வார்த்தையின் மூலமாக, சுமூகமாக உட்கார்ந்து பிரச்சினைகளைப் பேசுவதாலேதான் பிரச்சினைகள் தீரும் என் பதை கருத்தில் கொண்டு தொடர்ந்து வன்முறையில் ஈடுபடுகின்ற செயலை அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்களிடம் மற்ற நண்பர் களிடம் நிறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, அரசாங்கத்தினுடைய சார்பிலும் நடந்தவைகளைப் பற்றி ஏற்படுகின்ற கவலைகள் ஒருபுறம் இருந்தாலும், பேச்சு வார்த்தையைத் தொடங்குவதற்கு முன் வர வேண்டும். இது மேலும் தொடர்ந்து பரவக் கூடாது. இங்கிருந்து தென் மாவட்டங்களுக்குப் போவதற்குக்கூட முடியாத அளவிற்கு,

[திரு. பொன். விஜயராகவன்] [1989 மே 3

பேருந்துகள் போக முடியாத அளவிற்கு சில இடங்களிலே பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, அரசும் இதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு சுமூகமான பேச்சு வார்த்தை தொடங்குவதற்கு முன் வந்து, இரு தரப்பாரும் உட்கார்ந்து பேசுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன், நன்றி.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்தப் பிரச்சினை குறித்து இதேபோல பல எதிர்க்கட்சிகளுடைய தலைவர்களும் உறுப்பினர்களும் எடுத்துக்காட்டி விளக்கமான பதிலை நான் இந்த அவையிலே கூறியிருக்கின்றேன். மே தினத்தில், பாட்டாளிகளுடைய நாளில் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி ஏற்படலாமா என்று எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே கேட்டார்கள். நான் அவர்களுடைய உணர்வை மதிக்கிறேன். நண்பர் இராமதாஸ் அவர்களுடைய தலைமையிலே உள்ள சங்கத்தினர், அவர்களும் பாட்டாளிகள் சங்கம் என்கின்ற பெயரால் சங்கத்தினுடைய கொடியினை ஏற்றிவைத்துவிட்டு விழுப்புரத்திலே உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகத்தின் வாயிலில் அந்தக் கொடியினை ஏற்றிவைத்துவிட்டு—அடுத்ததாக அவர்கள் செய்த காரியம் என்னவென்றால் மே தினம் உலகம் எங்கும் கொண்டாடப்படுவதற்கு எந்தத் தத்துவம் பின்னணியாக இருக்கிறதோ அந்தத் தத்துவத்தின் சொந்தக்காரரான மார்க்ஸ், அந்த மார்க்ஸினுடைய போதனைகளை ஏற்று நடத்தப்படுகின்ற இயக்கத்தினுடைய கொடி, செங்கொடியை, சி.ஐ.டி.யூ.வினுடைய கொடியை, பக்கத்திலே பறந்துகொண்டிருந்த அந்தக் கொடியை வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். இது மே தினத்திலே அவர்கள் செங்கொடிக்கு அளித்த மதிப்பு. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் இடையிலே எத்தனையோ அரசியல் மாறுபாடுகள், கருத்து மாறுபாடுகள் வந்த நேரத்திலே கூட அந்தக் கட்சிக்கும் எங்களுக்கும் உடன்பாடோ அல்லது தேர்தல் உறவுகளோ இல்லாத நேரத்திலேகூட, மே தினம் போன்ற நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டு நாங்கள் உரையாற்றுகின்ற நேரத்தில் அந்தச் செங்கொடியை மதித்து பழக்கப்பட்டவர்கள்; அதைப் போற்றி, புகழ்ந்து பழக்கப்பட்டவர்கள். ஆனால், மே தினத்திலே ஊர்வலம் நடத்துவதாகச் சொல்லி கொடியை ஏற்றிவிட்டு, அவர்களுடைய கொடியை ஏற்றிவிட்டு, அடுத்துச் செய்த காரியம் சி.ஐ.டி.யூ.வினுடைய செங்கொடியை வெட்டி மூறித்ததுதான். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகக் கொடி, வேறு சில அரசியல் கட்சிகளினுடைய கொடிகளை வரிசையாக வெட்டி வீழ்த்தினார்கள். அரசியல் கட்சிக்காரர்கள் என்றாலே அவர்கள் ஏதோ அயோக்கியர்கள், உலகத்திலே இவர்களைத் தவிர வேறு யாரும் உத்தமர்கள் கிடையாது, அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் கட்சித் தொண்டர்கள் அத்தனைபேரும் அயோக்கியர்கள் என்ற ஒரு



1989 மே 3] [டாக்டர் மு. கருணாநிதி]

தத்துவத்தை இந்த உலகத்திற்கு போதிப்பதாகக் கருதிக்கொண்டு அந்தச் சங்கத்தினுடைய தலைவர் இது போன்ற காரியங்களிலே ஈடுபட்டு வருகின்றார். மே தினத்திற்கு முதல் நாள் ஈரோட்டில் நடைபெற்ற வன்னியர் சங்க மாநாட்டில் அவர்களுடைய சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. இராமமூர்த்தி பேசிய பேச்சிலேயிருந்து இரண்டொரு வரிகளை இங்கே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். "இது வரையில் நடந்த போராட்டங்கள் அமைதியாக, சாத்விகமான முறையில் நடந்த போராட்டங்கள். ஆனால், ஜூலை மாதம் நடக்க இருக்கும் போராட்டம் சாதாரணமான போராட்டமாக இருக்காது. அந்தப் போராட்டத்தில் இளைஞர்களும் தாய்மார்களும் தங்கள் கையிலே அரிவாளமனையைத் தூக்கும் போராட்டம்; போலீஸ்காரர்கள் வந்தால் அவர்களை ஓட, ஓட விரட்டி அடிக்கும் போராட்டம்; எங்கள் இளைஞர்களிலே ஒருவர் கீழே விழுந்தால் அந்த இடத்தில் 100 போலீஸ்காரர்களையாவது கீழே சாய்க்காமல் எங்கள் இளைஞன் ஒருவன்கூட சாகமாட்டான்."

(முற்பகல் 9—30)

இது மே தினத்திற்கு முதல் நாள் ஈரோட்டிலே அந்தச் சங்கத்தினுடைய பொதுச் செயலாளர் பேசிய பேச்சு. மே தினத்தன்று அந்தச் சங்கத்தினுடைய தலைவர் திரு. இராமதாஸ் பேசிய பேச்சிலிருந்து சில வரிகள். "நான் உங்களிடம் [illegible] கத்தி வைத்துக்கொள்ளவில்லை? [illegible] ரால் போதாது. ஒரு [illegible] இருந்தாலும் [illegible] வெட்ட [illegible] அந்தத் தலைவர் பேசிய பேச்சு. "போலீஸ்காரர் அடித்தால் அவர்களை வெட்டி வீழ்த்த வேண்டியதுதானே"—இது போல வன்முறைகளைத் தூண்டிவிடுகிற வெறும் வாய்ப்பேச்சாக மாத்திரம் அவைகள் இல்லாமல் அதைச் செயல்படுத்துகிற ஒரு இயக்கம் ஒரு வகுப்பின் பெயரால் தமிழ்நாட்டிலே நடைபெறுவது சரிதானா என்பதை நாம் எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏற்கெனவே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டதைப் போல திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஒரு தவறான தகவலை வன்னியர் சமுதாயத்துப் பெருமக்களிடத்திலே பரப்பி வந்தார்கள். பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே [illegible] பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு [illegible] தாகவும், அதை கருணாநிதி ஆட்சி எடுத்துவிட்டதாகவும் ஒரு தவறான தகவலைப் பரப்பி வந்தார்கள். நான் நீண்ட நாள் அதற்கு எல்லாம் பதில் சொல்லாமல், மக்களுக்கு உண்மை தெரியும் என்ற காரணத்தால் இருந்தாலும் கூட பிறகு விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது விளக்கியிருக்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது
பிற்படுத்தப்பட்ட மக்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள்
39 பிரிவினரைப் பிரித்து, 1957ஆம் ஆண்டிலே இந்த அவையிலே
நாங்கள் உட்கார்ந்து இருந்தபோது இந்த அவையிலேதான் அந்
தப் பட்டியல் பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக
இருந்தபோது வைக்கப்பட்டது. அது இட ஒதுக்கீட்டிற்காக
வைக்கப்பட்ட பட்டியல் அல்ல. கல்வியிலே சலுகைகளுக்காக,
கன்செஷனாக. ரிசர்வேஷனாக அல்ல. கன்செஷன் என்பது
வேறு, ரிசர்வேஷன் என்பது வேறு என்பதை நான் விளக்கிய
பிறகு திரு. இராமதாஸ் தன்னுடைய அந்தத் தாக்குதலை
மாற்றிக்கொண்டார்.

துப்பாக்கிப் பிரயோகம் இப்போது நடைபெற்றதற்காக நம்
முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் வருந்தினார். இந்தப்
போராட்டம் ஆரம்பித்தபோதே துப்பாக்கிப் பிரயோகம்
அ.தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்று, சிலர் இந்தச் சமுதாயத்
தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது கடந்த
கால வரலாறு. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அறக்
கட்டளையின் சார்பில் அண்ணா அறிவாலயத்தை சென்னை
மாநகரில் உருவாக்கி அதனுடைய திறப்புவிழாவை நாங்கள் நடத்து
கிறோம். எல்லோருக்கும் தெரியும். செப்டம்பர் 15 அண்ணா
பிறந்த நாள்; 17 பெரியார் பிறந்த நாள் என்று. எனவே,
இந்த 15, 16, 17 ஆகிய இந்த மூன்று நாட்களிலும் பெரியார்
பிறந்த நாளையும், அண்ணா பிறந்த நாளையும், தி.மு.க. பிறந்த
நாளையும் ஆண்டுதோறும் கொண்டாடுவது கழகத்திற்கு
வாடிக்கை என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதே நாளில், வேண்டுமென்றே அவர்கள் ஒரு மாநாட்டை
வைத்துக்கொண்டு, அவர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார். நாம்
[illegible] ஊர்வலம் நடக்கும் நாளில், நாங்கள் மாநாடு நடத்துகிற
நாளில் நீங்கள் பெரியார் பிறந்த நாளை வைத்துக் கொள்ள
லாமா என்று. என்ன செய்வது? பெரியார் தவறி 17 ஆம் தேதி
பிறந்துவிட்டார். அண்ணா தவறி 15ஆம் தேதி பிறந்துவிட்
டார். அதை நாங்கள் மாற்ற இயலாது. [illegible] ஊர்வலத்தை,
மாநாட்டை மாற்றிக் கொள்ளலாமே தவிர, பெரியார் பிறந்த
நாளை, அண்ணா பிறந்த நாளை எப்படி மாற்றிக்கொள்ள முடி
யும்? அப்படி இருந்தும் கூட அவர்களுடைய மாநாட்டை நடத்தி,
வெகு விரைவாக அன்றைக்கு சென்னையிலே [illegible] முடித்
துக்கொண்டு யாரையும் கூட பேசச் சொல்லாமல் நானே கூட
அன்றைக்கு அந்தக் கூட்டத்திலே பேசி முடிப்பதாக இருந்தால்
12 மணி, 1 மணி ஆகியிருக்கும். எல்லோரும் பேச வேண்
டாம் என்று சொல்லிவிட்டு, குறிப்பிட்ட நாங்கள் மாத்திரம்—
நான், பேராசிரியர், நாஞ்சிலார், சாதிக் இப்படிப்பட்ட 4, 5
பேர்கள் மாத்திரம் பேசி முடித்துவிட்டு, 9–00 மணிக்கெல்லாம்



கூட்டத்தை முடித்துவிட்டு, எல்லோரும் உடனடியாகத் திரும்
பிச் செல்லுங்கள்; ஏனென்றால் காலையிலே சாலை மறியல்
வைத்திருக்கிறார்கள் என்பதற்காகக் கூறினோம்.

ஆனால், வேண்டுமென்றே இரவு 12–00 மணிக்கே சாலை
மறியலை ஆரம்பித்து, ஆங்கில முறைப்படி இப்போதே தேதி
ஆரம்பித்துவிட்டது என்று கூறி சாலை மறியல் நடத்திய கார
ணத்தால் அப்போது இருந்த அ.தி.மு.க. அரசு துப்பாக்கிப் பிர
யோகத்தைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமைக்குத்
தள்ளப்பட்டது என்பதை நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

அதிலே மதியழகன் என்ற ஒருவர், அந்தச் சமுதாயத்தைச்
சேர்ந்த ஒரு இளைஞர், துப்பாக்கிப் பிரயோகத்தில் அல்ல,
வன்னியர் சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட தாக்குதலிலே
கத்தியால் குத்தப்பட்டு அந்த இடத்திலேயே மாண்டார் என்பதும்
கடந்தகால நிகழ்ச்சிதான். இப்படி வன்முறை தொடர்ந்து நடை
பெற்று, கவர்னர் ஆட்சியிலேகூட இது நடைபெற்றபோது கவர்னர்
அவர்கள் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுத்ததன் காரணமாக
ஒரு அமைதி ஏற்பட்டது என்பதும் எல்லோருக்கும் தெரியும்.
அந்த அமைதியைத் தொடர்ந்து கவர்னர் அவர்கள் ஒரு அறிக்
கையை வெளியிட்டார்கள். கொள்கை அளவில் இந்த இட ஒதுக்
கீட்டை ஒத்துக் கொள்ளலாம் என்று வெளியிட்டார்கள். ஆனால்
எவ்வளவு இட ஒதுக்கீடு என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை,
தேர்தல் அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்
பேற்று ஆட்சிக்கு வருமேயானால் இட ஒதுக்கீடு பற்றி உரிய
முடிவு எடுத்து அறிவிக்கப்படும் என்று சொன்னதற்கிணங்க உட
னடியாக நாங்கள் அதுபற்றிக் கலந்தாலோசித்தோம். இந்த
மக்கள் தொகைக் கணக்கை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்
தால் இப்போது நடைபெறாது என்பதற்காக ஏற்கெனவே திரு.
அம்பாசங்கர் அவர்களால் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்
கின் அடிப்படையில்—அவரும் வன்னியர் பெருமகன்தான்.
எனவே, அவரால் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கின்
அடிப்படையில்—இதைப் பற்றி ஆராய்ந்து முடிவு எடுப்பதாக
யோசித்தபோதுதான் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களிடத்திலே திரு.
இராமதாஸ் அவர்களை நான் காணவேண்டும் என்று சொல்லி,
இராமதாஸ் அவர்களும், அவரோடு மேலும் இரண்டு பேர்களும்
என்னுடைய இல்லத்திற்கு வந்தார்கள். திரு. வீரபாண்டி ஆறு
முகம் அவர்களும் வந்திருந்தார்கள். அவர்களோடு கலந்து பேசி,
என்னுடைய ஆலோசகர் திரு. குகன் அவர்களும் முன்னின்று—
அவர்கள் சொல்கிறார்கள் குகன் இருந்து நல்ல காரியம் செய்ய
முடியுமா என்று. குகன் அவர்கள் அந்தச் சமுதாயத்தில் ஒரு
முற்போக்குவாதி என்பதும், இன்னும் நம்மை எல்லாம் விட
தீவிரமாக இந்தக் கருத்துக்களை எல்லாம் எண்ணிப் பார்க்கக்

கூடியவர்கள் என்பதும் திரு. இராமதாஸ் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. எனவே, நான் எடுத்து வைத்திருக்கிற கருத்துக்களை இன்னும் முற்போக்கான கருத்துக்களை எல்லாம் என்னுடைய ஆலோசகர் திரு. குகன் அவர்கள் எடுத்துச் சொல்லி ஒரு முடிவுக்கு வரும்போது நான் சொன்னேன், தனியாக ஒரு ஜாதிக்கு என்றோ, வன்னியருக்கு என்றோ, முக்குலத்தோருக்கு என்றோ, நாடாருக்கு என்றோ, யாதவருக்கு என்றோ அல்லது முத்தரையருக்கு என்றோ தனித்தனியாக ஒதுக்க முடியாது; அது கோர்ட்டிலே நிற்காது; நான் ஒதுக்கியதாக எனக்குப் பெருமை ஏற்படலாமே தவிர நீதிமன்றத்தில் அடிபட்டுப் போய்விடும்; எனவே, உண்மையிலேயே பலன் ஏற்பட வேண்டுமானால் நான் சொல்கிறபடி இதைச் செய்தால்தான் முடியும் என்று சொன்னேன். அப்படிச் சொன்ன பிறகு, சரி வன்னியர்களோடு 10 ஜாதியினரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்; அப்படி சேர்த்துக் கொண்டு அதற்கு ஒரு ஒதுக்கீட்டைச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். 65 இலட்சத்தோடு அவர் சேர்த்துக்கொண்டு சொன்னது 74 இலட்சம். அதாவது மொத்தம் 75 இலட்சம் என்ற அளவுக்குச் சொல்லி, 18 சதவீதம் கொடுத்தால் போதும் என்று சொன்னார். அது என்னிடத்தில் இருக்கிறது. அவரோடு வந்த ஒரு கல்லூரிப் பேராசிரியர், அவர் கைப்பட எழுதியது என்னிடத்தில் இருக்கிறது இப்போது. வன்னியர் சமுதாயம், அதோடு சேர்ந்த 10 சமுதாயம் இதையெல்லாம் சேர்த்தால் கிட்டத்தட்ட 75 இலட்சம் பேருக்கு 18 சதவீதம் கொடுங்கள் என்று எழுதி என்னிடத்தில் கொடுத்து இருக்கிறார்கள். அவர் கைப்பட எழுதிய கடிதம் என்னிடத்தில் இருக்கிறது. நான் சொன்னேன், அதிலே கொஞ்சம் ஏறத்தாழப் பார்த்துக்கொள்ளலாம், ஏனென்றால் வேறு சில சமுதாயங்களையும் சேர்க்க வேண்டி இருக்கிறது; சீர்மரபினர் என்று குற்றப் பட்டியலில் இருந்து மூதறிஞர் இராஜாஜி காலத்திலே விலக்கப்பட்டவர்கள் இன்றைக்கு மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள்; அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அப்படிச் சேர்த்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், இந்தப் பர்சென்டேஜைக் கூட அதிகமாக்க நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி அனுப்பி வைத்தேன். பிறகு கலந்து பேசி அந்தச் சீர்மரபினரும் சேர்த்துக்கொள்ளப்பட்ட காரணத்தால்— அவர் 18 என்று சொன்னார், ஆனால், சீர்மரபினரையும் சேர்த்துக்கொண்ட காரணத்தால்— 20 என்று அதிகப்படுத்தி நான் அறிவித்திருக்கிறேன்.

பிரச்சினை தீர்ந்துவிட்ட காரணத்தால் அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. தீராமல் இருந்திருந்தால் பிரச்சினை தீரவில்லை; போராடிக் கொண்டிருக்கலாம் என்று அவர்கள் திருப்தி அடைந்திருக்கக்கூடும். பிரச்சினையைத் தீர்த்து வைத்ததுதான் இன்றைக்கு அவர்களுக்கு என்மீது மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது; இந்த அரசின் மீதும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.



அதன்னியில் நண்பர் திரு. பூவராகன் அவர்கள் கூறியது
போல் வேறு சில— நான் அரசியல் கட்சிகளைச் சொல்லவில்லை,
வேறு சில முக்கியஸ்தர்களுடைய தூண்டுதல்களும் இதற்குக்
காரணமாக இருக்கிறது என்பதை நான் அறியாமல் இல்லை.
இதற்கான சதித் திட்டங்கள் எல்லாம் எங்கெங்கே வகுக்கப்
படுகின்றன, அந்தச் சதித் திட்டங்களின்படி எங்கெங்கே இரயில்
கள் கவிழ்க்கப்பட வேண்டும்; எங்கெங்கே பஸ்கள் கொளுத்தப்
பட வேண்டும்; இன்னும் யார், யாருடைய உயிர்களுக்கெல்லாம்
உலை வைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூட சதித் திட்டங்
கள் வகுக்கப்படுகின்றன என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.
இதிலே பேச்சுவார்த்தைக்கு அழைத்து ஒரு நல்ல முடிவு
காண வேண்டும் என்று நம்முடைய எதிர்க்கட்சித்
துணைத் தலைவர் அவர்களும், நம்முடைய காங்
கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், திரு.
பொன். விஜயராகவன் அவர்களும், திரு. பூவராகன் அவர்
களும், திரு. ரமணி அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.
பேச்சு வார்த்தையிலே இப்போது அவர்கள் வைத்திருக்கிற மிக
முக்கியமான கோரிக்கை— நான் பத்திரிகையிலே படித்துப் பார்த்
தேன்— இந்த அறிவிப்பை அப்படியே நிறுத்தி வைத்துவிட்டு,
வெளி மாகாணத்திலிருந்து ஒரு நீதிபதியை வரவழைத்து அந்த
நீதிபதி தமிழ்நாட்டிலேயுள்ள எல்லா ஜாதியினருடைய எண்ணிக்
கையையும் எடுத்து, அவ்வாறு எண்ணிக்கை எடுத்து முடிந்த
பிறகு, அதாவது 6 மாத காலத்திற்குள்ளாக அந்த வேலை
முடிக்கப்பட்ட பிறகு இந்த இட ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டும்
என்று சொல்கிறார்கள். அதை மற்ற பிரிவு மக்கள்,
ஏன், வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களே கூட ஏற்றுக்
கொள்வார்களா என்று கேட்டால், நிச்சயமாக ஏற்றுக்கொள்ள
மாட்டார்கள். முன்பு முதலமைச்சராக இருந்த என்னுடைய
அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தக் கணக்கை
எடுப்பதற்காக இங்கே ஒரு நான்கைந்து நாட்கள் எல்லாப் பிரிவு
மக்களுடைய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசினார்கள். உங்
களுக்கு நன்றாக நினைவு இருக்கும்.

(முற்பகல் 9-40)

நரிக்குறவர்கள் உட்பட, அத்தனை பேர்களும் அழைத்
துப் பேசப்பட்டார்கள். அப்படிப் பேசப்பட்டபோது,
கடைசியாக எடுத்த முடிவு தமிழ்நாட்டினுடைய மொத்த
மக்கள் தொகை 15 கோடி என்பதாகும். 5 கோடியை
நாம் ஏற்றுக்கொண்டு முடிவெடுப்பதா அல்லது அன்றைக்கு
அத்தனை பேர்களுடைய கருத்துக்களினுடைய அடிப்படை
யிலே தொகுத்துப்பார்த்து 15 கோடி மக்கள் என்று
கணக்கிட்டு முடிவெடுப்பதா என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க
வேண்டும். இந்த ஆட்சி அறிவித்த இந்த முடிவை யொட்டி நான்
பலமுறை சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல்லுகின்றேன்.
இதைப் பரிட்சார்த்தமாக இந்த ஆண்டு பார்ப்போம். இதிலே

தவறு ஏற்படுமேயானால், இதிலே கிடைக்கவேண்டிய பயன், மிகவும்பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், குறிப்பாக வன்னிய பெருங்குடிமக்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், உடனடியாக மாற்றி அமைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்று பகிரங்கமாகச் சொல்லிவிட்ட பிறகு இன்னும் பேச்சுவார்த்தை தேவையா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்ல, இந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒருதனித் துறையேகூட இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தத் தனித் துறைக்கும் இயக்குநராக வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரையே இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. எந்த தவறும் வந்துவிடக் கூடாது என்பதற்காக, அவரையே நியமிக்கப் பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, அந்த தனி துறைக்கு இன்னும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அது அவசரமாக இந்த நிதிநிலை அறிக்கையிலே செய்யப்படாவிட்டாலும் கூட துணை மானியக் கோரிக்கையிலே வருகின்ற அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நுழைவுத் தேர்விலேகூட அவர்கள் இடம் பெறுவதற்கு ஏதாவது இடையூறு இருக்குமோ என்ற ஐயத்தின் காரணமாக நானும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் கலந்துபேசி, அதிலே கூட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், அந்த மாணவர்கள் நுழைவுத் தேர்விலே ஈடுபடுவதற்குக்கூட, தேர்வடைவதற்கல்ல, இன்னும் மதிப்பெண்களைக் குறைக்கலாமா என்றுகூட யோசித்துக்கொண்டிருக்கிறோம். அதுமாத்திரமல்ல. ஏற்கெனவே மண்டல் கமிஷன் என்று ஒன்று போடப்பட்டு ஜனதா ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 8 அல்லது 9 ஆண்டுக் காலமாகின்றது. அந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை நிறைவேற்ற மத்திய அரசு இன்னமும் முன்வரவில்லை. இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்படி, மத்திய அரசிலும், மத்திய அரசு சார்புடைய நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் தரப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 8 ஆண்டுக் காலமாக தொடர் போராட்டம், இந்தியா முழுமையும் நடைபெற்றும்கூட டெல்லி தலைநகரத்திற்கே சென்று பல்வேறு கட்சிக்காரர்கள், திராவிடர் கழகத்தார் உட்பட, திராவிட முன்னேற்றக் கழகத்தார் உட்பட வடபகுதியிலே இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுடைய பிரதிநிதிகள் உட்பட, அத்தனைபேர்களும் போராட்டங்கள் நடத்தியும் கூட, ஆர்ப்பாட்டங்கள் நடத்தியும்கூட இன்னமும் மண்டல் கமிஷன் அறிக்கையைப் பற்றி மத்திய அரசு வாய் திறக்கவேயில்லை. ஆனால், மத்திய அரசு மீது வராத கோபம், நண்பர் ராமதாஸ் அவர்களுக்கு மாநில அரசு மீது வருவதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. கொடுக்காமல் இருந்தால் அவர்கள் மீது கோபம் வராது போலும், கொடுத்தால் வரும் போலும்.



இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நான் பேச்சுவார்த்தைக்கு அழைத்து என்ன பலன் ஏற்படப்போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு ஆலோசனை சொன்னவர்கள் நான் அலட்சியப் படுத்தி விட்டதாகத் தயவு செய்து கருதாமல் நிலைமையைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

40 அல்லது 50 வண்டிகள், பேருந்துகளும், தனியாருடைய கார்களும் தடுத்து நிறுத்தப்பட்டு வழியெல்லாம் கற்களும், மரங்களும் வெட்டிப்போடப்பட்டபோது அதை அகற்றுகின்ற முயற்சியிலே போலீசார் ஈடுபட்டபோது அவர்களைப் பயங்கர ஆயுதங்களால் தாக்கியும், கல்லால் அடித்தும், பல போலீஸ் காரர்கள் அடிபட்டு விழுந்தபிறகுதான் வேறு வழியில்லாமல் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திலே இறந்துவிட்ட இளைஞனுக்காக நான் கண்ணீர் விடுகிறேன், அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு அமைதியைக் காப்பாற்றுகின்ற அந்த முயற்சியிலேயிருந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு துளியும் பின்வாங்காது என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, சட்டம், ஒழுங்கு, அமைதியைப் பாதுகாக்கின்ற அந்த முயற்சிக்கு, இங்கேயுள்ள அனைத்து கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் அமைகிறேன்.

## 2. கவன ஈர்ப்பு

### (அ) அரக்கோணம் காந்தி சாலை மார்க்கெட் அருகே ஏற்பட்ட தீ விபத்து.

திரு. வி. கே. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரக்கோணம் காந்தி சாலை மார்க்கெட்டு அருகாமையில் 8—4—1989 அன்று ஏற்பட்ட பெரிய தீ விபத்தினால் சுமார் 10 லட்சம் மதிப்புள்ள லாரி ஷெட்டுகள், மூங்கில் தொட்டிகள், டீக் கடைகள் ஆகியவைகள் சேதம் அடைந்துவிட்டன. இந்த விபத்தினால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு உடனடி நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்கவேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரம், காந்தி சாலை மார்க்கெட்டு அருகில் 8—4—1989 அன்று சுமார் பிற்பகல் 2-30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினால் பல தரப்பட்ட தொழிலைச் சார்ந்த 24 கடைகள் சேதம் அடைந்தன. திருவள்ளூர், இராணிப்பேட்டை,

சோளிங்கர், அரக்கோணம் மற்றும் இரயில்வே லோகோ ஷெட் ஆகிய இடங்களிலிருந்து வந்த தீயணைப்புப் படையினர் போராடி ...... என்பது போன்ற குறிப்புகளோடு அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி ஏதாவது கேட்க வேண்டு மானால் உறுப்பினர் அவர்கள் கேட்கலாம்.

## அறிக்கை.

வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரம், காந்தி சாலை மார்க்கெட்டு அருகில் 6—4—1989 அன்று சுமார் பிற்பகல் 2-30 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்தினால் பல தரப்பட்ட தொழிலைச் சார்ந்த 24 கடைகள் சேதம் அடைந்தன. திருவள்ளூர், இராணிப்பேட்டை, சோளிங்கர், அரக்கோணம் மற்றும் இரயில்வே லோகோ ஷெட் ஆகிய இடங்களிலிருந்து வந்த தீயணைப்புப் படையினர் போராடி சுமார் பிற்பகல் 3-30 மணியளவில் தீயினை அணைத்தனர். இத் தீவிபத்தின் காரணம் குறித்து வழக்கு ஒன்று நகரக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது. இத்தீ விபத்தினால் குடியிருப்புகள் பாதிக்கப்படவில்லை. 24 கடைகள் பாதிக்கப்பட்டன. உயிர்ச் சேதமோ, உடல் ஊனமோ இல்லை யென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

2. இத் தீவிபத்தில் அட்லாண்டா கன்ஸ்ட்ரக்சன் (பிரைவேட்) லிமிடெட் என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான லாரி ஒன்று சேதம் அடைந்துள்ளது. இது காப்புறுதித் திட்டத்தின் கீழ் சேதத்தை ஈடுசெய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரக்கோணம் இந்தியன் வங்கி அதிகாரிகளுடன், அரக்கோணம் கோட்டாட்சியர் நடத்திய பேச்சு வார்த்தையின் தொடர்பாக அந்த வங்கியானது இத் தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட கடைக் காரர்களுக்கு ரூ. 1,33,000 (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி மூவாயிரம் மட்டும்) கடனுதவி தர முன்வந்துள்ளது. தீவிபத் தினால் பாதிக்கப்பட்ட கடைகளுக்கு நிவாரணம் வழங்க அரசு விதிமுறைகளில் இடமில்லை.

திரு. வி. கே. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விவர அறிக்கைக்கு நன்றி. பாதிக்கப்பட்ட 24 கடைக்காரர் களும் மிகவும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அந்தப் பாதிப்பு ஏற்பட்ட மறுநாள் நான் சென்று அவர்களைப் பார்த்தபோது, அவர்கள் விட்ட கண்ணீரால், அவர்களோடு சேர்ந்து நானும் அழவேண்டிய காலக்கட்டத்தில் இருந்தேன். விவர அறிக்கையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் 1 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் கடன் உதவி வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார் கள். அதோடு தீவிபத்தால் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு



நிவாரணம் வழங்க விதிமுறைகளில் இடமில்லை என்றும் சொல்லி யிருக்கிறார்கள். அருள்கூர்ந்து கொஞ்சம் நிதி உதவியும் அளிக்க அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு
தலைவரவர்களே, கொஞ்சம் விளக்கமாகவே மாண்புமிகு உறுப்
பினர் திரு. இராசு அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
24 கடைகள் சேதமடைந்தன. அக்கடைக்காரர்களுக்கு ஏற்பட்ட
மொத்த இழப்பீட்டுத் தொகை 9 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய்.
அதில் 3 கடைக்காரர்களுக்கு பாதிப்பின் மதிப்பீட்டுத்
தொகை 10 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாகவும், 19 கடைக்
காரர்களுக்கு 10 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலும்,
ஒருவருக்கு 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், மற்றொருவருக்கு
1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரக்
கோணம் கோட்ட ஆட்சியர் இந்தியன் வங்கி அதிகாரிகளுடன்
நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில், அந்த வங்கி
யானது பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு மொத்தமாக
1 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் கடன் உதவி அளிக்க முன்
வந்துள்ளது. ஒன்றை மட்டும் நான் இங்கே தெளிவுபடுத்த
விரும்புகிறேன். நேச்சுரல் கலாமிடீஸ் என்று சொல்லுகிறபோது
தீவிபத்தால் பாதிக்கப்பட்ட கடைகளுக்கு நிவாரணம் வழங்க
அரசு விதிமுறைகளில் இடமில்லை. அந்தக் காரணத்தாலேதான்
மாவட்ட ஆட்சியர், அந்த வங்கி அளிக்க முன் வந்துள்ள கடன்
தொகையால் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு தங்களுடைய
வியாபாரத்தை முழுமையாகப் புதுப்பித்துக்கொள்ள முடியாது
என்றும், மேலும் அவர்கள் தங்கள் வியாபாரத்தை நம்பியே
வாழ்க்கை நடத்துவதாகவும் கூறியுள்ளார்கள். எனவே மாவட்ட
ஆட்சியர், இத் தீவிபத்தில் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் இனத்
தைச் சேர்ந்த 2 கடைக்காரர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட
இழப்பீட்டுத் தொகைக்கு ஈடாக முழு நிவாரணத் தொகையும்,
பாதிக்கப்பட்ட கடைக்காரர்களில் பிற்பட்டோர் இனத்தைச்
சேர்ந்த 21 கடைக்காரர்களுக்கு, அவர்களுக்கு ஏற்பட்ட இழப்
பில் 50 சதவிகிதம் நிவாரணத் தொகையும், மீதமுள்ள
பிற்பட்டோர் இனத்தைச் சார்ந்த, தனது கடையை காப்பீட்டுக்
கழகத்தில் இன்சூரன்ஸ் செய்துள்ள ஒருவருக்கு அவருக்கு ஏற்
பட்டுள்ள இழப்பில் 25 சதவிகிதம் நிவாரணத் தொகையும்
முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப் பரிந்துரைத்
துள்ளார். மாவட்ட ஆட்சியர் பரிந்துரைகளை ஏற்பதாக இருந்
தால் முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து மொத்தம் 4
லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்க வேண்டிவரும்.
மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பின்மீது சிறப்பு ஆணையர்
மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து ஓர்
விவர அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அறிக்கை பெறப்பட்டதும்
உரிய நடவடிக்கை எடுக்கப்படும், சாதாரணமாக வணிக நிறு
வனங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண
வழங்குவதில்லை.

(முற்பகல் 9-50)

(ஆ) பேராவூரணித் தொகுதியிலுள்ள நவகொல்லைக் காடு கிராமத்தை சேர்ந்த சிலர் கர்நாடக மாநிலத்தில் கொத்தடிமைகளாக இருப்பது குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணித் தொகுதி ஒட்டங்காடு ஊராட்சி நவகொல்லைக்காடு கிராமத்தைச் சேர்ந்த சிலரை கர்நாடக மாநிலத்தில் கொத்தடிமைகளாக வைத்திருப்பது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாடு காவல் துறை குற்றவியல் பிரிவினைச் சேர்ந்த அலுவலர்கள் கர்நாடக மாநிலம், சிக்மகளூர் மாவட்டம் பிடு வல்லி எஸ்டேட்டிற்கு 7—4—1989 அன்று சென்று, இது குறித்து விசாரணைகள் நடத்தினர்.

(2) திரு. ஏ. திருப்பதி, திருமதி பி. தமிழரசி, செல்வி. சின்னப்பொண்ணு மற்றும் திரு. ஏ. நாகூரான் ஆகிய நால்வரும் சிக்மகளூர் மாவட்டம், மூடுகரை வட்டத்தில் பிடுவல்லி எஸ் டேட்டில் காப்பித் தோட்டத்தில் வேலை செய்து வந்ததாகவும் இவர்கள் தங்களது சொந்த ஊருக்கு 1989 மார்ச்சு மாதம் திரும்பி சென்று விட்டதாகவும் விசாரணையில் தெரியவருகிறது. இவர்கள் தஞ்சாவூரில் தங்களது சொந்த ஊரில் தற்பொழுது இருக்கிறார் கள்.

(3) சிக்மகளூரில் நடத்தப்பட்ட விசாரணையின்படி, கீழ்க் காணும் ஆறு (6) நபர்கள், சிக்மகளூர் வட்டம், மசகாளி என்னும் இடத்தில், கிழக்கரையைச் சேர்ந்த திரு. எஸ். எம். கபீர் என்பவருக்குச் சொந்தமான முபாரக் காப்பித் தோட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக தினக்கூலிக்கு வேலை செய்து வருகிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது :

(1) வி. நாகூரான், த/பெ. வீரப்பன் அம்பலம்.

(2) கே. லக்ஷ்மணன், த./பெ. குழந்தைசாமி.

(3) பி. ஜோதிமணி, த/பெ. பாலுசாமி.



(4) என். சித்ரா, த/பெ. நாகூரான் அம்பலம்.

(5) நாகஜோதி, த/பெ. நடேசன் அம்பலம்.

(6) மல்லிகா, க/பெ. சந்திரசேகரன்.

மேற்படி ஆறு (6) பேரும் தாங்கள் கொத்தடிமைகளாக நடத்தப் படவில்லையெனவும், தாங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் இரண்டு வாரங்களில் காப்பிக்கொட்டை பொறுக்கும் வேலை முடிவுற்றதும் ஊர் திரும்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். திரு. சின்னையன் அம்பலம் அவர்களின் மகன் வடிவேலு என்பவர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அப்துல் ஜப்பார் அவர்களுக்குச் சொந்தமான சிக்மகளூர் வட்டத்தில் உள்ள நரிகுடி என்னு மிடத்தில் நடத்தப்பட்டு வரும் தேனீர் விடுதியில் வேலை செய்து வருகிறார்.

(4) தமிழ்நாடு காவல்துறையினர் நடத்திய விசாரணையி லிருந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள எவரும் கொத்தடிமைகளாக இருந்ததாகத் தெரியவில்லை.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவை முன் வைக்கப்பட்டுள்ள குறிப்பைப் பார்த்தேன். படித்தேன். அதே நேரத்தில் தமிழகப் போலீசார் கர்நாடக மாநிலத்திற்குச் சென்று அங்கே தெளிவாக விசாரணை செய்து, மிக நல்ல நடவடிக்கை எடுத்து அந்த மக்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து—எங்கள் ஊருக்குக் கொண்டு வந்து விட்டதற்கு முதலில் தமிழகப் போலீசாருக்கும், தமிழக அரசுக்கும் எனது மனப்பூர்வமான—இதயப் பூர்வமான—உளப்பூர்வமான— நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே வருவதற்கு 1½ மாத காலமாகிவிட்டது. நம்முடைய தமிழக போலீசார் கர்நாடக மாநிலத்திற்குச் சென்றது 7-4-1989ல். போலீசார் அங்கே சென்ற தேதியிலிருந்து இன்றுவரை சுமார் ஒரு மாத காலமாகிறது. அதற்கு ஒரு 10 நாளைக்கு முன்பு நான் இந்தத் தீர்மானத்திற்கான அறிவிப்பைக் கொடுத்தேன். எனவே, இதுபோன்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்த வரையில் எங்களுக்கு சற்று விரைந்து பதில் அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொத்தடிமைகளாக அங்கே அவர்கள் இருந்து ஒரு நாளைக்கு 10 ரூபாய்தான் ஊதியமாகப் பெற்றிருக்கிறார்கள். கொத்தடி மைகளாகத்தான் இருந்தார்கள். ஆனால், அறிக்கையில் கொத்

தடிகைடக்ளாக இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இதுபோன்ற நடவடிக்கைகள் இனி நிகழாமல் தமிழக அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போலீசாரும், தமிழக அரசும் சுறுசுறுப்புடன் செயல்பட்டிருக்கி றார்கள் என்றாலும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத் தவரை அவற்றை விரைவுபடுத்த வேண்டும் என்று மட்டும் கேட்டு அமைகிறேன்.

### 3. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு : தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள் ளார்.

### 4. சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவைப், பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



(ஆ) மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 5. மானியக் கோரிக்கைகள், 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989-90-ஆம் ஆண்டிற் கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

#### கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள்—என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 5,24,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 5,24,24,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ",

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 5,24,24,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 20,23,11,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செங்கை அண்ணா, வடார்க்காடு, திருச்சி, பெரியார், திண்டுக்கல்—காயிதேமில்லத், கோவை மாவட்டங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கழிவு நீரை சுத்திகரிப்பு ஆலைகள் நிர்மாணிப்பது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 20,23,11,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 20,23,11,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவையின்முன் பெரும் தொழில்கள் குறித்த செயல் திட்ட ஆய்வுரை, கொள்கை விளக்கக் குறிப்புகள்* இவற்றோடு இரண்டு தொழில்கள் பற்றிய கொள்கைக் குறிப்பு இவைகள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை அவை நடவடிக்கைக் குறிப்பிலே ஏற்றிடுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். அது பற்றிய விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்களையொட்டி இறுதியில் விளக்க உரை வழங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் பேராசிரியர் க. பொன்னுசாமி.

* பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாய்ப்புக்கு நன்றி கூறி, பெரும் தொழில்கள் குறித்த இந்த மானியத்தின் மீதான என்னுடைய உரையைத் துவக்குகின்றேன். இந்த ஆண்டு பெரும் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கத்தைப் பற்றி கொடுக்கப்பட்டு இருக்கின்ற அந்தப் புத்தகமே மிகவும் இளைத்துவிட்டு இருக்கிறது. அரசின் எல்லாக் கொள்கைகளைப் பார்க்கும்போது சர்க்கரை ஆலைகளுக்கு என்று தனியாக கொள்கைகளை வகுத்து இருக்கிறீர்கள். தனியாருக்குத் தரப் போவதில்லை என்றும், அரசே எடுத்து நடத்தும் என்றும் சொல்லி இருப்பதிலே வரவேற்க வேண்டிய கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் முன்பே இருக்கின்ற ஆலைகளுக்கு அவற்றினுடைய உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுமா என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

சாராயத் தொழிற்சாலைகளைப் பற்றிச் சொல்லும்போது அவற்றின் திறனை அதிகரிக்க முடியாது என்றும் தெளிவாகச் சொல்லி, புதிதாகத் தரமுடியாது என்பதையும் சொல்லி இருப்பதை வரவேற்கின்ற நேரத்தில், டாமினைப் பற்றி சொல்லுகிறபோது, அது தனியாருக்குக் கொடுக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருவதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு முதல்வரவர்கள் சொல்கிறபோது கரும்பாறைகள் பற்றி தனியாக ஒரு குறிப்பு தரப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அவற்றைப் பற்றி நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

தனியாருக்குத் தரப்படக் கூடாது என்பது தான் முந்தைய அரசு எடுத்த முடிவு. அதற்காகவே தமிழ்நாடு மினரல்ஸ் கன்செஷன் ரூல் '8-சி' என்று கொண்டுவரப்பட்டது. அதிலே

---

*155 முதல் 265 முடிய உள்ள பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

தனியாருக்குத் தரக்கூடாது என்று தெளிவாக இருக்கிறது. அதை மீறி இப்போது தருகின்ற அளவுக்கு ஒரு கொள்கைக் குறிப்பு ஒரு பாக்கெட்டுக்குள்ளே வந்து இருக்கிறது. என்னுடைய கவலை எல்லாம் இந்த டாமின் நிறுவனம் அல்லது அதனுடைய ஏதாவது ஒரு பகுதி தனியாருடைய பாக்கெட்டுக்குப் போய்விடக் கூடாது என்பதே.

இங்கே வரவு செலவுத் திட்டத்திலே சொல்லும்போதுகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். நிர்வாகம் சீர்திருத்தப்பட்டு தொழிற்சாலைகள் நல்ல முறையிலே நடத்தப்படும் என்று சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்திலே நான் இங்கே நிர்வாகச் சீர்திருத்தம் பற்றி சிலவற்றைச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்பதால் இங்கே டிட்கோ பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. டிட்கோ நிறுவனத்திலே ஒரு தலைவர் இருந்தார். மேலாண்மை இயக்குநர் என்று ஒருவர் இருந்தார். அந்த இரண்டு பணிகளையும் ஒன்றாக்கி சிக்கன நடவடிக்கையாக ** என்பவரை நியமித்து இருக்கிறீர்கள். மகிழ்ச்சி. ஆனால் அந்த சிக்கன நடவடிக்கை அத்தோடு நின்றுவிடாமல் மேலும் வளர்ந்து எக்ஸிகியூடிவ் டைரக்டர் என்று ஒரு போஸ்ட் உருவாக்கப்பட்டு புதிதாக ** என்ற ஒருவருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது எந்த வகை சிக்கனம் என்று எனக்குத் தெரியவில்லை. அதோடு கூட இந்த ** என்பவர் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திலே எம்.டி. ஆக இருந்தபோது முறைகேடுகள் இருந்ததற்காக வெளியேற்றப்பட்டவர் என்பதையும், அவரையே மீண்டும் நிர்வாக இயக்குநராக முழு நிறுவனத்திற்கும் நீங்கள் போட்டு இருக்கிறீர்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னுசாமி அவர்கள் மரபுகளை உணர்ந்தவர். எந்த அதிகாரியினுடைய பெயரையும் அவையில் சொல்லக் கூடாது என்பதை முதலில் உணரவேண்டும். அந்தப் பகுதி மட்டும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவரவர்களே, நன்றி. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வராமல் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டிட்கோ அலுவலகம் எல்.எல்.ஏ. பில்டிங்கில் குறைந்த வாடகையில் இருந்ததை இப்போது அவசர அவசரமாக ஒரு தொழில் அதிபரின் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு இருப்பதாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வும், 99 ஆண்டு ஒப்பந்தத்திலே அட்வான்ஸ் 50 இலட்சம் கொடுத்து, வாடகை 2½ கோடி என்று பேசி அங்கே மாற்றப்பட்டு இருப்பதாகவும் பரவலாக சொல்லப்படுகிறது. அந்தக் கட்டிடத்தின் விலையே 4 கோடி ரூபாய் தான் என்று கூட சொல்லப்படுகிறது. இவற்றை எல்லாம் அரசு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டிட்கோவின் சேர்மன், எம். டி. இவர்கள் எல்லாம் இங்கே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்களுக்குக் கூட கிடைக்காத சொகுசு வாழ்க்கையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10—00)

அங்கே அவர்கள் இருக்கின்ற அறைகளெல்லாம் ஏ. சி. செய்யப்பட்டு நல்லமுறையிலே இருக்கின்றன. செலவு அதிகமாக இருக்கின்றது. விலைக்கு வாங்க முடியாத நேரத்திலேகூட அவர்கள் வாடகைக்கு அதை வைத்துக்கொண்டு அங்கே இருக்கிறார்கள். இந்தச் செலவுகளையெல்லாம் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த டிட்கோ நிறுவனம் நல்லமுறையிலே செயல்பட முடியும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியா சிமெண்ட்ஸைப் பற்றிச் சொல்லும்போது அது ஒரு கூட்டு நிறுவனம். அங்கே நிர்வாகக் குழப்பம் இருப்பதாகவும், தொழிலாளர்கள் அவதிப்படுவதாகவும், அங்கே அரசு அதிகாரியாக ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் இருக்கிறார் என்றாலும், இதைத் தனியார் கைப்பற்றுவதற்கு....

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற டிட்கோவில் இதற்கு முன்பு அவர் சார்ந்திருக்கக்கூடிய கட்சி ஆட்சி செய்த பொழுது அமைக்கப்பட்ட அறைகள், அமைக்கப்பட்ட ஏ.சி. அத்தனையும் அப்பொழுது அமைக்கப்பட்டதே தவிர இந்த ஆட்சி வந்து எதையும் செய்யவில்லை.

பேராசிரியர் க. பொன்னுசாமி : அந்த நிர்வாகக் குழப்பம் காரணமாகத் தனியார் கைப்பற்றுகின்ற நிலைமை வந்துவிடக்கூடாது என்பதை முதல்வரின் தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

டாமின் என்ற நிறுவனத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது தனியாருக்குத் தாரை வார்க்கக் கூடாது என்று அங்கே போராட்டம் நடத்துவதாகக் கேள்விப்பட்டோம். இந்த Tamil Nadu Minerals Limited என்பது 1978-இலே உருவாக்கப்பட்டு, இந்த

நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதிலே நிர்வாகச் சீரமைப்பு நடைபெற வேண்டும், செம்மையான நிர்வாகம் நடைபெற வேண் டும் என்பதிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் நிர்வாகச் சீரமைப்பு எந்த அளவிலே இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லித்தான ஆகவேண்டும். அங்கே இருக்கின்றவர் மேனேஜிங் டைரக்டர் ஒருவர். அயல் பணியிலேயிருந்து வந்தவர்களெல் லாம் மூன்றாண்டுகளுக்கு மேலே அந்தப் பணியிலே தொடரக் கூடாது என்ற ஜி.ஓ. 256, பி. மற்றும் ஏ.ஆர்., 25-4-1988 ஆணை இருந்தும்கூட, அதன் அடிப்படையிலே ஏழு நபர்கள் வெளியிலே அனுப்பப்பட்டும்கூட—அவர்கள் அனுப்பப்பட்டது 24-11-88, ஆர்.சி. நம்பர் 27329 இ.ஏ. 1/88, நாள் 24-11-88. இந்த வகையிலே அனுப்பப்பட்டார்கள். ஆனால் அதிலே ஒருவர் மட்டும் மீண்டும் அங்கே பணியிலே சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார். இது அந்த அரசு ஆணையை மீறியது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதோடுகூட, 3-4-89-ல் நடந்த போர்டு மீட்டிங்கிலே, அவர்களைத் திரும்பவும் சேர்க்கக் கூடாது என்று சொல்லியிருந்தும், அதையும் மீறி, மேனேஜிங் டைரக்டர் அவர்கள் அவசரச் சேர்த்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை முதல்வரவர்கள் தயவு செய்து கவனிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

இந்த டாமின் நிறுவனத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது, கரும்பாறைகளைப பற்றிச் சொல்லும்பொழுது, இந்த ஒரு கருத்தை மட்டும் நான் தனிப்பட்ட முறையிலே இங்கே சொல்ல விரும்புகிறேன். கரும் பாறைகள் நல்ல கனி வளம் தரக்கூடியவை, செல்வத்தை ஈட்டித் தரக் கூடியவை என்பதால் அதை அரசு ஏற்று செயல்படுத்திக் கொண்டு வந்தது. இப்பொழுது, அதைத் தனியாருக்குத் தருகின்ற முயற்சி இங்கே சட்டமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணுகின்றபொழுது, உள்ள படியே தமிழகத்தின் வருமானம் குறைந்துவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. இதற்கெல்லாம் காரணம், அது தனியாருக்குப் போய் விடுமோ என்ற அச்சம்தான். என்னென்றால் 24-3-89-இலே இண்டஸ்ட்ரீஸ் செக்ரட்டரி, தனியார் ஒருவரை அழைத்துக்கொண்டு மணலிக்குச் செல்கிறார். 5-4-89-இலே தனியாருக்குத் தாரை வார்க்காதே என்று அங்கே தொழிலாளர் கள் போராட்டம் நடத்துகிறார்கள். 7-4-89 அன்று டாமின் எம்.டி. அவர்கள் அதே தனியாரை மீண்டும் அங்கே அழைத்துக் கொண்டு செல்கிறார். இதற்கெல்லாம் பின்னணியாக நேரா இருக்கிறது என்பதை எண்ணும் பொழுது இது தனியாருக்குப் போய்விடக் கூடாது என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், அங்கே அழைத்துச் செல்லப் பட்ட தனியார் அவர்கள் ஒரு தனி நிறுவனத்தை வைத்து, இந்த டாமின் நிறுவனத்திற்குத் தொழில் முறை எதிரியாக



இருந்தவர், சுப்ரீம் கோர்ட்டுக்கெல்லாம் சென்று வந்தவர் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப் பட்டவரை அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற் பட்டது என்பதையும் முதல்வரவர்கள் கவனிக்க வேண்டும்.

அதோடுகூட, தனியாருக்குக் கறுப்புப் பாறைகளை வழங்க வேண்டுமென்று சொல்வதிலே, சில கண்டிஷன்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளைப் பார்க்கின்ற பொழுது புதிதாக எவருமே வாங்க முடியாது. அதற்கென்று தனிப்பட்ட நிபந்தனைகள் வந்து விட்டன. ஆகவே, முன்பே ஏகபோகமாக நடத்திக் கொண்டிருக்கிற ஒருசிலர்தான் அதைப் பெற முடியும். இப்படிப்பட்ட நிபந்தனைகள் வருவதைப் பார்க் கின்றபொழுது உள்ளபடியே யாரோ ஒருவருக்குத் தனிப்பட்ட முறையிலே சலுகை காட்டுவதற்காக இந்த நிபந் தனைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், அந்த டாமின் நிறுவனத் திற்கு ஒரு டெலக்ஸ் செய்தி வருகிறது. அந்த டெலக்ஸ் செய்தி, ஒரு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் பெயருக்கு டாமின் நிறுவனத்திற்கு வருகிறது. அது வந்த தேதி 17-4-89. இதையும் மாண்புமிகு முதல்வர் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, அந்த எம்.டி. அவர்கள் வெளிநாடு செல்வதற்கு ஒரு சீனியர் ஆபீசரைக் கூட்டிச் செல்ல வேண்டு மென்ற (குறுக்கீடு)—மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் அனுமதியோடு தெரிவிக்கிறேன்—டெலக்ஸ் செய்தி 416081 டி.என்.எம்.எல். அது டாமினுடைய நம்பர்.

நான் அப்படியே படிக்கிறேன். தயவுசெய்து பெயரைச் சொல்வதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என் மீது வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. வீரமணி என்பவர் பெயருக்கு வருகிறது. From W. H. Martin Gross Long என்றெல்லாம் இருக்கிறது. எனக்கு அது புரியவில்லை: Telex 5317489 We have opened L/C for D/No. 1711A LC No. 15/ 54011/5001/DYUG Overseas for 2 weeks. Will Revert when he returns on Telex 101. என்னுடைய சந்தேகம் எல்லாம் இது ஏன் தனிப் பட்ட ஒருவருக்கு வரவேண்டியது டாமின் முகவரிக்கு வருகிறது என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் அந்தச் சான்றுகளைப் பேசி முடிந்தபிறகு என்னிடம் கொடுத்து விட்டால் என் வாயிலாக அவை மாண்புமிகு முதலமைச்சர் அவர் களிடம் அளிக்கப்படும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவர் அவர்களே, நன்றி. இப்படிப்பட்ட சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. எம்.டி அவர்கள் வெளிநாடு செல்வதற்கு ஒரு சீனியர் அதிகாரியை அழைத்துச் செல்வதற்கு அனுமதி கோருகிறார். அந்த போர்டு மீட்டிங்கில் அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் அவர் சீனியர் அதிகாரிகள் பலபேர் இருப்பதை விட்டுவிட்டு தனிப்பட்ட ஒரு குறிப்பிட்ட நபரைச் சொல்லி போர்டு மீட்டிங் ரிசலூஷனைக் காட்டாமல், தனிப்பட்ட முறையில் ஒருவர் பெயரைச் சொல்லி, அவரும், எம்.டி.-யும் செல்வதற்கு அரசுக்கு 'அப்ளை' செய் திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இதையெல்லாம் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி பல்வேறு சீர்திருத்தங்களை இந்த அரசு செய்யுமானால் நாங்கள் வரவேற்போம். யார் தவறு செய் தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடு கிறேன்.

இங்கே 'ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ்' என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது. மூடிக்கிடக்கிற ஆலைகளைத் திறக்க வேண்டும். உள்ளூரில் ஓணான் பிடித்தாக வேண்டும். ஆகவே, அதற்கான முயற்சிகளை உடனடியாக செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தொழிலாளர் தலைவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். நான் கேள்விப்படுவதைச் சொல் கிறேன். நிர்வாகம் ஓரளவிற்கு ஒத்து வருகிறது. ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற பிரச்சினை தான் அங்கே இருக்கிறது. சில தீர்வுகளைக் கண்டு, அந்தத் தீர்வுகளை தொழிலாளர்களிடம் சொல்வதற்கு தலைவர்கள் தயங்குகிறார் கள். ஆகவே, அரசு ஒரு தீர்வை எடுத்து அதை தொழிலாளர் களிடம் சொல்லி, அவர்களை 'கன்வின்ஸ்' செய்து, இந்த ஆலை யைச் சீக்கிரம் திறப்பதற்கு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சியெடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே இன்னொரு சந்தேகம் கூட வருகிறது. தனியாரான அந்த நிர்வாகிக்கும் அரசிற்கும் ஏதோ தகராறு இருப்பதாகவும், அதன் காரணமாக இது நீட்டிப் பதாகவும் ஒரு தவறான எண்ணம் பொது மக்களிடத்தில் பரவிக் கொண்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக தீர்வு காண்பது நல்லது.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 'ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ்' பிரச்சினை பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக் கிறோம். ஏதோ நிர்வாகம் ஒத்துவருவதைப் போலவும், தொழிற் சங்கத் தலைவர்கள் ஒத்துக்கொள்ளாத நிலைமை இருக்கிறது என்பதைப் போலவும் இங்கே சொல்லி இருக்கிறார்கள். நிர்வா





கம் எந்த அளவிற்கு ஒத்து வருகிறது என்கிற விவரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் இருந்தால் இங்கே தெரிவிக்கலாம். எனவே, அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து கொண் டிருக்கிறது. எந்த அடிப்படையில் நிர்வாகம் ஒத்து வருகிறது என்று சொல்கிறார்கள் என்பது புரியவில்லை. எனவே, அரசுக் கும், அந்த நிர்வாகத்திற்கும் இடையில் எந்தவிதமான தகராறும் இல்லை. தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக் கிறது. தொழிற்சங்கப் பிரச்சினைகளில் ஒவ்வொரு கட்டமாகத் தான் பேச்சு வார்த்தை நடத்தவேண்டியிருக்கிறது. தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். நல்ல முடிவை நோக்கி தான் நாங்கள் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவர் அவர்களே, எனக்கு கிடைத்த தகவலின்படி தொழிற்சாலை நிர்வாகம் முழு வதுமாக சமபளத்தைக் கொடுக்க முடியாவிட்டாலும், 80 விழுக் காடு இப்போது தந்துவிடுவதாகவும், 20 சதவிதம் 'டெபர்ட் பேமெண்ட்டாக' பின்னால் தருவதாகவும், அவர்கள் ஒத்து வருவ தாக கேள்விப்படுகிறோம். இதை எப்படி தொழிலாளர்களிடம் சொல்வதென்ற பதில்தான் தலைவர்கள் தயங்குவதாக தகவல் கிடைத்திருக்கிறது. இது உண்மையாக இருக்குமானால், மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அதிலே முயற்சி எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) இன்னும் சொல்லப் போனால், இங்கே 39 ஆலைகள் மூடிக்கிடப்பதாக பாராளுமன்றத்தில் அமைச்சர் அவர்கள் தெரி விக்கிறார்கள். தமிழக அரசினுடைய கணக்கின்படி 26 ஆலை கள் என்று வருகிறது. திறக்க இருப்பதோ மூன்றே மூன்று பஞ்சாலைகள். அதுவும் கவர்னரின் ஆட்சிக்காலத்தில் எடுக்கப் பட்ட முடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மதுரைக்குச் செல்லும் போதெல்லாம் அங்கே ஆலைகள் திறக்கப்படும், திறக்கப்படும் என்ற விளம்பரத்தைக் கொடுத்து விட்டு வந்து விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு அங்கே இருக்கிறது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு உடனடியாக ஆலைகளைத் திறந்து, வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. மற்றவர்களும் பேச வேண்டும். இன்றைக்குக் கண்டிப்பாக நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இல்லாவிட்டால், நான் அடுத்த உறுப்பினருக்குச் செல்வது பேராசிரியருக்கு இழுக்காகி விடும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவர் அவர்களே, தங்கள் ஆணைக்குப் பணிந்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

[1989 மே

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் இறுதிக் கட்டத்திலே வேக வேகமாக சிலவற்றைச் சொல்லி
அமர்ந்து இருக்கிறார்கள். மதுரைக்குச் செல்லும்போதெல்
லாம் பத்திரிக்கையிலே மூடிய ஆலைகளைத் திறக்கிறேன் என்று
செய்தியைத் தந்துவிட்டு அமைச்சர் அவர்கள் வருகிறார் என்று
சொல்லியிருக்கிறார்கள். மூடிய ஆலைகளைத் திறக்கிறோம்
என்ற செய்தி நிச்சயமாக தவறான செய்தியாக இருக்க முடி
யாது. தொடர்ந்து மூடிய ஆலைகள் திறக்கப்பட்டு இருக்
கின்றன. சென்னையில் கூட 15 மாத காலத்திற்கு மேலாக
மூடப்பட்டிருந்த மெட்டல் பாக்ஸ் ஆலை திறக்கப்பட்டு இருக்
கிறது. கடந்த கால ஆட்சியிலே மூடப்பட்ட ஆலைகளைத்
தான் இப்போது படிப்படியாக திறந்து கொண்டிருக்கிறோம்.
ஒரு ஆலையில் உள்ள தொழிலாளர் பிரச்சினை, அந்த ஆலை
யில் இருக்கிற மற்றைய பிரச்சினைகளை எல்லாம் அவ்வளவு
எளிதிலே ஒரு நாளிலே உட்கார்ந்து பேசித் தீர்த்து விட முடி
யாது. தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி அறிந்தவர்
களுக்கு இது நன்றாகப் புரியும். ஆகவே தொடர்ந்து பத்திரிக்
கையிலே கொடுக்கின்றபோது, பேசிக் கொண்டு இருக்கிறோம்
என்று சொல்கிறோம். அது செய்தியாக வருகிறது. தொடர்ந்து
செயலிலே காட்டிக்கொண்டிருக்கிறோம்.

*திரு. பா. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழக அரசின் தொழில் மானியத்தின் மீதான
விவாதத்திலே கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பினை வழங்கிய
தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை
துவங்குகின்றேன்.

வரலாறு பல தலைவர்களைப் படைத்திருக்கின்றது. ஆனால்
பல வரலாறுகளைப் படைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு தலைவர்
இந்நாட்டின் பிணி அகற்றிட ஈடு இணையின்றிப் பணியாற்றிட,
இளைஞர் அணி கண்ட இனமானத் தலைவர், எங்கள் இதய
தெய்வம், தமிழ் இனத்தின் வரலாறு, தமிழக முதல்வர்,
டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அவர்கள் இருக்கின்ற அவை
யிலே உடன் இருந்து பணியாற்றுகின்ற அரிய வாய்ப்பினை
வழங்கி, எங்களின் பிறவிப் பயனை வழங்கிய அவருக்கு என்
னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கு
வதில் வயது வரம்பைத் தளர்த்த வேண்டும் என்ற இளைஞர்
சமுதாயத்தின் இதயக் குமுறலை வேண்டுகோளாக இந்த மன்
றத்திலே தந்து வெற்றியும் பெற்றுத் தந்திருக்கிற இளைஞர்
சமுதாயத்தின் எழுச்சிக் குரல் எங்கள் ஆருயிர் அண்ணன் மு.க.
ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்



[[1மே 3] [திரு. பா. மனோகரன்]

அதைப் போலவே வானம் பொய்ப்பினும் தன் மானம்
பொய்யாத தமிழர் பூமியாக, வீரத்தின் விளை நிலமாக தென்
பாண்டிச் சிங்கம் வாளுக்கு வேலி வாழ்ந்திட்ட மான மறவர்
பூமியாக, மருதிருவர் சீமையாக விளங்கிக் கொண்டிருக்கிற
என்னுடைய சிவகங்கைத் தொகுதியின் சீர்மிகு வாக்காளப்
பெருமக்களுக்கும் பொது மக்களுக்கும் என்னுடைய நெஞ்சம்
நிறைந்த இதயம் கனிந்த நன்றியினையும் வணக்கத்தையும்
முதலிலே காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

''வந்தே மாதரம் தந்த வரம், வசதி படைத்தோர்க்கே
சுகம் தரும்'' என்ற வரிகளுக்கு ஏற்ப இந்த நாடு விடுதலை
அடைந்தும், திட்டங்களின் பலன்கள் எல்லாம் பாமரர்களுக்குப்
போய்ச் சேராமல் பணக்காரர்களுக்கும், பண்ணையார்களுக்கும்,
மிட்டா மிராசுகளுக்கும் மட்டுமே
அலை அரசுகளுக்கும்,
போய்ச் சேர்ந்து விட்ட நிலையில், தமிழக முதல்வர் மாண்புமிகு
டாக்டர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு இருக்கின்ற வரவு
செலவுத் திட்டமும், அதன் தொடர்ச்சியாக, தந்திருக்கிற
தொழில் திட்டங்களும், வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சி
யுறச் செய்வதாக, விசைபொடிந்து கிடந்த தமிழனின் தேகத்
திற்கு வன்மை ஊட்டுவதாக, இங்கே அமைந்து இருக்கின்றது
என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வாடிக் கிடந்த ஏழைகளின் நெஞ்சம் இந்த அரசை இன்று
வாழ்த்திக் கொண்டு இருக்கிறது. நலிந்து கிடந்த நடுத்தர
வர்க்கத்தின் இதயங்களில் இன்று நம்பிக்கை மலர்
பூத்திருக்கின்றது. கஜானாவையும் களஞ்சியத்தையும் பலர்
காலி செய்து விட்ட காரணத்தால், கருமுகில்கள் இத்திரு
நாட்டை சூழ்ந்திட்ட நிலையிலும் கூட, முகில் கிழித்துக் கிளம்பு
கின்ற முழு மதியாக, மொட்டவிழ்ந்து, மணம் பரப்புகின்ற
முல்லை மலராக தமிழக முதல்வர் அவர்களால் திட்டங்கள்
பல இந்த நாட்டுக்குத் தரப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.
பொன்னுசாமி அவர்கள், இந்த அரசினுடைய திட்டங்களைப்
பற்றிய கொள்கைக் குறிப்புப் புத்தகம் இளைத்து இருப்பதாகக்
குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்
நீண்ட பல அடி கொண்ட அல்லி அரசாணி மாலைதான் சிறந்தது,
1¾ அடி கொண்ட குறள் குறைந்தது என்று யாரும் கூறிவிட
முடியாது. நாங்கள் அதிகமாகப் பேசவில்லை. ஆனால்
நன்றாகப் பேசி, நிறைவாகச் செயல்படுகிறோம் என்பதை
இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைச்கிணங்க
அகற்றப் பெற்றது.

இந்த நாடு எழிற்சோலையாக வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மனோகரன்
கன்னிப் பேச்சுப் பேசுகிறார் என்றாலும் கூட, அந்தப் பகுதியை
எடுத்து விட்டு, நேரடியாகப் பேச்சுக்கு வரலாம்.

திரு. பா. மனோகரன்: இந்த அவையிலே நடந்ததை
தான் நான் தெரிவித்தேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுங்கட்சி உறுப்பினர்
கள் எல்லாம் மிகுந்த பொறுப்போடு பேச வேண்டும். நேர
டியாகத் ''தொழிலுக்கு'' வர வேண்டும்.

திரு. பா. மனோகரன்: இந்த நாடு எழிற் சோலையாக
வேண்டும், கல்விச் சாலைகளும், தொழிற் சாலைகளும், உரு
வாகிட வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்ற ஒரு
தலைவரை நாம் முதல்வராய் பெற்றிருக்கிறோம். 'உழவுக்கும்
தொழிலுக்கும் வந்தனை செய்வோம் — வீணில் உண்டு களிப்
போரை நிந்தனை செய்வோம்'' என்ற கவிதை வரிகளுக்குக்
காவிய வடிவம் தருகின்ற ஒரு கலைஞரை தலைவராகப் பெற்
றிருக்கிற காரணத்தால், இந்த அரசு தொழிலை வளம் பெறச்
செய்கின்ற தொழிலாளர்கள் வாழ்வு நலம் பெற வேண்டுமென்
பதற்காக, இந்த ஆட்சி பொறுப்பேற்ற மூன்று மாதத்திற்குள்
ளாகவே மூடிய ஆலைகள் பலவற்றைத் திறந்து, வேலையற்
றிருந்த ஆலைத் தொழிலாளர்கள் 12,000 பேருக்கு தலா
ரூ. 250 வீதம் தரப்பட்டிருக்கின்றது. அப்படி தரப்பட்டுள்ள
இந்த அரசை அப்படித் தந்ததற்காக நான் பாராட்டுகிறேன்.

ஒரு தாய்க்கு எத்தனை குழந்தைகள் இருந்தாலும், நோயால்
நலிந்து, மெலிந்திருக்கின்ற குழந்தையைத்தான் தனி கவனத்
தோடு, கனிவோடு பராமரிப்பாள். அதைப் போல்தான்,
தமிழகத்திலேயுள்ள மாவட்டங்களிலேயே நலிந்த மாவட்ட
மாய் இருக்கின்ற பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தி
லுள்ள என்னுடைய தொகுதியாகிய சிவகங்கையை, அந்தத்
தாயுள்ளத்துடன் பார்த்து, இந்த ஆண்டு முடிவுக்குள் அங்கே
கிராஃபைட் திட்டம் துவக்கப்படும் என்று இந்த தொழில்
மானியத்திலே, கொள்கை விளக்கக் குறிப்பிலே அறி
வித்து, சிவகங்கை தொகுதியிலே ஆறுகள் இல்லாத குறையை
போக்குகின்ற வகையிலே இந்த அறிவிப்பின் மூலம், மக்கள் மனங்
களிலே மகிழ்ச்சி ஆறு ஓடச் செய்த தமிழக முதல்வர் அவர்களுக்கு
என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அதே நேரத்தில் அந்த கிராஃபைட்டைப் பற்றி குறிப்பிடும்
போது, கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப் போல் அந்தத்
திட்டம் ரூ. 200 கோடி செலவிலே அங்கே நிறைவேற்றப்படும்
என்று மத்திய அமைச்சர், மாண்புமிகு திரு. ப. சிதம்பரம்
அவர்கள் சிவகங்கையில், பல கூட்டங்களில் தெரிவித்திருக்கிறார்
கள். பல பத்திரிகைகளுக்கும் பேட்டியளித்திருக்கிறார்கள்.



ஆனால் அந்தத் திட்டம் அடிக்கல் நாட்டப்பட்ட போது, அடிக்
கல் நாட்டிய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ரூ. 20
கோடி சில்லறை செலவிலே அது நிறைவேற்றப்படும் என்று
கூறினார். ஆனால் இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பு
ஆன கதையாக அது ரூ. 10 கோடிக்கு வந்திருக்கிறது என்றால்,
அந்த சிதம்பர ரகசியம் என்னவென்று அந்த சிவகங்கை மக்க
ளுக்குப் புரியவில்லை என்பதை இந்தக் கட்டத்திலேயே நான்
எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அப்படி எடுத்துக் காட்டு
கின்ற இந்த நேரத்திலே அந்த கிராஃபைட் தொழிற்சாலை பற்றி
இந்த மன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன். ரூ. 10 கோடி
செலவிலே துவங்க இருக்கின்ற அந்த கிராஃபைட் தோண்டி
எடுக்கப்படுகின்ற மண்ணிற்குள் கரும் பொன்னாய் பதிந்து
கிடக்கின்ற அந்த கிராஃபைட், என்னுடைய தொகுதியிலே உள்ள
அந்தச் சுரங்கத்தை, அரசுக்கு ஆண்டிற்கு பல கோடி ரூபாய்
வருவாயைத் தரக் கூடிய அந்த இடத்தை, 20-4-1989 அன்று
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சென்று பார்த்தேன்.

(முற்பகல் 10-20).

இது வரையில் அங்கே 13,000 டன் கிராஃபைட் தாது பொருள்
மண்ணிலேயிருந்து வெட்டி எடுக்கப்பட்டு சேமிப்பிலே வைக்கப்
பட்டுள்ளது. வெட்டி எடுத்து வைக்கப்பட்டுள்ள தாதுப்
பொருளை சுத்திகரிப்பு செய்தால் ஆகும் செலவுடன் சேர்த்து
ரூபாய் 75 லட்சம் அல்லது 3/4 கோடி ஆகும் என்றும், அதே
நேரத்தில் சுத்திகரிப்பு செய்த அதன் மதிப்பு ரூபாய் 250 லட்சம்
அதாவது ரூபாய் $2\frac{1}{2}$ கோடி ஆகும் என்றும் அங்கே பணியாற்று
கின்ற அதிகாரிகளும் வல்லுநர்களும் தெரிவித்தார்கள். அப்படி
வெட்டி எடுக்கப்பட்ட அந்த அளவையும் முறைப்படி தொழிற்
சாலை துவங்கப்படுகின்ற நேரத்திலே 4 மாதத்திலே இன்னும்
அதிகமாக சேமித்து விடலாம் என்றும் தெரிவித்தார்கள். ஆனால்
10 கோடி ரூபாய் செலவிலே துவங்கப்படுகின்ற அந்தத் திட்டம்
ஆண்டுக்கு சற்றேறக் குறைய ரூபாய் $7\frac{1}{2}$ கோடி லாபம் தரக்
கூடியது, பொன் முட்டை இடக்கூடிய, ஏன் வைர முட்டை
இடக் கூடிய வாத்தாக அமைந்து இருக்கிறது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே இயந்திரங்களையே முழுவதும் பயன்
படுத்தாமல் மேனுயுவல் லேபராக பயன்படுத்தி, வேலையற்
றோர் சாலை ஓரத்து வேந்தர்களாக வீற்றிருக்கும் என்னு
டைய தொகுதியைச் சார்ந்த வேலையற்ற இளைஞர்களுக்கு
வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதே நேரத்திலே மண்ணிலேயிருந்து தோண்டி எடுத்து சுத்தி
கரிப்பு செய்யும் பணிக்காகவும் மற்றும் துவங்கப்பட இருக்கிற
அந்த தொழிற்சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

எலக்டிரிக் பேட்டரீஸ், எலக்ட்ரோட்ஸ், கார்பன் பிரஷ்ஷ்ஸ்,
பெயின்ட், பென்சில்ஸ் ஆகிய கிராஃபைட்டிலிருந்து தயாரிக்கக்
கூடிய பொருட்களுக்கான தொழிற்சாலைகளையும், - எஃகு

[திரு. பா. மனோகரன்] [1989 மே 3

மற்றும் இரும்பு அல்லாத உலோக கனிமங்களையும் உருக்கக் கூடிய மூசைகள், பெரிய பெரிய தொழிற்சாலைகளில் எல்லாம் பயன்படுத்தக் கூடிய அந்த க்ரூசிபிள்ஸ் (Crucibles) எல்லாம் கூட இன்று இந்தியாவுக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைப் போலவே ரெப்ராக்டரீஸ் எனப்படுகிற வெப்பந்தாங்கிகளுக்கு உபயோகப்படுத்தக்கூடிய மேக்னீஷியா கார்பன் பிரிக்ஸ் மற்றும் அலுமினியா கார்பன் பிரிக்ஸ் ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற்சாலைகளையும் இங்கே அமைக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே இப்படி பல பொருள்கள் தயாரிக்கப்படுகின்ற கிராஃபைட்டுக்குநிலங்களை அங்கே வழங்கிய அந்த விவசாயிகளுக்கு சென்ட் ஒன்றுக்கு ரூபாய் 8 வீதம் தான் அரசினால் கடந்த காலங்களிலே வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்பட்ட அந்த ரூபாய் 8, சென்ட் ஒன்றுக்கு போதாது என்று அவர்கள் நீதிமன்றத்திலே முறையீடு செய்துள்ளார்கள். நீதிமன்றம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கி இருக்கிறது. ஆனால் உயர்நீதிமன்றத்திலே கடந்த கால அரசு அதை எதிர்த்து அப்பீல் செய்திருக்கிறது. விவசாயிகளுக்கு . . . . . . . . .

*திரு. எஸ். எஸ். தென்னரசு : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் அவர்கள் கிராஃபைட் தொழிற்சாலையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக நேரம் கிடைக்கவில்லை. இருந்தாலும் அவர்களுடைய பேச்சோடு என்னுடைய கருத்தையும் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். கடந்த ஆட்சியின் போதும், அதற்குப் பிறகு வந்த கவர்னர் ஆட்சியின் போதும் அந்த கிராஃபைட் தொழிற்சாலையைப் பற்றி ஏதோ மர்மம் இருப்பதாக அந்த மாவட்டம் முழுவதும் பேசப்படுகிறது. நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்ததாக பத்திரிகையில் செய்தி வந்தது. அவர் தொடங்கி வைத்ததற்குப் பிறகு அலுவலகம் மூடப்பட்டு இருக்கிறது. அங்கு பயன்படுத்திய கார்கள் எல்லாம் விற்கப்பட்டுவிட்டன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே வந்து அதை பார்வையிட்டு அங்கிருக்கக்கூடிய மர்மத்திற்கு விடை அளிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு திரு. மனோகரன் அவர்களின் பேச்சோடு இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மனோகரன் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. பா. மனோகரன் : அந்த விவசாயிகளுக்கு எதிராக மேல் முறையீடு ஒன்று உயர்நீதிமன்றத்திலே அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. அதை அரசு திரும்பப் பெற்று, கடந்த காலங்களிலே இருந்த அரசினால் இழைக்கப்பட்ட அந்த அநீதியை திரும்பப் பெற்று, அந்த வழக்கை திரும்பப் பெற்று விவசாயிகளுக்கு சென்ட் ஒன்றுக்கு ரூபாய் 50 வீதம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1989 மே 3]

(மணி அடிக்கப்பெற்று வேறு உறுப்பினர் பேச அழைக்கப் பெற்றார்.)

திரு. கே. கோபாலகிருஷ்ணன் : இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் ஈடு இணையற்ற தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்களால் நியமிக்கப்பட்டு, பெரும் தலைவர் திரு. ஜி. கே. மூப்பனார் அவர்களின் ஆசி பெற்று, மேட்டுப்பாளையம் தொகுதி மக்களால் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளிப்பது உடனடி தேவை. நலிவு அடைந்த தொழிற்சாலைகளுக்கு புத்துயிர் அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்ற நிறுவனங்களின் ஆலோசனையின் பேரில் தொழில் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து அதற்கான வழி முறைகளைக் காண வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சாலைகள் நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை மேதகு ஆளுநர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு சென்னையிலே தன்னுடைய உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இம்மாதிரி அரசு நடத்தும் தொழிற்சாலைகள், தொழில்வல்லுநர்களின் குழுஒன்றைஅமைத்து தொழிலை லாபகரமாக நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை தயாரித்து லாபம் பெறாத தொழிற்சாலைகளை உடனடியாக லாபம் பெறும்படியாக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுத் துறையில் உள்ள தொழில்களில் சில குறிப்பிட்ட தொழில்களைத் தவிர மற்ற தொழில்களிலிருந்து பங்கோ விலகிக்கொண்டு அதனால் கிடைக்கும் நிதியாதாரத்தைக் கொண்டு புதிய தொழில்களை ஊக்குவிக்கும் திட்டம்—டிஸ்இன்வெஸ்ட்மெண்ட் பாலிசி வெகு வேகமாக செயல்படுத்தப்பட வேண்டும். இதற்காக தொழிற்துறை பொறுப்பையும் ஏற்றுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது அமைச்சரவையில் உள்ள இரண்டு அல்லது 3 அமைச்சர்களைக் கொண்ட குழு அமைத்து தொழில் வல்லுநர் குழு சமர்ப்பிக்கும் அறிக்கையை 3 மாதங்களுக்குள் பரிசீலித்து ஒரு நல்ல முடிவினை எடுப்பார்களாயின் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகத்தில் நிலவும் நிதி நெருக்கடியிலிருந்து ஓரளவு விடுவிக்கலாம் என்று கூறிக் கொள்ளுகிறேன். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தின் நிகர லாபமானது 1987-88 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டைவிட 80 இலட்சம் ரூபாய்கள் குறைந்திருப்பது பக்கம் 36-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1986-87 ஆம் ஆண்டு ரூ 281இலட்சமாக இருந்த லாபம் 1987-88-ல் ரூ203 இலட்சமாகக்

[திரு. வெ. கோபாலகிருஷ்ணன்] [1989 மே 3

குறைந்திருப்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்
வைக்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல
டிட்கோ நிறுவனம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிகர
லாபத்தை எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்பதை மாண்பு
மிகு முதல்வர் அவர்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்
நிறுவனத்தின் லாப நஷ்ட கணக்குகளுக்கான புள்ளி விவரங்கள்
கோரப்படவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சிப்காட் நிறுவனத்
தின் லாபம் 1987-88 ஆம் ஆண்டு ரூ113 லட்சம் என்று குறிப்
பிடப்பட்டிருக்கிறது. அதாவது முந்தைய ஆண்டைவிட ரூ30
இலட்சம் அதிகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நிறுவனத்
தின் வளர்ச்சியை அது எடுத்துக்காட்டுகிறது. சிப்காட், டி.ஐ.ஐ.சி.
போன்ற நிறுவனங்கள் லாபகரமாக நடந்து வரும்போது டிட்கோ
நிறுவனம் மட்டும் நஷ்டத்தில் நடந்து வருவதை முதல்வர் அவர்
களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். உயரழுத்த
மின்சாரம் உபயோகிக்கும் தொழிற்சாலைகளுக்கு இரவு நேரத்தில்
தமிழக மின்சார வாரியம் கூடுதலான உபரி மின்சார ஒதுக்கீட்டை
18—11—1987-ந் தேதி முதல் வழங்கி வந்தது. ஆனால் இந்த
நல்ல சலுகை கடந்த 31—1—1989 முதல் புதிய அரசு பதவி
ஏற்ற பிறகு ரத்து செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு மின்
துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இதனால் 20 சதவீதம் தொழிலாளர்கள் வேலை இல்லாமல்
அவதிப்படுகிறார்கள். உயர் அழுத்த மின்சாரம் உபயோகிக்கும்
தொழிற்சாலைகளுக்கு மின் விநியோகம் மிகவும் பாதிக்கப்பட்டு
கடந்த 3 மாதங்களில் ஒவ்வொரு தினமும் குறைந்தது 4 அல்லது
5 முறை மின்விநியோகம் தடைப்படுகின்றது. அதுவும் சில சமயங்
களில் முன் அறிவிப்பு இன்றி தடைப்படுத்தப்படுகிறது. மீண்டும்
எப்பொழுது மின் விநியோகம் கிடைக்கும் என்பது சம்பந்தப்பட்ட
அதிகாரிகளுக்கும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இதனால்
ட்ரான்ஸ்பார்மர்கள், மோட்டார்கள் மற்றும் உயரழுத்த சாத
னங்கள் பாதிக்கப்படுவதோடு, தொழிலாளர்களுக்கு வேலை
யில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். கோவையிலும், அதன் சுற்றுப்புறத்திலும்,
சுமார் 1,700 ஃபவுண்டரிகள் இயங்கி வருகின்றன. இவைகளில்
1 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி
வருகின்றனர். தற்போது 1989 ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில்
காலாண்டிற்கு 30,000 டன் ப்பிக் அயர்ன் தேவைப்படுகிறது.
அதில் SAIL நிறுவனம் 3,000 டன்தான் ஒதுக்கியிருப்பதை
மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது
ஃபவுண்டரிகளுக்கு பேரதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளிப்ப
தோடு மூலப்பொருள்கள் கிடைக்காததால் தொழிற்சாலைகளை
மூடக்கூடிய அவல நிலை ஏற்படுகிறது. கடந்த 19—4—1989-ஆம்
நாள் இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் கோவை காரமடைக்கு
வருகை தந்தபோது கோவை மாவட்ட சிறு தொழில்கள்
சங்கத்தின் தலைவர்கள் ப்பிக் அயர்ன் பற்றாக்குறையைப் பற்றி
குடியரசுத் தலைவர் அவர்களுக்கு முறையிட்டபோது அவர்



1989 மே 3] [திரு. வெ. கோபாலகிருஷ்ணன்]

சேலம் உருக்காலையில் பிக் அயர்ன் உற்பத்திக்கு சாத்தியக்
கூறுகள் உண்டு எனவும், இதை தனியார் நிறுவனமும், பொது
நிறுவனமும் ஒன்று சேர்ந்து, கூட்டு முயற்சியில் பிக் அயர்ன் உற்
பத்தி அல்லது ஸ்பாஞ்ஜ் அயர்ன் ப்ளாண்ட் ஒன்றை அவினாசியில்
அமைத்தால் இந்த ஷார்ட்டேஜ்ஜை தீர்க்கலாம் என்று மிகத்
தெளிவாகக் கூறினார்கள்.

(முற்பகல் 10-30)

அப்போது தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர்
மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்கள் உடனிருந்தார்கள்.
அதில் தமிழக அரசு சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு
கொண்டு ஆவன செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்
கொள்கிறேன். பிக் அயர்ன், ஸ்பாஞ்ஜ் அயர்ன் தயாரிக்கும்
தொழிற்சாலைகளை மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என
அறிவிக்கப்பட்டுள்ள அவிநாசி தொகுதியில் அமைத்து, அதற்குத்
தேவையான மின்சாரத்தினை ஐந்து மெகாவாட் செட்டுக்களாக
அமைந்து, மின்சார உற்பத்தி செய்யும் இயந்திரங்களுக்கு
அருகிலுள்ள, மேட்டுப்பாளையம் பவானி ஆற்று தண்ணீரை
உபயோகித்து, மின்சாரம் உற்பத்தி செய்தால் அந்த தொழிற்
சாலைகளுக்குத் தேவையான மின்சாரமும், அதே நேரத்தில்
ஸ்க்ராப் அயர்ன், பிக் அயர்ன் தட்டுப்பாடும் நீங்க ஏதுவாக
இருக்கும். அதற்கு தமிழக அரசு நிறுவனமான 'டிட்கோ' அதைக்
கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நூற்றுக்கணக்கான தொழில் முனைவோர் விண்ணப்பம்
செய்துவிட்டு, மின் இணைப்பிற்காக வருடக் கணக்கில் காத்திருக்
கிறார்கள். தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களை அணுகும்
போது, மின் இணைப்பிற்கான தளவாடப் பொருட்கள் இல்லாத
காரணத்தால் மின் இணைப்புகள் உடனுக்குடன் கொடுக்க
இயலவில்லை என்று தெரிவிக்கிறார்கள். எனவே, தொழில்
முனைவோருக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் புதிய
மின் இணைப்புக்கள் உடனுக்குடன் வழங்க ஆவன செய்ய
தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் சர்க்கரை ஆலை
நிறுவுவதற்கான உரிமம் பெறுவதற்கான வழிமுறைகளில் மத்திய
அரசு சில மாற்றங்களைச் செய்து, சென்ற மாதம் திருத்தி
அமைத்திருக்கிறது. அதில் சுற்றளவு விகிதாச்சாரங்களில் 40
கிலோ மீட்டரிலிருந்து 25 கிலோ மீட்டராக குறைத்து இருப்பது
வரவேற்கத்தக்கது. அந்தக் கொள்கை மாற்றத்தின் அடிப்படை
யில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ, தண்ணீர் வசதி, மின்சார
வசதி, கரும்பு சாகுபடி போன்ற எல்லா வசதிகளும் நிறைந்த
மேட்டுப்பாளையத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை
அமைக்க பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறையில் இயங்கும் தொழிற்சாலைகளை வைத்து
இருக்கும் சிலர் சர்க்கரை ஆலைக்கு உரிமம் கேட்டு விண்ணப்பித்து
இருக்கிறார்கள். அதைத் தனியார் நிறுவனமும், பொதுத்துறை

நிறுவனமான டிட்கோவும் ஒன்று சேர்ந்து கூட்டு முயற்சியில் சர்க்கரை உற்பத்தி செய்யும் திட்டத்தைப் பரிசீலிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் தொகுதியில் மேட்டுப்பாளையம் நகரின் மையப்பகுதியில் பவானி நதியே ஓடிக்கொண்டிருக்கும். என்றாலும், அங்குவாழும் மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இன்றித் தவிக்கிறார்கள். அங்கிருந்து சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் காரமடையில் மற்றும் அதைச் சுற்றிலும் உள்ள கிராமங்களில் குடிதண்ணீர் வசதிகள் எதுவும் வழங்கப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இந்தப் பேரவையில் எனது கருத்துக்களை எடுத்துக்கூற அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன் :** தலைவர் அவர்களே, தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை வெளியிட ஒரு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி சொல்லுகிறேன். தமிழகத்தில் தொழில் அதிபர்களுக்கு குறை கிடையாது. தமிழகத்தில் தொழில் மூளைகளுக்கும் குறை கிடையாது. ஆனால் இன்றைக்கு எதிர்நோக்கியிருக்கின்ற ஒரே ஒரு பற்றாக் குறை, மின்சாரப் பற்றாக்குறை. மின்சாரப் பற்றாக்குறையைச் சரிக்கட்டினால்தான் புதிய தொழில்களைத் தொடங்க முடியும். இருக்கக்கூடிய தொழில்களையும், தொழிற்சாலை களையும் பாதுகாக்க முடியும். அதனால், தமிழகத்தில் ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறையை மத்திய அரசு உடனடி யாகத் தலையிட்டு, தீர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் தான் முதலில் நான் இங்கே வைக்க விரும்புகிறேன். ஏனெனில், மின்சாரம் இல்லாவிட்டால், இருக்கக்கூடிய தொழிற்சாலை களிலும் உற்பத்தி இல்லாமல் போய் விடும் என்ற காரணத்தினால தான் இங்கே இதைச் சொல்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் எத்தனையோ புதிய கண்டுபிடிப்புக்களை எல்லாம் கண்டு பிடித்து இருக்கிறார்கள். நாம் யார், யாரையோ பாராட்டு கின்றோம். பெரிய, பெரிய தொழிற்சாலைகளில், புதிய, புதிய சாதனங்களை, சாதனைகளை உருவாக்கியவர்களைப் பாராட்ட நாம் தவறியிருக்கின்றோம் என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். மோட்டார் வாகனங்கள், சைக்கிள் மோட்டார்கள், சைக்கிள்கள் இன்னும் மின்சார சாதனங்கள் தமிழகத்தில் அதிக மாக உற்பத்தி செய்யப்பட்டு, இன்றைக்கு நாம் எல்லோரும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். அப்போது பெரிய தொழில் அதிபர்களை நாட்டில் நாம் பாராட்டி இருக்க வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். எதற்கோ பாராட்டுகின்றோம்; 100 நாள் ஓடுகின்ற படத்திற்குப் பாராட்டு; அதில் நடித்தவர்களுக்கு பாராட்டு; அதை திரு





வகித்தவர்களுக்குப் பாராட்டு; ஏன் இந்தப் பெரிய தொழில் அதிபர்களைப் பாராட்டவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அடுத்து இங்கே பொதுத்துறை நிறுவனங்கள் எப்படி செயல் படுகின்றன என்பதை நாம் இங்கே எண்ணியாக வேண்டும். டாமினைப் பற்றி ஒரு குறிப்பு கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு அடுத்து எனக்கு ஒரு குறிப்பு கிடைத்து இருக்கிறது. 23-12-1988ல் ஆளுநர் ஆட்சியில் எல்காட் நிறுவனத்திற்குச் சொந்தமான ஓசூரில் இருக்கக்கூடிய கேப்பாசிட்டர் என்ற ஒரு நிறுவனத்தை தனியார் ஒருவருக்கு கூட்டு நிறுவனமாக அமைப்பதற்கு உத்திரவு வழங்கியிருக்கிறார்கள். சுமார் 25 லட்சம் ரூபாய் லாபத்தை ஈட்டிய அந்த நிறுவனம் சில அதிகாரிகளால் என்ன நோக்கத்திற்காக என்று தெரியாது, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எனக்கு கிடைத்த தகவலை அப் படியே கொடுத்து விடுகிறேன்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உறுப்பினர் ஒரு தாளைக் கொடுத்தார்).

ஆகவே வேலியே பயிரை மேய்கிறது என்றால் யார் ஆட்சியில் இருந்தால் என்ன, ஆட்சியாளர்களை குறை சொல்லக்கூடாது; சொல்லவும் முடியாது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கள்ள நோட்டுக்கள் அடித்தார்கள், காங்கிரஸ் அமைச்சர்களை குறை சொன்னோமா, கிடையாது. ஆகவே ஒவ்வொரு ஆட்சியிலும் நடைபெறக் கூடிய தவறுகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேள்வி கேட்கவேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கே நீங்கள் கொடுத்து இருக்கிற கொள்கை விளக்கப் புத்தகத் தில் 10 கோடி ரூபாய் டாமினில ஒரு அதிகாரியால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லியிருக்கிறீர்கள் (குறுக்கீடு) என்ன குறைபாடு இருந்தாலும் கடைசியில் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு "Point of Order" கேட்கிறார்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, நம்முடைய முன்னாள் சபாநாயகர் அவர்கள் காங்கிரஸ் ஆட்சியின்போது கள்ள நோட்டு அடித்தார்கள் என்று சொல்லுகிறார்கள் (குறுக்கீடு). காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கள்ள நோட்டு அடித்தார்கள் என்று சொன்னார்கள். யார் அடித்தது?

**திரு. பி. எச். பாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் யாரோ கள்ள நோட்டு அடித்தார் கள், அதற்காக காங்கிரஸ் அமைச்சர்களைக் குறை சொல்ல வில்லை. காங்கிரஸ் முதலமைச்சரைக் குறை சொல்லவில்லை,

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 மே 3

அதுபோல் தான் இப்போதும் இந்த 10 கோடி ரூபாய்க்கு இந்த
அதிகாரி தான் பொறுப்பு, அவரோடு பணியாற்றியவர்கள் தான்
பொறுப்பு என்ற காரணத்தால்தான் அந்த தொனியில் நான்
இங்கே சொன்னேன்.

10 கோடி ரூபாய் இழப்பீடுக்கு அந்த அதிகாரி மீது என்ன
நடவடிக்கை எடுத்தீர்கள்? ஆளுநர் ஆட்சியில் சஸ்பென்ட்
செய்யப்பட்டதாக பத்திரிகையில் பார்த்தேன்.
நீங்கள்தான் செய்தீர்களா? (குறுக்கீடு)
சஸ்பென்ட் செய்து இருந்தால் பரவாயில்லை. நீங்கள் சிறையில் அடைத்து
1 ரூபாய், 2 ரூபாய் அல்ல. 10 கோடி ரூபாய்,
ரூபாயை சாப்பிட்டவர்கள், எப்படி. 10 கோடி ரூபாய். 10 கோடி
டார்களோ தெரியாது. எப்படி எல்லாம் சாப்பிட்
நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அப்படி சாப்பிட்டவர்கள் மீது நீங்கள்
இருக்காது. நேரடியாக யாருக்கும் இனிமேல் பயம்
பாய்ச்சுகிறீர்கள், எதுஎதற்கோ மிசா சட்டத்தைப்
சாட்டு வரும்போது, அது இப்படிப்பட்ட அதிகாரிகள் மீது ஒரு குற்றச்
அடைத்து இருந்தால்தான் உண்மை என்று தெரிந்த உடன் உள்ளே
அப்போதுதான் இந்த நாட்டுக்கு, தெரிந்து இருக்கும்.
வார்கள். குற்றச்சாட்டை உண்மை என்று கருது
பற்றும்போது கஸ்டம்ஸ்-ஐ சேர்ந்த அதிகாரிகள் தங்கத்தை கைப்
மக்கள் அதை தங்கத்தை விரித்து டி.வி.யில் காட்டுவார்கள்,
காட்டாத ஏற்றுக்கொள்கிறார்கள். நீங்கள் எதையும் விரித்து
என்பதை காரணத்தால் தான்மக்கள் அதை நம்ப மறுக்கிறார்கள்
பிடித்து நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். இந்தஅதிகாரியை
யானால், சிறையில் வைத்து நாட்டிற்கு காட்டியிருப்பீர்களே
செய்யாமல், எதை சொன்னாலும் மக்கள் நம்புவார்கள். இதை
கொண்டு, இதை ஏதோ ஒரு விவாதப் பொருளாக வைத்துக்
நாட்டில் விவாதமே ஒரு தண்டனையாக இருக்குமானால், இந்த
எல்லோரும் எதற்கு சிறைச்சாலை. சிறைச்சாலையில் போய் நாம்
போல் ஒரு நாள் உட்கார்ந்து, அங்கேஒரு சட்டமன்றத்தைப்
விசாரிப்போம், விவாதத்தை நடத்துவோம். எல்லோருடைய வழக்கையும்
எல்லோரும் விவாதித்துவிட்டு இதுவே தண்டனை, நீங்கள்
விடுதலை சிறையிலிருந்து வெளியே செல்லுங்கள், முதலமைச்சர்
உண்மையிலேயே செய்கிறார் என்று செய்யலாமா. அதை செய்தால்
செல்லக்கூடியவர்கள் இந்த நாடு உங்களைப் பாராட்டும். அங்கே
கஷ்டபடக்கூடியவர்கள், சாதாரண, சாமான்யமானவர்கள்,
ரூபாயை இப்படி திட்டம் போட்டு பல கோடி
படாதது சாப்பிட்ட அதிகாரிகள் இன்னும் சிறையில் வைக்கப்
என்ற உண்மையிலே இந்த நாட்டில் சட்டம் இருக்கிறதா
இந்த சந்தேகம் எல்லோருக்கும் வந்து விடுகிறது. இன்னும் ஒன்று
உரிமங்களைக் கிரனைட் பொறுத்தவரையில் 54 பேர் தனியார்கள்
கேட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10–40)

அதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில்கள்
எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவேண்டும். தொழிற் சாலை



[1989 மே 3] [திரு. பி. எச். பாண்டியன்]

களையெல்லாம் கொண்டுவரவேண்டுமல்லவா? 54 தொழிற்
சாலைகள் தர்மபுரி மாவட்டத்தில் எங்கே என்பதை விசாரித்து
தெரிவிக்கவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.
இந்த அதிகாரிதானா என்று பார்த்தேன். இன்னொரு அதிகாரி,
மாவட்ட ஆட்சித் தலைவர், தர்மபுரி, பெயரைச் சொல்ல
விலலை. அவர் சங்கர் கிரனைட் என்ற ஒரு கிரனைட்டை
யாருக்குக் கொடுத்து இருக்கிறார் தெரியுமா? அவருடைய
சட்டகருக்கு. மாவட்ட கலெக்டருடைய சொந்த ஊரா
அது? கிடையாது. இன்னொன்று சுசீலா கிரனைட். அதை
அவருடைய மாமியாருக்கு கொடுத்து இருக்கிறார். அரசாங்கம்
அதை தடுத்து நிறுத்தியிருக்கிறது முன்னாள் முதல்வர் அவர்கள்
உயிரோடு இருந்த காலத்தில். இது எப்படி நடைபெறுகிறது?
மாமியாருக்கும் சொந்தக்காரர்களுக்கும் கொடுப்பதற்காகவா
இந்த கிரனைட் தொழிற்சாலைகள்? அரசுக்கு தத்துபிள்ளை
களா இந்த அதிகாரிகள்? Are they the adopted chil ircn of the
Government? வேலியே பயிரை மேயக் கூடாது என்பதற்காகத்தான்
சொல்கிறேன். இதுபோன்ற அதிகாரிகள் மீது உடனடியாக நட
வடிக்கை எடுத்து இன்றைக்கே எந்தப் பதவியில் இருந்தாலும்
இரவுக்குள் சிறைக்குள் அனுப்பப்படவேண்டும். இல்லா
விட்டால் பொதுச் சொத்து போய்விடும். பொதுச் சொத்தைப்
பாதுகாப்பதற்காகத்தான் இந்த ஆட்சி; பொது மக்களை பாது
காப்பதற்குத்தான் இந்த ஆட்சி. நீங்கள், அரசியல் சர்ச்சை
வந்துவிடும், எதிர்க்கட்சிகள் நம்மைத் தாக்குவார்கள் என்று
எண்ணிப்பார்த்து விட்டுவிடுவீர்களேயானால் உண்மையிலேயே
பெரிய தவறாக முடிந்து விடும். என்ன நடந்தால் என்ன?
ஏன் நீங்கள் அடுத்த தேர்தலைப் பற்றி கவலைப்படுகிறீர்கள்?

இன்றைக்கு ஜெயித்து வந்தாகி விட்டது. கடுமையாக,
நேர்மையாக என் ஆட்சி செய்யக்கூடாது என்பதுதான் என்
னுடைய கேள்வி. அடுத்த தேர்தலில் வாக்களித்தால் வாக்
களிக்கட்டும், இல்லாவிட்டால் விடட்டும். இந்த ஐந்தாண்டு
காலத்தில் தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். நட
வடிக்கை எடுக்காமல் இருந்தாலும் ஒரு வேளை வாக்கு விழாமல்
போய்விடும் என்று எச்சரிக்கிறேன். இவர்கள் இஎபீசியன்ட்
என்று சொல்லிவிடக் கூடாது. ஆகவே அதையும் புரிந்து
கொள்ளுங்கள். இப்பேர்ப்பட்ட நபர்கள்மீது நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

இன்னொன்று. தனியார் துறை, பொதுத் துறை
என்கின்ற வாதம் இருந்துகொண்டிருக்கிறது. தமிழகத்தில்
தொழிலதிபர்களுக்கும் தொழிலைத் தொடங்குவதற்கும்
யாருக்குமே மூளை இல்லையென்பது கிடையாது. ஏன்?
இதற்குக்கூட அமெரிக்காவிலேயிருந்தா மூளை வரவேண்டும்.
இல்லை இல்லையா? நீங்கள பத்திரிகைகளிலே விளம்பரத்

தைக் கொடுங்கள். யார் யார் என்ன தொழிலை ஆரம்பிக்கப் போகிறீர்கள், விண்ணப்பியுங்கள் என்று சொல்லுங்கள்; அவர்களையெல்லாம் ஒரு மாநாடாகக் கூட்டுங்கள்; அவர்களிடத்தில் பேசுங்கள்; அவர்கள் தொழில்களை உருவாக்குவதற்கு உதவி செய்யுங்கள். யாரும் சொந்தப் பணத்தை வைத்து தொழிலை ஆரம்பித்ததாக எனக்கு தெரியவில்லை. அரசாங்கம் எல்லாவற்றையும் கொடுக்கிறது. பணத்தையும் கொடுக்கிறது; நிலத்தையும் கொடுக்கிறது. உதவியும் செய்கிறது. மத்திய அரசாங்கம் உதவி செய்கிறது. இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் பேங்கும் உதவி செய்கிறது. பொதுப் பணம்தான் எல்லா பணமும். ஆகவே நேர்மையானவர்களை, அரசாங்கப் பணத்தை தொழிலுக்காகச் செலவிடக் கூடியவர்களை ஊக்குவியுங்கள் என்பதைத்தான் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் எண்ணலாம், கொஞ்சம் கடுமையாகவே ஏன் சொல்கிறார் என்று. மற்றபடி சும்மா இருந்து விட்டால் எல்லோருமே சாப்பிட்டுவிடுவார்கள். அவனவன் அந்தந்த ஆபீசுகளில் வேலை பார்க்கும்போது தூங்கிக்கொண்டு போய் விடுவான். கொஞ்சம் வேகமாக இருந்தால்தான், முதலமைச்சர் வேகமாக இருக்கிறார், நம்மை அரஸ்ட் பண்ணி உள்ளே போட்டுவிடுவார் என்று பயப்படுவான்; ஆகவேதான் சொல்கிறேன். அடுத்த தேர்தலைப்பற்றி நினைக்காதீர்கள். ஏன் நினைக்கிறீர்கள்? மூன்று மாதம்தான் ஆகிறது. இன்னும் 4½ வருடம் இருக்கிறதே. எவனாவது தொட முடியுமா? ஏன் அதை நினைக்கவேண்டும்? அடுத்த தேர்தலை நினைப்பதால்தான் நீங்கள் நடவடிக்கையை வேகமாக எடுக்கவில்லை. அடுத்த தேர்தலைப்பற்றி கவலைப்படாதீர்கள். வந்தால் வருகிறது. வராவிட்டால் போகிறது. வேறு யாராவது வரட்டும்; ஏன் கவலைப்படவேண்டும். அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பீர்களேயானால் நடவடிக்கை எடுக்க முடியாது. இவன் குற்றவாளி, சரி, இவன் தவறு செய்தான், சரி, இவனுக்கு தண்டனை கொடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கையை எடுப்பீர்களேயானால் வரலாற்றில் பெயர் நிற்கும். இல்லையென்றால் ஒவ்வொருவனும், ஊழல் பண்ணியவனெல்லாம் போராட்டம் என்று ஆரம்பித்து விடுவான். ஒன்றும் சொல்லாமல் நீங்கள் சும்மா இருப்பதைப் பார்த்தால் இவனெல்லாம் ஓர் ஊர்வலத்தையே நடத்தி சட்டம் எங்கள்மீது பாயக் கூடாது என்று போராட்டமே நடத்தக்கூடிய காலம் வந்து விடும். காலையிலே நான் கூட நினைத்தேன். இந்த அதிகாரியை முதல் அமைச்சர் அவர்கள் விட்டு வைத்திருக்கிறாரே, அவரை நான் ஏன் கைது செய்யக் கூடாது என்று. நமது சட்ட அமைச்சருக்குக் கூட தெரியும். சி.ஆர்.பி.சி.-யில் 43 கிளாஸ் 1, எனக்கே பவர் இருக்கிறது. எல்லோருக்கும் பவர் இருக்கிறது. பொது மக்கள் பிடிக்கலாம். சட்டம் இருக்கிறது. ஆனால் பிடித்து போலீஸ் ஸ்டேஷனில்தான் கொடுக்க வேண்டும். ஆனால் பிடித்து கொடுத்த பின்னால் அவர்கள் விட்டுவிட்டால்





என்ன செய்வது? நான் வரும்போது காரிலே போய் பிடித்து விடலாம் என்று நினைத்தேன். பிடித்துக் கொடுத்த பின்னால் விட்டுவிட்டால் என்ன பயன்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் அப்படி குற்றவாளிகளைப் பிடித்து ஒப்படைத்தால் நம்முடைய போலீஸ் இலாகா சாதாரணமாக விட்டுவிடாது. அப்படி குற்றவாளிகளை அவர் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

திரு. பி. எச். பாண்டியன்: நீங்கள் ஒன்றுமே செய்ய [illegible]ர்கள், பூராவும் பாண்டியன்தானா? அதாவது, அரசாங்கம் சில நேரங்களில் நடவடிக்கை எடுக்க தவறும்போது பொது மனிதனாக, மக்களில் ஒருவனாக இருக்கிற எனக்கே இந்தத் தூண்டுதல் ஏற்படும்போது சாதாரண மக்கள் என்ன எண்ணுவார்கள்? கிராமங்களிலே ஐ.ஆர்.டி.பி. கடனை கட்டவில்லை என்றால், கட்ட முடியவில்லை என்றால் அவர்களுடைய ஆடு மாடுகளை பிடித்துச் செல்கிறார்கள். கூட்டுறவுக் கடனை கொடுக்கவில்லை என்றால், திருப்பிச் செலுத்தவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் 10 கோடி ரூபாய் ஊழல் செய்த அதிகாரியை ஒன்றும் செய்யவில்லை. இங்கே நீங்கள் அறிக்கை வைத்திருக்கிறீர்கள். அந்த அதிகாரிக்கு இங்கே நினைவுச் சின்னம் வைத்தமாதிரி அது இந்த அவைக் குறிப்பிலே இருக்கும். இது வரலாறு. 10 கோடி ரூபாய்க்கு ஒன்றும் இல்லை; என் பெயரில் ஒன்றுமே இல்லை; என்ன ஆட்சி என்று மக்கள் நினைப்பார்கள், அல்லவா? ஆகவே, கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத்தான் நான் சொன்னேன்.

இன்னொன்று. 'கிரானைட்' விவகாரத்தில் கர்நாடகா [illegible]த்திலே 'ரூல்ஸ் ரிலாக்ஸ்' பண்ணுவதற்கு பவர் இருக்கிறது. நம்முடைய 1959 மைனர் மினரல் கன்செஷன் ரூல்ஸ்-ல் அந்தப் பிரிவு கிடையாது. அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. ஆனால் நீதிமன்றத்திற்கு போய் அந்த உத்தரவை [illegible] அதிகாரம் இருக்கிறது. ஆகவே, இந்த ரிலாக்சிங் [illegible] அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டும். நான் [illegible] என்றால் ஒருமுறை ரிட் பெட்டிஷன் [illegible] உயர்நீதிமன்றத்தில் ஒரு தனியாரால் இந்த [illegible] தொடரப்பட்டபோது அங்கே நீதிபதி 4 வார காலத்திற்[illegible] பிறகு, அவர்கள் அப்ளி[illegible] இந்த உத்தரவு [illegible] வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்[illegible] 10 கோடி ரூபாய் அதிகாரி [illegible] பிறகு இந்த [illegible] என்ன செய்திருக்கிறார் தெரியுமா? ஒரு [illegible] நம்பர் 409, ஆகஸ்ட் 16, [illegible] போட்டிருக்கிறார் [illegible]

இண்டஸ்ட்ரீஸ். அதில் தர்மபுரி மாவட்டத்திலுள்ள எல்லா குவாரிகளையும் நாங்கள் எடுத்துவிட்டோம் என்று சொல்லி, 4 வார காலத்திற்குள் மனுவை பரிசீலனை செய்யுங்கள் என்று நீதிபதி போட்ட உத்தரவை—நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை ரத்து செய்யக்கூடிய அளவுக்கு ஜி.ஓ. மூலம் இந்த உத்தரவை விட்டிருக்கிறார். இப்படி பல்வேறு ஜி.ஓ.க்கள் என் கையிலே இருக்கின்றன.

இதற்கு எல்லாம் ஆட்சியை குறைசொல்வதில் பயனில்லை. முதலமைச்சர் இருந்தார். முதலமைச்சர் இருக்கிறார் என்றால் எல்லாமே அவரா பார்த்தார்? அவரா போய் கிரானைட் இருக்கும் இடத்தை பார்த்தார்? அந்த இடம் எங்கே இருக்கிறது, எவ்வளவு இருக்கிறது என்று அவருக்குத் தெரியுமா? அவருடைய மாமியாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியுமா? ஆகவே அந்த ஆட்சிக் காலத்தில் நடந்தது என்று முதலமைச்சர் மீது குறை சொல்லாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் யாராவது உயிரோடு இருக்கிறவர்களுக்கு போயிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கே இன்றைக்கு ஒரு யோசனை வந்தது. பேசி, பேசி என்னவாயிற்று? ஒன்றும் ஆகவில்லை என்ற ஒரு விரக்தி வந்திருக்கிறது. ஆகவே, விரக்தி அடையவிடாமல் இனிமேல் சட்ட மன்றத்தில் தொடர்ந்து பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகள் மீதான அறிக்கையில் தமிழ்நாட்டில் பொதுத் துறையில், தனியார் துறையில் ஏராளமான தொழில்கள் வளர்வதற்கு வாய்ப்புகள் இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் பொதுத் துறை என்றால் எந்தக் காலத்திலும் வெற்றிபெறாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை பொருளாதார நிபுணர்கள் மத்தியில் இருப்பதை உறுதிப்படுத்துகிற நிலையில் கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் ஏராளமான [illegible] நடந்திருக்கின்றன. மிகப் பெரிய தொழிற்சாலைகள் [illegible] நசிந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாடு சிமெண்ட்ஸ். என்னுடைய [illegible] ஆலங்குளத்தில் இருக்கிற தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நாள் ஒன்றுக்கு குறைந்தது 50,000 ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் [illegible] நஷ்டத்தில் ஓடுகிறது. 1,000 தொழிலாளர்களை [illegible] கொண்டு, 130 அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு [illegible] நஷ்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டம் அதாவது மேக்ஸிமம் ஒரு இலட்சம்; குறைந்தது 50,000, இந்த அளவுக்கு நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் துலுக்கப்பட்டியில் இருக்கிற மெட்ராஸ் சிமெண்ட்ஸ் ஃபேக்டரியில் — நான் தொழிற்சங்க தலைவராக இருக்கிறேன் —இன்றைக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கோடி ரூபாய் இலாபம் கிடைக்கிறது. இதே நிலைமைதான் அரியலூர் சிமெண்ட் ஃபேக்டரியிலும் இருக்கிறது.

(முற்பகல் 10-50)

சிமெண்ட் தொழிலைப் பொறுத்த வரையில் கடந்த காலத்தில் நாம் கடைப்பிடித்த சில நடைமுறைகள் தான் நஷ்டத்திற்குக் காரணமாக இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து ட்ரை ப்ராசஸ் மூலம் அரியலூரில் இன்றைக்கு நஷ்டத்தை ஓரளவுக்குத் தவிர்த்திருக்கிறார்கள். ஆனால் ஆலங்குளத்தில் இருக்கிற தமிழ் நாடு சிமெண்ட்ஸில் நாள் ஒன்றுக்கு மிகக் குறைந்த அளவாக 100 டன் சிமெண்ட் தூசியாகப் போகிறது. அப்படி தூசியாகப் போகிற சிமெண்ட் அங்கே இருக்கின்ற, 10, 15 கிராமங்களில் இருக்கின்ற நிலங்களில் படிந்து விவசாயத்திற்கு பயன்படுகிற நிலங்களை எல்லாம் கான்க்ரீட் தரைகளாக மாற்றிக்கொண் டிருக்கிறது. எனவே விவசாயிகள் மிகப் பெரிய வேதனைக் குள்ளாகி இருக்கிறார்கள். அந்த தூசியை ட்ரை ப்ராசஸ் மூலம் மாற்றுவதற்கு 60 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. எனவே உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக 60 கோடி ரூபாய் ஒதுக்கி அந்த ஆலங்குளம் சிமெண்ட் ஃபேக்டரியை ட்ரை ப்ராசஸ் மூலம் நடத்தப்படுகிற தொழிற்சாலையாக மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் 20, 30 ஆண்டுகளுக்கு அங்கே தேவையான மூலப்பொருள் கிடைக்கும் என்ற காரணத்தால் அதை உடனடியாக ட்ரை ப்ராசஸ்-ஆக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன். விவசாயிகளுடைய இந்த வேதனை அங்கே இருக்கின்ற வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு தீர்மான மாகவே வந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் சிமெண்ட் ஆலையை மூடவேண்டும் என்ற அளவுக்குக் கிளர்ச்சி செய்யக்கூட தயாராக இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய 1,500-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுடைய உழைப்பு வீணாகிக் கொண்டு இருக்கிறது. அவர்களுடைய ஆரோக்கியம் கெட்டுக்கொண்டிருக்கிறது.

அங்கே இருக்கிற ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையில் இருந்து வெளிவருகிற கழிவு நீர் ஆரோக்கியத்திற்கே ஆபத்தான ஒன்றாக இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும். 1989 ஆம் ஆண்டு, அதாவது இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை அந்தத்

D
V211,31'N89 144830
N89.4.3

[திரு. பெ. சீனிவாசன்] [1989 மே 3

தொழிற்சாலையில் 2,832 டன் ஷீட் உற்பத்தி செய்யப்பட்டு
இருக்கிறது. அவற்றின் மதிப்பு 85 இலட்சம் ரூபாய். ஆனால்
அது மார்க்கெட்டுக்கு வர முடியாது. விலைக்கு விற்க முடியாது.
காரணம் ஐ.எஸ். ஐ. முத்திரை தர மறுக்கிறார்கள். இங்கே
நம்முடைய பாண்டியன் அவர்கள் சொன்னதுபோல் அங்கே
அஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையிலே வேலை செய்கிற 'டெபுடி
மெட்டீரியல் மேனேஜர்' மற்றும் ' அட்மினிஸ்ட்ரேடிவ் ஆஃபீ
ஸர்' என்ற இந்த இரண்டு அதிகாரிகளும் கச்சாப் பொருட்
களை வாங்கும்போது அவற்றை வெளியிலே விற்றுவிட்டு, மிக
மட்டமான பொருட்களைக் கொண்டு அபரிமிதமாக 2,832 டன்
அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஷீட் உற்பத்தி செய்து, ஏறத்தாழ
82 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஷீட்ஸ் முடங்கிக் கிடக்கின்றன.
அதை வாங்குவதற்கு நாதியில்லை. அதைப் போட்டு உடைப்
பதைத் தவிர வேறு விதியில்லை என்று சொல்கிற அளவுக்கு
அந்த இரண்டு அதிகாரிகளும் செய்து இருக்கிறார்கள். இங்கே
மார்க்கெட்டிங் மேனேஜர் என்ற பதவியில் இருப்பவர் இந்த
சிமெண்ட் ஆலையினுடைய நஷ்டத்தில் ஒரு முக்கியமான கதா
நாயகனாக இருக்கிறார். இப்படிப்பட்ட அதிகாரிகள் நான்
கைந்து பேர்கள் தான் கடந்த காலத்தில் புனித சாம்ராஜ்யத்தில்
இருந்து கொண்டிருக்கிறார்கள். 'அட்மினிஸ்ட்ரேடிவ் பெர்
சனல் ஆஃபீசர்' என்று ஒருவர் அங்கே ஞானஸ்நானம் பெற்று
பதவியில் இருக்கிறார். அவர் பதவியில் சேரும் போது
இருந்ததை விட இன்றைக்கு மிகப் பெரிய இலட்சாதிபதியாக
மாறி இருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் இந்த அதிகாரிகள் எவ்வளவு சம்பாதித்திருக்கிறார்
கள், எத்தனை வீடுகள் கட்டி இருக்கிறார்கள். எங்கெங்கே
சொத்துக்களை வாங்கி இருக்கிறார்கள் என்று புலனாய்வுத்
துறை மூலம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அப்படி ஆய்வு
செய்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நான் இன்றைக்கு இதைப் பேச வேண்டும் என்று சபா
நாயகர் அவர்களே, உங்களிடத்தில் கேட்டதற்கே காரணம்
எங்களுடைய வட்டாரம் ஏற்கெனவே வறண்ட காடுகள்;
அப்படிப்பட்ட இடத்தில் ஓரளவுக்கு விவசாயிகள் விவசாயம்
செய்யும் சூழ்நிலையில் இப்படி சிமெண்ட் தூசி படிந்து அந்த
நிலங்கள் எல்லாம் பாழாகிக் கொண்டிருக்கின்றன. மக்களின்
வாழ்க்கைக்கே கூட அது சுகாதாரக்கேட்டை உண்டாக்கிக்
கொண்டிருக்கிறது. ஏராளமான பேருக்கு நுரையீரல் நோய்,
குடல் நோய் போன்றவை இந்த அஸ்பெஸ்டாஸ் கழிவுப்
பொருள் மூலம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க வழி இருக்
கிறது. அந்த தூசியை மீண்டும் சிமெண்ட்டாக மாற்றக் கூடிய
அளவுக்கு ட்ரை ப்ராசஸ் மூலம் அதைச் செய்தால் நிச்சய
மாக லாபம் வரும். துலுக்கப்பட்டியில், அப்படி நஷ்டம்
ஏற்பட்டபோது அவர்கள் தனியார் முதலாளிகளாக இருந்த



1989 மே 3] [திரு. பெ. சீனிவாசன்]

காரணத்தால், தங்களுடைய முதல் போய்விடுமே என்ற அக்
கறையோடு உடனடியாக வேகமாக நடவடிக்கை எடுத்து இல்
லை றைக்கு அதை ட்ரை ப்ராசஸ்- ஆக மாற்றி ஒரு மாதத்திற்கு
ஒரு கோடி ரூபாய் இலாபம் சம்பாதிக்கிறார்கள். ஏறத்தாழ
1,200 டன் உற்பத்தி ஆகிற ஆலங்குளம் சிமெண்ட் ஃபேக்டரியில்
உள்ள அந்த ப்ராசஸையும் ட்ரை ப்ராசஸ்-ஆக மாற்றினால்
இலாபம் வரும். ஏனென்றால் அவ்வளவும் சிமெண்ட்தான்.
அதாவது சிமெண்ட் தான் தூசியாகப் போகிறது.
தூசி சிமெண்ட்டாக மாறுமானால், இங்கேயே உற்பத்தி
குறைந்தது ஒரு நாளைக்கு 1,500 டன்னாக உயரும். அங்கே
அதுபிருக்கின்ற விவசாயிகளுக்கு விமோசனம் ஏற்படும். அது
மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, நான்
உங்கள் மூலமாக பணிவன்போடு கேட்டுக்கொள்வேன். அந்த விவ
சாயிகளுக்கு மண்வளப் பாதுகாப்புதுறை மூலம் அந்த சிமெண்ட்
கலந்த அந்த மண்ணை அகற்றுவதற்கு ஏதாவது மானிய உதவி
கட்டாயம் தமிழக சர்க்கார் செய்து தர வேண்டும் என்று நான்
இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அங்கேயிருக்கின்ற
தொழிலாளர்களுடைய நிலைமைகளும் இன்னும் மோசமாக
இருக்கின்றன. நம்முடைய ஆஸ்பெஸ்டாஸிலே அவர்கள்
போனஸ் கேட்டு கொடுக்கவில்லை. சிமெண்ட் தொழிற்சாலை
யில் ஓரளவுக்கு கிடைக்கிறது. இந்த நஷ்டத்தை உடனடியாக
நிறுத்த வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு இலட்சம்ரூபாய்
நஷ்டம். சர்க்காருடைய பணம் அநியாயமாக வீணாகப்
போகிறது. அதை நிறுத்துவதற்கு மார்க்கம் இருக்கிறது. நஷ்டத்தை
லாபமாக மாற்றுவதற்கு வழியிருக்கிறது. அந்த வழியை மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் வேகமாக ஏற்படுத்த வேண்டும்.
அவர்கள் அதிகாரிகள் நிதானமாக செய்வதன்மூலம், அந்த ரெட்
டேப்பிசம் மூலம் நம்முடைய நஷ்டத்தை நாளுக்கு நாள் அங்கே
கூட்டிக் கொண்டு போகின்றார்கள். இந்தியாவில் இருக்கின்ற,
இன்னும் சொல்லப் போனால், உலகத்தின் பல நாடுகளிலே
இருக்கின்ற சிமெண்ட் ஆலைகளில் எந்த ஆலைகளிலுமே தண்
ணீர் மூலம், அதாவது தண்ணீரை சுண்ணாம்புக் கல்லோடு
கலந்து செய்கின்ற அந்த முறையை மாற்றி இப்போது டிரை
பிராசஸ், உலர்ந்த முறையின் மூலம் இன்றைக்கு மிக வெகு
வேகமாக அந்த டெக்னிக் முன்னேறிக் கொண்டு இருக்கின்றது.
அதையே நம்முடைய சிமெண்ட் ஆலைகளிலேயும் கடை பிடிக்க
வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பணி
வன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று. இன்னும் ஓரே ஒரு விஷயம்.
இங்கே தொழில் தொடங்குபவர்கள், லைசென்ஸ் பெறு
வதற்கும் லோன் பெறுவதற்கும், ஏதோ கோயிலுக்கு காவடி
எடுப்பதைப் போல, அலுவலகங்களிலே ஏறி இறங்கி, அங்
கங்கே அழுது தொலைத்து, அதற்கு பின்னாலும் ஏமாற்றத்
தோடு திரும்புகின்ற நிலைமை கடந்த 10 ஆண்டுக் காலமாக

[திரு. பெ. சீனிவாசன்] [1989 மே 3

நன்கு வேரூன்றி வளர்ந்து விட்டது. ஒரு டீ.ஆர்.ஓ. அலுவலகத்திலே ஏறினால், அந்த டீ.ஆர்.ஓ. அலுவலகத்திலே படிக்குப் படி ஒரு விலை, ஒரு ரேட் இருக்கிறது. அந்த தட்சிணையை செலுத்தி விட்டால் தான் மேலே போக முடியும். இது முந்தா நாள் வரை இருந்த நிலைமை. இன்றைக்கு ஓரளவுக்கு தளர்ந்திருக்கின்றது. கொஞ்சம் அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த அச்சத்தைக் கடுமையாக்கி நிர்வாகத்தினர் தொழில் தொடங்குகின்றவர்களுக்கு உடனடியாக உத்தரவுகள் வழங்கக்கூடிய அளவுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்னும் வேகமாக உறுதியாக நிலைமைகளை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக எங்களுடைய வட்டாரத்திலே இருக்கின்றவர்கள், தீப்பெட்டித் தொழில் தொடங்குவதற்கு போனால் ஏராளமான நிபந்தனைகள் போட்டு, இல்லாத பொல்லாத நிபந்தனைகளைப் போட்டு அந்த தீப்பெட்டி தொழிலை, குடிசைத் தொழிலை நசுக்குவதற்கு என்னென்ன மார்க்கம் உண்டோ அதையெல்லாம் அதிகார வர்க்கம் அங்கே செய்து கொண்டிருந்தது. இன்றும் ஓரளவு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மிகப் பெரிய இயந்திர தொழிலான விம்கோ பின்னாலேயிருந்து ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்த நிர்வாகததிலே இருக்கின்ற அந்த நெருக்கடிகளை தளர்த்தி, தீப்பெட்டித் தொழிலுக்குரிய அந்த வரியை, இந்த மானியத்திலே அவ்வளவு சம்பந்தம் இல்லை என்றாலும் கூட, நான் அதை வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன். இரண்டு பர்செண்ட் வரி இருக்கிறது, இன்று. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கடந்த காலத்தில் பொற் காலத்தை கலைஞர் அவர்கள் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் அந்த தீப்பெட்டி தொழிலுக்கு, குடிசை தீப்பெட்டி தொழிலுக்கு வரி கிடையாது, கைவினை தீப்பெட்டி தொழிலுக்கு, ஹேண்ட் மேட் செக்டாருக்கு வரி கிடையாது. அதற்குப் பின்னாலே எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என்ன தோன்றியதோ அங்கே போய் கை வைத்தார்கள். 3 பெர்செண்ட் வரி போட்டார்கள். கவர்னர் ஆட்சிக் காலத்திலே அவருடைய கருணை பட்டு ஒரு ரூபாய் அளவுக்கு வந்திருந்தது. ஒரு பர்செண்ட் குறைத்தார்கள். இப்போது 2 பெர்செண்ட் வரி இருக்கின்றது. இந்த 2 பெர்சண்ட் வரியை அடியோடு ரத்து செய்ய வேண்டும் என்று பல முறை கேட்டு இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓரளவுக்கு கவனிப்பதாக சொல்லியிருக்கின்றார்கள். இந்த நேரத்தில் விம்கோ-வை ஊக்குவித்து சாதாரண தீப்பெட்டி தொழிற்சாலைகளை மூடுவதற்கு மத்திய சர்க்கார் செய்திருக்கின்ற புனிதமான ஏற்பாட்டைத் தடுக்கக் கூடிய வகையில் அந்தத் தொழிலைக் காப்பாற்றக் கூடிய வகையில் ஓரளவுக்கு ஒரு சமாதானமாக அந்த தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஆறுதலைக்



1989 மே 3] [திரு. பெ. சீனிவாசன்]

அந்த 2 பெர்சண்ட் வரியையாவது ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலே தூசியின் மூலம் நஷ்டம் அடைகிறது, விவசாயம் அழிந்து கொண்டிருக்கின்றது. அங்கே இருக்கின்ற, 15 ஊர்களிலே இருக்கும் மக்கள் வேறு ஊர்களிலே குடியேறுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே அதை உடனடியாக இந்த ஓராண்டு காலத்திற்குள் அதை நிவர்த்திக்க வேண்டும் என்று உங்கள் சார்பில் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தாள் பணிந்து நான் கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். வாய்ப்புக்கு மெத்த நன்றி.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. எத்தனையோ சமூகநல திட்டங்களையும் ஆட்சி அமல்படுத்திக் கொண்டிருக்கின்றது. சத்துணவுத் திட்டம், இலவச அரிசி, ஓய்வூதியம் போன்றவைகள் எல்லாம் இருக்கின்றன. இவ்வ அவசியம் தொடர வேண்டும். ஆனால் தலைமுறை தலைமுறையாக சத்துணவையும், இலவச அரிசியையுமே நம்பியிருக்க வேண்டுமென்று தமிழகமக்கள் விரும்பவில்லை. ஒரு வயிறு மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு கைகளும், இரண்டு கால்களும் உண்டு. உழைக்க வாய்ப்பைத் தந்து வருவாய் ஈட்டி உணவும், உடையும், உறைவிடமும் பெற்று வாழவே தமிழக மக்கள் விரும்புகிறார்கள். வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று கடந்த ஆட்சி சொன்னது. மைய அரசு இன்றும் கூறி வருகிறது.

[முற்பகல் 11-00]

ஆனால் இது கானல் நீராகவே இருக்கிறது. ஆகவே தொலை நோக்குத் திட்டத்தின் அடிப்படையிலே வேலைவாய்ப்பைப் பெருக்கக் கூடிய அளவிலே ஒரு தொழில் கொள்கை, ஒரு திட்டம், அதைச் செயல்படுத்துகிற நடைமுறை தேவை என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விழைகிறேன்.

தமிழ்நாடு ஏற்கெனவே இருந்த நிலையிலே இருந்து பின்னுக்குப் போயிருக்கிறது, என்பது கவலை அளிக்கும் ஒன்று. இதற்குப் பிரதானமான காரணம், மத்திய அரசினுடைய முதலீடு பொதுத் துறையிலே குறைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதை ஏற்கெனவே நான் இந்த அவையிலே சுட்டிக் காட்டியிருக்கிறேன். புதியதாகப் பொதுத்துறை நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே எதுவும் தொடங்கப்படவில்லை என்பதையும் நாம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று விழைகிறேன். அதைப் போல தமிழ்நாட்டிலே பஞ்சாலைத் தொழில், இன்ஜினியரிங் ஆலைகள் மூடுவதும், கதவடைப்பு செய்வதும், ஆட்குறைப்பு அதிகப்பட்டுக்கொண்டே போவதுமான நிலைமைகள் இருக்கின்றன. இவையும் தொழில் வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ளுவதாக இருப்பதை கவலையோடு நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. உ. ரா. வரதராசன்] [1989 மே 3

தொழில் வளர்ச்சிக்கு மிக ஆதாரமானது, அடிப்படையானது
மின்சாரம். ஆனால் தமிழ் நாட்டிலே மின்சாரம் என்பது இன்று
60 சதவிகித வெட்டாகி இருக்கிறது. இது ஓர் தொடர் கதை
யாகவே நீடிப்பது கவலை அளிக்கக் கூடிய ஒன்று. கல்பாக்கம்
அணு மின் நிலையம் கடந்த ஓராண்டுக் காலமாக தொடர்ந்து
பிரச்சினைகளில், சிக்கல்களில் ஈடுபட்டுள்ளதாக இருக்கிறது
இது தற்செயலானது தானா என்ற சந்தேகம் கூட எழுந்து
உள்ளது. இதை முறைப்படுத்தி, சீரான முறையில் செயல்
படுத்துவதற்கு மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க
வேண்டுமென்று நாம் வலியுறுத்த வேண்டும். இன்னும் ஓர்
அணு மின் நிலையம் கூடங்குளத்தில் தொடங்கப்பட இருக்கிறது.
இதை வரவேற்கின்ற நேரத்திலே, ஆணித்தரமாக இதை
வரவேற்று இது உடனடியாக அமைக்கப்படுவதற்கான வேலை
களை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று தயக்கமில்லாமல்
இந்த அரசு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான்
விழைகிறேன். இதற்கு எதிர்ப்பு வந்திருக்கிற காரணத்தாலே,
இந்த அரசு பின் வாங்கிவிடக் கூடாது. அந்த எதிர்ப்பினுடைய
பின்னணி என்ன, அதற்குப் பின்னாலே உள்ள சதிக் கரங்கள்
என்ன என்பதை அம்பலப்படுத்தி, கூடங்குளம் அணு மின் நிலை
யம் துவங்கப்பட வேண்டுமென்று கட்டாயமாக அரசு வலியுறுத்தி
அதைப் பெற வேண்டுமென்று நான் இங்கே சொல்ல விரும்பு
கிறேன்.

1981 ஆம் ஆண்டு முதல் 7 மின் திட்டங்களுக்கான அனுமதி
மத்திய அரசிடம் கோரப்பட்டது இன்னும் கிடைக்கப்பெறவில்லை
என்ற வருத்தமான செய்தியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.
சென்னையிலே கேஸ் டர்பைன் திட்டம், மதுரையில் கேஸ்
டர்பைன் திட்டம், அமராவதி அனல் மின் நிலையம், ஒகேனக்கல்
மின் நிலையம், நாகப்பட்டினத்திலே ஒரு மின் நிலையம், பழனி
யிலே சண்முகா புனல் மின் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு
அனுமதி கோரப்பட்டும், கிடைக்கப் பெறாமல் அல்லது ஆரம்பப்
பணிகள் துவக்கப்பட்டும் அவை நிறைவேற்றப்படாமல் இருந்து
கொண்டிருப்பதை எல்லாம் கவலையோடு பரிசீலித்து, அந்தத்
திட்டங்களுக்கு அனுமதி வாங்குவதற்கு மத்திய அரசை வலி
யுறுத்தி, இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இப்போது அனுமதி பெற்று வேலைகளைத்
தொடங்கினால் இன்னும் 8, 10 ஆண்டுகள் முடிந்தால் தான்
இவை நிறைவேற்றப்படக் கூடிய சூழ்நிலை இருப்பதாலே,
தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான மின்சாரத் திட்டங்களை
எல்லாம் கொண்டு அவை பயன்படுவதற்கு இந்த அரசு கட்டாயமாக
மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று அழுத்தந்திருத்த
மாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கைக் குறிப்பிலே
கூட்டுத் துறை என்பதற்கு முக்கியமான அழுத்தம் தரப்பட்டு
இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள தொழில் வளர்ச்சிக் கழகங்களின்



1989 மே 3] [திரு. உ. ரா. வரதராசன்]

எல்லாம் அரசுத்துறையில் துவக்கப்படும் தொழிற்சாலை
களைவிட, கூட்டுத் துறையில் துவக்கப்படும் தொழிற்சாலைகள்
தான் அதிகமாக இருக்கிறது. இந்தக் கூட்டுத் துறை என்பது,
தனியார்கள் உமி கொண்டுவர, அரசு நிதியையும், மூலதனத்தை
யும், சலுகைகள் என்ற அவல் கொண்டு வர, ஊதி, ஊதி, பங்
கிட்டுக்கொண்டு, உமியை அரசுக்கு விட்டுவிட்டுப் போகின்ற
திட்டமாக இது இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே கூட்டுற
வுத் துறை என்பதில் இருக்கும் மோசடியான நிலைமையைக்
கைவிட்டு, பொதுத் துறையிலேயும், கூட்டுறவுத் துறையிலேயும்
புதிதாக ஆலைகள் தொடங்கப்பட வேண்டும், அது தான்
தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக அமையும் என்பதை
இந்த அரசு கொள்கையாக ஏற்று, அமல் நடத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வெளி நாடுகளிலே வசிக்கக் கூடிய இந்தியர்கள்,
அவர்கள் மூலதனத்தைக் கொண்டுவர, அவர்களுக்குப் பல சலுகை
கள் அளிப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படித் தொடங்கப்
படுகிற தொழில்களைப் பார்க்கும் போது கூட, அவர்கள்
கொண்டு வருகிற மூலதனம் என்பது மிக, மிக சிறிய பங்காக
இருந்து, அரசும், அரசினுடைய நிதி நிறுவனங்களும் கொடுக்கக்
கூடியவை தான் பெரும் பங்காக இருக்கும் நிலைமை இருந்து
கொண்டிருக்கிறது. வெளி நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள்—
என். ஆர். ஐ.—சம்பந்தமாக இந்த அரசு என்ன கொள்கையைக்
கடைப்பிடிக்கிறது என்பதை கொள்கை அறிவிப்பாகச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் சம்பந்தமாக இங்கே
செயல்முறை ஆய்வுரையிலே சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்
கின்றன. ஆனால் அவை எல்லாம் விமர்சனத்திற்கு இடமில்லா
மல், வெறும் தகவல் குறிப்புகளாக இருப்பது என் போன்றவர்
களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறதென்பதை சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

உதாரணமாக ஊட்டியிலே இருக்கிற போட்டோ-பிலிம்
தொழிற்சாலை, அங்கே கலர் பிலிம் உற்பத்தி தொடங்க
வேண்டும் என்றிருந்தது. அரசியல் காரணங்களுக்காக வேறு
மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இப்போது எக்ஸ்-ரே
பிலிம் தயாரிக்கிற ஒரே தொழிற்சாலையாக அது இருந்து வரு
கிறது. ஆனால் அங்கேயுங்கூட, இறக்குமதியை ஊக்குவித்து,
இந்தத் தொழிற்சாலையினுடைய விரிவாக்கத்தை மேற்கொள்ளா
மல் காலம் கடத்துகிற ஒரு கொள்கை கடைபிடிக்கப்படுகிறது
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்

[திரு. உ. ரா. வரதராசன்] [1989 மே 3

அதைப் போலத்தான் சில்வர் நைட்ரேட் உற்பத்தி செய்யும்
தொழிற்சாலை நிலையும் இருக்கிறது. அதன் உற்பத்தியைக்
குறைத்து, அதன் இறக்குமதிக்குப் பச்சைக் கொடி காட்டுவதன்
மூலமாக அந்தத் தொழிற்சாலையின் விரிவாக்கம் இன்றைக்குத்
தடைபட்டிருக்கிறது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டரிலே எலெக்ட்ரிக் டைப்ரைட்
டர்கள் உற்பத்தி தொடங்கப்படுவது பற்றி இங்கே குறிப்பில்
சொல்லப்பட்டிருக்கிறது. 10 கோடி ரூபாய் பெறுமானமுள்ள
அந்தத் திட்டம் இப்போது கைவிடப்படுகிறது என்கிற கவலை
தோய்ந்த செய்தியை இந்த அவைக்கும், மாண்புமிகு முதல
மைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து, பொதுத்துறை நிறுவனங்
களிலே இப்படிப்பட்ட நிலைப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதைத்
தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே நெய்வேலியில், அங்கே இருக்கின்ற முதலா
வது சுரங்கத்தை 6.5 மெட்ரிக் டன்னிலிருந்து 10.5 மெட்ரிக்
டன்னாக விரிவுபடுத்துவது, அனல் மின் நிலையம் (1) 600
மெகாவாட்டிலிருந்து 1,020 மெகாவாட்டாக விரிவுபடுத்துவது,
மூன்றாவது சுரங்கம் 11.0 மெட்ரிக் டன் பழுப்பு நிலக்கரி ஆண்டு
தோறும் எடுக்கும் திட்டம், மூன்றாவது அனல் மின்நிலையம்
1,500 மெகாவாட்டிலிருந்து 3,500 மெகாவாட் அளவுக்கு உயர்த்
தும் திட்டம் என்பதெல்லாம் கோரிக்கையாக வைக்கப்பட்டும்கூட
அவற்றுக்கெல்லாம் மைய அரசின் அங்கீகாரம் கிடைக்காமல்,
அனுமதி கிடைக்காமல் அவை காலம் கடத்தப்படுவது என்பது
தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கின்றது
என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே தமிழ்நாட்டிற்குப் பெருமை தருகின்ற
பி. எச். ஈ. எல். என்கின்ற நிறுவனம். தமிழ்நாட்டில் திருச்சியி
லும், ராணிப்பேட்டையிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
அந்தத் தொழிற்சாலையின் விரிவாக்கத்திற்குப் பதிலாக-- அந்தத்
தொழிற்சாலை மேற்கொள்ளக்கூடிய ஆர்டர்களையே வெளி
நாட்டுக் கம்பெனிகளுக்குத் திருப்பி விடுவதன் மூலம் அந்தத்
தொழிற்சாலையே நலிவடையக்கூடிய, நாசமடையக்கூடிய ஒரு
கொள்கையை மத்திய அரசு பின்பற்றிக் கொண்டு வந்திருக்கிறது.
பல விஷயங்களிலே ஜப்பான் நாட்டுடைய உயர் தொழில் நுட்பத்
திற்கும் மேலான திறமையோடும் தொழில் நுணுக்கத்தோடும்
பொருள்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு இருந்தும்கூட அந்த
பி. எச். ஈ. எல். ஆலைகள் குற்றுயிரும் குலையுயிருமாக நசுக்கப்
படுகிற நிலைமைதான் இருந்து வருகிறது என்பதையும் நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போல் சிமிண்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை
யில் அதற்கு மிகப் பெரிய வாய்ப்பு தமிழ்நாட்டில் இருக்கிறது.
[illegible] தேவையான சுண்ணாம்புக் கல்லும், ஜிப்சமும் தமிழ்



1989 மே 3] [திரு. உ. ரா. வரதராசன்]

நாட்டில் பெருமளவுக்குக் கிடைக்கின்றபோது, அந்த சிமிண்ட்
தொழிற்சாலைகளை விரிவபடுத்துவதற்குத் தேவையான திட்டங்
களை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு ஆலை இங்கே மூடப்பட்டிருந்து திறந்த, சென்
னையிலே இருக்கிற, இந்தியா மீட்டர்ஸ் தொழிற்சாலை. அது
பி. எச். இ. எல். பொறுப்பில் பராமரிக்கப்பட்டது. இப்போது
ஒரு தனியாருக்கு அது மாற்றப்படுகிறது. இப்போது அந்த ஆலை
யின் வளர்ச்சியைக் சிதைக்கக் கூடிய கொள்கையை அந்த ஆலை
நிர்வாகம்—தனியார் நிர்வாகம்—என். ஆர். ஐ. என்கின்ற
பெயரில் இயங்குகிற நிர்வாகம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிற
நிலைமைகளை நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் தொட்டம்பட்டியில் ஒரு ஸ்டீல் காஸ்
டிங் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. இதை அரசே ஏற்க
வேண்டும் என்று மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டபோது,
இதுவரை மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே,
அந்த ஆலையைத் திறந்து செயல்படக் கூடிய நிலை மைய அரசால்
தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

அடுத்து தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமை
யாத ஒன்று, கரூர்—தூத்துக்குடி அகல ரெயில் பாதை. 1980ஆம்
ஆண்டில் இதற்கான பணிகள் துவங்கப்பட்டபோது, 1987ஆம்
ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்று அன்றைக்கு இருந்த
அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால்
இன்றைக்கு அது ஒரு கேள்விக் குறியாகி வருகிறது. 1989-90ஆம்
ஆண்டு ரெயில்வே பட்ஜெட்டில் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற
தொகை வெறும் ரூபாய் 4 கோடிதான். ஆண்டுக்கு ரூபாய் 30
கோடி ஒதுக்கினால்கூட, 1993-94 ஆம் ஆண்டு அளவில்தான்
அது நிறைவேற்றப்படும் என்ற நிலைமை இருக்கிறது. இப்போது
அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், தமிழ்நாட்டின்
வளர்ச்சிக்கு அடிப்படையான ஆதாரமான அந்த அகல ரெயில்
பாதைத் திட்டம் முடமாக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்று
வதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும். இதற்காக
இந்த அவையிலே ஒரு தீர்மானம்கூட நிறைவேற்ற வேண்டும்
என்ற கருத்தையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, நலிவுற்ற ஆலைகளைப் புனரமைப்பது சம்பந்தமான
கொள்கை இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பதை
நான் வேதனையோடு—கவலையோடு—சுட்டிக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். அந்த புனரமைப்புச் சம்பந்தமாக பொது
வழிகாட்டும் முறைகளை தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது.
அதில் 5-ஆவதாக குறிப்பிடப்பட்டிருப்பது தொழில் தகராறு
கள் விரைவாகத் தீர்க்கப்படும்—தொழிலாளர்களுக்குச் சாதக
மாகத் தீர்க்கப்படுவது நல்லதுதான், அதை அடுத்து சொல்லப்

[திரு. உ. ரா. வரதராசன்] [1989 மே 3

படுகிறது—" பொருளாதார ரீதியாக—கட்டுப்படியாகாத நிறுவனங்களை மூடுவதற்கும்,—அதன் விளைவாக அதிகப்படியான பணியாளர்களைக் குறைப்பதற்கும் ஆதரவு தரப்படும் " என்று கொள்கைக் குறிப்பில் ஆய்வு உரையில் சொல்லப்பட்டிருப்பது—கவலை தருவதாக இருக்கிறது.

(முற்பகல் 11-10)

முதலமைச்சருடைய பரிசீலனைக்குப் பிறகுதான் இது இடம் பெற்றதா அல்லது அதிகாரிகள் வழக்கமாகத் தெரிவிப்பதிலே இது இடம் பெற்றுவிட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆலை முதலாளிகள் புனரமைப்பு என்ற பெயரிலே மாநில அரசிடமிருந்து, மைய அரசிடமிருந்து பல சலுகைகளைக் கேட்கிறார்கள். அந்தச் சலுகைகளை அரசிடமிருந்து அதிகார வரம்புக்கு உட்பட்டு, நிதிநிலைக்கு உட்பட்டு அளிப்பதிலே தவறு இல்லை. ஆனால் தொழிலாளர்கள் தியாகங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். முதலாளிகள் அடிக்கிற லாபத்துக்கு, கொள்ளைக்கு, அந்த லாபத்தை வேறு வழிகளிலே திருப்பிவிட்டு பிறகு தொழிலாளர்கள் தியாகத்தைச் செய்ய வேண்டும், ஆட் குறைப்பு செய்ய வேண்டும். சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று வருகிறபோது அப்படிப் பட்ட கோரிக்கைகளை ஏற்காமல் தொழிலாளர்களும், வளம் பெற்று, தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டு புனரமைக்கப்படுகிற கொள்கையைத் தான் இந்த அரசு கடைப் பிடிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விழைகிறேன்.

இன்னொரு அடிப்படையான விஷயத்திலே இந்த அரசு இதனுடைய கொள்கைக் குறிப்பிலே முதலீட்டிலிருந்து விடுபடுகிற கொள்கை 'டிஸ்-இன்வெஸ்ட்மெண்ட் பாலிசி' என்று சொல்லி இருக்கிறார்கள். கூட்டுத் துறையிலே இருக்கக்கூடிய நிறுவனங்களை அதிலே கூட்டாக வருகிறவர்களுக்கு மாற்றி அமைப்பது சம்பந்தமாக இருக்கக்கூடிய ஏற்பாட்டை அமல்படுத்துவது சம்பந்தமாக. இதற்குக் காரணம் டிட்கோவினுடைய நிதி வசதி குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கூட்டுத் துறை பற்றி என்னுடைய கருத்தை ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். ஆனால் இந்த 'டிஸ்-இன்வெஸ்ட்மெண்ட் பாலிசி' எப்படி செயல்படுத்தக் கூடாது என்பதற்கு கடந்த கால உதாரணம் ஒன்றை நான் இங்கே சுட்டிக் காட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். தமிழ்நாடு அரசுக்கு 62 சதவீத மூலதனப் பங்கு இருந்து இருக்கக்கூடிய காரைக்குடி தமிழ்நாடு கெமிக்கல் பிராடக்ட் அதிக லாபம் ஈட்டிய தொழிற்சாலை தனியாருக்கு கடந்த காலத்திலே ஒப்படைவு செய்யப்பட்டு இருக்கிறது. அதற்கு எந்த விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்படவில்லை. தனியாருக்கு ஒப்படைப்பதாக இருக்கிறோம், யார் இதற்கு விருப்பம்



1989 மே 3] [திரு. உ. ரா. வரதராசன்]

தெரிவிக்கிறார்கள் என்பதற்கு ஒரு விளம்பரமோ, அறிவிப்போ கூட இல்லாமல் அது ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு 6 பேர் முன்வந்ததாகச் சொல்லப்படுகிறது. அறிவிப்பு இல்லாமலேயே. ஆனால் அதற்கு நிர்ணயிக்கப்பட வேண்டிய விலை ஒரு ஷேருக்கு ரூ. 51.31 காசு என்று டிட்கோவினுடைய நிதிக் கட்டுப்பாடு அதிகாரி தெரிவிக்கிறபோது, ஒரு பங்கை ரூ. 48.58 காசு என்று விற்க வேண்டுமென்று, அதற்காக அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியிலே ஆய்வு செய்யப்படும் போது, அந்த நிறுவனம் அந்தப் பங்கை ரூ. 45.38 காசுக்கு விற்க வேண்டுமென்று அரசு முடிவு செய்கிறது. அரசு முடிவு செய்யும் நேரத்திலே, சீலிட்ட ஆஃபர் வரவேற்கப்பட்டுப்போது அந்த சீலிட்ட கவரை உடைத்துப் பார்த்தால் அரசு நிர்ணயிக்கிற அதே ரூ. 45.38 காசு—ஒரு காசு கூட இப்படி, அப்படி என்று இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனமே அதற்கான ஆஃபரைத் தந்து அதனிடமே அது ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. சாராய சாம்ராஜ்யத்தோடு தொடர்புடைய ஒரு மில்லுக்கு அது ஒப்படை செய்யப்பட்டு இருக்கிறது. அது ஒப்படை செய்யப்பட்டதிலே ஒரு வேடிக்கை என்னவென்று சொன்னால் அந்த நிறுவனத்திற்கு 42 ஆயிரம் பங்குகள்தான் மாற்றப்படுகின்றன, கம்பெனிகள் சட்டத்திலே இருக்கக்கூடிய நிபந்தனைகளை ஏற்று. ஆனால் அதனுடைய மேனேஜிங் டைரக்டருக்கும் ஒரு டைரக்டருக்கும் தலா 2 லட்சத்து 25 ஆயிரம் பங்குகள் மாற்றப்பட்டு இருக்கின்றன. மற்ற 6 தனி நபர்களுக்கு 2,49,502 பங்குகள் மாற்றப்பட்டு இருக்கின்றன. இப்படி மாற்றியதாலே முறையாகக் கணக்கிடாமல் அதனுடைய விலையை ரூ. 60.32 காசு என்று நிர்ணயித்து இருக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கும் நேரத்திலே ரூ. 45.38 காசு என்று விற்றதனாலே 1 கோடி 54 லட்சம் ரூபாய் இழப்பு இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதிலே ஒரு மெக்னீஷியம் மெட்டல் பிராஜெக்ட் என்று ரூ. 2½ கோடி செலவிடப்பட்டு அந்த பிராஜெக்ட்டுக்கான மதிப்பீடு அதிலே சேர்க்கப்படவில்லை என்பதும் அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த ஆலையிலே தமிழ்நாடு அரசு முதலீடு செய்யக்கூடியது 103 லட்சம் ரூபாய். அதை ஒப்படைத்தார்களே, அந்தக் கம்பெனியினுடைய மூலதனமே.. (மணி அடிக்கப்பெற்றது)

பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 15 பேர் கொண்ட சட்டமன்ற அணி சார்பாக நான் ஒருவன்தான் பேசுகிறேன். கட்சிகளுக்கு, அணிகளுக்குக் கொடுக்கிற ஒற்றை ஆள் நேரம் கூட கொடுக்காமல் இருப்பது என்பது வருந்தத்தக்க நிலையாக இருக்கிறது. எனவே எனக்குக் கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுக்குமாறு பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, 15 நிமிடம் பேசி இருக்கிறீர்கள். இன்னும் இரண்டு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : நான் பேச ஆரம்பித்து 13 நிமிடங்கள் தான் ஆகின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : நீங்கள் 10-50க்கு பேச ஆரம்பித்து இருக்கிறீர்கள். இன்னும் இரண்டு நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : 67 லட்ச ரூபாய் தான் வாங்கிய நிறுவனத்தின் மூலதனம். அரசினுடைய ஷேர் 103 லட்சம் ரூபாய். எப்படி அதற்கு பைனான்ஷியல் சவுன்ட்னஸ் இருந்தது என்று முடிவு செய்தார்களோ, தெரியவில்லை. இப்பொழுதும் கூட நேரம் கடந்து விடவில்லை. அதைப் பூராவும் ரத்து செய்து, அந்த நிறுவனத்தை, இலாபம் தரக்கூடிய நிறுவனத்தை அரசு மீண்டும் ஏற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

டாமின் நிறுவனம் சம்பந்தமாக ஒரு கொள்கைக் குறிப்பு இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் கவலை யோடு பார்க்கிறேன். கவர்னர் ஆட்சிக் காலத்திலே, எடுக்கப் பட்ட முடிவின்படி தனியார் நிறுவனத்திற்கு இந்த உரிமம் இதுவரை வழங்கப்படவில்லை என்பது மகிழ்ச்சி தருகிறது. ஆனால் டாமின் நிறுவனத்திற்கு எவ்வளவு தேவையோ அவற்றை ஒதுக்கி, மீதமுள்ள பகுதிகளையும் மற்ற தனியார் நிலங்களை யும் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கலாம்; அப்படி ஒதுக்கீடு செய்வதிலே நியாயம் உள்ளது என்று அப்பொழுது அமைக்கப் பட்ட கமிட்டிகள் பரிந்துரை செய்ததை இங்கே குறிப்பிடுவதோடு 'இதன் மூலமாகக் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த ஏதுவாகும்', 'சுமார் 1,500 ஏழைத் தொழிலாளர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மூலதனத்திலேயே வேலை கிடைக்கும்; சீனிய ரேஜ் வசூல் மூலம் அரசுக்கு வருவாயைப் பெருக்க முடியுமென்று கருதப்படுகிறது என்பதெல்லாம் இந்த அரசினுடைய கொள்கைக் குறிப்பாகக் கொடுக்கப்பட்டு, அதைப்பற்றிச் சிந்தித்து உறுப் பினர்கள் மேலான கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது கிட்டத்தட்ட டாமின் நிறுவனத்தை அங்கே இருக்கக்கூடிய வளம் வாய்ந்த நூற்றுக்கு நூறு ஏற்றுமதி செய்யக் கூடியதை எல்லாம் தனியார் வசம் ஒப்படைக்கக்கூடிய நிலைமைக்குக் கொண்டு போய்விடுமோ என்ற அச்சம் எழுந்திருக்கிறது. தனியாருக்கு ஒப்படைக்கக் கூடாது என்பது தான் எங்களுடைய கட்சியினுடைய கருத்து. அப்படி ஒப்படை செய்வதைத் தடுப்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும். அரசுக்கு நிதி நெருக்கடி என்ற பெயரால்கூட, அதைத் தனியாருக்கு ஒப்படைக்கக்கூடிய, குத்தகைக்கு விடக்கூடிய வேலையை இந்த அரசு செய்யக் கூடாது. நூற்றுக்கு நூறு ஏற்றுமதி, அதனாலே அந்நியச் செலாவணி பெறுவதற்கு வாய்ப்பிருக்கிற காரணத்தினாலே, இதை அரசுத் துறையிலேயும், கூட்டுறவுத்



துறையிலேயும் நடத்துவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை மைய அரசிடமிருந்து பெற வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாக இங்கே நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

காவிரிப்படுகையிலே எண்ணெய்வளம் ஏராளமாக இருக் கிறது. அதைப் பயன்படுத்தி எவ்வளவோ மிகச் சிறப்பான தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த எண்ணெயினுடைய அனைத்து சுத்திகரிப்பும் தமிழ் நாட்டிலேயே, இந்தியாவிலேயே நடைபெற வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும். ஏராளமான துணைத் தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த நாப்தாவைப் பயன்படுத்தி உரத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கும் வாய்ப் பிருக்கிறது. இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்து கிறேன்.

திருப்பூரிலே பனியன் தொழில் ஏற்றுமதிக்கு அதிகம் வாய்ப்பு உள்ளது. ஆனால் பம்பாயிலே இருக்கக்கூடிய சில இடைத் தரகர்கள் கோட்டாவைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் ஏற்றுமதி செய்வதன் மூலமாகத் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பனியன் உற்பத்தியாளர்களுக்கு அந்த ஏற்றுமதியைச் செய்வதற்கான வாய்ப்புக்கள் தடுப்பட்டிருக்கின்றன. அதையும் வலியுறுத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்திலே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு லெதர் காம்ப்ளெக்ஸ்க்கு ஒப்புக் கொள்ளப்பட்டு 200 கோடி ரூபாயிலே அதற்குத் திட்டம், நில ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றெல்லாம் சொல்லப்பட்டு பிறகு அது பாதியிலே நின்றிருக்கிறது.

அதேபோல திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்தில் வேடசந்தூர் தொகுதியிலே ஒரு சிமெண்ட் ஆலை வருமென்று சொல்லப்பட்டு, அது நிறுத்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மைய அரசை வலியுறுத் துங்கள், வாதாடுங்கள். கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என்று சொன்னால், கொடி பிடிப்பதைத் தவிர வழி யில்லை என்று வருகின்றபொழுது, தமிழக மக்களை நம்பிக்கை யோடு அணுகி, மைய அரசு செய்கிற பாரபட்சங்களைச் சுட்டிக்காட்டி, தமிழக மக்களை அணி திரட்டி, இந்தக் கொள்கைக்காக, இந்தக் கோரிக்கைகளுக்காகப் போராடு வதற்கும் இந்த அரசு—ஆளுகின்ற கட்சி முன் வர வேண்டு மென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. உ. ரா. வரதராசன்] [1989 மே 3

சர்க்கரை ஆலை சம்பந்தமாகத் தனியார் உரிமம் பெற்ற ஐந்து
ஆலைகள் இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே, அதற்குப்
பரிந்துரை செய்யப்பட்டதை ரத்து செய்து, பொதுத் துறையிலே
தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொதுத் துறையைப்பற்றி ஏராளமான புகார்கள் சொல்லப்
படுகின்றன. ஏதோ தனியார் துறைதான் திறமையாகச் செயல்
பட முடியும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தமிழ்
நாட்டிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்
டால், கூட்டுறவுத் துறையிலேயும், பொதுத் துறையிலேயும்
இருக்கின்ற 15 ஆலைகள் ஈட்டிய அரவைத் திறன்—கெப்பா
சிட்டி யுடிலைஸேஷன் என்பது 110 சதவிகிதம்; தனியார்
துறையிலே இருக்கக்கூடிய ஆலைகள் 93 சதவிகிதம்தான் என்று
இருக்கின்றபொழுது, பொதுத் துறைக்கும், கூட்டுறவுத்
துறைக்கும்தான் ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். அதே நேரத்தி
திலே அங்கே எடைபானி மற்றும் இதர அலுவல்களைக் கம்ப
யூட்டர் மூலமாகச் செயல்படுத்துவதற்காக நடவடிக்கை
எடுக்கப்படுகிறது என்ற ஒரு குறிப்பு இருக்கிறது. அப்படி
கம்ப்யூட்டர் மயமாக்குவதைத் தவிர்க்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

சுற்றுப்புறத் தூய்மை சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.
இது ஒரு மிகப்பெரிய பிரச்சினை. சர்க்கரைத் தொழிலிலே,
இரசாயனத் தொழில்களிலே, தோல் பதனிடும் தொழில்
களிலே, டிஸ்டிலரீஸ் என்று சொல்லப்படுகின்ற தொழிற்சாலை
களிலேயெல்லாம் நிலத்தடி நீருக்கும், குடிநீருக்கும் மக்களுடைய
உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடிய முறையிலே அந்தக்
கழிவு நீரெல்லாம் வெளியேற்றப்படுகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எண்ணூரிலே புளுரோசிஸ் என்கிற நோய் பரவியிருக்கிறது
என்று சொல்லப்படுகிறது. காரைக்குடியிலே கோவிலூர் கிராமப்
பகுதியிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழ்பட்டு இருக்
கின்றன. என்னுடைய தொகுதியிலே வலசரவாக்கத்திலே
மோகன் டிஸ்டிலரீஸ் காரணமாக அங்கே நிலத்தடி நீர் பாழ்
பட்டுக்கிடக்கிறது. இதுபற்றி சாந்தப்பா குழுவின் அறிக்கை ஒன்று
இருக்கிறது. அது வெளியிடப்பட வேண்டுமென்ற கோரிக்கையை
வைத்து, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை
நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ளுகின்றேன். தமிழ்நாட்டிலே
பாத்திரத் தொழிலுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.
சேலம் ஸ்டீல்ஸ் 65 ரூபாய் கிலோ என்பதை......



1989 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிக நேரம் ஆகிவிட்டது.
திரு. வரதராசன், நீங்களாக முடித்துவிட்டால் பரவாயில்லை.
இல்லையென்றால், நான் அடுத்த உறுப்பினரை அழைப்பேன்.
ஒரு வாக்கியத்தோடு முடித்து விடுங்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, 65 ரூபாய்
கிலோ என்பதை 105 ரூபாய் கிலோ என்று சேலம் ஸ்டீல்ஸ்
இரும்புத் தகடுகளின் விலையை ஏற்றியிருக்கிற காரணத்தால்
பாத்திரத் தொழிலும் பாதிக்கப்பட்டு, 50 ஆயிரம் பேர்களும் அங்கே
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். என்ஜினியரிங் தொழில்களுக்கு
வேண்டிய 'பிக் அயர்ன்' கிடைக்கவில்லை. 'ஸ்கிராப்' விலை
ஏறியிருக்கிறது. தட்டுப்பாடு இருக்கிறது. அலுமினியம் தட்டுப்
பாடு இருக்கிறது என்கிற குறைகள் எல்லாம் வந்திருக்கின்றன.
சிறுதொழில்களுக்கு இலவச மின்சாரம் அளிக்கவேண்டும்.
சிறுதொழில்களின் கீழ் சோப்பு உற்பத்தி செய்கிறவர்களுக்கு
'பெட்ரோ புராடக்ட்ஸ்', கூட்டுத்துறை நிறுவனமே மூலப்
பொருள் விலையை ஏற்றுவதன் காரணமாக, அந்தத் தொழில்
நலியக்கூடிய நிலையில் இருக்கிறது. சோப்பிற்கு விற்பனை
வரியை உயர்த்தி இருக்கிறார்கள். இயந்திரத் தொழில் என்று
கருதினால் ஒருவேளை ஹிந்துஸ்தான் லிவர்ஸ்க்கும், நிர்மா
விற்கும்....(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய நேரம் ஆகி
விட்டது. மற்ற உறுப்பினர்கள் இதே உரிமையைக் கோர
ஆரம்பிப்பார்களானால், இந்த அவையை நான் நடத்த
முடியாது. அது உங்களுக்குத் தெரியாதது அல்ல. உட்காருங்
கள். இப்போது திரு. கே. அங்கமுத்து.

*திரு. கே. அங்கமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே,
இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக நான் வருவதற்கு
என்னைத் தேர்ந்தெடுத்த, நான் அன்றாடம் வணங்கும்
தெய்வமான மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்
களுக்கும், எனக்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்த
வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கன்னி உரையைத்
தொடங்குகிறேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்த நாட்டில் நடை
பெறுகிற தொழில்களே காரணமாகும். நம்முடைய மாநிலத்
தைப் பொறுத்தவரையில் தொழில்களுக்கு முக்கியத்துவம்
கொடுத்தபோதிலும், தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம்
கொடுத்தபோதிலும், தலைநகரான சென்னையில் கிண்டி,
அம்பத்தூர், பாக்கனூர், திருவான்மியூர், பெருங்குடி, கும்மிடிப்
பூண்டி, மறைமலைநகர் போன்ற இடங்களில்தான் பெரிய
தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக,
கிராமப்புறங்களில் உள்ள தொழிலாளர்கள் எல்லாம்

தலைநகரான சென்னைக்குக் குடியேற வேண்டிய நிலை ஏற்படு கிறது. எனவே, தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற இந்த அரசு ஆங்காங்கேயுள்ள கிராமப்புறங்களில் தொழிற் சாலைகளை அமைத்து, கிராமப்புறங்களில் தொழில் வளத் தைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பயன்படக்கூடிய உபரிப்பொருள் கள் மற்றும் எளிதில் தயார் செய்யக்கூடிய பொருள்களை உற் பத்தி செய்யலாம். உதாரணமாக மின் விளக்குகளைப் பொருத்து வதற்குத் தேவையான பட்டிகள், ஸ்டார்ட்டர், சோக், பல்புகள் போன்ற பொருள்களைத் தயாரிக்கலாம். இவற்றை இந்த அரசு தொழில் பேட்டைகள் அமைத்து உற்பத்தி செய்தால் அரசுக்குப் பெருமளவில் இலாபம் கிடைப்பதோடு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும், அண்டை மாநிலங்களிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்குகிற மின்சாரக் கணக்கை ஈடுகட்டவும் உதவலாம். இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைத் தால் நட்டம் ஏற்படுவது போன்ற நிலையைத் தவிர்க்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன். முன்பு மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பு ஏற்றிருந்தபோது தமிழ்நாட்டில் மின்சாரம் இல்லாத கிராமமே இருக்கக்கூடாது என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழ்நாடு முழுவதும் பட்டித்தொட்டிகள்தோறும் மின்சாரத்தைப் புகுத்திய பெருமை யைப் பெற்றுள்ளார்கள். அதுபோன்று தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள்தோறும், வட்டங்கள்தோறும் தொழிற்சாலை களை அமைத்து தமிழகத்தை ஒரு தொழில் வளம் மிக்க மாநில மாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத என்னுடைய தொகுதி யான உளுந்தூர்பேட்டையில் முதல் கட்டமாக மின்சார சாதனங் களுக்கான, உபரிப் பொருள்களைத் தயாரிப்பதற்கு ஒரு தொழிற் சாலையைத் துவங்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த முறை முதலமைச்சராகப் பதவி ஏற்றிருந்தபோது, அப்போது மின் வாரியத்தில் பணியாற்றிய தற்காலிக மின் ஊழியர்களை நிரந்தர மாக்கியதால் என்னையும் சேர்த்து பல லட்சக்கணக்கான ஊழியர் களின் உள்ளங்களும், அவர்களுடைய குடும்பத்தார் உள்ளங்களும் கலைஞர் அவர்களை வாழ்த்திக் கொண்டு உள்ளன. அதுபோன்று ஐந்தாண்டு முதல் 10 ஆண்டுகள் வரையில் வாரியத்தில் ஒப்பந்தப் பணியாளர்களாக இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர்களை அவரவர்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ப நிரந்தரம் செய்து, அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் வாழ்வளிக்க வேண்டுமென்று அந்தத் தொழிலாளர்கள் சார்பாக வும், என் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



வாரியத்திலே பணியாற்றுகிற பணியாளர்கள் அல்லது அவர்
களுடைய குடும்பத்தினர் நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை பெறு
வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் சான்று வழங்கப்
படுமேயானால் ஓர் ஆண்டுக்கு ஒரு மாத ஊதியத்தினை
மருத்துவப் படியாக தமிழக அரசு வழங்கி வருகிறது. ஆனால்
எல்லாத் தரப்பு ஊழியர்களும் நோய்வாய்ப்படுவது இயல்பு.
இருந்தும் அனுமதிக்கப்பட்ட மருத்துவரால் சான்று பெற முடிந்த
ஊழியர்களே இந்தச் சலுகையினை அடைய முடிகிறது. கிராமப்
புறங்களில் உள்ள பணியாளர்கள் எந்தக் காலத்திலும் இந்தச்
சலுகைகளை அடைய முடியவில்லை. எனவே இந்த அரசு
ஆண்டுக்கு ஒரு மாத மருத்துவப் படி வழங்குவதை, மாதாமாதம்
சராசரியாக பணியாளர்களுடைய ஊதியத்தோடு மருத்துவப்
படியினையும் சேர்த்து வழங்க உத்தரவினை வழங்க வேண்டும்
என்று முதல்வர் அவர்களையும் மின்துறை அமைச்சர் அவர்
களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள விற்பனையாளர்கள் மற்றும்
எழுத்தாளர்கள் பல ஆண்டுக்காலமாக தற்காலிக ஊழியர்களாகப்
பணியாற்றுகிறார்கள். அந்தப் பணியாளர்களை நிரந்தர ஊழியர்
களாகப் பணி செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் உயர்
மட்ட அலுவலர்கள் பதவியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த
வர்கள் பதவி வகிப்பதாகத் தெரியவில்லை. எனவே தமிழக
அரசு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள அலுவ
லகப் பணிகளுக்கான பதவியினை தாழ்த்தப்பட்ட வகுப்பைச்
சேர்ந்தவர்களுக்கு, 18 சதவீத அடிப்படையில் அமர்த்த
ஏற்பாடு செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையிலே அளிக்கப்படும் சலுகைகள் விவசாயி
களிடத்திலே போய்ச் சேருவதில்லை. தரப்படும் சலுகைகள்
என்ன என்பதே விவசாயிகளுக்குத் தெரிவதில்லை. எனவே
அரசு தரும் சலுகைகள் அனைத்தும், மானியங்கள் அனைத்தும்
விவசாய மக்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்
என அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே கரும்பு ஏராளமாக பயிரிடப்படு
கிறது. ஆனால் அதன் அரவைக்குப் போதுமான சர்க்கரை
ஆலைகள் இல்லை. அதனால் விவசாயிகளின் கரும்புகள் வேறு
மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டு நஷ்டம் ஏற்படுகிறது. அதைப்
போக்குவதற்கு அரசு மேலும் சர்க்கரை ஆலைகளைத் துவக்க
வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி
யில் உள்ள தியாகதுர்கத்தில் அதிக கரும்பு உற்பத்தியாகிறது.

[திரு. கே. அங்கமுத்து] [1989 மே 8

எனவே தியாகதுர்கத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றை
உடனடியாகத் துவக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்
கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம்.
அதை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கப் போவதாக
அரசு அறிவித்து 4 ஆண்டுக் காலத்திற்கு மேலாகிவிட்டது.
எனவே இது உடனடியாகப் பிரிக்கப்பட்டு, அப்படி பிரிக்கப்படுகிற
போது, விழுப்புரம் மாவட்டத்தோடு உளுந்தூர்பேட்டை வட்டத்
தினைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தில் உள்ள பெருவாரியான உறுப்பினர்கள் விவ
சாய மின் இணைப்புப் பற்றிப் பேசுகிறபோது, அவரவர்களுடைய
கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். நான் மின்சார வாரியத்
திலே பணியாற்றியவன், அதிலும் குறிப்பாக கணக்கீட்டாளராக
8 ஆண்டுக்காலம் பணியாற்றியவன் என்ற முறையில் இந்த அரசின்
கவனத்திற்கு என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்பு
கிறேன். விவசாய மின் இணைப்புகளுக்கு ஏற்கெனவே இருந்த
மின்பயனீட்டு அளவை மாற்றி, ஒரு வண்டிக்கு ஒரு குதிரைத்
திறனுக்கு 75 ரூபாய் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு
வந்ததின் காரணமாக, ஒரிரு பகுதிகளில்—உ.காரணமாக கடலூர்
மற்றும் பண்ருட்டி போன்ற பகுதிகளில்—போர்-வெல் போட்ட
இடங்களில் அங்குள்ள விவசாயிகளுக்கு மிகுந்த லாபத்தையும்,
அதிப்படியான திறந்தவெளிக் கிணறுகள் இருக்கக்கூடிய விவசாயி
களுக்குப் பெருத்த நஷ்டத்தையும் அளிக்கும் திட்டமாக இது
இருப்பதால், விவசாயிகளுடைய உள்ளங்கள் எரிமலை போன்று
குமுறிக்கொண்டு இருக்கின்றன.

எனவே இந்த அரசு அனைத்து விவசாயிகளுக்கும் ஏற்றத்
தாழ்வின்றி சலுகைகளை அளிக்கும் வகையிலே மாதம் ஒன்றுக்கு
பயன்படுத்தும் மின்சாரத்திலே 100 யூனிட்டுகளுக்கு சலுகை
அளித்தும், அதற்கு மேல் உபயோகிக்கும் மின்சாரத்திற்கு யூனிட்
டுக்கு 15 பைசா வீதம் வசூல் செய்தால், அனைத்து விவசாயி
களும் பயன் அடைவதோடு சிறு விவசாயிகளுக்கும் மின் கட்டணச்
சலுகை கிடைத்துவிடும். அந்த இடத்தில் கூடுதல் பணியாட்களை
நியமனம் செய்வதால், வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கு
வதற்கு வாய்ப்பு உண்டு, அதனால் வாரியத்திற்கும் நட்டம்
ஏற்படாது என்பதைக் கூறி மாண்புமிகு முதல்வர் அவர்களும்
மின்துறை அமைச்சர் அவர்களும் இந்தத் திட்டத்தை ஆய்வு
செய்து, அமுல்படுத்த வேண்டும் என்று விவசாய மக்களின் சார்
பாகவும், அனைத்து உறுப்பினர்களின் சார்பாகவும் என் சார்
பாகவும் மிக்கப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உளுந்தூர்பேட்டையில் வாழ்கின்ற
மக்கள் விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள
நிலையில், அருகிலே உள்ள நெய்வேலி நிலக்கரி சுரங்கத் திட்டத்



1989 மே 8] [திரு. கே. அங்கமுத்து]

தின் காரணமாக ஆண்டுக்காண்டு நிலத்தடி நீர் வறண்டுகொண்டு
செல்கிறது. எனவே நெய்வேலியைச் சுற்றியுள்ள சுமார்
500 கிராமங்களுக்கு மேல் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டதன் காரணமாக
அங்குள்ளவர்கள் பெரிதும் பாதிப்பை அடைந்து வருகிறார்கள்.

(முற்பகல் 11-30)

இந்நிலை மேலும் நீடித்தால் விவசாயத்திலே முக்கியத்துவம்
வாய்ந்த இந்தப் பகுதி இன்னும் ஓரிரு ஆண்டுகளிலே பாலைவனம்
போல் மாறிவிடக் கூடும் என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்நிலை
யினைப் போக்கிட இந்த அரசு உடனடி ஆவன செய்து, நெய்
வேலியிலே, சுற்றிலுமுள்ள பகுதிகளிலே தொடர்ந்து விவசாயம்
செழித்தோங்க சாத்தனூர் நீர்த்தேக்க அணையிலிருந்து இப்
பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் செய்து கொடுக்க வேண்டுமென்றும்,
ஆங்காங்கே உள்ள ஏரி, குளம், குட்டைகள் போன்ற நீர்த்
தேக்கங்களைச் செப்பனிட்டுத் தரவேண்டுமென்றும் இந்த அரசை
மிக்க வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னார்க்காடு மாவட்டம் விவசாய உற்பத்தி மாவட்டங்
களில் ஒன்றாக உள்ளதால் அம்மாவட்டத்திலுள்ள விவசாயிகளை
ஊக்குவிக்கும் வகையில், விவசாய மின் இணைப்புகளிலே முன்
னுரிமை வழங்கி, நடப்பு ஆண்டிலே அனைத்து விவசாயிகளும்
மின் இணைப்பு பெற்று பயனடைய, இந்த மாவட்டத்தினுடைய
மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.
இந்தத் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சரவர்கள் நிறைவேற்
றித் தரவேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

எனது தொகுதியான உளுந்தூர்ப்பேட்டை பகுதியில் அன்றா
டம் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தவர்கள் பெரும் அளவில் காணப்
பட்டதன் காரணமாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்
கடந்த முறை முதல்வராக இருந்தபோது உளுந்தூர்ப்பேட்டை
பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் சேலம் நெடுஞ்சாலை
யிலுள்ள வெள்ளையூரில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்
தினை துவக்கி வைத்து நடைமுறை செய்ததன் காரணமாக என்
தொகுதியில் பிச்சை எடுப்பவர்களே இல்லாத ஒரு பெருமையினை
பெற்றிருக்கின்றோம். அந்த இல்லத்தில் வாழ்கின்ற மக்கள்
இயற்கையால் பாதிக்கப்பட்டவர்கள். (மணியடிக்கப்பெற்றது).

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழகத்தினுடைய
தொழிற்துறை தூக்கத்தைக் களைந்து கண்ணைத் திறந்து
பார்க்க ஆரம்பித்திருக்கிறது. தொழிற்துறையில் ஏற்பட்டு
விட்ட மந்தமான நிலை மாறி, சுதந்திரமான ஒரு காலம்
தொடங்கும் என்பதில் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்
டிருக்கிறது.

நான் ஒரு நிகழ்ச்சியைக் குறித்துக் கேள்விப்பட்டேன். நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களுடைய செல்வன் கதிரவன் அவர்கள் ஒரு தேர்வு எழுதிவிட்டு நமமுடைய மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்களைப் பார்க்கச் சென்றபோது டாக்டர் கலைஞர் அவர்கள் கதிரவனை நோக்கி—பரிட்சை எழுதிவிட்டு வந்தாயே—என்ன கேள்விகள் கேட்கப்பட்டன, விடை என்ன எழுதினாய் என்று கேட்டதாகவும், கதிரவன் அவனிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வியை, ஒரு தொழிலை ஆரம்பிப்பதாக இருந்தால், அதற்குத் தேவையான மூலப் பொருள், "What are the factors which are essential for the establishment of an Industry? என்று கேட்டார்கள் என்று சொன்னபோது செல்வன் கதிரவன் அவர்கள் நிலம் வேண்டும், கேப்பிடல்—முதல் வேண்டும், ரா-மெட்டீரியல்ஸ் என்று சொல்லக்கூடிய மூலப் பொருட்கள் வேண்டும், நல்ல மேனேஜ்மெண்ட் வேண்டும், அதே நேரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் நல்ல முறையில் விலை போக மார்க்கெட்டிங் ஃபெசிலிட்டீஸ் வேண்டும் என்றெல்லாம் எழுதினேன் என்று சொன்னபோது அவை எல்லாம் எழுதிவிட்டாய், அதெல்லாம் முக்கியம் தான், ஆனால் அதைவிட முக்கியம் ஒரு நல்ல கவர்ன்மெண்ட் வேண்டும் என்றும் எழுதியிருக்க வேண்டும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன்.

ஆனால் பொருளாதார நிபுணர்கள் கூட, என்னைப் போன்ற பொருளாதாரத்திலே முதுநிலை வகுப்பு படித்து எம்.ஏ. பட்டதாரி கூட நினைத்துப் பார்க்காத, அல்லது அதைச் சேர்த்து எழுதாத ஒரு கருத்தை முக்கியமான மகத்தான உண்மையை டாக்டர் கலைஞர் அவர்களால்தான் சொல்ல முடியும் என்ற அளவுக்கு, இவை எல்லாம் இருந்தாலும் ஒரு நல்ல அரசு இல்லாவிட்டால் தொழில் முன்னேற்றத்தை நாம் காண முடியாது என்பதற்குத் தமிழகமே இன்றைக்கு தொழில் துறையிலே பின் தள்ளி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டக் கூடிய நிலையில் நல்ல அரசு தேவைப்படுகிறது என்பதை நமக்கு உணர்த்துகிறது. இன்றைக்குத் தமிழகம் ஒரு நல்ல அரசை, நல்ல அரசை மட்டுமல்ல, ஒரு நல்ல முதலமைச்சரை ஆட்சித் தேர் என்கிற அந்தத் தேரை நடத்திச் செல்வதற்கு பெற்றிருக்கிற காரணத்தால் அவர்களே இந்த உண்மையை உலகத்திற்கு உணர்த்தக் கூடிய அளவுக்குத் தொழில் நுணுக்கத்தை அறிந்தவர்களாக இருக்கிற காரணத்தால் தமிழகம் தொழில் துறையிலே பின்னே தள்ளப்பட்டுவிட்டது என்ற நிலை மாறி, நம்முடைய பாரம்பரியத்திற்கு ஏற்ப தொழில் துறையில் தமிழகம் வீறு நடை போடும், பீடு நடை போடும், தொழில் துறையிலே தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கும் என்று நான் நம்பிக்கை வைக்கிறேன். நாட்டு மக்களும் நம்புகிறார்கள்.



பொதுவாக நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல நாம் தொழிலிலே முன்னேற்றம் காண வேண்டுமானால், நம்முடைய தொழில் முன்னேற்றம் அடைந்து அதனால் நாட்டில் வளம் பெருக, நம்முடைய சம்சாரத்தில் எல்லாம் வளம் பெருக வேண்டுமானால் மின்சாரம் வேண்டும். எனவே அந்த மின்சாரத்திற்கான முறையான திட்டங்களைக் கடந்த காலங்களிலே நாம் வகுத்திருந்தாலும் அதை நடைமுறைப்படுத்தவில்லை என்ற உண்மைகளையெல்லாம் அறிந்து நம்முடைய இன்றைய அரசு மின்சார உற்பத்திக்காக முதலிடம் தந்திருப்பதும், முன்னுரிமை வழங்கியிருப்பதும், அதற்காக முறையான திட்டங்களைத் தீட்டி இருப்பதும் வரவேற்கக் கூடிய ஒன்று.

எனவே தொழிலிலே தொய்வு ஏற்படுத்தாமல் அந்த மின்சாரத் திட்டங்களையெல்லாம் முறைப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும், செயல் படுத்த வேண்டும். அதற்காக மத்திய அரசாங்கம் வழங்குகிற அனுமதி தாமதப்படுத்தப் பட்டால் அவைகளைத் தூக்கி நிறுத்தி அந்தத் திட்டங்களுக்கான அனுமதியை உடனடியாக வழங்க வேண்டுமென்று கோர வேண்டும். அதற்காகத் தமிழக மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக மத்திய மாநில அரசுகளுடைய தொழில் கொள்கையிலே ஒரு இணைப்பு வேண்டும், ஒரு ஒருங்கிணைந்த நிலை வேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய தொழில் கொள்கை—மாநில அரசாங்கங்கள், மக்களிடையே நேரிடையாக தொடர்பு கொண்டிருக்கிற அரசாங்கங்கள்—மாநிலங்களிலே நிலவுகிற யதார்த்த நிலையை எல்லாம் கருத்திலே கொண்டு சமூக, பொருளாதார அபிலாஷைகளையெல்லாம், தேவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அவர்கள் ஏற்படுத்துகிற தொழில் கொள்கைக்கு மாறான ஒரு தொழில் கொள்கையை மத்திய அரசு ஏற்படுத்துமானால், நடைமுறைப்படுத்துமானால் அது நாட்டுக்கு நல்லது அல்ல என்ற வகையில் மத்திய அரசாங்கமும் தன்னுடைய தொழில் கொள்கையை நிர்ணயிப்பதற்கு முன்பு பல்வேறு மாநிலங்களுடைய யதார்த்த சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு தொழில் கொள்கையை அவர்கள் வகுக்க வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குத் தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

1956-லே பண்டித ஜவஹர்லால் நேரு பெருமகனார் அவர்கள் வகுத்த Industrial Policy of India அதற்குப் பிறகு ஜனதா அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, 1956 ஆவது ஆண்டிலே வகுக்கப்பட்ட பெரும் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை வழங்குவது என்ற நேருவினுடைய

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 மே 3]

(முற்பகல் 11-40)

கொள்கைக்கு மாறாக சிறு தொழிற்சாலைகளுக்கு கிராமப்புற வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று ஜனதா அரசாங்கம் ஒரு புதிய கொள்கையை அறிவித்தது. அதற்குப் பிறகு இன்றைக்கு ஏற்றுமதி இறக்குமதிக்கான கொள்கைகளிலே சில மாறுபாடுகள் அல்லது சில திருத்தங்கள் என்ற அளவுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர ஒரு காம்பிரஹென்சிவ் இண்டஸ்ட்ரியல் பாலிசி என்ற வகையில் ஒரு ஒருங்கிணைந்த முறையிலே மத்திய மாநில அரசுகள் அவரவர்களுடைய துறைகளிலே எப்படி எப்படி தொழில் கொள்கைகளை வகுத்தால் காம்பிளிமென்டரியாக இருக்கும் என்று பார்த்து The Industrial Policy of the Government of India and the State Government should be complementary to each other and there should be a comprehensive Industrial Policy after proper consultation என்ற அளவிற்கு நம்முடைய முதல்வர் அவர்கள், அவர்களிடத்திலே வற்புறுத்திச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி இன்றைக்கு இந்த வட்டியில்லா விற்பனைக் கடன் திட்டத்தில், அந்தத் திட்டம் வரவேற்கக் கூடிய திட்டமாக இருந்தாலும் அதிலே நடைமுறையில் பல சீர்கேடுகள், பல ஒழுங்கீனங்கள் இருப்பது என்பது நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் அளிக்கப்படுகின்ற இந்த வட்டியில்லா விற்பனைக் கடன் திட்டத்தின் அடிப்படையிலே அது தேவையானவர்களுக்கு ஒரு டைவர்சிபிகேஷன் என்ற முறையிலே கொடுக்கப்படாமல், ஒரு சிலர் யாருக்கு செல்வாக்கு இருக்கிறதோ அவர்களுக்கே ஒட்டு மொத்தமாக அந்த வட்டிக் கடனை 30 இலட்சம்; 40 இலட்சம் என்று யார் தொழில் துறையிலே திமிங்கலம் என்று கருதப்படுகிறார்களோ அவர்களுக்கு இருக்கக் கூடிய pulls and pressures என்ற அடிப்படையிலே அவர்களுக்கே வழங்கப்படுவது என்பதை ஒரு நடைமுறையாக வைத்துக் கொண்டு இருப்பது மாற்றப்பட வேண்டும். ஒரு பெர்ஸ்பெக்டிவ் அஸெஸ்மெண்ட் என்ற முறையிலே செய்யப்பட்ட பிறகு தான் உண்மையான தேவை உள்ளவர்களுக்கு யாருக்குக் கொடுத்தால் அந்தத் தொழில் நசுங்கிவிடாமல் தொழில் வளர்ச்சி ஏற்படும், அதே நேரத்தில் அந்தத் தொழில் நடை முறையில் சிறந்து விளங்கும் என்று கருதப்படுகிறதோ அவர்களுக்குத் தான் கொடுக்க வேண்டுமே தவிர, யார் துறையிடம் செல்வாக்கு பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்கே ஒட்டு மொத்தமாக ஒரு வருடத்திற்கு ரூ. 40 இலட்சம், 50 இலட்சம் என்று கொடுக்கின்ற பணத்திலே ஒரு ஆளுக்கு, இரண்டு ஆட்களுக்கு ரூ. 40 இலட்சம், 50 இலட்சம் என்று கொடுக்கின்ற இந்தக் கொடுமை மாற்றப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன் அதே நேரத்தில் இன்றைக்கு டி. ஐ. சி.



[1989 மே 3] [திரு. எம். அப்துல் லத்தீப்]

வழங்கும் கடன்கள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் வழங்குகின்ற கடன்கள் நேற்று வரையிலே எப்படி இருந்தது, இன்று வரையிலே எப்படி இருக்கிறது என்று பார்க்கும்போது இன்றைக்குத்தான் நாம் எல்லாம் மகிழ்ந்திடும் வகையில் இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய சார்பாக கொடுக்கப்படுகின்ற நிதி எல்லாம் ஏழை எளியவர்களுக்கு, சமுதாயத்திலே அடித் தளத்திலே இருக்கக் கூடிய மக்களுக்கு அதுவும் மிக ஏழையாக இருக்கக் கூடிய மக்களுக்கு இந்தப் பணம் பயன்பட வேண்டும் என்ற அளவில் இந்த அரசு திட்டம் தீட்டி முதல்படியாக இன்றைக்குக் கடன் வழங்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் ஆட்டோ ரிக்ஷாக்காரர்களுக்கு, டாக்ஸிக்காரர்களுக்கு என்று எல்லாம் இப்படி அவர்கள் ஒரு திட்டத்தைத் தொடங்கி நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே இன்றைக்கு ஏழை எளியவர்கள் வாழ்த்துகிறார்கள். பணம் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குச் சேருகிறது என்ற ஒரு நிம்மதி இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் இது வரையிலே நாம் பார்க்கும் போது 60 இலட்சம், 70 இலட்சம், ஒரு கோடி, 1½ கோடி என்றெல்லாம் தொழில் முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றோம் என்ற அடிப்படையில் இந்தக் கழகம் வழங்கி வருகிற பணத்தை யாருக்கு வழங்குகிறோம் என்ற ஒரு திட்டத்தோடு, யாருக்கு வழங்குகிறார்களோ அவர்கள் தொழிலை நடத்தக் கூடிய நிபுணத்துவம் பெற்றிருக்கிறார்களா, தகுந்த சூழ்நிலையிலே அவர் வாய்ப்பை பெற்றிருக்கிறார்களா, ஒரு கோடி ரூபாயைத் கள் ஃபேக்டரிகளை ஆரம்பிக்கிறார்களா, ஒரு கோடி ரூபாயைத் துறையின் வாயிலாக கொடுக்கும் போது அந்தப் பணம் மீண்டும் அரசுக்கு வருமா, ஒரு ஆண்டுக்கு 80,000 ரூபாய், 1 இலட்சம் ரூபாய் வட்டியாக கடன் செலுத்த வேண்டுமானால் அந்த வட்டியைச் செலுத்தக் கூடிய கெப்பாசிட்டி அவர்களுக்கு இருக்கிறதா, நாணயம் அவர்களுக்கு இருக்கிறதா, அவர்களுக்கு இருக்கக் கூடிய பாங்க் பெசிலிட்டீஸ் என்ன, இவற்றை எல்லாம் பார்க்காமல் ஒட்டுமொத்தமாக ஏதோ அவர்களுக்குத் தேவையானவர்கள்—அதிலே பல்வேறுவிதமான சக்திகள் வேலை செய்கின்றன என்ற காரணத்தினாலே அவர்கள் இந்தத் தொழில் முதலீட்டு கழகத்தின் வாயிலாக bonafide industrialists, bonafide entrepreneurs என்ற மாதிரி தொழில்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய தன்மைகளை எல்லாம் ஆராய்ந்து கொடுக்க வேண்டும். ஆரம்பித்துவிட்ட பிறகு ஒரு காலக்கெடு வேண்டும், இவ்வளவு காலத்திற்குள் உற்பத்தி தொடங்க வேண்டும் என்ற ஒரு காலக்கெடு வேண்டும். ஆனால் பல வருஷங்களாக கடன் வாங்கியவர்கள் வட்டி கூட செலுத்துவது இல்லை. பல வருஷங்களாக உற்பத்தியை தொடங்குவது இல்லை. பல வருஷங்களாக அதனுடைய எஸ்டாபிலிஷ்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சர் என்ற முறையிலே பல தொழிற்சாலைகள் இன்றைக்குப் பணத்தை முடக்கி வைத்துக்கொண்டு இருக்கின்றன. பணம் கூட திரும்பி வருவதில்லை. (மணியடிக்கப்பெற்றது). இந்த நிலையிலே பணமும் இல்லை, முதலும் இல்லை, வட்டியும் இல்லை. கொடுத்தோம்

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 மே 3

என்ற அலங்காரங்கள் நம்முடைய புத்தகங்களில் இருக்கின்றன. இவ்வளவு பேர்களுக்கு கொடுத்தோம் என்ற அலங்காரங்கள். இந்த அலங்காரங்கள் தேவையா என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன். Please take sincere and speedy steps to recover the money that you have advanced to those people. If they are bonafide and if they have really the production capacity, then, please give them necessary concessions and also give them necessary facilities. Otherwise, please take steps to recover the money-both capital and the interest. இல்லாவிட்டால் அது சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுக்காது என்பதை மட்டும் நான் அவர்களிடத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், இந்தத் தோல் தொழிற்சாலையைக் குறித்து இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றினுடைய ''எஃப்ளுவன்ட்'' எல்லாம், கழிவு நீர்கள் எல்லாம் வெளியே வருவதைப் பற்றி எல்லோருக்கும் கவலையுண்டு. ஆனால் தோல் தொழிற்சாலையில் இருந்து மட்டும்தான் வருகிறதா? சாராயத் தொழிற்சாலை யிலிருந்து வரவில்லையா? துர்நாற்றத்திலேயே மிகக் கேடு கெட்ட துர்நாற்றம் சாராயத் தொழிற்சாலையிலிருந்து வர வில்லையா? அங்கேயிருந்து எஃப்ளுவன்ட் வரவில்லையா? சாகோ பேக்டரி என்று சொல்கிறார்களே, அதிலிருந்து எஃப்ளு வன்ட் வரவில்லையா? தோல் மட்டும்தான் உங்கள் கண்களிலே தெரிகிறதா? அது மட்டும்தான் நம்முடைய மார்க்சியம் என்று துளைக்கிறதா? என்னாலே கேட்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தொடர்ந்து துர் நாற்றம் என்று பேசிக்கொண்டிருக்கும்போது, தீட்சிதர் அவர்கள் மூக்கைப் பிடித்துக் கொள்கிறார்கள் (சிரிப்பு).

திரு. எம். அப்துல் லத்தீப் : அந்தத் துர்நாற்றம்தான் ''ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் எர்னிங் சோர்ஸ்''. அதனாலே சாப்பாடு இல்லாதவனுக்கு அத்தர் பூசுவதைப் போல, நான்கு நாட்கள் பட்டினி கிடப்பவனுக்கு அத்தர் பூசிப் பயன் என்ன? தொழிலுக்கு ஆக்கத்தைக் கொடுக்கிற, அதுவும் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற ஒரு தொழிலிலே இன்றைக்கு அவர்களை எல்லாம் கிரிமினல் குற்றவாளிகளாக, ஒரு சாதாரணக் குற்றத்தையும் செய்வதற்குப் பயப்படக் கூடிய அந்த முதலாளிகள் என்று சொல் லக்கூடிய உண்மையான தொழிலாளிகளை, கிரிமினல் குற்றவாளி களாகப் போட்டு, வாணியம்பாடியிலே அவர்கள் செய்துவிட்டார் கள்: ஆனால் ஆம்பூரிலே, பேரணாம்பட்டிலே மற்ற பகுதி களிலே கிரிமினல் குற்றவாளிகளாகப் போட்டு, அவர்களைக் குற்ற வாளிகள் என்ற முறையில் கோர்ட்டுகளிலே நிறுத்தி வைத்திருக் கிறார்கள். என்ன நியாயம் என்று நான் கேட்கிறேன். அவர் கள் அதிகமாகப் பணம் சம்பாதிக்க வேண்டும், ஃபாரின் எக்ஸ் சேஞ்ச் ஈட்ட வேண்டும் என்று மட்டும் உபதேசம் செய்யக் கூடிய



1989 மே 3] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அரசுகள், அவர்களுடைய அந்த மகத்தான சமுதாய சேவையை, தொழில் முறையிலே அவர்கள் ஆற்றி வருகின்ற அந்த மகத்தான சேவையை உத்தேசித்து, அவர்களுக்கு வசதிகள்— ஒன்று நீங்கள் கடன் கொடுக்க வேண்டும், அல்லது எல். ஐ. சி. கவர்ன்மென்ட் சேர்ந்து கடன் கொடுக்க வேண்டும் அல்லது கழிவுநீரை அகற்றுவதற்கு வேறு ஏதாவது ஒரு திட்டத்தைத் தீட்ட வேண்டும். ஐந்து இலட்சம் ரூபாயை வைத்து வில்லேஜ் இன்டஸ்டிரீஸ் ஆக நடத்தக்கூடிய ஒரு தொழிற்சாலை யில், 20 இலட்சம் ரூபாயினைச் செலவு செய்து அவர்கள் ''எஃப்ளுவன்ட் பிளான்ட்''-ஐ ஏற்படுத்த வேண்டும் என்றால் அது சத்தியமா? அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, இந்த மாதிரியான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு, போடப்பட்ட கேஸ் களைத் தயவு செய்து, கருணை உள்ளம் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளை எல்லாம் கூட்டுறவுத் துறையில் அமைப்பதை வரவேற்கின்றேன். அதே நேரத்தில், இந்தச் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வரையில் நான் ஒன்றை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, நம்முடைய வட ஆற்காடு மாவட்டத்தினுடைய தெற்குப் பகுதி மிகவும் மறுக்கப்பட்டு, மறக்கப்பட்ட பகுதி. நான் இருக்கிற பகுதி வட ஆற்காட்டினுடைய வட பகுதி. அங்கே தொழிற் சாலைகள் இருக்கின்றன. ஆனால் தெற்குப் பகுதி—நான் என்னுடைய பகுதிக்குக் கேட்கவில்லை—தெற்குப் பகுதி, நியாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய பகுதி. அந்தப் பகுதியில் குறைந்த பட்சம் ஒரு சர்க்கரை ஆலை, கூட்டுறவுத் துறையிலாவது அரசால் ஏற்படுத்தப்பட வேண்டும். போளூர் வட்டம், செங்கம் வட்டம், திருவண்ணாமலை வட்டம், கலசப்பாக்கம் தொகுதி, அந்தப் பகுதிகளெல்லாம் இருக்கின்றன. தயவு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி யிலே தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நான் பேசுகிற காரணத்தால், என்னுடைய சகாக்களுடைய தொகுதிகள் பற்றி இரண்டு வார்த்தைகளில் சொல்லி விடுகிறேன். சிப்காட் நிறுவனம் பூம்புகார் தொகுதியில் காட்டுச் சேரி, வள்ளியம்மை நகர், தில்லையாடி—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டாலே மகிழ்ச்சி அடைகிற பெயர்— தில்லையாடி, திருக்கடையூர் பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டுள் ளது. அங்கே இருக்கின்ற நிலங்கள் விவசாயத்திற்குத் தேவை இல்லாத நிலங்களாக இருந்து வருகின்றன. அந்த நிலங்களை சிப்காட் நிறுவனம் கையகப்படுத்தி, பூம்புகார் தொகுதியில் தொழிற்பேட்டை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை நான் கேட்டுக்

கொள்வதோடு, அந்தப் பூம்புகார் தொகுதியைப் பொறுத்த வரையில் எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை. ஆனால் அங்கே தொழிற்சாலைக ள நடத்த சாதகமான இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. கரும்பு ஏராளமாக விளைகின்ற அந்தப் பகுதியில் 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வடபாதி மங்கலத்திற்கும், 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மயிலாடுதுறை சர்க்கரை ஆலைக்கும்தான் இந்தப் பூம்புகார் தொகுதியிலிருந்து கரும்பு ஏற்றிக் கொண்டு போக வேண்டும், அதுவும் மாட்டு வண்டிகளில். எனவே, அந்த நிலைமைகளை உத்தேசித்து பூம்புகார் தொகுதியி லேயே நீங்கள் ஒரு கரும்பு உற்பத்தித் தொழிற்சாலையை ஏற் படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஓ. என். ஜி. சி. நிறுவனம் மூலம் ஏராளமான பெட்ரோல், எரிவாயு போன்ற கனிமப் பொருள்கள் அந்தத் தொகுதியில் கிடைக்கின்றன. அதை அடிப்படையாகக் கொண்டு, மூலப் பொருட்களாகக் கொண்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை ஒன்றியத்திலுள்ள பொன்னேரி, மண்டல வாடி அருகே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க இடம் பார்க்கப் பட்டுள்ளது. அதை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, ஆம்பூர், வாணியம்பாடிக்கு இடையிலே தோலை மூலப் பொருளாகக் கொண்டு மற்ற கனிமப் பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண் டும் என்பது நீண்ட காலக் கோரிக்கை. அது கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்ட ஒரு கோரிக்கையாகும். எனவே, அதையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே. நமது மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது இந்த எஃப்ளுவன்ட் பற்றி மிகுந்த அக்கறையோடு சொன்னதை நாலும், எல்லோரும் கேட்டுக்கொண்டு இருந்தோம். தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வருகின்ற கழிவு நீர் மட்டும் அல்ல; சாராயம் வடிக்கின்ற இடத்தில் இருந்தும், கரும்பு ஆலையி லிருந்தும் வருகின்ற அவைகள் எல்லாம் கூட மிக விஷ நீராக வெளியே வருகிறது என்று தெரியும். திருச்சியில் கூட உய்யக்கொண்டான் நதியில் அந்த நீர் விடப்பட்ட காரணத்தால் மீன்கள் செத்து மிதப்பதாக நமக்குச் செய்திகள் வந்தன. ஆனால் இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியே வருகின்ற அந்த நீர் பக்கத்தில் இருக்கின்ற வயல்களை பாழ்படுத்துவதோடு திருப்பத்தூர் போன்ற பகுதிகளில் 35, 40 இலட்சம் ரூபாய் செலவில் போட்ட குடிநீர்த் திட்டத்தைக்கூட பாழாக்குகின்ற அளவுக்கு இருக்கின்ற காரணத்தால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது இந்த





எஃப்ளுவன்ட் ட்ரீட்மெண்டுக்கு முதலில் தொழிற்சாலையினு டைய அதிபர்கள் ஒத்துக்கொண்டபடி நடந்துகொள்ளவேண்டும். இல்லை என்றால் அரசு அவர்களுக்காக முன் நின்று சில திட்டங் களை வகுத்துக் கொடுக்க வேண்டும். அதையும் செயல்படுத்தா தவர்கள் விவசாயிகளையும், பொதுமக்களையும் துன்புறுத்து கின்ற காரியத்தைச் செய்தவர்கள் ஆவார்கள். அப்படிச் செய் வதற்கு உரிமை இல்லை என்பதை நாம் சமுதாய கடமையாகச் செய்ய வேண்டும் என்று இங்கே நினைவுப்படுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பதில் என்ன இருக் கிறது. இப்படி ஆரம்பிப்பதுதான் கடைசியில் முடியாமல் போகிறது. அப்புறம் ஒரு நாளைக்கு நான் அனுமதிக்காமல் போவதற்கு இதுதான் காரணம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்ன கருத்தை நாலும் ஆதரிக்கிறேன். விவசாயிகளுக்கு, பொது மக்களுக்கு இதனால் பாதகம் ஏற்படக் கூடாது என்று அவர்கள் தெரிவித்த கருத்து ஏற்புடைய ஒன்று. ஆனால் அதே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவைப் பெற்றுக்கொண்டு இருக் கிற, அவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்று இருக்கின்ற இந்தத் தொழிலை காப்பாற்றுவதும் கூட சமுதாயத்தினுடைய கடமை, அரசின் கடமையாகும். எனவே, இதற்கான திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கி றேன். இந்தக் கழிவு நீரைப் போக்குவதற்கு திட்டத்தைத் தீட்டி அரசு அதிலே அக்கறை எடுத்துக்கொண்டு அதை நிறைவேற்று கின்ற வரை அவர்கள் மீது நடவடிக்கையை நிறுத்தி வைத்து அரசாங்கம் அவர்களுக்கும் சலுகை காட்டவேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கையே தவிர வேறு அல்ல.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மன்றத்தில் வைக்கப்பட்டு இருக் கின்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக தொழில் நல்ல முறையில் வளர்ந்தால்தான் தொழிலாளர்கள் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்து முதலீடும் அதிகமாகப் போட்டு சிறப்பாக தமிழ்நாடு நல்ல முறையில் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கும். குறிப்பாக அதற்கு நிதி வேண்டும், மின்சாரம் வேண்டும், தண் ணீர் வசதி வேண்டும், போக்குவரத்து வசதிகள் எல்லாம் வேண்டும், இதற்கு நிறைய, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியது போல் நிர்வாகத் திறமையும் வேண்டும். அதை நடத்திச் செல்கின்ற பொறுப்புள்ள ஆட்சியும் அதற்கு இருக்க வேண்டும். அப்படி இன்றையதினம் பார்க்கிற போது மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. முதலமைச்சர் அவர் கள் முதலாவதாக பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு நம்முடைய

மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு முதன்முதலாக டெல்லி நகருக்குச் சென்றபோது மின்சார உற்பத்திக்கு அவர்கள் மத்திய அரசு அதிக முதலீடு போடவேண்டும். மின்சார உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கின்றார்கள். குறிப்பாக நெய்வேலியைப் பொறுத்தவரையில் 2-வது அனல் மின்நிலை யம் இருப்பதோடு, 3-வது அனு மின் நிலையத்தின் மூலம் மின் சார உற்பத்தியை ஏற்பாடு செய்வதற்கு வழிவகைகளைக் கா வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். குறிப்பாக மத்திய அரசு அதற்கு முன்வரவில்லை என்று சொன்னால் நம்முடைய மாநில அரசே எடுத்து 3-வது மின்சார நிலையத்தை ஏற்பாடு செய்வதற்கு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கி றேன்.

அதோடு புவனகிரி வட்டாரத்தில் கிடைக்கின்ற ஆயில், கேஸ், எரி வாயு இவற்றை எல்லாம் பயன்படுத்தி தஞ்சை மாவட்டத் திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் கிடைக்கின்ற என் ணெய், எரி வாயு இவற்றை வைத்து நல்ல முறையில் மின்சார உற்பத்தியைச் செய்வதற்கு 100 மெகா வாட், 200 மெகா வாட், 300 மெகா வாட் என்ற அளவில் சிறிய அளவில் முதலீடு போட்டு அதிக அளவில் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன். கடலூரில் ஒரு பெரிய ராட்சத மின்சார உற்பத்தி நிலை யம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசினுடைய உத்திரவு கோரப்பட்டு அதற்கு நிறைய அவ்வப்போது விளம்பரங் கள் எல்லாம் வந்தன. அது எந்த அளவிலே இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இந்த மின்சார உற்பத்திக்கு அதிக கவனம் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பொதுவாக விவசாயத்தில் இருக்கின்ற அடிப்படை விவசாய உற்பத்தியைப் பொறுத்தே நம்முடைய தொழில் வளர்ச்சியும் இருக்கிறது. அப்படிப் பார்க்கின்றபோது நமக்கு அதிக வாய்ப்பு இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைக்கு, கரும்பு உற் பத்தி செய்யக்கூடிய அளவுக்கு ஏராளமான விவசாயிகள் இருக்கி றார்கள். கரும்பு சர்க்கரை ஆலைகளை அதிகமாக இன்னும் தமிழ்நாட்டிலே ஏற்பாடு செய்யவேண்டுமென்று மத்திய அரசாங் கத்திலே ஒரு ஆய்வு செய்து நம்முடைய அரசாங்கமும் அந்த ஆய்விலே இருந்து, ஏராளமாக இன்னும் 30-க்கும் மேற்பட்ட கரும்பு சர்க்கரை ஆலைகளை ஏற்பாடு செய்யலாம் என்று இருக் கிறது.

தென்னாற்காடு மாவட்டத்திலே பல இடங்களில் இன்னும் கரும்பு உற்பத்திச் செய்யக்கூடிய விவசாயிகள் ஏராளமானவர்கள் இருப்பதனாலே கரும்பு சர்க்கரை ஆலைகளை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கு கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ அதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக என்





னுடைய தொகுதியிலே மங்கலம்பேட்டை, விஜயமாநகர் பகுதி களிலே விருத்தாசலத்திலேயிருந்து உளுந்தூர்பேட்டைக்கு இடை யிலே இருக்கிற பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த வட்டாரத்திலே கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே வேண்டுமானாலும் அதை ஊக்குவித்து, அதற்கு வேண்டிய நிதியை அவர்கள் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அந்த இடத்திலே ஒரு கரும்பு சர்க்கரை ஆலையை ஏற்பாடு செய் வதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கி றேன்.

அதைப்போல, திண்டிவனம், செஞ்சி, திருவெண்ணைநல்லூர் போன்ற பகுதிகளிலேகூட ஏராளமான கரும்பு உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். 25 கிலோ மீட்டருக்கு இடைவெளியிலே கரும்பு சர்க்கரை ஆலைகளை ஏற்பாடு செய்யலாம் என்று மத்திய அரசாங்கத்திலே அந்த விதியைத் தளர்த்தியிருக்கிறார்கள். இதனாலே எங்கெல் லாம் கரும்பு உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் கரும்பு சர்க்கரை ஆலையை ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பல இடங்களிலே அதனுடைய கழிவுப் பொருள் களெல்லாம் இருக்கின்றன, தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு. லாம். நம்முடைய அரசாங்கத்தின் மூலம் காகிதத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காகிதத் தொழிற் சாலை ய ஆரம்பித்தபோது, அதிக உற்பத்தியைக் கொடுத்தது. அதற்குப் பிறகு மிகவும் குறைந்து விட்டது இந்த ஆண்டுகூட மிகவும் குறைவான உற்பத்தியைத்தான். பார்க்கிறோம். இதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். அரசாங்கம் ஆரம்பித்த இந்தக் காகிதத் தொழிற்சாலையிலே நிர்வாகக் கோளாறா? அல்லது நிதிக் கோளாறா என்று பார்க்கின்றபோது, நிதி நல்ல நிலையிலேதான் இருக்கிறது. அதற்கு வேண்டிய ரா-மெட்டிரியல்ஸ்-ம் கிடைக்கிறது. நிர் வாகக் கோளாறின் காரணத்தினாலேதான் அன்றைய தினம் எவ்வளவு உற்பத்தி செய்ததோ அந்த உற்பத்தியை இன்றைய தினம் எட்டமுடியாத ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறோம் என் பதை நான் இந்தச் சமயத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, அதையொட்டிய கழிவுப் பொருள்களிலிருந்து மொலாசஸ் நிறைய கிடைப்பதால் சாராய ஆலைகள் ஆரம் பிக்கப்பட்டிருக்கின்றன. நான் முன்புகூட இங்கே எடுத்து வைத் திருக்கிறேன். இந்தச் சாராய ஆலைகளையெல்லாம் அரசாங்கமே

எடுத்து நடத்த வேண்டுமென்று. அதற்கு முதலீடு அதிகம் தேவையில்லை. குறைந்த முதலீட்டிலே அதிக வருவாயை ஈட்டக்கூடிய ஒரு தொழிலாக அது இன்றைய தினம் இருந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். குறைந்த முதலீட்டைப் போட்டு அதிக வருவாய் ஈட்டக்கூடியதை தனியார் துறைக்கு விட்டு விடுகிறோம். இன்றையதினம் தனியார் துறை, பொதுத் துறை அல்லது கூட்டுத் துறை என்றே இல்லை. எல்லாத் துறைகளுமே அரசாங்கத்தினுடைய முதலீட்டிலேதான் நடக்கின்றன. பொதுவாக, நம்முடைய சிப்காட், டிட்கோ, டி. ஐ. ஐ. சி. போன்ற எல்லா நிறுவனங்களும் கூட இன்றையதினம் முதலீடு போடுகின்றபோது கூட 75 சதவீதம் அரசாங்கத்தினுடைய நிதியாகவும், 25 சதவீதம்தான் தொழில் ஆரம்பிக்கின்றவர்களும் போடுகிறார்கள். இன்றும் சிலவற்றைப் பார்க்கின்றபோது 90 சதவீதம் வரையில் அரசாங்கம் பணம் கொடுக்கின்றது. 10 சதவீதம்தான் தொழிலை ஆரம்பிக்கின்றவர்கள் போடுகிறார்கள். கூட்டுத் துறையைப் பார்க்கின்றபோது அங்கே தனியார் பணமே கிடையாது. தனிப்பட்ட முறையில் கூட்டுத் துறையிலே, ஜாயிண்ட் செக்டாருக்கு முதலீடு போடுகின்றபோது யாருமே பணம் போடுவதில்லை. எல்லாம் அரசாங்கத்தினுடைய பணம்தான். நிதிநிறுவனங்களிலிருந்து முழுக்க முழுக்க நிதியைப் பெற்று விடுகிறார்கள். ஜாயிண்ட் செக்டார் என்ற பெயரிலே அவர்கள் நிர்வாகப் பொறுப்பை மட்டும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது நிர்வாகப் பொறுப்பிலே, அவர்களுக்கு வேண்டியவர்கள் யாரெல்லாம் சொந்தக்காரர்களோ, தெரிந்தவர்களோ, வேண்டப்பட்டவர்களோ, அப்படிப் பட்டவர்கள் தான் இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய பணத்தைப் பெற்று, முதலீடு முழுவதும் அரசாங்கத்தினுடைய நிதியிலேயிருந்து ஏற்பாடு செய்து கொண்டு, நிர்வாகப் பொறுப்பு மட்டும் அவர்களுடைய கையிலே வருகிறது. அப்படி நிர்வாகப் பொறுப்பு அவர்களிடம் இருந்தாலும் தொழிலாளிகளை யாராவது எடுத்துக் கொள்கிறார்களா என்று பார்த்தால், அப்படி எடுப்பதில்லை. நாம் ஏதோ பெருமையாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம், அவர்கள் ஏதோ சொந்தப் பணத்திலே இதையெல்லாம் நடத்துகிறார்கள் என்று. யார் வீட்டு சொத்துக்கோ இவர்கள் ஏதோ சாட்சி சொல்வார்கள் என்று சொல்வார்கள். அதேமாதிரி நம்முடைய பணத்தைப் பெற்று, அரசாங்கத்தினுடைய பணத்தைப் பெற்று, தனிப்பட்ட முறையிலே நிர்வாகத்துக்கு வந்து. நிர்வாகதிலே இருக்கிற அத்தனை பொறுப்பிலும் இருக்கின்றவர்கள் தொழிலாளிகளுக்கு குறித்த அளவிலே வேலை வாய்ப்புகளை அளிப்பதில்லை.

(நண்பகல் 12-00)

அதை சற்றுக் கவனமாக ஆராய்ந்து நிதி நிர்வாகம் செய்கிறபோது, நிதியை நாம் கொடுக்கிறபோது, நம்முடைய நிர்வாகத் துறையிலே உள்ளவர் யாராவது ஒருவர் நிர்வாக இயக்குநராக அதில் இருக்க வேண்டும். குறிப்பாக சிப்காட்டை எடுத்துக்



சிப்காட் அல்ல; ஸ்பிக் நிறுவனம் இருக்கிறது.
கொள்ளுங்கள். ஸ்பிக் நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் நம்முடைய மூலதனம்
ஸ்பிக் நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் இருந்தாலும் அரசாங்கத்
அதிகமாக இருக்கிறது. அப்படி இருந்தாலும் அதில் இருக்கிறாரா
திலிருந்து ஒரு நிர்வாக டைரக்டர் யாராவது அதில் இருக்கிறாரா
என்று பார்த்தால் இன்றையதினம் ஒருவர் கூட இல்லை. அதே
ஜாயிண்ட் செக்டார். இந்த ஜாயிண்ட் செக்டாரில் இன்னொரு
ஜாயிண்ட் செக்டார்; அதுதான் படிக்குள்ளே படி என்பார்களே
அந்த மாதிரி இருக்கிறது. அந்த ஜாயிண்ட் செக்டாரில் நம்முடைய
பணம் இருக்கிறது. ஜாயிண்ட் செக்டாருக்கு இன்னொரு
ஜாயிண்ட்செக்டாரில் பணம். அதுவும் ஒரு கோடி, 2 கோடிரூபாய்
அல்ல. 800 கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் இருக்கிற ஆரோ
மேட்டிக் இண்டஸ்டிரீஸுக்கு பணம் கொடுத்தார்கள். அதை
எப்படிக்கொடுத்தார்கள், ஏன் கொடுத்தார்கள்? அதைக்கூட
நம்முடைய பிரதமர் வந்து தொடங்கி வைப்பதாக இருந்தது.
ஏன் அவர்கள் வரவில்லை என்று பார்க்கிறபோது, 'டிக்'—கில்
முன்னாலே ஒரு குறிப்பு வைத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய
தொகை கொண்ட ஒரு துறையை, ஒரு நிறுவனத்தை தனியார்
துறையில் விடக்கூடாது என்று பொதுவாக அரசாங்கத்திற்கு வந்
திருக்கிறது. அப்போது இருந்த முதலமைச்சர் அதைக் கொடுக்கக்
கூடாது என்று குறிப்பு எழுதியிருந்ததாக எனக்குத் தகவல்
தெரிகிறது. அதற்குள் அவர்கள் திடீரென்று நோய்வாய்ப்பட்டு,
வைத்தியத்திற்கு சென்றுவிட்ட பிறகு எப்படியோ மறுபடியும்
தனியாருக்கு விடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள்தான் அதைக் கண்டுபிடிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த
தகவல் முன்னால் இருந்த முதலமைச்சர் தனியார் துறைக்குக்
கொடுக்கக் கூடாது என்று எழுதியிருக்கிறார். அதற்குப் பின்
னால் எப்படியோ அப்போது இருந்த அமைச்சர்
இன்னாருக்குக் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டு எழுதி
இருக்கிறார். அந்த நிறுவனத்தை ஏற்றிருக்கிறவர்கள் எவ்
வளவு மூலதனம் போட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால்
ஒரு பைசா கூட இல்லை; ஒரு நயாபைசா கூட அவர்களுடைய
முதலீடு அதிலே கிடையாது. சேர்மன், மேனேஜிங் டைரக்டர்,
இன்னும் முக்கிய பொறுப்பிலே இருக்கிற அத்தனை பேர்களும்
அவர்களைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள்தான் இன்றைய
தினம் அதை நிர்வகிக்கிற நிலைமை இருக்கிறது. 800 கோடி
ரூபாய் மூலதனமுள்ள அந்த ஆரோமேட்டிக் நிறுவனத்தில்
அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரியாக யாரும் கிடையாது.
அதில் அவர்களுடைய பங்கு என்ன என்பதை நீங்கள்
பார்க்க வேண்டும். சிப்காட் நிறுவனத்தைத் தவிர
இன்னும் சில நிறுவனங்கள் அதைக் கேட்டிருக்கிறார்கள்.
ஸ்பிக் நிறுவனம் இருக்கிறது. இப்போது கூட கூட்டு முயற்சி
நடக்கிறது. கூட்டு முயற்சி என்றால் நம்முடைய பணம்.
அந்த மாதிரி இன்னொரு கூட்டு முயற்சி. கூட்டு முயற்சியில்
இன்னொரு கூட்டு முயற்சி. அது என்ன ஜாயிண்ட் செக்டார்
என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட

[திரு. கோ. பூவராகன்] [1989 மே 3

நிலைமைக்கு நாம் அனுமதி கொடுத்ததே தவறு. அதை மேற்கொண்டு வளர்ப்பது நல்லமுறையில் இருக்காது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று பல நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த டிட்கோ, சிட்கோ எல்லாம் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் கடன் வழங்கியிருக்கிறார்கள். கடன் வழங்கிவிட்டு, அந்தக் கடனைத் திருப்பிப்பெற முடியாமல் இருக்கிறபோது சிரமத் திற்குள்ளாகிறார்கள். இந்த சிப்காட் நிறுவனம் கூட 7 இடங்களில் ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த 7 இடங்களில் 2 இடங்களில்தான் நல்லமுறையில் நடைபெறுகின்றன; எஞ்சிய 5 இடங்களிலே நன்றாக நடக்கவில்லை.

எங்கள் பகுதியிலே தென்னாற்காட்டில் திண்டிவனம் பக்கத்தில் இரட்டணையில் ஆயிரம் ஏக்கருக்குமேல் நிலம் எடுத்து, அங்கே சிப்காட் அமைக்க ஏற்பாடு இருந்தது. அதை ஆரம்பிக்கும்போது செஞ்சி, திண்டிவனம், திருக் கோவிலூர் பகுதிகளிலே மிகவும் பின்தங்கிய நிலையில் இருப் வர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையில் சிப்காட்டை ஏற் படுத்திஅது செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, நெய்வேலியை ஒட்டி, அதிலே கிடைக்கிற 'ரா மெட்ரியல்ஸை' வைத்து ஒரு தொழிற்சாலையை ஆரம் பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நெய்வேலியினால் அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு முழுக்க முழுக்க ஒருவிதமான வாய்ப்பு வசதியும் கிடைக்கவில்லை. அதைப் போக்குகின்ற வகையில் சிறந்தவகையில் 'இன்டஸ்டி ரியல் காம்ப்ளக்ஸ்' ஒன்றை அந்தப் பகுதியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேரம் இல்லாத காரணத்தால் இன்னும் இரண்டு நிமிடங் களில் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். நான் முன்பு சொன்ன மாதிரி என்னுடைய தொகுதியிலே கூட ஒரு இன்டஸ் டிரீ தொடங்கப்பட்டு, பலநாள் நடந்து இப்போது அது மூடப்பட்டுக் கிடக்கிறது. காரணம் நிர்வாகக்கோளாறு. அது தான் செராமிக் இன்டஸ்டிரிஸ். அது இன்றைய தினம் செயல் படவில்லை. ஸ்டோன் வேர் பைப்ஸ் மூலம் நம்முடைய அரசாங்கத்திற்கு கிட்டத்தட்ட 2.5 கோடி ரூபாய் அளவுக்கு வெளி மாநிலங்களிலே ஆர்டர் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அண்டை மாநிலங்களில் குறிப்பாக கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு அந்தப்பணம் போகிறது. அந்த வருவாயை முன்பு நாம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தது. காரணம் அந்த ஸ்டோன் வேர் பைப் தயாரிக்கும் நிறுவனம் நம்மிடம் இருந்தது. அதைப்போன்று 'சானிட்டரி வேர் பைப்ஸ்' தயாரிக்கும் தொழிலும் நம்முடைய மாநிலத்தில் விருத்தா சலத்தில் இருந்தது. அந்த வகையில் ஆர்டர் நிறைய இருக்கிறது



1989 மே 3] [திரு. கோ. பூவராகன்]

அதில் ஒன்றும் நஷ்டம் வராது. ஆகவே, குறைந்த முதலீட் டிலே மீண்டும் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டு மன்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த செராமிக் இன்டஸ்டிரிஸுக்கு முதலீடு போடுவதில் கஷ்டம் இருக்கிறது என்றால் அதை ஜாயின்ட் செக்டாரில் தொடங்க முடியுமா என்று பார்க்க வேண்டும்.

சிமெண்ட் உற்பத்தியைப் பொறுத்த மட்டில் நாம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். எங்களுடைய மாவட்டத்திலே திண்டிவனம் பக்கத்திலே சிறிய சிமெண்ட் தொழிற்சாலையை ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த வாய்ப் புக்களை நல்ல முறையில் பயன்படுத்தி நல்ல தொழில் வளர்ச் சியை ஏற்படுத்த வேண்டும்.

பின்தங்கிய மாவட்டங்கள் என்று பிரிக்கிறபோது சில தாலுக்காக்கள் பின்தங்கிய பகுதிகள் என்று சொல்லப் படுகின்ற அடிப்படையில் விருத்தாசலம் தாலுக்காவையும் பின்தங்கிய தாலுகாக்களில் சேர்க்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் நல்ல முறையில் நடைபெறவில்லை. சங்கப்பா பேப்பர் மில் என்பது வடலூருக்குப் பக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது சரியாக இல்லை. ஏதோ தவறான ஒரு கருத்தைச் சொல்லி இந்த மாதிரி பல இடங்களில் பேப்பர் மில் என்று சொல்லி அரசாங்கத்திலே இருந்து முதலீடு போடுகிற நிலைமை இருக் கிறது. அந்த முதலீடு அவர்களுடைய முதலீடாக இல்லாத காரணத்தால், அந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் மறுபடியும் திறந்து நம்முடைய பணம் திரும்ப வருவதற்கான ஏற் பாட்டைச் செய்யவேண்டும். பொதுவாக தொழில் முதலீடு செய்கிறபோது 90 சதவீதம், 75 சதவீதம் என்று அரசாங் கத்தின் பணத்தைப் போட்டு ஆரம்பிக்கிறபோது அரசாங்கத் திற்கு முக்கிய பொறுப்பு உண்டு. அந்தத் தொழில் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கவேண்டும். நல்ல முறையில் நடக்க வில்லை என்றால் ஒத்தாசையாக இருந்து அந்தத் தொழில் நல்ல முறையில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படி ஒத்தாசை செய்யாவிட்டால் தொல்லை கொடுக்காமலாவது இருந்து அந்தத் தொழில் நடைபெறு வதற்கு உதவ வேண்டும்.

இந்தத் தொழில் துறை மானியத்தின்மூலம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதியிலே மூடிக்கிடக்கிற தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு முன்வர வேண்டும், கரும்பு சர்க்கரை ஆலையை இந்த ஆண்டிலேயே

[திரு. கோ. பூவராகன்] [1989 மே 3

தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தொழில் வளத்தில் அதிகமான கவனம் செலுத்தி, டிட்கோவாக இருந்தாலும், சிப்காட்-ஆக இருந்தாலும் தனிப்பட்ட நபர்களை அதிகமாக ஊக்குவித்து, அவர்களை வளர்ப்பதை நிறுத்தி தொழிலாளர்களுடைய வேலைவாய்ப்பு பெருகக்கூடிய அளவில், பொதுத்துறையிலே மற்றும் எந்தத் துறையாக இருந்தாலும் அந்தத் தொழிற்சாலைகளிலே அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய அளவில் அந்த உரிமங்களை வழங்குகின்றபோதே கண்டிப்பாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

## 6. ஒழுங்குப் பிரச்சினை.

ஆளுங்கட்சி "லாபியில்" உள்ள தொலைபேசி சரியாக வேலை செய்யாதது குறித்து.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிற லாபியில் இருக்கிற தொலைபேசிக் கருவி கடந்த 5 நாட்களாகப் பழுதுபட்டு இருப்பதோடு அது உடைந்தும் இருக்கிறது. 5 நாட்களாக அதை மாற்றவேண்டும் என்று சொல்லியும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அப்படி என்றால் உறுப்பினர்கள் எப்படி தங்களுடைய பணிகளைச் செய்யமுடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இப்போதாவது அதை மாற்றுதவற்குத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப் பேரவை தான் முடிவு செய்ய வேண்டுமா? இதை ஓட்டுக்கு விடலாமா? இதைப்பற்றி முன்னாலேயே என்னுடைய அறையிலே சொல்லியிருக்கிறீர்களா? அவையிலே சொல்லித்தான் செய்யவேண்டும் என்றால், எல்லோரும் வேறு எங்கெங்கெல்லாம் உடைந்து இருக்கின்றன என்று சொல்லுங்கள்., மொத்தமாக நான் குறித்து வைத்துக்கொள்கிறேன். அடுத்து திரு. பொன். விஜயராகவன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப்ஆர்டர் எதற்காக எழுப்புகிறோம், என்ன சொல்கிறோம்**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1989 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் வேறு எங்கெங் கெல்லாம் உடைந்திருக்கிறது என்று சொல்லிவிட்டீர்கள் என்று சொன்னால் — அவையிலேயே இவை எல்லாவற்றையும் முடிவு செய்துவிட முடியுமா? (குறுக்கீடு) அறையிலேயே என்னிடத்திலே கூறியிருக்கலாம் அல்லவா? (குறுக்கீடு) இதிலே என்ன "Point of Order" இருக்கிறது? (குறுக்கீடு) திரு. அப்துல் லத்தீப் அவர்கள் முதலிலே ஒன்றைக் கவனிக்கவேண்டும். உங்களுக்குத் தெரிய வில்லை என்று சொன்னால் — இந்த மாதிரிக் கேட்பதெல்லாம் ரொம்ப ரொம்பத் தவறு. உங்களுக்கு உரிமை கொடுக்கிறேன் என்கிற காரணத்தால் நீங்கள் நினைத்ததை எல்லாம் பேசு வதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) அடுத்து திரு. பொன். விஜயராகவன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்திப் :** ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் நினைத்தபோ தெல்லாம் எழுந்து பேசவேண்டுமென்ற அவசியம் இல்லை. அதை அனுமதிக்கவேண்டிய அவசியமும் கிடையாது. (குறுக்கீடு) இதை அறையிலேயே சொல்லியிருக்கலாம் அல்லவா? இது வரையில் என்னிடம் சொல்லவே இல்லை. அதை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு) 5 நாட்களாக வாவில்லை என்றால் என்னிடத்தில் நீங்கள் சொல்லியிருக்கலாம் அல்லவா? இது அலுவல் தொடர்பானது; அவை தொடர் பானதல்ல. (குறுக்கீடுகள்) அடுத்து திரு. பொன். விஜயராகவன் அவர்களை இப்போது பேச அழைக்கிறேன் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஆளும் கட்சிப் பகுதியில் இருப்பவர்கள் உபயோகப்படுத்துகிற தொலைபேசி உடைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களோ கூட இந்த முறையீட்டைச் செய்திருக்கலாம். அவர்கள் ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சி என்ற முறையில் அந்தத் தோழமையை நிலை நாட்டுவதற்காக தொலைபேசி உடைந்து விட்ட செய்தியை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொலைபேசி உடைந்து போயும் இந்த அளவுக்கு ஒரு தொல்லையைக்கொடுத்திருப்பது உள்ளபடியே வேதனைப்படக்கூடிய ஒன்றாகும். எனவே பறிமாறிக் கொள்ளப் பட்ட வார்த்தைகள் என்று நான் சொல்ல மாட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 3

தாங்கள் ஒரு வார்த்தையைச் சொல்லப்போக,
பதிலாக மிகக் கூடாக நம்முடைய நண்பர் அப்துல் லத்தீப் அவர்
கள் பயன்படுத்தி இருக்கின்ற வார்த்தைகளை அவரே சற்று
நேரத்திற்குப் பிறகு சிந்தித்துப் பார்த்தால் அவைத் தலைவர்
அவர்களைப் புண்படுத்துவது மாத்திரமல்ல, அவைத் தலைவர்
புண்படுத்தப்பட்டால், அவையிலே உள்ள உறுப்பினர்கள்
அத்தனை பேர்களும் புண்படுத்தப்பட்டதாகத்தான் பொருள்.
எனவே அவர்கள் அதை உணர்ந்து அதை அவைக்குறிப்பிலிருந்து
அகற்ற வேண்டும் என்று அவரே கேட்டுக்கொள்வார்களேயானால்
தலைசிறந்த பண்பாடாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 12.10)

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது என்பது அவைக்கு
புதிய ஒன்றல்ல. நான் மற்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்
காக நல்ல எண்ணத்திலே எழுப்பினேன். அதைத் தாங்கள்
பெருந்தன்மையோடு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி
இருக்கலாம். அதற்கு மாறாக அறையிலே வந்து சொல்லியிருக்க
வேண்டும் எப்போது வேண்டுமானாலும் ஒழுங்குப் பிரச்சினை
எழுப்புவதா என்று கேட்டது, மற்ற உறுப்பினர்கள் எல்லாம்
எழுப்புவதைப்போல நானும் எழுப்பினேன், அதுவும் பல நேரங்
களில் நான் பேசாமலேயே உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன்.
ஆனால் தாங்கள் வந்து வேறு விதமாக எடுத்து, என்னைப்
பற்றி தனிப்பட்ட முறையிலே, எனக்கு [illegible]
அவையினுடைய, இந்தத் தலைவர் அவர்களுக்கு இருக்கக்கூடிய
அந்த மரியாதையை கண்ணியத்தை, அதை எப்போதும் காக்கக்
கூடியவன் நான். இந்த அவையிலே நான் நீண்ட நாட்களாக
இருந்துகொண்டிருக்கிறேன். அதனுடைய அடிப்படையிலே
தான் சொன்னேனே அல்லாது வேறு அல்ல. எனவே. . (குறுக்
கீடுகள்). . உறுப்பினர்கள் என்ன சொல்கின்றீர்கள் ?
தலைவர் என்ன சொல்கிறார், அவைத் தலைவருக்கும் எனக்கும் அவைத்
பேச்சு நடந்துகொண்டிருக்கிறது. ஆகையால் தயவுசெய்து. .
(குறுக்கீடுகள்) நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் ரொம்ப கண்ணி
யத்தோடு நடந்துகொள்கின்றார்கள். அதற்காக தலைவர் அவர்
களுடைய கண்ணியத்தைக்காப்பதில் அவர்கள் காட்டுகிற இந்த
அக்கறைக்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்
பட்டவனாக இருக்கிறேன். எனவே தங்களுக்கு இதனால் ஏதா
வது மனவருத்தம் ஏற்படும் என்றால், நான் கண்ணியத்தை
குறைப்பதற்காக எப்போதுமே நடந்துகொள்ள மாட்டேன்.
தங்களுக்கு அப்படி ஏதாவது ஏற்பட்டால் அதை அவைக்
குறிப்பிலிருந்து நீக்கும்படியாக கேட்டுக்கொண்டு, அப்படி தங்க
ளுக்கு மனவருத்தம் ஏற்பட்டால், நானே வருந்தி அதை அவைக்
குறிப்பிலிருந்து நீக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன் தயவு



1989 மே 3] [திரு. எம். அப்துல் லத்தீப்]

செய்து எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கு தாங்கள்
கொஞ்சம் சலுகை காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்று தங்களுக்கு ஒரு அதிர்ஷ்டமான
நாள் என்று கருதுகிறேன். (சிரிப்பு) ஏனென்றால் நம்முடைய
காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம் தங்களுக்காக வாதாட வந்
திருக்கின்றார்கள். எனவே அதிர்ஷ்டமான நாள். எனவே இந்த
பிரச்சினையை இந்த அளவோடு நிறுத்தி, நம்முடைய திரு. அப்துல்
லத்தீப் அவர்கள் அவருடைய உள்ளத்தைத் திறந்து காட்டி
வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டுவிட்ட காரணத்தினால்
அடுத்த நிகழ்ச்சிக்கு நாம் செல்வது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் என் மீது
வைத்திருக்கின்ற பாசத்திற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி.
அந்தச் சொற்கள் நீக்கப்படுகின்றன.

5 மானியக் கோரிக்கைகள், 1989-90— விவாதமும்
வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. பொன் விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்
கொண்டு வரப்பட்டிருக்கின்ற தொழில் துறை மானியக்
கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.
இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லோரும், இன்றைக்கு
ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான மின்சார பற்றாக்
குறையையும் அந்த மின்சாரப் பற்றாக்குறையினுடைய கார
ணத்தினாலே தமிழகத் தொழில்த்துறை தொழில் வளம் எந்த
அளவுக்குப்பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பது பற்றியும் எடுத்துச்
சொன்னார்கள். மின்சார உற்பத்திக்காக அதிகக்கவனம்
செலுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்
கின்றார்கள். அதே நேரத்தில் சில கருத்துக்கள் கூட பரிமாறிக்
கொள்ளப்பட்டது. மின்சார உற்பத்திக்காக நாம் திட்டங்
களைத் தீட்டும்போது அணு மின்சார நிலையத்தைக்
கூட கணக்கில் எடுத்துக் கொண்டு, கூடங்குளத்திலே இருக்கக்
கூடிய அணு மின்சார நிலையத்தை நாம் நடைமுறைப்படுத்து
வதற்கு முன் வர வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கருத்துக்
களைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில்
அந்தக் கருத்துக்களுக்கு மாறுபட்டவனாக இருந்து ஒரு சில
கருத்துக்களைச்சொல்வதற்கு நான் முற்படுகிறேன். இன்றைக்கு
அணு மின்சாரம் என்பது உலக அளவில் அது பொருளாதார
ரீதியாக லாபமற்றதாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, ஆபத்
தான ஒன்றாகவும் இருக்கிறது என்பதை இன்றைக்கு பல நாடு
களிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற ஒரு கருத்
தாக இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே சுட்டிக்

காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நமக்கு தரப்பட இருக்கின்ற சோவியத் நாட்டினுடைய ரீ—ஆக்டர் எந்த அளவுக்கு பாதுகாப்பான ரீ—ஆக்டர் என்பது பற்றி நாம் இன்றைக்கு ஆய்வு செய்வதற்கான நிலைமையிலே இருக்கிறோம். இன்றைக்கு எத்தனையோ ரீ-ஆக்டர்கள், அணு உலைகள் இருக்கின்றன. Advanced gas-pooled reactors, pressurised water reactors என்று சொல்லப்படக்கூடிய இரண்டு அணு உலைகள் இருக்கின்றன. இவைகள் மூலம் ஏராளமான பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. செர்னோபில்லில் விபத்திற்கு உள்ளாக்கப்பட்ட RBNK 1000 என்று சொல்லக் கூடிய ரீ-ஆக்டரைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால், அதைத் தரவில்லை. ஆனால் இன்றைக்குத் தரக்கூடிய ரீ-ஆக்டர், அணு உலை VVER 1000 என்ற அளவில், இது மிக நவீனமானது. இதில் ஆபத்தில்லை என்ற கருத்தைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவது, சென்ற வருஷம் சோவியத் நாட்டிலே கூட அவர்கள் அரசுத் துறையில் அறிவித்தபடி கட்டப்பட்டு வருகின்ற 6 அணு மின் நிலையங்கள் கைவிடப்பட்டுள்ளன. அவற்றில் மின்ஸ், உடேசா என்ற 2 இடங்களிலே கட்டப்பட்டு, நடைமுறைக்கு வருவதாக இருந்து, கைவிடப்பட்ட திட்டங்கள் VVER 1000 ரீ-ஆக்டரைக் கொண்டு நிறுவப்பட வேண்டுமென்று கருத்தில் கொள்ளப்பட்டது. 1981 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரையிலும் உலக நாடுகள் முழுவதும் ஏற்பட்ட 48 விபத்துக்களில் 16 விபத்துக்கள் இங்கே கூடங்குளத்திலே நமக்குத் தருவதாக ஒத்துக்கொள்ளப்பட்ட VVER அணு உலைகளால்தான் நடந்ததாக அறியப்படுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக்கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. இன்றைக்கு கூடங்குளம், இந்த அணு மின்சார நிலையத்தை அமைப்பதற்கு ஏற்ற இடம்தானா என்பதைக் கூட ஆய்வு செய்ய வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். கூடங்குளத்திலிருந்து, கேரளாவில் இருக்கக் கூடிய சவரை என்று சொல்லக் கூடிய இடங்கள் முழுவதும் இன்றைக்கு கதிர் இயக்கக்கனிமப் பொருள்கள் மிகுந்த பகுதிகளாகும். ஒரு சின்ன விபத்து ஏற்பட்டால் கூட, அது கடற்கரை முழுவதும் பாதிக்கக் கூடிய அளவுக்கு, கேரளா முழுவதும் பாதிக்கக் கூடிய அளவுக்கு இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அணு கழிவுப் பொருள்கள் இருக்கின்றனவே, இதை என்ன செய்வது என்பது பற்றியும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அணு கழிவுப் பொருள்களுக்கு 'அரை வயது' — Half age என்று சொல்லுவார்கள். அது மட்டும் 24,000 வருஷங்களாக இருக்கிறது. இதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். Recorded human



history என்று சொல்லக்கூடிய அளவுக்கு, ஆராயப்
பட்ட மனித இன வரலாறே 3,000 ஆண்டுகளைக் கூடத்
தாண்டவில்லை. அணுக்கழிவான புளூட்டோனியம் இன்றைக்கு
உலக நாடுகளிலே, பல்வேறு நாடுகளிலே அணு குண்டு தயாரிக்
கப்படுவதற்கு பயன் படுத்தக் கூடிய ஒரு மூலப் பொருளாக
இருக்கிறது. இதில் வரக் கூடிய புளூட்டோனியத்தை அணு
குண்டு தயாரிப்பதற்காக நாம் ரஷ்யாவுக்கோ அல்லது வேறு
யாருக்காவது தரப் போகிறோமா அல்லது இங்கே நாமே
அணு குண்டு தயாரிக்கப் போகிறோமா என்பது பற்றி ஒரு
விளக்கம் தேவைப்படுகிறது. இந்த ரீ-ஆக்டர்களுடைய வயது
30 ஆண்டுகள் தான். 30 ஆண்டுகள்தான் அது பலன் தரத்
தக்கதாக இருக்கிறது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த
அணு உலைகளை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பாதுகாப்
போடு மூட வேண்டும். இப்படி பாதுகாப்போடு மூடப்பட
வேண்டுமென்பது விபரீத விளையாட்டு என்பதைச் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு கருத்து சொல்லப்படுகிறது. குமரி மாவட்
டத்தில் உள்ள பேச்சிப்பாறை அணையிலிருந்துதான் தண்ணீர்
அங்கே செல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான்
கேளவிப்பட்டவரையில் ஏறத்தாழ 2 டி.எம்.சி. தண்ணீர்
பேச்சிப்பாறை அணையிலிருந்து எடுக்கப்பட உள்ளதாகச்
சொல்லுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்
கூடிய பேச்சிப்பாறை அணையினுடைய தண்ணீரின் மொத்தக்
கொள்ளளவு 5 டி.எம்.சி. தான். அங்கே முழுமையாகத்
தண்ணீர் இருந்தாலும் கூட, கடை வரம்பு நிலங்களுக்குப்
போவதற்கான சூழ்நிலை இல்லை. அதில் 2 டி.எம்.சி. தண்ணீரை
எடுத்து விட்டால், இன்னொரு சுடுகாடாக அது மாறிவிடும்.
எனவே இதை ஒத்துக் கொள்வதற்கு கன்னியாகுமரி மாவட்டத்
தில் உள்ள நாங்கள் யாரும் தயாராக இல்லை என்பதை இந்த
மாமன்றத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.
ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் ......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் அவரைப்
பேச விடுங்கள். அவர் பேசிய பிறகு மாண்புமிகு உறுப்பினர்
திரு. சொக்கர் அவர்கள் பேசப் போகிறார். அவர் மறுப்புத்
தெரிவித்தால் சரியாகப் போய்விடும். இதில் "Point of order"
என்ன இருக்கிறது?

திரு. பொன். விஜயராகவன்: தலைவரவர்களே, எனக்கு
நேரத்தை அதிகமாகத் தருவீர்களானால் .... (குறுக்கீடு)
I am not yielding, I am on my legs. ஏற்கெனவே
செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அணு மின்நிலையங்
களிலிருந்து பாடம் கற்றுக் கொள்வது என்பது

ஒரு முறை. அதை ஏற்றுக் கொண்டால், கல்பாக்கத்தில் இன்றைக்கு நடைபெறுகிற அந்த நிலைமை என்ன என்பதைப் பற்றி தயவு செய்து நீங்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்குக் கூட பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. கடந்த ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து இன்றைய வரையிலும் ஒரு அணு உலையிலே மின்சாரம் தயாரிக்கப்படவில்லை.

(பிற்பகல் 12–20)

ஏப்ரல் மாதத்திலிருந்து இன்னொன்று மூடிக் கிடக்கிறது. அது எப்போது மின்சாரத்தை உற்பத்தி செய்யத் தொடங்கும் என்பது யாருக்குமே தெரியாது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் அண்மையில் நடைபெற்ற—சென்னையில் நடைபெற்ற—முறைசாரா எரி சக்தி மாநாட்டில் பேசிய பேச்சின் ஒரு பகுதியை நாம் இங்கே கருத்தில் கொள்வது தகுந்தது என்று கருதுகிறேன்.

"One is a pedestrian reason, and that is given the record of the two nuclear reactors at Kalpakkam which had a gestation period of 12 years and have been out of order for a longer period than the time they have generated power, which are similar to the experience in the Narora and the Rajasthan units, I do not think that we can count on these plants proposed at Koodankulam for the VIII Plan to provide relief for our power shortage." என்று ஒரு நல்ல பொருளாதார நிபுணரான அவரே இதைப்பற்றிகருத்தைச்சொல்லியிருக்கிறார்.

இன்னொன்று கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகிற மின்சாரத்திற்கு ஆகும் செலவு என்ன? இது லாபகரமானதுதானா என்பதைப் பற்றி ஒரு விடையை நம் அரசுத் தரப்பிலிருந்து எடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தில் இருந்து இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Supplementary Report of the Comptroller and Auditor General of India for the year 1985–86 Part II Union Government (Civil) Madras Atomic Power Project.

**I quote—Page No. 16—**

"........without taking into account the cost of waste management the likely expenses of decommissioning and capital repair





the generation cost of nuclear power for MAPP—worked out to 59.56 paise in 1983-84 and 55.11 paise in 1984-85, as per the proforma accounts of the respective years.

The provision for decommissioning is only Rs. 100 lakhs which may be inadequate. If a higher amount is provided tariff would also go up. Also there is no provision for any major repairs, disaster management. Since nuclear power stations are new, technological thrust areas are yet to be stabilised and recent experiences in MAPP and RAPP indicate the likelihood of periodical major repairs. Non-provision for Capital Repairs requires a review.

No provision has been made for waste management which is fairly an expensive proposition. The DAE is of the view that when the waste is processed and plutonium is produced the cost of plutonium so produced would be equal to the cost of storage of used fuel, the processing cost of such fuel etc. Since plutonium production is in the future and the cost cannot be precisely estimated at present, the view of the DAE is hypothetical and non-commercial. Unquote.

ஆக, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற ரிப்பேர்களைப்பற்றி அன்றைக்கே அவர்கள் எதிர்பார்த்துத்தான் இதைச் சொல்லி இருக்கிறார்கள்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இந்த அளவுக்கு உற்பத்திச் செலவு ஆகும் என்பது ஒருபுறம் இருந்தாலும், இங்கே நம்முடைய தமிழக மின்சார வாரியத்திற்கு அவர்கள் ஒரு யூனிட் பவர் என்ன விலைக்குக் கொடுக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பக்கம் 76—1987–88 ஆம் ஆண்டில் பர்சேஸ் ஆப் பவர் என்ற தலைப்பில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்.

"............சரியான அளவில் இல்லை என்பது மட்டுமல்ல, ஏற்கெனவே அவர் சொல்லியிருக்கிற விலை குறைவாக இருக்கிறது என்றும், எல்லா பேக்டர்களையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், இன்னும் விலை அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருப்பது 1–4–1987 வரை 45.37 பைசா தான் ஒரு யூனிட்டுக்கு என்று அந்த அறிக்கையில் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 59 அல்லது 60 பைசா வரை கூட ஆகலாம் என்றும், அதற்கு மேலும் சில பேக்டர்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் அதிகமாக ஆகும் என்றும் அவர் தம் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

[திரு. பொன். விஜயராகவன்] [1989 மே 3

அடுத்து நெய்வேலி தெர்மல் ஸ்டேஷன் 1-4-1980 முதல் 31-3-1991 வரையிலும் போட்டிருக்கிற ஒப்பந்தத்தின் அடிப்படையில் 55 பைசா தான் ஒரு யூனிட் பவர் என்ற விலையில் நெய்வேலியிடமிருந்து வாங்குகிறோம். இதைப் போல் 1-4-88 முதல் 31-3-1989 வரை 45.75 காசு என்ற விலையில் வாங்கி இருக்கிறோம். அதைக் கூட மின்வாரிய பயனுறுத்துகின்றார்கள் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட நிலையைப் பார்க்கிறபோது அதிகமான அளவுக்கு உற்பத்திச் செலவு ஏற்படும் மத்திய அரசு மாநில அரசுக்கு குறைவான விலைக்குத் தருகிறதா என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் பார்க்கும் போது அதிகமான அளவுக்கு உற்பத்திச் செலவு ஏற்பட்டு மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு குறைவாகத் தருகிறதா? அரசியலா? அல்லது வேறு ஏதாவது இருக்கிறதா என்பதைப்பற்றி நாம் இங்கே அறிந்துகொள்ள வேண்டும். நாம் யாரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றி நமக்கு தெளிவாகத் தெரிய வேண்டும். இங்கே முதலமைச்சர் பேசும்போது சொன்னார்கள். இங்கே சட்டமன்றத்தில் சொல்லப்பட்ட கருத்து, நமக்குச் சொல்லப்பட்ட கருத்து என்னவென்றால், ஒரு நிபுணர் குழுவைப் போட்டு, அந்த நிபுணர் குழு, இது தேவை இல்லை என்கிற அளவிலோ அல்லது தேவை என்றோ சொல்வதை அடிப்படையாகக் கொண்டு ... அரசின் முடிவு இருக்கும் என்று சொல்லப்பட்டது. ... என்றால் ஒரு நிபுணர் குழு அறிக்கை ... நமக்கு விடை கிடைத்ததாக ... இதற்கு நான் முக்கியமாகக் கேட்டுக்கொள்வது, மரியாதைக்குரிய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும், சோவியத் நாட்டின் அதிபர் கோர்பசேவ் அவர்களும் போட்ட ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூட்டா என்று நாம் இங்கே கண்டுபிடிக்க ........................ (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன்னாள் சபாநாயகர் அவர்களும் ஒரு தனி மாநாடு நடத்திக் கொண்டு இருப்பது போல் இருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். (மணி அடிக்கப்பெற்றது).

திரு. கே. ரமணி : அவையில் இரண்டுவிதமான ''ஸ்டாண்டர்டு'' இருக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற காலத்திலே அவர் பேசிய சில விஷயங்கள் மிகவும் ஆட்சேபகரமானது என்று சொல்வதற்காகத் தான் நான் முற்பட்டேன். He was not yelding. நான் உட்கார்ந்து விட்டேன். இப்போது அவர் கேட்கிறார். It is given. How that is given, I don't know,



1989 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நான் அவரை பேச அனுமதித்ததாக நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்? அவர் எழுந்தபோது நீங்களும் எழுந்து விட்டீர்கள்.

திரு. கே. ரமணி : ஒரு மரபைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக நான் கேட்கிறேன். அப்படி இல்லை என்றால் சொல்லுங்கள்.

திரு. பொன். விஜயராகவன் : தலைவரவர்களே, இது இன நாயக நாடு. ஜூரன் கர்டெய்னுக்கு உட்பட்டு சில காரியங்களைச் செய்ய முடியாது. இதுபோன்ற மிக முக்கியமான, மக்களைப் பாதிப்புக்குள்ளாகக்கூடியவை மீது ஒரு பொது விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பது கண்டிப்பான ஒரு தேவை. ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரியாக்டர் கொடுத்துவிட்டு, நான் உனக்கு புளூட்டோனியம் தந்துவிடுகிறேன் ; அந்தப் புளூட்டோனியம் எதற்காகப் பயன்படுகிறது ? நாம் எல்லோரும் அறிந்த ஒன்று. இப்போது புளூட்டோனியம், ஆட்டம் பாம்ப், அணுகுண்டு தயாரிப்பதற்காகத் தான் மிக அதிகமான அளவுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பதை ...

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே, சர்வதேச ஒப்பந்தத்தை நேச நாட்டோடு போட்டு இருக்கிற ஒப்பந்தத்தை தவறான உள்நோக்கம் கற்பித்துச் சொல்கிறார் ; அப்படிச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன். விஜயராகவன் அவர்கள் கூடங்குளம் திட்டத்தினால் ஏற்படுகின்ற நன்மை தீமைகளைப் பற்றி மட்டும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொன் விஜயராகவன் : தலைவரவர்களே, அதைத் தான் நான் பேசிக்கொண்டு வருகிறேன். ஆட்சேபம் பண்ணுவது போல் மட்டுமல்ல, இது மூடி மறைக்கப்பட்டு இருக்கிறது என்பதற்கு இன்னும் ஆதாரத்தை நான் சொல்ல முடியும்.

"The nuclear politics—The histroy of nuclear power in Britain." written by Tony Hall என்ற புத்தகத்தில் தெளிவாக இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்பிர மணியம் இப்படி நேரடியாகக் குறுக்கே பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேசாமல் இருங்கள். அவர் பேசிக்கொண்டு வருவார். அவரா உங்களிடம் பேச வேண்டுமென்று ஆசைப் படுகிறார்? (குறுக்கீடு)

திரு. பொன். விஜயராகவன் : தலைவரவர்களே, இந்த மூடு மந்திரம் என்பது இன்றைக்கு நேற்றல்ல. எல்லா "நியுகிளியர் எஷ்டாபிளிஷ்மெண்ட்" வரும்போது அந்தந்த நாடுகளிலே அவர்கள் செய்கின்ற வேலையைத் தான் செய்கிறார்கள். அதைத்தான்,

I quote :

"Outside scrutiny of the decisions made about nuclear power was inordinately weak. In part this was because of the real difficulty Parliament, and for that matter Government, had in dealing with scientific issues of greater and greater complexity. One MP, Austin Albu, commented that in a world here even scientists found it difficult understanding work in areas other than their own "it is hardly surprising that non-scientific politicians and M. P. struggle helplessly to deal with their responsibilities for deciding policy and appropriate funds" என்று சொல்லி அன்றைக்கே கூட இதுபோன்ற நிலைமைகள் தான் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே நான் இங்கே சொல்வது 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு இது அமைய இருக்கிறது. 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்கின்ற காரணத தாலே 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரமும் உங்களுக்குக் கிடைக் கும் என்பதல்ல.

(பிற்பகல் 12-30)

சுமார் 400 மெகாவாட் மின்சாரம்கூட, அது எப்பொழுதாவது வேலை செய்தால் — கல்பாக்கம் போன்று அது எப்பொழு தாவது வேலை செய்தால் மட்டும் கிடைக்குமேயல்லாமல் Un-Interrupted power என்பதற்கான உத்தரவாதம் இப்பொழுது நமக்கு இல்லை. ஆகவே, நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்தத் திட்டத்தை, தமிழக மக்களை Centuries to centuries-க்குப் பாதிக்கக்கூடிய அளவில் உள்ள இந்தத் திட்டத்தை இந்த Concept itself is wrong, என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இதற்கு மாற்றுத் திட்டங்களை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும். இதற்காக நீங்கள் Open discussion வைக்க வேண்டும். இதில் ஒப்பனாக இருந்து இதனுடைய Pros and cons-ஐ நாம் தெளிவாக விவாதித்து ஒரு நல்ல முடிவு ஏற்படுவதற்கான நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைக்குக்கூட அரியானா மாநிலத்தில் குட்காவோம் என்று சொல்லக்கூடிய இடத்தில் சூரிய ஒளியைப் பயன்படுத்திக் கொண்டு Solar thermal power-இல் ஐம்பது கிலோவாட் மின் சாரத்தைத் தயாரிப்பதற்கான முயற்சியை இன்றைக்குத் தொடங்கியிருக்கின்றார்கள். இதைப்போன்ற மாற்றுத் திட்டங் களைப் பரிசீலிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை அடியோடு கைவிட வேண்டுமென்று கேட்டு, ஒரு நல்ல ஹெல்த்தி டிஸ்கஷனுக்கு இந்த அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் டாமின் நிறுவனத் தில் ஏராளமான முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன என் பதைப் பற்றி இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்களே, பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த டாமின் நிறுவனத் தில் இருக்கக்கூடிய Vehicle Log Book-இல் சில கருத்துக்கள் இருக்கின்றன. இதை நான் முதலமைச்சரவர்களுடைய கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு இடத்தில் போடப்பட் டிருக்கிறது.

22 Nos. of polished slabs-delivery to Salem Minister's house.

இன்னொரு இடத்தில் போடப்பட்டிருப்பது, இன்னொரு Log Book-ல் போடப்பட்டிருப்பது, ஒரு திரைப்பட மியூசிக் டைரக்டர் வீட்டுக்கு, நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. 22 Nos. of polished black stones-delivery to Gangai Amaran's house என்கிற அளவில் இன்னொரு கருத்தும் ஏற்பட்டிருக்கிறது. டாமின் நிறுவனம் என்பது Hundred per cent export oriented industry என்று நான் அறிகிறேன். சேலம் எப்பொழுது exp rt zone-க்குள்ளே வந்தது என்பது தெரியவில்லை. கங்கை அமரன் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்றும் தெரியவில்லை.

இதுபோன்ற ஏராளமான முறைகேடுகளைப்பற்றி என்னிடம் தகவல்கள் இருக்கின்றன. ஆனால் காலம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் நான் அதைப்பற்றி விரிவாகக் கூற முடியவில்லை. அதைப்பற்றி ஏராளமான தகவல்களை நான் வைத்திருக்கின்றேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, அந்தத் தேதி என்ன என்பதை நாம் அறிய விரும்புகின்றோம்.

திரு. பொன் விஜயராகவன் : கங்கை அமரனுக்கு வழங்கப் பட்டதாகச் சொல்லப்படுகின்ற தேதி 7—1—1988 ; சேலத்திற்கு அமைச்சருக்குப் போன தேதி 22—12—1987 என்று போடப் பட்டிருக்கிறது. ஏராளமான முறைகேடுகள் இந்த நிறுவனத்தில் இருக்கின்றன. நான் வேண்டுமானால் முதலமைச்சரோடு இதை

[திரு பொன். விஜயராகவன்] [1989 மே 3

விவாதித்துப பல்வேறு காரியங்களைப் பற்றி எடுத்துத் தருவ தற்கு இருக்கின்றேன். தமிழகத்திற்கு ஏராளமான வருமானத் தைத் தருகின்ற இந்த நல்ல நிறுவனத்தை, முதலாளிகள் எல்லாம் ஏராளமான அளவில் கோடானு கோடிக் கணக்கில் பணத்தைச் சம்பாதிக்கின்ற இதுபோன்ற தொழில் அரசாங்கத் திற்கு ஏராளமான இழப்பை ஏற்படுத்துகிறது. இதை முறைப் படுத்தி, அரசுக்கு அதிகமான வருவாயை ஏற்படுத்தித் தருவதற் கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, எல்காட் என்ற ஒரு நிறுவனம்; Electronics Industry என்ற ஒன்று இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிறு வனம் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருப்பதைப்போலவே தெரிய வில்லை, உதாரணத்திற்கு, keltron, uptron போன்ற மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய இந்த Electronics நிறு வனங்களெல்லாம் மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு வரு வது மட்டுமல்ல; சர்வதேச நிறுவனங்களோடு போட்டியிடும் அளவிற்கு இருக்கின்றன. ஆனால் நம்முடைய தரம் மட்டும் மிகவும் மோசமாக இருக்கிறது. அதையும் நன்றாக ஆய்ந்து, அவைகளையும் சரிப்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு.கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, நமது மதிப்பு மிக்க உறுப்பினர் திரு. பொன்.விஜயராகவன் அவர்கள் சொல்லும் பொழுது மிகவும் ஆட்சேபகரமான விஷயம்—நம் அவைக்குறிப் பிலே இருக்க முடியாத விஷயத்தைச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற் காக நான் இதைச் சொல்கிறேன்.

இங்கே அணு மின்சார நிலையம் உருவாக்குவது என்பது, அணுவைச் சமாதானத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அதற்கு நேர்மாறாக ரஷ்யாவிலிருந்து மெஷின்கள் சப்ளை என்றும், இந்திய அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து, அந்த சப்ளை செய்யக் கூடிய மெஷினிலே அந்த யூரேனியத்தை என்ரிச் பண்ணி, அதற்கு எரிபொருளை உபயோகப்படுத்த வேண்டி யிருக்கிறது; புளூட்டோனியம், அதை எப்படி உபயோகப்படுத்த வேண்டி இருக்கிறது என்று அவர் சொல்கிறார். அது எல்லா நாடுகளிலும் நடக்கக்கூடிய ஒரு நடவடிக்கை. அது இல்லாமல் அந்த எரிபொருளை உண்டாக்க முடியாது. அப்படிச் செய்து கொடுப்பது என்பது அணுகுண்டு தயார் பண்ணுவதற்கு ரொம்பவும் பக்கத்தில் வந்திருக்கும்படியான ஒரு டெவலப் மெண்ட். ஆகவே, ரஷ்யாவிற்கு நான் மெஷின் தருகிறேன், நீங்கள் அதை வாங்கி வைத்து இங்கே சமாதானத்திற்காக அணு வைக் கொண்டு மின்சார உற்பத்தியைப்பண்ணுவது என்று ஆரம் பித்து, அந்த அணுகுண்டைத் தயாரிப்பதற்கு வேண்டிய



1989 மே 3] [திரு. கே. ரமணி]

புளூட்டோனியத்தை சப்ளை பண்ணுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்வதற்காகக் கொடுக்கக்கூடிய ஏற்பாடு. அப்படி செய்திருக் கிறார்களா என்று சந்தேகப்படுகிறேன் என்று சொல்கிறார்கள். சோவியத் நாடும், இந்திய நாடும் Friendly Countries. நாடு முழுவதும், உலகம் முழுவதும் வரவேற்றிருக்கிற நாடுகள். அவர் களிடம் இப்படி ஒப்பந்தம் இல்லை. பகிரங்கமாக வெளியிடப் பட்டிருக்கிறது. எத்தனையோ கருத்து வேற்றுமைகள் நமக்கும் இந்திய அரசுக்கும் மற்றவைகளுக்கும் இருக்கிறது. ஆனால் நாட்டினுடைய ஒற்றுமையை, நாட்டினுடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் இப்படிப்பட்ட ஒப்பந்தம் அந்த friendly relations உடையக்கூடிய நிலையில் இது வருகிறது. இன்றைக்கு 4,000 கோடி ரூபாயில் கூடங்குளம் மின்நிலையம் உருவானால் உடனே அணுக்கதிர் இயக்கம் ஏற்பட்டு தமிழ்நாடு முழுவதும் பாழாகிவிடும் என்ற நிலையை இன்றைக்கு நாம் இங்கே வற்புறுத்தி முடிவிற்கு கொண்டு வருவது என்பது கூடாது சில இண்டரஸ்டட் கன்ட்ரீஸ், வேறு பல நாடுகள் இங்கே இப்படிப்பட்ட முக்கிய மான நுணுக்கக்கலை வளர்ச்சியில் முன்வந்திருக்கிற தமிழ் நாட்டில் என்ஜினியரிங் தொழில்கள் வளரக்கூடாது, பின் தங்கிய நிலையில் தமிழ்நாடு இருக்கவேண்டும்—வேறு பல நாடுகளிலிருந்து அவர்கள் இயந்திரங்கள் விற்பதற்கு இங்கே தேவை. அதற்காக இந்த வளர்ச்சியைத் தடுப்பதற்கு செய்யக் கூடிய ஒரு சதி. அந்த சதிக்கு நாம் துணை போகக்கூடிய நிலை இங்கே கூடாது. இந்த வித்தியாசம் நம்முடைய நண்பர் மாண்புமிகு திரு. பொன். விஜயராகவன் அவர்களுக்கு இருக்கிறது என்றால், நாம் இந்தச் சபையில் அதுபற்றி விவாதிக்க லாம். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அதுபற்றி சொல்லி யிருக்கிறார்கள். நாமே அதை விவாதிக்கலாம். அதை விட்டுவிட்டு இரகசியமாக அதாவது ஒரு சதித்தனமாக முறையில் அணுகுண்டு தயார் செய்வதற்கு இந்திய நாட்டில் கூடங்குளத்தை அதற்கு வேண்டிய மெட்டீரியல்சைக் கொடுப்பதற்கு தளமாக உபயோகப் படுத்துகிறோம் என்று சொல்லக்கூடிய இந்த நாட்டிற்கும், மக்களுக்கும் எதிரான அந்த வார்த்தைகளை "ரெமூவ்" பண்ண வேண்டும். அது இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

திரு. பொன். விஜயராகவன்: தலைவர் அவர்களே, ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு விவாதப் பொருள். எனவே, அவர்களுடைய கருத்தும், உங்களுடைய கருத்தும் சேர்ந்தே இடம் பெறுகிறது. திரு. எஸ். ஆர். பால சுப்பிரமணியம் ..

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, There is a Treaty of Peace, friendship and co-operation with the Soviet Union.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 மே 3

நமக்கு சோவியத் நாட்டோடு நேச ஒப்பந்தம் இருக்கிறது'
நம்முடைய நாட்டோடு நட்பு ஒப்பந்தம் கொண்டிருக்கிற
அந்த நாட்டின் நோக்கத்தைப் பற்றி தவறான உள்நோக்கம்
கற்பித்து இங்கே உறுப்பினர் அவர்கள் பேசினார்கள் என்
பதற்காகத் தான் நான் எழுந்து நின்றேன். அதுமட்டுமல்லாமல்
அவர் சொன்ன பல தகவல்களில் தவறான கருத்துக்கள்
உள்ளன. ஐரோப்பா முழுவதும் இன்றையதினம் இயங்கிக்
கொண்டிருப்பது அணு மின்நிலையங்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் கூடங்குளம்
திட்டத்தைப் பற்றி விவாதம் தொடங்கி நடத்துகிறோமா?
அடுத்து உங்கள் உறுப்பினர் பேசப் போகிறாரே! பிரச்சினை
என்னவென்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே,
தவறான தகவல்கள். கோர்ப்பசேவ் பெயர் இங்கே வந்தது.
ராஜீவ் காந்தி பெயர் இங்கே வந்தது. கோர்ப்பசேவுக்கும்,
ராஜீவ் காந்திக்கும் உள்ள ஒப்பந்தத்தை குறை சொல்லி
யிருக்கிறார். அதில்தான் நான் பாயின்ட் ஆப் ஆர்டர் 'ரெய்ஸ்'
பண்ணினேன். என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். ஆகவே,
நம்முடைய நேச நாட்டோடு தவறான எண்ணம் வரக்
கூடாது. அவர்கள் நம்மிடமிருந்து புளூட்டோனியம் வாங்கி
அணுகுண்டை உற்பத்தி செய்யப்போகிறார்கள் என்று
பேசினார்கள். சோவியத் யூனியன் உலகத்தில் அமைதி நிலவ
வேண்டுமென்று விரும்புகிற நாடு. நிச்சயமாக நமக்கு அவர்
களுடைய ரீயாக்ட்டரை கொடுத்து இங்கேயிருந்து புளூட்
டோனியம் வாங்கி அதிலிருந்து அணுகுண்டைத் தயாரிக்கிற
நிலையில் அவர்கள் இல்லையென்பதைத் தெளிவாக்க விரும்பு
கிறேன். அவர் சொன்ன தவறான கருத்துக்கள் நம்முடைய
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். உலகம் முழு
வதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்கள் அவைக்
குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்றால் ஒரு பெரிய
பேச்சு, மூன்று பேர் பேசிய பேச்சு முழுவதும் நீக்கப்பட
வேண்டியிருக்கும். திரு. பொன். விஜயராகவன் அவர்கள் சொன்ன
தற்கு திரு. ரமணி அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள்.
நீங்கள் பதில் சொல்லி இருக்கிறீர்கள். ஆகவே அதற்கு
மாறான கருத்துக்கள் இடம் பெற்றிருக்கிற காரணத்தால்,
அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டிய அவசியம் இல்லை
யென்றே கருதுகிறேன்.

திரு. பொன். விஜயராகவன்: தலைவர் அவர்களே,
தவறான கருத்து என்று மாண்புமிகு திரு. எஸ். ஆர். பாலசுப்பிர
மணியம் அவர்கள் சொன்னார்கள். நான் இரண்டு நாடு



1989 மே 3] [திரு. பொன். விஜயராகவன்]

களுக்கும் இருக்கக்கூடிய நேசத்தைப் பற்றியோ, நட்பைப்
பற்றியோ குறை கூறிச் சொல்லவில்லை. இதற்கு ஒரு விவாதம்
நடத்த வேண்டும், இதுபற்றி நிபுணர் குழு வைத்து அது பரி
சீலித்துதான் ஒரு முடிவிற்கு வர வேண்டும் என்கிறபோது,
இதையும் சேர்த்து பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொண்டேனேயல்லாமல், அதுவும் அச்சத்திற்கு இடம் தருகிற
அளவிற்கு சில காரியங்கள் இருக்கின்றன என்ற வகையில்,
அச்சத்திற்கு இடம் இருக்கிற காரணத்தால் ஒரு ஜனநாயக
நாட்டில் இதை விவாதிக்க உரிமை வேண்டுமென்று கேட்டனே
யல்லாமல் வேறில்லை. தாராப்பூரில் நடந்தாலும் சரிதான்.
இதை எந்த நாடு தந்தாலும், இது சோவியத் யூனியனிலிருந்து
வருகிறதோ, அமெரிக்காவிலிருந்து வருகிறதோ, இது எங்கே
யிருந்து வந்தாலும், இந்த 'கான்செப்ட்டை' நாங்கள்
எதிர்க்கிறோம் என்ற அளவில் தான் அதைச் சொல்கிறோமே
யல்லாமல் சோவியத் நாடு வரக்கூடாது என்பதற்காக நடை
முறைப்படுத்துகிற ஒரு காரியமாக மரியாதைக்குரிய உறுப்பினர்
திரு. ரமணி அவர்களும் உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம்
அவர்களும் இதை எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை.
ஒரு விவாதத்தை, நல்ல விவாதத்தை நாம் வைத்து பொதுவாக
ஒரு ஜனநாயக நாட்டிலே அதைப்பற்றி விவாதித்து முடிவு
எடுக்கிற ஒரு பழக்கத்தை வைத்திருக்கிற காரணத்தால்
இதை மட்டும் ஏன் மூடிவைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது
என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேனே அல்லாமல்,
வேறு உள்நோக்கம் இல்லை.

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு சபா
திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா
நாயகர் அவர்களே, அருமை நண்பர் திரு. பொன் விஜயராகவன்
அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு நடுவிலே
ஏதோ சாமான்கள் வந்து சேலத்திலே மினிஸ்டருடைய
வீட்டிலே பதுக்கி வைத்திருப்பதாகவும், இன்னொன்று கங்கை
அமரன் வீட்டிலே இருப்பதாகவும், அந்தக் குற்றச்சாட்டைப்
பற்றி சரியாக விளக்காமல் அவர்கள் பாட்டுக்கு போய்
விட்டார்கள். சந்தேகம் எப்படி ஏற்பட்டது என்றால் இங்கே
உட்கார்ந்து இருக்கிற ஒரு மினிஸ்டர், ஏதோ அங்கேயிருக்கிற
கங்கை அமரன் வீட்டிலே என்று சொல்லிவிட்டார்கள்.
ஏன் என்றால் அது எல்லாம் விலை உயர்ந்த பொருளாக
இருக்கும். சாமானியமாக இல்லாமல், லட்சக்கணக்கிலே,
கோடிக் கணக்கிலே இருந்தாலும் இருக்கலாம். எனவே அவற்றை
விலை கொடுத்து வாங்கி வைத்திருக்கிறார்களா, அல்லது இனா
மாக வந்து பதுக்கி வைத்திருக்கிறார்களா என்பதைப் பற்றி
அவர்கள் சரியாக விளக்கம் தரவில்லை. அதைப் பற்றி
சரியான விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் சொன்னதற்கு
முந்தைய செய்தியைப் பற்றி ஓரே ஒரு கருத்தின் அடிப்படை
யிலே சொல்ல விரும்புகிறேன் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்.
விஜயராகவன் அவர்கள் அணு உலையிலிருந்து வருகிற ஆபத்
தைப் பற்றி, அச்சத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது
சம்பந்தமாக நான் இங்கே சொல்ல விழைகிறேன். அணு உலை
யிலிருந்து நியூக்கிளியர் ரேடியேசனிலிருந்து நமக்கு வருவது
ஒருவேளை 4 முதற்கொண்டு 6 என்று சொல்லுகின்ற,
எம்.ஆர்.இ.எம். என்று சொல்கிற ஒரு அளவு, எம்.ஆர்.இ.எம்.
என்று சொல்கிற அளவு—4 முதற்கொண்டு 6 வரை—இருக்கக்
கூடும். ஆனால் சில இயற்கைச் சூழ்நிலையிலே அது 100
எம்.ஆர்.இ.எம். வரையில் இருப்பதாகவும், கேரளாவிலே
இருக்கிற மானோசைட் பகுதி இருக்கிறதே, அதிலே மட்டும்
100 எம்.ஆர்.இ.எம். இருப்பதாகவும், அணு உலையிலே
யிருந்து வருவது 4 எம்.ஆர்.இ.எம். என்றால், கேரளாவிலே
இருக்கிற மானோசைட் பகுதியிலே, இயற்கையிலே இப்போது
வந்துகொண்டிருப்பது, எவ்வளவு என்றால், 100 என்று இருக்
கிற காரணத்தாலே, எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று
சொல்கிறார்கள். இது ஒன்று.

இரண்டாவது செய்தி, நாம் இதை விடுவதாக இருந்தால்,
எத்தனையோ மாநிலங்கள் அதை இருகரம் கூப்பி வரவேற்
பதற்குத் தயாராக இருக்கின்றன. மூன்றாவது, கர்நாட
காவிலே இதைப்பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டாலும்கூட
கர்நாடக அரசு, முன்னாலே இருந்த அரசு, உள்ளிட்ட
பாப்புலர் கவன்மென்ட், கெய்கா என்று சொல்கிற இடத்திலே
வருகின்ற அணு மின் உலையை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.
அதற்கு அரசாங்க ரீதியிலே எதிர்ப்பே தெரிவிக்கப்படவில்லை.
ஆக, இந்தியா முழுவதும் இப்படி ஏற்றுக்கொண்டிருக்கிற நேரத்
திலே தமிழகத்திலே மின்பற்றாக்குறை இருக்கிறது. நான் இன்று
காலையிலே ஒரு பெரியவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது,
அவர் சொன்னார், டி.வி.எஸ். மட்டுமே மின் பற்றாக்குறையின்
காரணமாக, பாண்டிச்சேரிக்கு இரண்டு தொழிற்சாலைகளைக்
கொண்டு போய்விட்டது. நமக்குத் தேவைப்படுவது 4 ஆயிரம்
மெகாவாட். நம்மிடம் உற்பத்தியாவதோ 2300
மெகாவாட்தான். இவ்வளவு பற்றாக்குறை இருக்கிற காரணத்
தாலே, 1000 கோடி ரூபாயிலே ஏறத்தாழ 2000 மெகாவாட்
வருமானால், நமது மொத்த மின்சார உற்பத்தியே 4300,
மெகாவாட்டாக இருக்கும், 300 மெகாவாட் எக்சசாக
இருக்கும். ஆகவே, ஆபத்து இல்லை, ஆபத்து இல்லை என்று
எல்லோரும் சொல்கிறார்கள். செர்னபில்லிலே வெளி
யேறிய மக்களை மீண்டும் குடியேற்றுகிறார்கள். செய்தி
வந்திருக்கிறது. ஆதலாலே, அவருக்கு இருக்கிற அச்சத்தை
வெளிப்படுத்துவதிலே தவறு இல்லை என்று சொன்னாலும்,
இந்திய—சோவியத் ஒப்பந்தமே ஏதோ ஒரு சூதாக நடை





பெறுகிறது என்பதை எல்லாம் இங்கே சொல்லாமல்,
ஒருவருக்கொருவர் உதவிகரமாக இருப்பதற்காகத்தான் இந்த
ஒப்பந்தம் என்பதையும், நமக்கு ஒளி கிடைக்கும், நமக்கு
நல்ல தொழிற்சாலைகள் வருவதற்கு வழி கிடைக்கும்,
எனவே நமது அரசாங்கம் நல்ல வகையிலே பாதுகாப்போடு
இதை ஏற்பாடு செய்வதற்குத்தான் முனைய வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
தொழிற்துறை பற்றிய விவாதத்தில் அதிகமாகப் பேசவேண்டும்
என்று விரும்புகிறேன். இருந்தபோதிலும் கூடங்குளம் பிரச்சினை
வந்துவிட்டதால் மிகச் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன்.
முதலிலே பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். இந்தியா
விலே உற்பத்தி செய்யக்கூடிய மொத்த மின்சாரத்தில் அட்டாமிக்
பவர் மூலமாக உற்பத்தி செய்வதினுடைய அளவு 2.7 சதவீதம்.
அதாவது 1465 மெகாவாட். ஆனால் பிரான்ஸ் நாட்டிலே
மொத்தம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தில்—அங்கு உற்
பத்தி செய்யப்படுவது 70 சதவீதம், அதாவது 50 ஆயிரம் மெகா
வாட், மொத்தம் 55 யூனிட்டுகள் இருக்கின்றன. ஆகவே இதை
சாதாரணமாக ஒரு பொது அறிவுக்கு விட்டுவிடலாம். 70 சத
வீதம், 50 ஆயிரம் மெகாவாட் வைத்துக்கொண்டு இருக்கிறது ஒரு
நாடு. 2.7 சதவீதம், 1465 மெகாவாட்டை வைத்து நாம் பயப்
படவேண்டுமா என்பதைக் பார்த்துக்கொள்ள வேண்டும். கழிவுப்
பொருட்களை என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்டார்
கள். கூடங்குளத்திலே ஒரு துறைமுகம் ஏற்படுத்தப்பட
இருக்கிறது. ரஷ்ய நாட்டுக்கு அந்தக் கழிவுப் பொருட்கள் முழுவ
துமாக எடுத்துச் செல்லப்படவிருக்கிறது. பேச்சிப்பாறை அணை
யைப் பற்றி ஒரு உண்மைக்கு மாறுதலான தகவலைக் கூறியிருக்கி
றார்கள். பேச்சிப்பாறையினுடைய மொத்த கொள்அளவு
4840 எம்.சி.எப்.டி. The dam has been designed for less than two
fillings மொத்தம் 9000 எம்.சி.எப்.டி. தண்ணீரை அங்கே தேக்கமுடி
யும். கூடங்குளம் அணு மின் நிலையத்திற்குத் தேவையான
தண்ணீர் 10 க்யூசெக்ஸ். 10 கியூசெக்ஸ் என்பது ஒரு ஆண்டு
முழுவதற்கும் 330 எம்.சி.எப்.டி. தான். ஆக மொத்தம் 9000
எம்.சி.எப்.டி. தண்ணீரில் 330 எம்.சி.எப்.டி. தண்ணீரை எடுத்
தால் அது 3 சதவீதம் தண்ணீர் ஆகுமே அன்றி, அவர் கூறியதைப்
போல் 5 டி.எம்.சியில், 2 டி.எம்.சி என்பது ஒரு உண்மைக்கு
மாறான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பேச்சிப்பாறை அணைக்கட்டின் டெட் ஸ்டோரேஜில்
இருக்கக் கூடிய தண்ணீரின் அளவே 900 எம்.சி.எப்.டி. ஆகும்.
'மெரைன் லைஃப்' பாதிக்கப்படும். மீன் இனங்கள் இறந்துவிடும்
என்ற ஒரு தவறான கருத்து இருந்துவருகிறது. அதற்கு ஒரு
செய்தியை நான் படித்துவிடுகிறேன். 'பிரான்ஸ்' நாட்டிலே
அட்டாமிக்பவர் சேர்மனுக்கு அட்வைசராக இருந்தவர் என்ன
கருத்தைக் கூறுகிறார் என்றால், 'பிரான்ஸ்' நாட்டில் மீன் பிடிப்

[திரு. ரா. சொக்கர்] [1989 மே 3

கான போட்டி நடக்கும்போது அந்த அட்டாமிக் பவர் ஸ்டேஷனிலிருந்து கழிவு தண்ணீர் எங்கே வந்து கலக்கின்றதோ, அங்கேதான் மீன் பிடிக்கச் செல்வார்களாம். ஏனென்றால் சாதாரணக் கடல் நீரைவிட அங்கே 5 டிகிரி வெப்பம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் மீன் குஞ்சுகள் அதிகமாக பொறிப்பதற்கு இயற்கையிலேயே அந்தச் சூழ்நிலை பயன்படுகிறது என்று கூறி அங்கே அதிகமாக மீன் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அனுபவப்பூர்வமாக அங்கே உணர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று தனி விவாதம் வைத்தால், நிச்சயமாக தாராளமாக மிக அதிகமாகப் பேசலாம் என்று தெரிவித்துக் கொண்டு, தொழில்துறைக்கு வருகிறேன்.

பெரிதாக ஒன்றும் குறை காணமுடியாத இக்கொள்கை விளக்கத்தினை தமிழக தொழில் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட அனைவரும் நிச்சயமாக பாராட்டுவார்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாநிலத்திலுள்ள பெரிய தொழில் முனைவோரை அழைத்து அவர்களோடு பேசி தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டி இருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தகுந்த ஒரு நிகழ்ச்சியாகும். இருந்த போதிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற இந்த ஆர்வமும், முயற்சியும் கடைநிலை அதிகாரிகள் வரையிலும் இல்லாவிட்டால் நிச்சயமாக எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் இந்தச் சட்டமன்றத்தில் ஓடக் கூடிய மின் விசிறிகளுடைய நிலையில்தான் இருக்கும். அதாவது இந்த மின் விசிறிகள் நன்றாகச் சுற்றும். காற்று வராது. காற்று வருவதுபோன்று இருக்கும். ஆனால் புழுக்கம் போகாது. அந்த நிலையிலே 20-ஆம் நூற்றாண்டினுடைய அதிசய மின் விசிறிகளாக இவை இருப்பதுபோன்று, என்னதான் திட்டங்களைத் தீட்டினாலும்கூட, அதிகாரிகள் அவற்றை நல்லமுறையில் செயல்படுத்தாவிட்டால் அந்தத் திட்டங்களில் பலன் இருக்காது என்பதை என்னுடைய கருத்தாக இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தபோதிலும் திட்டங்களைத் தீட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தீட்டுவதோடு நிறுத்திவிடாமல் அதனை நல்லமுறையில் நடைமுறைப்படுத்த பல விளக்கங்களை இங்கே கூறியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டவன். மத்திய அரசு கொடுக்கக் கூடிய சப்சிடியான 15 சதவீதத்தை நிறுத்தியிருந்த போதிலும் கூட, மாநில அரசு அதனைத் தொடர்ந்து கொடுக்கும் என்ற ஒரு முடிவை எடுத்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தகுந்த முயற்சியாகும். இதனை 80 அல்லது 100 தாலுக்காக்களாகப் பிரித்து, அது வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அதனை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். மத்திய அரசு நிறுத்திவிட்ட அந்த 15 சதவீத சப்சிடியைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று இந்த மாநில அரசின் மூலமாக ஒரு கோரிக்கையை மத்திய அரசுக்கு நாம் அனுப்புவது நலம் என்று நான் கருதுகிறேன்.



1989 மே 3] [திரு. ரா. சொக்கர்]

அடுத்தபடியாக வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம். அதாவது ஐ. எப். எஸ். டி. லோன். அது சிப்காட் இண்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ் அல்லது வேறு குறிப்பிட்ட சில பகுதிகளில்தான் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் 25 சதவீதமோ அல்லது ரூ. 3 கோடிக்கு மிகாமலோ இருக்கக்கூடிய அளவிலே கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது மிக நல்ல திட்டம்தான். அதாவது இதனுடைய நோக்கம் என்னவென்றால் சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் போன்ற இடங்களை வெகுவேகமாக வளர்க்கவேண்டுமென்ற திட்டத்தோடு இந்த இடத்திற்கு மட்டும் கொடுத்திருக்கிறீர்கள். இருந்த போதிலும் மற்ற இடத்திற்கும் கிடைக்கக்கூடிய அளவிலே 25 சதவீதம் என்பதை மாற்றி 15 சதவீதமாகக் குறைத்து, 3 கோடி ரூபாய் சீலிங் என்று வைத்திருப்பதை 1½ கோடி ரூபாய் என்று குறைத்து மற்ற இடங்களுக்கு அது நீட்டிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்தபடியாக என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்பாக விருதுநகரிலிருந்து நான், மதுரையிலிருந்து ஒருவர், தர்மபுரியிலிருந்து ஒருவர், குடியாத்தத்தில் ஒருவர் என்று என்னுடன் படித்த நண்பர்கள், தமிழகத்தில் எந்த இடத்திலும் தொழில் துவங்காமல் பாண்டிச்சேரி சென்று 11 ஆண்டுகளுக்கு முன்பாக தொடங்கினோம். அதைத் தொடங்கியதற்கு ஒரே ஒரு காரணம் அங்கே ஆரம்பிக்கப்படக்கூடிய தொழிற்சாலைகளுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து முழுமையாகச் சலுகை அளிக்கப்படுகிறது என்பதுதான். நாங்கள் எந்தக் காரணத்திற்காக இந்த மாநிலத்திலிருந்து வெளி மாநிலத்திற்குச் சென்று தொழில் துவங்கினோமோ, அந்தக் காரணம் நீங்கும்படியாக இந்த மாநிலத்திலும் முதல் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து சலுகை அளிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே மனப்பூர்வமாக வரவேற்கத் தகுந்த ஒரு முயற்சியாகும். இருந்த போதிலும் இந்தச் சலுகைகளை வேண்டும் வேண்டும் என்று கேட்கக் கூடிய நிலை போக, இந்தச் சலுகையைக் கொடுக்கும்போது சில எச்சரிக்கையோடு நீங்கள் கொடுக்க வேண்டும் என்பதை நான் மிக்க கவனத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் பாண்டிச்சேரி, கோவா அல்லது மற்ற யூனியன் பிரதேசங்கள் அளவிலே மிகச் சிறிய பிரதேசங்கள். அந்த இடங்களிலே சில சலுகைகளைக் கொடுப்பதால் மற்ற இடங்களிலே உள்ள தொழிற்சாலைகள் அவ்வளவு அதிகமாக பாதித்து விடாது. ஆனால் சென்னை மாநிலம் போன்ற ஒரு இடத்திலே, இவ்வளவு பெரிய நிலப்பரப்புக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட்டு விட்டால் புதிய தொழில்கள் நிச்சயமாக பல வரும். அதில் சந்தேகமே இல்லை. யாரும் தடுத்து நிறுத்தி விட முடியாது. தடுத்து நிறுத்தினாலும் கூட வந்து கொண்டே தான் இருக்கும் இந்தச் சலுகையினால். ஆனால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு

விட்ட தொழில்கள் இந்தச் சலுகையினால் நசிந்து விடக் கூடாது. ஆகவே என்ன செய்ய வேண்டுமென்றால், எந்தப் பகுதியை அதிகமாக விரிவாக நாம் தொழில் மயமாக ஆக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்தப் பகுதியில் மட்டும் மாநிலத்தில் குறிப்பாக அப்படி 3, 4 அல்லது 5 பகுதிகளுக்கு மட்டும் அந்த விற்பனை வரிச் சலுகையை ஆரம்ப கட்டமாக அறிவிக்க வேண்டுமென்ற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் கட்டண சலுகையை வழங்கியிருப்பது வரவேற்புக்கு உரியது. இது எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய சலுகை என்றாலும் கூட இந்தச் சலுகையின் மூலம் கிடைக்கக்கூடிய பணத்தை தொழிலதிபர்களுக்கு பட்டுவாடா செய்வதில், தொழில் நிறுவனங்களுக்கு பட்டுவாடா செய்வதில் பல தாமதங்கள் இருக்கின்றன. அந்தத் தாமதங்கள் களையப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களுடன் நல்லுறவு இல்லாவிட்டால் தொழில்வளர்ச்சி அடையாதென்ற கருத்தையும் கருத்தில்கொண்டு அதற்கும் ஒரு செய்தியை குறிப்பாக நீங்கள் சேர்த்திருக்கிறீர்கள். அதற்கும் பாராட்டுக்கள். ஆனால் இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் என்றால் அதைத் தீர்ப்பதற்கு சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 இடங்களில்தான் நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த நீதிமன்றங்கள் மூலமாக இருக்கக்கூடிய வழக்குகளை விரைவாக பைசல் செய்ய முடியவில்லை. ஆகவே குறைந்தபட்சமாக இன்னும் 3 நீதிமன்றங்களையாவது இந்த இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்டைக் களைவதற்காக ஆரம்பிக்க வேண்டும் என்பதை நான் என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அடுத்து முக்கியமான ஒரு பிரச்சினைக்கு வருவோம். இல்லறத்திற்கு சம்சாரம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் முக்கியம். மின்சாரம் இல்லாத தொழிற்சாலைகள் இன்றைக்கு கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்ற நிலையிலேதான் தமிழகத்திலே இருந்து வருகின்றன. இந்தப் பிரச்சினையை தீர்க்கமுடியுமா முடியாதா என்று ஒரு பட்டிமன்றமே தலைவர் அவர்கள் நடத்தலாம் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நிச்சயமாக தீர்க்க முடியும். ஒரே நாளில் தீர்க்க முடியும். கூடங்குளம் வேலை செய்யவில்லை, ராமகுண்டம் வேலை செய்யவில்லை, நெய்வேலியில் தகராறு என்று எடுத்ததற்கெல்லாம் யார் யாரையோ குறை சொல்லாமல், இருக்கக்கூடிய யதார்த்த நிலை என்ன என்று பார்க்க வேண்டும். இருக்கக்கூடிய உண்மை நிலை என்ன, இதிலிருந்து என்ன செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும். அதாவது தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக் கூடிய மொத்த மின்சாரத்தில் 49 சதவீதத்தை தொழிற்சாலைகள் பயன்படுத்துகின்றன. இதில் உயர் அழுத்த மின்சாரத்தை அதிகப்படியாக உபயோகிக்கிறார்கள். உயர் அழுத்தம் உபயோகிப்பவர்கள



2300 பேர். அந்த 2300 பேரும் 1100 மெகாவாட் மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள். குறைந்த அழுத்த மின்சாரத்தை உபயோகிப்பவர்கள் அதாவது எல்.டி. கன்ஸ்யூமர்ஸ் 2 லட்சத்து 36 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சுமார் 1300 மெகாவாட் தான் உபயோகிக்கிறார்கள். நமக்கு இருக்கக் கூடிய தட்டுப்பாடு இந்த 60 சதவீதம் மின்வெட்டு போக, சுமார் 500 அல்லது 600 மெகாவாட் தான் இருக்கும்.

உயர் அழுத்தம் உபயோகிக்கக்கூடிய தொழிற்சாலைகள் அத்தனையிலும் நூற்றுக்கு நூறு சதம் கேப்டிவ் பவர் ஜெனரேஷன் யூனிட் வைத்திருக்கிறார்கள். அந்த கேப்டிவ் பவர் ஜெனரேஷனுக்கு ஒரு லிட்டர் டீசலுக்கு 3.2 யூனிட் மின்சாரம் தயாரிக்க முடியும். இப்போது ஒரு லிட்டர் டீசல் தமிழகத்தில் வாங்கினால் 3 ரூ. 93 காசு ஆகிறது. அதையே கொச்சியிலிருந்து வாங்கி வந்தால் 3 ரூ. 43 பைசா ஆகிறது. ஆக ஒரு லிட்டர் டீசலுக்கு 3.2 யூனிட் கிடைக்கிறது என்றால் மற்ற செலவுகள் எல்லாம் சேர்த்து ஒரு யூனிட் மின்சாரம் ஜெனரேட்டர் மூலமாக தயாரிப்பதற்கு 1½ ரூபாய் ஆகிறது. ஆனால் உயர் அழுத்தம் உபயோகிக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலைகளுக்கு கேப்டிவ் பவர் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 25 பைசா மானியமாக அரசு கொடுத்து விட்டால் நிச்சயமாக ஒரே நாளிலே இந்தப் பிரச்சினை தீரும் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

வேண்டுமென்றால் பரிட்சார்த்தமாக ஒரு மாதம் நீங்கள் நடைமுறைபடுத்திப் பாருங்கள். ஆண்டு முழுவதும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டால் அரசுக்கு 40 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்படும். இருந்த போதிலும் உயரழுத்த மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு யூனிட்டுக்கு 97 பைசா வாங்குகிறீர்கள். அதே குறைந்த அழுத்தத்திற்கு யூனிட்டுக்கு 1.35 பைசா. இதில் 1.15 பைசா. கமர்ஷியலுக்கு மற்றவர்களுக்கு வழங்கக் கூடியதால் அதிகமான வருமானம் வரும் அதை நன்றாக சேமிக்கக்கூடிய இந்த மின்சாரத்தை அமல்படுத்துவோமே கணக்கு போட்டுப் பார்த்தா இதை நாம் இன்றைக்கு மின்சாரம் பயனால் 71 இலட்சம் பேர்களுக்கு—நாம் தமிழகத்திலே, இந்த 1500 வழங்கி கொண்டு இருக்கிறோம் மூலம் அந்த 71 இலட்சம் பேர் பேரை கட்டுப்படுத்துவதன் மின்சாரத்தை வழங்க முடியும் களுக்கு—சிறந்த முறையிலே என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே 17-வது பாயின்டில் ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட்டுக்காக 50% மானியம் கொடுப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். இந்த இடத்தில் மிக்க கவனமாக இருக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். எண்ணற்ற ஏமாற்று வேலைகள் இதில்தான்

நடக்கின்றன. இட்காட் போன்ற அரசு நிறுவனங்கள் கூட பீசிபிலிட்டி ரிப்போர்ட் எடுத்துக் கொடுப்பது சரியான முறை யில் இல்லை. விலையைக் கூட்டிப் போட்டு பாதியை எடுத்துக் கொள்ளக்கூடிய அவல நிலையெல்லாம் இருக்கிறது. அதை நீங்கள் கருத்திலே கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதை உங் களுடைய முடிவுக்கு நான் விட்டுவிடுகிறேன்.

மின்சாரத்தை பொறுத்தவரையில் உற்பத்தி செய்வதை விட சேமிப்பு செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய மின்சாரத்தி லுடைய அளவு மொத்த உற்பத்தி 26%. ஆனால் இதில் நல்ல முறையில் மோட்டாரையும் பம்ப் செட்டையும் நாம் பொருத்தி விட்டோம் என்றால் அதில் 50% மின்சாரத்தை அவர்கள் மிச் சப்படுத்த முடியும். கன்சர்வேஷன் ஆப் எனர்ஜி என்பதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் தென்மா நிலங்கள் அனைத்திலுமே எந்த தொழிற்சாலையும் பரிசு பெறாத போது எங்களுடைய ஆலை பரிசு பெற்றுள்ளது. அதா வது அகில இந்திய அளவிலே கன்சர்வேஷன் ஆப் எனர்ஜிக்கு இரண்டாவது பரிசாக சில்வர் டிராபியை நாங்கள் பெற்று வந்திருக்கிறோம். அதனால் அதனுடைய முக்கியத்துவம் நன் றாக எனக்கு தெரியும். இதனால் தொழில் அதிபர் களுக்கும் லாபம் மாநிலத்திற்கும் லாபம் தலைவர் அவர்கள் மணிக்கு பக்கத்தில் போவதால் அடுத்து முக்கிய விஷயமான கிரானைட்டுக்கு நான் வந்து விடுகிறேன்.

கிரானைட்டை பற்றி மிகச் சுருக்கமான அளவிலே நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இந்த சுருக்கமான விளக்கத்தை வைத்து தவறு இருக்கிறது அல்லது தவறு இல்லை என்ற ஒரு முடிவுக்கு வருவது தவறாகிவிடும். இருந்த போதிலும் கூட என்னுடைய கருத்தை நான் கூற விரும்புகிறேன். அதாவது இதில் தவறு இல்லை என்று நான் ஏன் நினைக்கவேண்டியிருக்கிறது என்றால் கிரானைட் 1983–84 ஆம் ஆண்டு 126 டாலருக்கு குறை வாக விற்று இருக்கிறது. 1984–85 ஆம் ஆண்டு 206 டாலருக்கு குறைவாக விற்றிருக்கிறது. 1985–86 ஆம் ஆண்டு 161 டால ருக்கு குறைவாக விற்றிருக்கிறது. 1986–87 ஆம் ஆண்டு 48, 1987–88-ல் 37. அதாவது தனியார் நிறுவனங்களுக்கும், கிரா னைட் டாமின் நிறுவனத்திற்கும் விலை வித்தியாசம் 83-ல் இருந்ததை விட 88-ல் குறைந்திருக்கிறது. பொதுவாக ஏற்றுமதித் துறையை பொறுத்தவரையில் புதியதாக யாராவது அந்தத் தொழிலை ஆரம்பிப்பார்கள் என்றால் முதல் ஆண்டிலே அதிகலாக லாபம் பெற முடியாது. புதியதாக மார்க்கெட்டிலே போய் நாம் ஆர்டர் எடுக்க வேண்டும் என்றால் மற்ற போட்டி





யாளர்களைவிட விலை குறைத்து தான் கொடுக்க வேண்டியிருக் கும் என்ற பல காரணங்களை வைத்துப் பார்க்கும்போது இதற் காக அவர்கள் செய்தது சரி என்று நான் வாதாடவில்லை. இருக் கக்கூடிய விவரங்கள் கம்மி என்று சுட்டிக்காட்டுவதற்காக கூறு கிறேன். இருந்த போதிலும் என்னுடைய கருத்து தனியாருக்கு வழங்கலாம். ஆனால் 100% எக்ஸ்போர்ட் ஓரியன்டட் யூனிட் டுக்கு மட்டும் தான் வழங்குவோம் என்ற நிலையை மாற்றி யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம் யாருக்கு வேண்டு மானாலும் வழங்கலாம் என்ற அடிப்படையிலே அது வழங்கப் பட வேண்டும். உரிமம் பெற்றவர்கள் தவறாக அல்லது முறை யாக பயன்படுத்தாமல் தடுக்கக்கூடிய விதி முறைகள் ஏற்படுத் தப்பட வேண்டும். டாமினும் தொடர்ந்து இந்த வியாபாரத்தில் இருக்க வேண்டும். டாமின் சரியாக செய்யாது என்று நினைத் தால் டாமினைப் போன்ற இன்னொரு அரசு நிறுவனத்தை ஆரம்பிக்க வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் ஒரு தொழிலில் அரசும், தனியாரும், இருக்கும்போதுதான் தனியார் எப்படி செய்கிறார்கள், அரசு எப்படி செய்கிறது என்று ஒரு வருடைய பெர்பார்மன்ஸை வைத்து மற்றவருடைய பெர்பார் மன்ஸை நாம் பார்க்க முடியும். இறுதியாக ஒன்று. டிஸ்டிரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் சென்டர் போன்ற முக்கியமான தொழில் மையங்களில் இருக்கக்கூடிய ஒரு வருஷம் 2 வருஷத்தில் ரிட்டை யர் ஆகக்கூடிய அதிகாரிகளைத் தான் ஜெனரல் மேனேஜராக போடக்கூடிய பழக்கம் இருக்கிறது. இப்போது அதற்கு பதிலாக ஐ. ஏ. எஸ். ஆபீசர்கள், சப்-கலெக்டர் ட்ரெயினிங் முடித்தவுடன் அவர்கள் வரும்படி யாகச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்களிடம் நேர்மை இருக்கிறது. அடுத்து கலெக்டராக போஸ்டிங் வாங்க வேண்டும் என்பதற்காக தொழிலை திறமையாகச் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது.

புதிய டெக்ஸ்டைல்ஸ் மில்கள் அதிகமாக ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இந்தியாவில் மொத்தம் 28 மில்லியன் ஸ்பிண்டில்ஸ் இருக்கின்றன. அதில் 8 மில்லியன் ஸ்பிண் டில்ஸ் 'ஐடிலாக' இருக்கின்றன. கதிர்கள், நூற்பாலைகள் தமிழகத்தில் நிலைமையும். ஆகவே, அதனைப் போல்தான் ஆரம்பிப்போம் என்பதற்குப் பதிலாக புதிய நூற்பாலைகளை அரசு எடுத்து மாடர்னைஸ் செய்து நலிவுற்ற ஆலைகளை ஏற்படுத்திக் கொடுப்பது நல்லதாக இங்கே வேலை வாய்ப்பை நான் நினைக்கிறேன். ஆறு மணி நேரம் இருக்கும் என்று வரையில், முதல்வர், அவர்கள் ஒரு வேலையைப் பொறுத்த பத்திரிகையிலே பார்த்தேன். அறிவிப்பு செய்து இருப்பதாக எந்த அளவுக்கு அவர்கள் அதை ஆனால் வெளியிலே பேசியது,

[திரு. ரா. சொக்கர்] [1989 மே 3

நினைக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஆறு மணி நேரம் வேலை என்று கொடுத்து விட்டோம் என்றால், (மணியடிக்கப்பெற்றது).

(பிற்பகல் 1.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது. திரு. சொக்கர், சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. ரா. சொக்கர் : ஆறு மணி நேரம் என்று வைத்தால் மற்ற மாநிலங்களில் எல்லாம் 8 மணி நேரம் வேலை என்று அவர் களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டிருக்கும். இங்கே 6 மணி நேரம் என்றால் மூன்று ஷிப்ட்டுகளுக்கு, 4 ஷிப்ட்டுகள் என்று வந்து விட்டால் இங்கிருக்கக் கூடிய தொழிற்சாலைகள் எல்லாம் இரண்டே மாதத்தில் மூடப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இருக்கக்கூடியவர்களுக்கும் வேலைவாய்ப்பு இழக்கக்கூடிய சூழ் நிலை ஏற்பட்டு விடும் என்பதைக் கவனத்திலே கொள்ள வேண் டும்.

'சாட்டர்-டே' ஒர்க்கிங் டே-யாக அரசு அலுவலர்களுக்கு ஆக்குவதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெட்ரோ-கெமிக்கல் பிளாண்ட், பெரிய பிளாண்டாக ஆரம்பிக்க வேண்டும். குஜராத்தில், பரோடாவில் ஆரம்பித்து இருக்கிறார்கள், 300 கோடி ரூபாய் மூலதனத்தில். மகாராஷ்டிராவில் 1400 கோடி ரூபாய் மூலதனத்தில் ஆரம்பித்து இருக்கிறார்கள். கொச்சியிலே 'நாப்தா' கிடைக் கின்றது. தமிழகத்திலும் கிடைக்கப் போகின்றது. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு, பெரிய தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டெல்லியிலே 'பிரகதி மைதான்' உள்ளதைப் போல, சென் னையிலும் ஒரு மைதானத்தை ஏற்படுத்தி, நிரந்தரமாக தொழிற் துறை எக்சிபிஷன்கள் நடத்துவதற்கான ஒரு வழிவகை செய்ய வேண்டும் என்பதையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இன் னும் எத்தனையோ இருக்கின்றன. திரு. பீட்டர் ஆல்போன்ஸ் ஒன்று சொல்லி இருக்கிறார். அதை மட்டும் சொல்கிறேன். இல்லையெனில் கோபித்துக் கொள்வார். குற்றாலம் நகரியத் திற்கு, குற்றாலம் ரோட்டரி கிளப், எலக்ட்ரானிக் கடிகாரம் வாங்கித் தருவதற்காக 'எல்காட்' நிறுவனத்திற்கு 17,000 ரூபாய் செலுத்தி, ஒன்றரை வருடம் ஆகி விட்டதாம். அவர் கள் இன்னும் கடிகாரம் வாங்கிக் கொடுக்க வில்லை என்று திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சொல்கிறார்கள். திரு. ராம சுப்பு அவர்கள் சொல்கிறார்கள், தென்காசி தாலுக்காவில்..... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சியிலே 26 பேரும் சொல்வதைப் பேசுவது என்பது முறையாக இருக்காது. ஏற்கெனவே நிறைய நேரம் ஓடியிருக்கிறது. அடுத்து, திரு. எஸ். திருநாவுக்கரசு,



1989 மே 3]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மாநிலத்தின் வளர்ச்சி, அந்த மாநிலத்தில் ஏற்படுகிற தொழில் வளர்ச்சியைப் பொறுத்துத் தான் அமையும். மக்கள் தொகைப் பெருக்கமும், அதனால் இளைஞர்கள், தொழில் நுட்பக் கல்வி படித்தவர்கள் மட்டுமல்லா மல், பொதுவாக படித்திருக்கிற இளைஞர்கள் அல்லது படிக்கா மல் கூட நல்ல உடல் வலிவோடு எந்தப் பணியையும் செய்கிற ஆற்றலோடு இருக்கிற இளைஞர்கள் ஆகியோருக்கு, சிறிய, நடுத்தர, பெரிய தொழில்களின் பெருக்கத்தாலும், வளர்ச்சி யினாலும் தான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதத்தை நம்மால் தரமுடியும். தொழில் வளர்ச்சிக்கு மாநில அரசு எவ் வளவு முயற்சிகளை, நிதி உதவிகளைச் செய்தாலும் எந்த முயற்சிகளை மேற்கொண்டாலும் மிக அடிப்படைத் தேவை யாக இருப்பது மின்சாரம் தான். மின்சார உற்பத்தியிலே உற்பத்திப் பெருக்கத்திலே அதிகமான முதலிடமும், கவனமும் செலுத்தினால்தான் தொழில்கள் வளர முடியும். மின்சார உற்பத்திக்கு 1988-89-இலே ஒதுக்கப்பட்டிருந்த தொகை ஏறக்குறைய சுமார் 350 கோடியாக இருந்தது. நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியதைப்போல, முதலில் மின் உற்பத்திக்கான திட்டங்களுக்கு விரிவாக்கங்களுக்கு ஏறக்குறைய 500 கோடி ரூபாய்க்கு திட்டமிடப்பட்டி ருந்தது. நிதி பற்றாக்குறை காரணம் காட்டப்பட்டு சுமார் 150 கோடி ரூபாய்க்கான மின் உற்பத்திக்கான விரிவாக்க திட்டங்களுக்கு இந்த ஆண்டு மட்டுமே குறைக்கப்படுகிற சூழ் நிலை ஏற்பட்டு இருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்று ஆகும். இதனால் தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டில் தடைப் படக்கூடிய, எதிர்பார்க்கிற முன்னேற்றம் ஏற்படாமல் இருக்கக் கூடிய அந்த வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. பட்ஜெட்டில் சொல்லுகிறபோது 500 கோடியிலிருந்து 350 கோடியாக குறைக் கப்படுகிறது. சுமார் 150 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் விடப்படுகிறது என்று பட்ஜெட்டில் சொல்லப்பட்டது. 1989—90-ல் சுமார் 420 கோடி ரூபாய்க்கு மின் உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்து இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு தூரத்திற்கு நிதி ஆதாரம் எந்த வகையில் பெருக்கி அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கங்கள் இல்லை என்றாலும் இது போதுமானதாக இல்லை. மின் உற்பத்திக்கு அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டிய அவசியம் ஆகிறது. எனவே வீடுகளுக்கு மின்சாரம் இல்லை. விவசாயிகளுக்கு போதுமான நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்பட முடியவில்லை என்கிற இது போன்ற பிரச்சினைகள் இருக்கிறபோது தொழிற் சாலைகளுக்கு மின் வெட்டு கொண்டு வரவேண்டிய அந்த சூழ் நிலையும் ஏற்படுகிறது. அதனால் இருக்கிற தொழில்களும் நசிந்து போகின்றன. ஏற்கனவே இயங்கிக் கொண்டு இருக்கிற தொழில்களும் பாதிக்கின்ற அந்த சூழ்நிலையும் ஏற்படுகிறது. எனவே வருங்காலங்களில் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறபோது அதிகமான மின்சாரத்தைப் பயன்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மே 3

படுத்துகிற தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அதிகம் தராமல் பொதுவாக மின்னணுவியல், எல்க்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் இப்படி பல்வேறு துறைகளில் மின்சாரம் மிக குறைவாக பயன்படுத்தக்கூடிய அந்த தொழிற்சாலைகளுக்கு சிறு தொழில்களுக்கு அதிகமான கவனத்தை மாநில அரசு செலுத்துமானால் தொழில் வளர்ச்சி அதிகமாக ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 1986-இல் தொழில் மானியக் கோரிக்கையில் அப்போது ஏறக்குறைய 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அது போல் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவுகளுக்காக 1986-ல் 13 கோடியே 65 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. இப்போது முதலில் நீங்கள் கொடுத்த மானியக் கோரிக்கையில் நீங்கள் முதலில் கேட்கிறபோது அதிலே சுமார் 10 கோடி ரூபாய் தான் கேட்கப்பட்டு இருந்தது. ஆனால் இப்போது கொஞ்சம் அதிகமாக்கப்பட்டு 20 கோடி ரூபாய் கேட்கப்பட்டிருக்கிறது. மொத்தம் மாநிலத்தினுடைய வரவு-செலவு ஆண்டுக்கு ஆண்டு கூடுகிறபோது அந்த ரேஷியோவை பார்த்தோம் என்றால் அதற்கு ஏற்ற வகையில் தொழில்களுக்காக ஒதுக்கீடு செய்து இருக்கிற ரூபாய் போதுமானது அல்ல என்பதை இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து அந்த ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

மாநில அரசு என்னதான் முயற்சி எடுத்தாலும், முயற்சி செய்தாலும் வரவினங்கள், சம்பளங்கள் போக சமுதாய நலத் திட்டங்களுக்காக அது தி.மு.க. அரசாக இருந்தாலும், அ.இ. அ.தி.மு.க. அரசாக இருந்தாலும் முன்னுரிமைக் கொடுத்து அதற்கு எல்லாம் ஒதுக்கியது போக மீதம் மிஞ்சி மிஞ்சி போனால் 20 கோடி 25 கோடி, 30 கோடி ரூபாய் தான். 4000 கோடி 4500 கோடியில், தொழில் வளர்ச்சிக்கு நாம் ஒதுக்கக் கூடியது இந்த ஆண்டு பார்த்தால் 25 கோடி ரூபாய்தான் பெரியத் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள் எல்லாம் சேர்த்தால் 35, 40 கோடி ரூபாய்க்கு மேல் மொத்தமாக தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்க முடியாத சூழ்நிலை மாநில அரசுக்கு இருக்கிறது. மாநில அரசு அதை அதிகரிக்க வேண்டும்; அது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் இந்த கஷ்டத்தை நீக்குகிற பொறுப்பு மத்திய அரசுக்கு அதிகமாக இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். முன்பு எல்லாம் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோதும் சரி, அல்லது மற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து பேசுகிறபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தூங்கிக் கொண்டு இருக்கிறது, இப்போது கூட அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கூட சொன்னார்கள்; இப்போதுதான் தொழில்



1989 மே 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

(பிற்பகல் 1-10)

துறையே விழித்து இருக்கிறது என்று கூட சொன்னார்கள். மற்ற சட்ட மன்ற உறுப்பினர்களும் இதுபற்றி பேசினார்கள். ஆனால் உண்மையான நிலை என்னவென்றால், இதற்கு முன்னாலே காங்கிரஸ் காலத்திலே அதிலும் குறிப்பாக இன்றைக்கு இருக்கிற ஜனாதிபதி அவர்கள் அன்றைக்கு தொழில் அமைச்சராக இருந்தபோது தமிழ் நாட்டிலே தொழில் புரட்சியெல்லாம் நடந்தது என்றெல்லாம் சொல்வார்கள். அன்றைக்குக்கூட மாநில அரசினுடைய நிதி ஒதுக்கீட்டையும் நாம் கணக்குப் பார்த்தால் அதிலும் நம்மை மாதிரித்தான் அவர்களும் அன்றைக்குச் செய்திருக்கிறார்கள். ஏராளமான பெரிய தொழில்கள், மத்திய அரசே தமிழகத்தில் அன்றைக்கு துவங்கியது. சென்டிரல் இன்வெஸ்ட்மெண்ட் தமிழ் நாட்டிலே அன்றைக்கு ஏறக்குறைய 76-க்கு முன்னாலே, இன்னும் சொல்லப் போனால் தி.மு.க. ஆட்சிக்கு முன்னால் 8-லிருந்து 10 சதவிதம் வரை இருந்தது. அந்த சென்டிரல் இன்வெஸ்ட்மெண்ட், அதாவது மத்திய அரசாங்கத்தினுடைய தொழில் முதலீடு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே போய் இன்றைக்கு 4 சதவீதத்திற்கும் குறைவாக கீழே வருகிற அந்தச் சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிற காரணத்தால் தான் அதிகமான தொழில் பெருக்கத்தை தொழில் வளர்ச்சியை நம்மாலே ஏற்படுத்த முடியவில்லை. ஒரு ரயில் பெட்டித் தொழிற்சாலையோ, திருச்சியிலே இருப்பது போல தொழிற்சாலையோ வருகிறபோது அதற்கு பி.எச்.இ.எல். ஆண்டுக்கு 25 கோடி, 200 கோடி ரூபாய் தேவைப்படும். ஆனால் மத்திய அரசு ஒதுக்கி 30 கோடி ஒதுக்குகிறோம். 300 கோடி, 300 கோடி என்று னால் ஒரே தொழிற்சாலைக்கு அப்படி தொழிற்சாலையைத் தொடங்கு வருகின்றபோது, எந்த மாவட்டத்திலே அந்தத் தொழிற்சாலை, கின்றபோது, அந்த மாவட்டத்தைச் சுற்றியிருக்கிற ஏற்பட்டிருக்கிறதோ விதமான சிறு தொழில்கள் மாவட்டங்களில் பல்வேறு வளர்ச்சி அடைந்து அதனாலே அந்தப் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி அடைகிற வாய்ப்புகள் பகுதிகள் முழுவதும் மத்திய அரசினுடைய தொழில் இருக்கிறது. எனவே 'சென்டிரல் இன்வெஸ்ட்மெண்டை' அதிகரிக்கச் முதலீட்டை அதிகரிக்க வேண்டுமென்று மாநில அரசு செய்ய வேண்டும்; அனைத்திந்திய அண்ணா மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நானும் இந்த சட்ட மன்றத்தின் வாயிலாக தமிழ் நாட்டிற்கு குறைக்கப் பட்டு வருகின்ற தொழில் முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளை, கோரிக்கையை, இந்த வாய்ப்பை பயன்படுத்தி நானும் எடுத்துக் கூற கடமைப் பட்டிருக்கிறேன். மத்திய அரசினுடைய தொழில் முதலீடு, 'சென்டிரல் இன்வெஸ்ட்மெண்ட்' குறைந்து கொண்டிருக்கிற அதே நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகம், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது ஏறக்குறைய 3½,
4 ஆண்டுக் காலம் தொழில் அமைச்சராக நானும் இருந்தேன்.
அப்போதும் அல்லது அதற்குப் பின்னாலேயும் சரி கடந்த
காலங்களிலே தொழில் துறையிலே, தமிழ் நாட்டிலே,
ஒன்றுமே நடக்கவில்லை என்பதைப் போல சொல்லப்படுகிற
குற்றச்சாட்டுகளிலே கொஞ்சம் கூட நியாயம் இல்லை
யென்பதை நான் முதலிலே சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன். அதற்கு நான் இங்கே முன்னாலே ஒரு தடவை இந்த
மன்றத்திலே சுட்டிக்காட்டியதைப் போல, மத்திய தொழில்
அமைச்சராக இருக்கின்ற திரு. வெங்கல்ராவ் அவர்கள்
சமீபத்திலே கூட அவர் சொன்ன அந்த பத்திரிகைக் குறிப்பை
இங்கே நான் படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்
ஏற்கெனவே இருந்த அரசைப் பாராட்டி, இந்தியாவிலேயே
தமிழ் நாடு எந்த வகையிலே, தொழில் துறையிலே முன்னேறி
இருக்கிறது என்பதற்காக அவர் சொன்ன அந்த வாசகங்களை
நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"Tamil Nadu had played an important role in the industrial
transformation of the country. It occupied second position in terms
of net value added by factory sector and third place in terms of
value of gross output in the factory sector. I's share in Letters
of Intent had gone up from 5.5% in 1980 to 9.2% in 1986. In
Central Investment Subsidy too, the State had registered 180%
of growth as against the national average of 163%
என்று மத்திய அமைச்சர் திரு. வெங்கல்ராவ் அவர்களே
இங்கே வந்தபோது சுட்டிக்காட்டியிருப்பதை இங்கே மேற்
கோளாகக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே
தமிழ் நாட்டினுடைய தொழில் வளர்ச்சியை மற்ற மாநிலங்
களோடு ஒப்பிடுகிறபோது குறையவில்லை என்பதற்கு மத்திய
அமைச்சரே சொன்ன இந்த வாசகத்தை நான் இங்கே குறிப்பிடு
வது பொருத்தமாக இருக்கும்.

அதைப்போல 1976–77-லே எங்கள் ஆட்சி ஏற்படுகின்ற
போது, ஏறக்குறைய சிறு தொழில்களுடைய எண்ணிக்கை
சுமார் 20 ஆயிரமாக இருந்தது, அதாவது 1978–79-லே
இருந்தது. இப்போது சுமார் 60 ஆயிரத்துக்கு மேல் சிறு
தொழில்களுடைய எண்ணிக்கை, 1987-லே பெருகி இருக்கிறது
என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
1976–77-லே தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்ற
தொழிலாளர்களுடைய எண்ணிக்கை
6 இலட்சம். 6½ இலட்சமாக இருந்தது. ஏறக்குறைய
சாலைகளிலே தொழில் ஆற்றுகின்ற அந்தத் தொழிற்
தொழிலாளர்களுடைய



எண்ணிக்கை 25 இலட்சத்திலிருந்து 27 இலட்சம், 30 இலட்சம்
வரை உயர்ந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல மத்திய அரசிடமிருந்து தொழில் உரிமங்கள்
(லெட்டர் ஆஃப் இன்டென்ட்) பெறுவதிலே, ஏறத்தாழ 1980-லி
ருந்து 1986 வரையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருந்திருக்
கிறது. மொத்தமாகப் பார்த்தால் தொழில் உரிமங்கள் பெறு
வதில் மகாராஷ்டிரம் முதல் இடத்தைப் பெறுகிறது. 1980
முதல் 1986 வரையில் மகாராஷ்டிரம் 859 தொழில் உரிமங்களை
பெற்றிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்
தில் இருப்பது குஜராத், 585 பெற்றிருக்கிறது. தமிழ்நாடு மூன்
றாவது இடத்தில் இருக்கிறது. 506 உரிமங்கள், பெற்றிருக்கிறது
அதற்கு அடுத்து பஞ்சாப் 426 உரிமங்களையும் யு. பி. 400
உரிமங்களையும் பெற்றிருக்கின்றன.

அது மட்டுமல்ல. பின்தங்கிய நிலையில் 1980 முதல் 1986
வரையில், இன்னும் சொல்லப்போனால் 1987 வரையில்-அந்த
ஆண்டில் பார்த்தால் சராசரியாக லெட்டர் ஆஃப் இன்டென்ட்
ஆண்டு ஒன்றுக்கு 100 வந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது
இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதை பார்த்
தால் 1988-89-ல் மத்திய அரசு 32 தொழில் உரிமங்கள்தான்
கொடுத்திருக்கிறது என்பதைக் காண முடிகிறது. அது மிகவும்
வருந்துவதற்குரியது. அதற்கு என்ன காரணம்? இங்கிருந்து
அனுப்பிய மனுக்கள் குறைவா அல்லது அனுப்பிய மனுக்கள் மத்
திய அரசிடம் தேங்கியிருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

சராசரியாக ஆண்டுக்கு 100 லெட்டர் ஆஃப் இன்டென்ட்
வந்ததற்குப் பதிலாக இந்த ஆண்டிலே சுமார் 32 தான் கிடைத்
திருக்கிறது. இது மிக மிக வருத்தத்திற்குரிய ஒன்று. பின்தங்
கிய மாநிலங்களில், பின்தங்கிய பகுதிகளில் ஒவ்வொரு மாவட்டத்
திலும், தாலுகாவிலும் தொழில் தொடங்கும்போது மத்திய அரசு
மானியம் (சப்சிடி) கொடுக்கிறது. அந்த வகையிலும் அதாவது
பின்தங்கிய பகுதியில் தொழில் தொடங்குவதற்கு மத்திய அரசின்
சப்சிடியைப் பெறுவதிலே தமிழ்நாடு முதலிடத்தில் இருந்தது.
ஐ.டி.பி.ஐ. போன்ற தொழில் வளர்ச்சிக்கு உதவுகிற நிறுவனங்
களிடமிருந்து கடன் பெறுவதிலே தமிழ்நாடு மூன்றாவது இடத்தில்
இருந்தது. எல்காட், தமிழ்நாடு லெதர் கார்ப்பரேஷன், மாக்ன
சைட் கார்ப்பரேஷன், மினரல் கார்ப்பரேஷன், 200 கோடி ரூபா
யில் பத்திரிகைக் காகிதம் (நியூஸ் பிரின்ட்) தயாரிக்கும் தொழிற்
சாலை அதைப் போன்று சக்கரை ஆலைகள் கடந்த ஆண்டு 13,
பஞ்சாலைகள் 5, ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை 30 கோடி ரூபா
யில் ஒன்று, சிமின்ட் தொழிற்சாலை ஒன்று—இப்படி பெரிய
பெரிய தொழிற் சாலைகள் கடந்த காலங்களிலே முன்னுரிமைப்

பெற்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தி
தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

தொழிற்சாலைகள் மட்டுமல்ல. தொழில் நிறுவனங்கள்.
புதிய புதிய கார்ப்பரேஷன்கள் எல்லாம் ஏற்கனவே நான் சொ
னதைப்போல இதற்கு முந்தைய ஆட்சியில், மாண்புமிகு புரட்சி
தலைவர் காலத்தில் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டன.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில்
சிப்காட் முக்கிய இடத்தை வகிக்கிறது. சிப்காட் நிறுவனத்தின்
மூலமாக 500 ஏக்கர், 1000 ஏக்கர் நிலத்தை எடுத்து, குறிப்பாக
மிகவும் பின்தங்கிய பகுதிகளிலே இப்படி நிலத்தை எடுத்து, பெரிய
பெரிய 'காம்ப்ளக்ஸ்' நிறுவி, அங்கே அடிப்படை வசதிகளைச்
செய்து கொடுத்து, தொழில் முனைவர்களுக்கு தொழில் தொடங்
குவதற்கான உற்சாகத்தை ஏற்படுத்தி வருகிறது. அந்த வகையி
யிலே 1967-க்கு முன்னால் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த
சிப்காட் காம்ப்ளெக்ஸ் தொடங்கப்பட்டது ஹோசூரில் மட்டும்
தான். அதற்குப் பின்னால் 1967 முதல் 77 வரையில் இராணிப்
பேட்டையில் ஒன்று தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது.
1977-க்குப் பின்னால் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். ஆட்சியில்
ஏழு இடங்களில் தொடங்கப்பட்டது. புதுக்கோட்டை, மானா
மதுரை, கும்மிடிப்பூண்டி, கடலூர், தூத்துக்குடி இப்படி ரீஜன
லாகப் பிரித்து ஏறத்தாழ 7 இடங்களில் பெரிய பெரிய தொழில்
பேட்டைகள் தமிழ்நாட்டிலேயே தொடங்கப்பட்டன.

அது மட்டுமல்ல. மத்திய அரசுடன் போராடி, பம்பாயில்
இருப்பதைப்போல 'ப்ரீ ட்ரேட் சோன்' ஒன்று தமிழ்நாட்டில்
சென்னையிலே அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி,
தமிழ்நாட்டிற்கு அதைப் பெற்றோம்.

அது மட்டுமல்ல. தமிழ்நாட்டில் ஏழு இடங்களில் தொழில்
பேட்டைகளை அமைத்தது மட்டுமல்ல. அன்றைக்கு அரசின்
கொள்கை என்னவென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு
தொழில்பேட்டை சிப்காட் மூலம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற
முறையிலே செயல்பட்டு, முதலில் 7 இடங்களில் அமைத்தோம்.
நான் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்
டுக் கொள்கிறேன். அதைத் தொடர்ந்து, பாக்கி இருக்கிற
எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒரு இடத்தை தேர்வு
செய்து, சுமார் 300 ஏக்கர், 500 ஏக்கர் நிலத்தை மாவட்டத்தின்
தலைமையிடத்தை ஒட்டி இருக்கிற இடத்தில் தேர்வு செய்து,
சிப்காட் தொழில் பேட்டைகளைத் தொடங்கினால் அந்த அந்த
மாவட்டத்தில் இருக்கிறவர்களும் பக்கத்தில் இருக்கிறவர்
களும் அங்கே வந்து தொழிற்சாலைகளைத் தொடங்க, இட
வசதி, தண்ணீர் வசதி, இதர வசதிகள் எல்லாம் கிடைக்கின்ற கார
ணத்தினாலே அந்த மாவட்டத்தில் தொழில் தொடங்க வாய்ப்பு



இருக்கிறது. அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற இளைஞர்
களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கின்ற நிலைமையும் அத
னாலே ஏற்படுகிறது. நான் கூட எதிர்பார்த்தேன். 5 இடம்,
7 இடம் என்று அறிவிப்பீர்கள் என்று எதிர்ப்பார்த்தால், பட்
ஜெட்டிலே சொல்கிறபோது 1989-90-ல் இராணிப்பேட்டை,
ஹோசூர் போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்ட தொழில் மையங்
கள் போல் புதிய 3 பயிற்சி மையங்கள் துவங்கப்படும்; ஒவ்வொரு
வளர்ச்சி மையத்திற்கும் உரிய முதலீடு சுமார் 30 கோடியாக
இருக்கும் என்று நீங்கள் கூறியிருந்தீர்கள். அப்படி ஒரு தொழில்
பேட்டைக்கு 30 கோடி ரூபாய் என்றாலும் கூட மூன்று தொழில்
பேட்டைக்கு 90 போடி ரூபாய் தேவை. ஆனால் மொத்தமே
இந்த மானியக் கோரிக்கையிலே நீங்கள் கேட்டிருப்பது 25 கோடி
தான். இப்போது கூடியிருக்கிறது என்று நீங்கள் சொன்னாலும்
கூட எந்த மாவட்டத்திலும் சிப்காட் மூலமாகப் பெரிய தொழில்
பேட்டைகள் துவங்குகிற திட்டம் எதுவும் அறிவிக்கப் படாதது
வருத்தத்திற்குரியது. அதிலே முதலமைச்சர் அவர்கள் கவனம்
செலுத்தி குறைந்த பட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு
தொழில் பேட்டை என்பதுடன் தாலுகா அளவிலும் சின்னச்
சின்ன தொழில் பேட்டைகளை சிட்கோ மூலமாகத் துவங்க
வேண்டும். அப்போதுதான் தொழில் பெருகும்.

(பிற்பகல் 1-20)

தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் தொழில் துவங்க
வருகிறவர்கள் மிகக் குறைவு. இப்படிச் செய்தால் அவர்களை
உற்சாகப்படுத்துகிற வகையில் அமையும். எனவே, ஒவ்வொரு
பகுதியிலேயும் இதுபோல் துவங்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். சிப்காட் மூலமாகத்தான் தொழில் வளர்ச்சியை
அதிகப்படுத்த முடியும்.

அதிகமாக சிறு தொழில்களுக்குக் கடன் கொடுப்பது தமிழ்
நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகும். அதிலே கூட புதிய
திட்டங்களை அறிவிப்பீர்கள் என்று எதிர்பார்த்தோம். இதிலே
கடன்வழங்குகிற எல்லா அதிகாரமும் நான் அமைச்சராக இருந்த
போது சென்னையிலே தான் இருந்தது. ரீஜனல் அலுவலகம்
என்ற வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதனுடைய கிளை
கள் இருக்கவேண்டும் என்று ஆரம்பித்தோம். இப்போது கூட
புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற பல மாவட்டங்களில் தொழில்
முதலீட்டுக் கழகத்தினுடைய கிளைகள் இல்லாமல் இருக்கின்றன.
எல்லா இடங்களிலும் அந்தக் கிளைகள் இருக்கவேண்டும். அடுத்து
கடன் கொடுக்கிற அதிகாரத்தை அந்த லிமிட்டை நீங்கள்
அதிகரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் அது அந்தந்தப் பகுதி
யிலே தொழில் துவங்குகிறவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களைக்
குறைக்கும். எனவே, அதையும் இந்த நேரத்தில் இந்த அரசு
பரிசீலிக்க வேண்டும்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மே 3

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தவரை
யில் ஒரு புதிய திட்டம், சிறப்புத் திட்டம் என்று அறிவித்திருக்
கிறீர்கள். அது தொழில் வளர்ச்சிக்குரிய சிறப்புத்திட்டமா என்று
பார்த்தால் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு 50 சதவீதக் கடன்,
37.5 சதவீதம் மானியம், ஆட்டோ ரிக்ஷா வாங்கக் கடன்,
மோட்டார் வாங்கக் கடன் என்று 'இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்
மெண்ட் கார்ப்பரேஷன்' மூலமாக சமூக நலத் திட்டங்களை அறி
வித்திருக்கிறீர்கள். இது உண்மையிலேயே வருந்துவதற்குரியது.
சோஷியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது. எனவே,
ஆட்டோ ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா போன்ற திட்டங்களை எல்
லாம் அந்தத் துறையின் வாயிலாக எவ்வளவு வேண்டுமானாலும்
நீங்கள் ஏற்படுத்தலாம். எனவே, அவ்வாறு செய்யாமல் இந்த
நிறுவனத்தின் நோக்கங்களைத் திசைதிருப்புவது சரியில்லை. உண்
மையிலேயே தொழில் வளர்ச்சிக்காக தமிழ்நாடு தொழில்முதலீட்டுக்
கழகம் இயங்குகிற விதத்தில் திட்டங்களைத் தீட்டவேண்டும்
என்று நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அடுத்து டிட்கோ. ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறீர்கள்.
டிஸ்இன்வெஸ்ட்மெண்ட் பாலிசி என்று சொல்லி டிட்கோவின்
மூலம் தொழில் துவங்குபவர்களுக்கு 25 சதவீதம் கொடுக்கின்ற
வகையிலும், மீதிப்பணத்தை தொழில் முனைவோர்கள் பொது
மக்களிடத்திலிருந்து வசூல் செய்து கொண்டு ஜாயிண்ட் செக்
டார் நிறுவனமாக அதாவது கூட்டுத்துறைத் திட்டமாக அந்தத்
திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. தமிழ்நாட்டில்
சுமார் 50, 55 தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்
றன. அதிலே ஜாயின்ட் செக்டாரிலே ஏறக்குறைய 34
தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதுபோல்
ஜாயின்ட் செக்டாரிலே ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு கெமிக்
கல்ஸ் என்ற ஒரு நிறுவனம் தனியாருக்குக் கொடுக்கப்பட்ட
போது இன்றைய முதலமைச்சர் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலை
வராக இருந்தபோது கடுமையாக ஆட்சேபித்து, இலாபத்தில்
நடக்கிற தொழிற்சாலைகளை எல்லாம் எப்படி நீங்கள் கொடுக்
கலாம் என்று கேட்டார்கள்.

ஆனால் இன்றைக்கு நீங்களே அதை கொள்கையாகக்
கொண்டு வந்து டிஸ்இன்வெஸ்ட்மெண்ட் பாலிசி என்று சொல்லி
அந்த தொழிலை ஜாயின்ட் செக்டார் ஆரம்பித்த பின்னாலே,
லாபத்திலே நடக்கிறபோது அந்த தொழிலை தொழில் முனை
வர்கள், தொழில் அதிபர்கள் அதை திருப்பிக்கேட்கிறபோது,
அவர்களுக்கே அந்த தொழிலை திருப்பிக் கொடுத்து அந்த
பணத்தை வாங்கி புதிதாக தொழில் தொடங்கப் போகி
றோம், அந்த நிறுவனத்தின் வாயிலாக, அது தேவைக்கு ஏற்ப
முடிவு செய்யப்படும் என்று இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்
றார்கள். இதிலேயும் என்ன நடக்கும் என்று சொன்னால்



1989 மே 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஜாயின்ட் செக்டாரிலே நீங்கள் ஆரம்பித்ததற்குப் பின்னால் எது
எல்லாம் லாபத்திலே நடக்கிறதோ அதை எல்லாம் தொழில் அதி
பர்கள் கேட்பார்கள். எது நஷ்டத்திலே இருக்கிறதோ அதை
யாரும் கேட்கமாட்டார்கள். டிட்கோ கையிலே எது இருக்கும்
என்று சொன்னால், கடைசியிலே நஷ்டத்திலே இயங்குகின்ற
தொழில்கள்தான் இருக்கும். லாபத்தில் இயங்குகின்ற தொ
ழில்களை எல்லாம் தொழில் தொடங்குபவர்கள் அந்த தொழி
லை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். ஆகவே இதிலே
தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இன்
றைக்கு டிட்கோவில் நீங்கள் அரசினுடைய உதவியாக தருகின்ற
அரசினுடைய தொகையை அதிகரிக்கலாமே தவிர இந்த டிட்
கோ நிறுவனத்தின் வாயிலாக அதிகமாக தொழில் தொடங்க
முயற்சிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஜாயின்ட்
செக்டாரிலே தொடங்கவேண்டுமே தவிர, லாபத்திலே இருப்ப
தையெல்லாம் கொடுத்துவிட்டு, நஷ்டத்திலே இருப்பதை
யெல்லாம் வைத்துக்கொண்டால் அதனாலே. அந்த நிறுவனமே
பாதிக்கப்படுகின்ற சூழ்நிலைதான் இப்போது ஏற்படும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அதுபோல, அசோசியேட் செக்டார் என்று சொல்லி இன்
னொரு பிரிவு புதிதாக ஆரம்பிக்கின்றார்கள். ஏற்கெனவே
26 சதவிகிதம் இன்வெஸ்ட் பண்ணவேண்டும் என்று இருந்
தது. இப்போது 11 சதவிகிதம் இன்வெஸ்ட் பண்ணினால் போ
தும் என்று சொல்லி ஒரு பொது செக்டார் அதிலே புதிய பிரிவு
ஆரம்பிக்கிறார்கள். அதிலேகூட இது எவ்வளவு தூரத்திற்கு
வெற்றிகரமாக தமிழ்நாட்டிலே நடக்கும்? மகாராஷ்ட்ராவி
லே நடக்கிறது என்று சொல்கின்றார்கள். மகாராஷ்ட்ராவிலே
நடக்கலாம். ஏனென்றால் அங்கே வசதியானவர்கள் தொழில்
தொடங்க பலபேர்கள் போட்டிபோட்டுக்கொண்டு வருகின்
றார்கள். தமிழ்நாட்டிலே ரிஸ்க் டேக்கிங் மென்டாலிட்டி
பொதுமக்களுக்கு, வசதியானவர்களுக்கு குறைவு. அந்த ரிஸ்க்
டேக்கிங் மன நிலை இல்லாதவர்களுக்கு அதிகமான பணத்தை
அவர்கள் இன்வெஸ்ட் பண்ண முன்வரமாட்டார்கள். 26 சதவிகிதம்
என்பது இப்போது 11 சதவிகிதம் ஆக குறைக்கப்படுகிறபோது
அதனாலே தொழில் அதிகமாக வாய்ப்பு இருக்குமா என்றால்,
குறைவாகத்தான் இருக்கிறதே தவிர, அதிலே அதிகமான
பிரகாசமான நிலைமைகள் ஏற்பட வாய்ப்புகள் இல்லை.
ஆனால் முயற்சி செய்யலாம். அதிலே தவறு இல்லை. அசோ
சியேட் செக்டாரில் 26 சதவிகிதம் என்பதற்கு பதிலாக 11
சதவிகிதம் கொடுத்து நீங்கள் முயற்சிக்கலாம். அதிலே தவறு
இல்லை. (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன்.
இந்தப் பொறியியல் துறைக்காக டைரக்டரேட் தனியாக ஏற்படுத்
தப் டிப்பார்ட்மெண்டுக்கு தனி டைரக்டரேட் புட்சித்
தலைவர் அவர்கள், எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் உரு
வாக்கப்பட்டது. இதிலே இப்போது நீங்கள் ரீஜினல் அலுவலகங்
களை தொடங்கவேண்டும். இப்போது சென்னையிலேதான்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மே 3

எல்லாமே இருக்கின்றது. அதிகாரம் இருக்கின்றது. ரீஜினல் அலுவலகங்கள் மூலமாக பரவலாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரியில் ஏதோ தங்கம் கிடைக்கிற வாய்ப்பு இருக் கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் கவனத் தில் வைத்து அதை பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதுபோல பழுப்பு நிலக்கரி 100 மில்லியன் டன் கிடைக் கும் என்று சொல்லப்படுகிறது. கரூர்-புதுக்கோட்டையில் மணி கற்கள் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொன்று தஞ்சை, தென்னாற்காடு, மாவட்டங்களில் மண்ணெண்ணை கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அதை பயன்படுத்த அந்த பகுதியிலே பெட்ரோ கெமிக்கல்ஸ் காம்ப்ளெக்ஸ் தஞ்சை மாவட்டத்திலே ஆரம்பிக்கவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில் கர்நாடகத் தில் 30 இருக்கின்றன. ஆந்திராவில் 35, 40 இருக்கின்றன. தமிழ்நாட்டிலேதான் சென்ற ஆண்டு ஏறத்தாழ கூட்டுறவுத் துறையிலே 4, தனியார் துறையிலே 5 லைசென்ஸ் கொடுத்தார்கள். அதிலே பக்கம் 9-லே பத்தி 27. இந்த அரசின் கொள்கை இனிமேல் தனியாருக்குக் கொடுப்பதாக இல்லை. பொதுத் துறையிலேதான் செய்வோம் என்று சொல்லியிருக் கின்றார்கள். இது ஒரு முற்போக்கான சிந்தனை என்ற அளி லே சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் நடைமுறை படுத்து கிறபோது ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கின்றார்கள் என்று சொன்னால் ரூ. 20, 25 கோடி ஆகும். சென்ற ஆண்டு கூட தனி யாருக்கு கொடுத்த காரணத்தினாலே 5 தொழில்கள் தனியார் லைசென்ஸ் வாங்கியவர்கள் எல்லாம் கட்ட ஆரம்பித்துவிட் டார்கள். ஆனால் அரசுத் துறையிலே கூட்டுறவுத் துறையி லே அரூர், சிதம்பரம், செய்யாறு, அறந்தாங்கியிலே வாங்கி னோம் என்றாலும் சிதம்பரம், செய்யாறுக்குத் தான் இப்போது இயந்திரங்களை வாங்குவதற்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. இன்னும் அரூர், அறந்தாங்கியிலே வேலை தொடங்கவில்லை. அதிலே குறிப்பாக அறந்தாங்கியைப் பொறுத்தவரையில் ஷேர் கேபிடல் கலெக்ட் பண்ணுகிறபோது, ரூ. 50 லட்சம் தான் சேர்ந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி என்ற காரணத்தினாலே அந்த தொகுதியிலே ரூ. 50 லட்சம் ஷேர்கேபிடல் தான் கலெக்ட் பண்ணமுடியும். அதற்குமேலே ஒரு கோடி, 2 கோடி ரூபாய் வசூல் பண்ணமுடியாது. எனவே அரசினுடைய ஷேர் கேபிடலை இன்கிரீஸ் பண்ணி, அதிகப் படுத்தி, அந்தப்பகுதியிலே இந்த தொழிற்சாலை விரைவில்



1989 மே 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

வரவேண்டும். ஏனென்றால் அங்கே எஸ்.ஓ. எல்லாம் போட் டாயிற்று, இடம் எல்லாம் தேர்வு செய்தாகிவிட்டது. ஆனால் இன்னும் எந்த அடிப்படை வேலையும் நடக்கவில்லை. எனவே சர்க்கரை ஆலை அந்த பகுதியிலே வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே பொதுத்துறையிலேதான் போடு வோம். கூட்டுறவுத் துறையிலேதான் போடுவோம் என்று சொன்னால் நீங்கள் அரசுக்கு பரிந்துரை செய்கிறபோது மாநில வாரியாக கேட்கிறபோது, பொதுத் துறைக்கு மற்ற மாநிலத்திலே ஒன்று இரண்டு கொடுத்தால் ஆந்திராவிற்கு 5 கர்நாடகத்திற்கு 5 என்று சொல் கிறபோது, நம் மாநிலத்திற்கு வேண்டாம் என்று சொன்னால் நமக்கு தரமாட்டார்கள். அதனாலே பாதிக்கப்படுவது தமிழ் நாட்டிலே இருக்கின்ற விவசாயிகள் தானே தவிர தொழில் வளர்ச்சி. தானே தவிர, வேறு அல்ல. எனவே இதில் தனியார்கள் யாராவது முன் வந்தால், அவர்களை உற்சாகப்படுத்துவதில், ஊக்கப்படுத்துவதில் தவறில்லை. ஏனென்றால் லைசென்ஸ் தருவது மத்திய அரசு. நாம் கொடுப்ப தாக இருந்தால் கூட, ரெஸ்ட்ரிக்ட் பண்ணி, எல்லாவற்றையும் கூட்டுறவுத் துறையிலும், பொதுத் துறையிலும் ஆரம்பிக்க லாம். மத்திய அரசு லைசென்ஸ் தரும்போது, தனியார் முன் வந்து, அதைப் பெற்றுக்கொள்ள முடியுமானால், அவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி, தனியார் துறையிலே தொழிற் சாலைகள் வருவதற்கு அனுமதி கொடுப்பதுதான் நல்லது.

(பிற்பகல் 1-30)

இன்னும் ஒன்று. சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரை யில் பாளையத்தில் ஒரு சிமெண்ட் ஆலை தொடங்க வேண்டு மென்று ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் பேசிக் கொண்டு வந்தோம். அதை ஏனோ விட்டு விட்டார்கள். அங்கே இன்னொரு பெரிய சிமெண்ட் ஆலை வர வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியிலே போதுமான லைம் ஸ்டோன்ஸ் இருக்கிறது. ஆகவே பாளையத்திலே சிமெண்ட் பேக்டரி வர இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'டாமின்' பொறுத்தவரைக்கும், இங்கே சின்ன புக் லெட்டை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் பேசும்போது குறைந்தது 10 கோடி, 20 கோடி அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக 2, 3 நாட் முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல களுக்கு முன்னாலேகூட சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் 10 கோடி நஷ்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஏதாவது தவறு நடந்திருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். புள்ளி விவரத்தை நான் பார்த்தேன். மாண்பு மிகு முதலமைச்சரவர்கள் சொல்லும்போது, 1984-85லே

என்று சொன்னார்கள். அப்போது நான் அந்தத் துறை அமைச்
சராக இல்லை. யார் அந்தத் துறை அமைச்சராக இருந்திருந்
தாலும், ஓர் அதிகாரி அந்த இலாக்காவிலே பொறுப்பிலே இருந்
தார். இப்போது வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.
தவறு இருந்தால் கண்டு பிடிக்க வேண்டியதுதான். தனியார்கள்
இதில் அதிகமாக லாபம் சம்பாதிக்கும்போது, அரசினுடைய
நிறுவனம் குறைவாக லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தது
எந்த வகையிலே என்பதை எல்லாம் விசாரித்து, ஓர் அறிக்கை
யாகக் கொடுத்திருக்கிறீர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் ஆட்சிக் காலத்திலே கருப்புக் கல் முழுவதும் தனியா
ருக்கு இல்லை என்று சொல்லி, நேஷனலைஸ் பண்ணி, டாமினுக்கு
மட்டும் கொடுத்திருந்தோம். ஒரு அதிகாரி சரியாக நிர்வாகம்
செய்யவில்லை அல்லது டாமின் சரியாக நிர்வகிக்கப்படவில்லை
என்ற காரணத்தாலே அனைத்தையும் தேசிய மயமாக்குவோம்,
சர்க்கரை ஆலைகளைக்கூட தேசிய மயமாக்குவோம், தனி
யாருக்குத் தர மாட்டோம் என்று சொல்லிவிட்டு, டாமினை
மாத்திரம் எப்படி தனியாருக்குக் கொடுக்கும் முயற்சியிலே ஈடு
பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். எத்தனை
யோ சட்டங்களை, எம்.ஜி.ஆர். போட்ட சட்டம் என்பதால் ரத்து
செய்து வருகிறது இந்த அரசு. எனவே டாமின் நிர்வாகத்தை
சீரமைத்து, டாமின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்புகிற
போது, அதிக லாபத்தை ஈட்ட முடியும். சென்ற ஆண்டு 10
கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். 10
கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்
கிறார்கள். அந்த நிலையிலே கூட 3 கோடி ரூபாய் இலாபத்
திலே அந்த நிர்வாகம் இயங்கி இருக்கிறது. அது சிறப்பாக
நடத்தப்படுமானால், அரசாங்கத்திற்கு அன்னியச் செலாவணி
மூலமாக அதிகப் பலம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இதிலே
கூட தெளிவான ஒரு முடிவை அறிவிக்கவில்லை. என்ன
செய்யப் போகிறோம் என்பதை அறிவிக்கவில்லை. ஆளுநர்
உத்தரவு போட்டிருக்கிறார், சரி. அந்த உத்தரவு ஏற்கப்பட்
டதா? அப்படி என்றால் தனியாருக்குக் கொடுக்கிறோம் என்று
சொல்ல வேண்டும். இல்லை என்றால், அதை ஏற்கவில்லை,
தேசிய மயமாக்குவது எங்களுடைய கொள்கை, ஆளுநர் பிறப்
பித்த உத்தரவை ஏற்கவில்லை என்று சொல்ல வேண்டும்.
எதையும் சொல்லாமல், என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால்,
ஏற்கெனவே ஆளுநர் ஆட்சியில் எடுத்த முடிவை அமுல்படுத்துவது
குறித்து இந்த அரசு ஆய்வு செய்து வருகிறது என்று சொல்லி
இருக்கிறீர்கள். எத்தனையோ முடிவுகளை திடீர் திடீரென்று
எடுத்து, சீக்கிரமாக அறிவிக்கிறீர்கள். முதலமைச்சர் சீக்கிர
மாக முடிவு எடுக்கிறவர். இதில் மட்டும் 3 மாதங்களில் முடி
வெடுக்க முடியவில்லையா? 3 மாதத்திலே முடிவெடுத்து, டாமி
னுக்குக் கொடுப்பதா அல்லது நேஷனலைஸ் பண்ணுவதா, தனி
யாருக்குக் கொடுப்பதா, எவ்வளவு கொடுப்பது, வரம்பு எப்படி,
பேக்டரி போன்றவைகளுக்குக் கொடுப்பதா, லைசன்ஸ் உள்ள
வர்களுக்குக் கொடுப்பதா....





மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் முடி
வெடுப்பீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இதை நான் சொல்வதற்குக்
காரணம், இதில் நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
அதை மட்டும் நான் சொல்வேன். ஏனென்றால் டாமின் நிறு
வனத்திற்கும், இதில் இருக்கிற தனியார்களுக்கும் அடிக்கடி கடும்
போட்டி இருக்கிறது. இதிலே பெரிய 'லாபி' இருக்கிறது.
இதில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே இதிலே
உத்தரவுகள் போடும்போது மிக மிகக் கவனமாக இருக்க வேண்டு
மென்று சொல்லி, இதை அரசினுடைய கவனத்திற்கு நான்
கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. சிவகங்கையில் இருக்கிற கிராபைட். தமிழ்
நாட்டில் கடந்த 40 ஆண்டுகளாக எல்லா அரசாங்கங்களிடமும்
படாத பாடுபட்டு வருகிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தி
லிருந்து இருக்கிறது. முன்பு தி.மு.க. ஆட்சியில், திரு. மாதவன்
அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தபோது, தொழில் மானியக்
கோரிக்கையில் சொல்லப்பட்டு, நாங்களும் 10 வருடங்கள்
சொல்லி, நீங்களும் வந்து சொல்லுகிற நிலையில்தான் இருந்து
கொண்டிருக்கிறது. பாரதப் பிரதமர் அவர்கள் அதைத் துவக்கி
வைத்துவிட்டார்.

சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை தொடக்கவிழா நடத்
தப்பட்டு, விழா முடிந்து தொடங்கப்பட்டு விட்டது. முன்
னாலே இருந்த அரசு மேற்கு ஜெர்மனி நாட்டைச் சார்ந்த
ஹம்போல்ட் லெடாக் என்ற ஒரு நிறுவனத்தோடு ஒரு அக்ரி
மென்ட் போட்டிருந்தது. ஆனால் ஏற்கனவே இருந்த அரசு
எதைச் செய்திருந்தாலும் அதையெல்லாம் மாற்றி மாற்றி அறி
விப்பதிலே—மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இன்றைக்கு
இங்கே இல்லை — அவர் சொன்னதைப் போல் ஒரு ஆத்ம
திருப்தி என்ற அடிப்படையில் — இப்போது எஞ்சினீயர்ஸ் இன்
டியா லிமிடெட்'' என்ற நிறுவனத்தோடு புதிதாகக் கான்ட்
ராக்ட் போட்டு செய்து கொண்டிருக்கிறீர்கள். அதிலே 100
சதவீதம் ''ஃபுல் யுடிலைசேஷன்'' பண்ணுகிற மாதிரி. ஃபாரின்
கொலாபரேஷன் அடிப்படையில் அந்த வெஸ்ட் ஜெர்மன் கம்
பனியோடு ஒப்பந்தம் போடப்பட்டபோது இருந்த 25 கோடியை
இப்போது இந்தியன்-பேஸ்டு கம்பெனிக்குக் கொடுக்கும்போது
10 கோடியாக அந்த திட்டத் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது.
இன்னும் அதற்குப் பிறகு ஆய்வறிக்கை கொடுத்து அந்தத்
தொழிற்சாலை எப்போது தொடங்கப் போகிறது என்பது
யாருக்கும் தெரியாது.

ஆனால் ஒன்றை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். பொதுவாக ஒரு வேண்டுகோளாகவே இங்கே வைக்க
விரும்புகிறேன். பொதுவாக ஃபாரின் கொலாபரேஷன் என்று

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மே 3]

உத்தரவு போட்டு செயல்படுகிறபோது, அதையெல்லாம் ரத்து
செய்துகொண்டே போனால் — வெளிநாட்டுக்காரர்களானா
லும் சரி, உள்நாட்டுக்காரர்களானாலும் சரி இனி அரசாங்கத்
தோடு ஒரு அக்ரிமெண்ட் போடவோ அல்லது காண்ட்ராக்ட்
போடவோ முன்வர மாட்டார்கள். ஏன் முன் வரமாட்டார்கள்
என்றால் — இன்றைக்கு நீங்கள் எஞ்சினியர்ஸ் இந்தியா லிமி
டெட் என்கிற நிறுவனத்தோடு அக்ரிமெண்ட் போட்டிருக்கிறீர்கள்.
நாளைக்கு இன்னொரு அரசாங்கம் வந்து இந்த ஆர்டரைக்
கேன்சல் பண்ணி 10 கோடி ரூபாய் என்று போட்டது
தப்பு—ரூ. 9 கோடி கொடுக்கலாம் என்று சொல்லிவிடலாம்.
எனவே இப்படி ஏற்கெனவே இருக்கிற—ஏற்கெனவே அமுல்
படுத்தப்பட்டிருக்கிற ஸ்கீமில் இருப்பவைகளையெல்லாம்
கேன்சல் பண்ணுகிறபோது அரசாங்கத்தின் கிரிடிபிலிடி போய்
விடுகிறது. யார் ஆட்சியில் இருந்தாலும் அரசாங்கத்தின்
மரியாதை குறைகிற சூழ்நிலைதான் இனித் தொடர்ச்சியாக
ஏற்படும் என்பதால் இதில் அரசு முக்கிய கவனம் செலுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு சீக்கிரமாக இந்தத்
தொழிற்சாலையை நடத்துவதற்கான வழிவகையை இந்த
அரசு காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தேசியமயமாக்கப்படுகிற கொள்கையில் அரசு
ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால்
அரசின் மீது பல குற்றச்சாட்டுக்கள் வரும்—அதிலும் இதிலே
குற்றச்சாட்டுகள் அதிகமாக வருகிற வாய்ப்பு இருக்கிறது.
சர்க்கரைத் தொழிலை நேஷனலைஸ் பண்ணுவோம் என்கிறீர்
கள். ஆனால் டாமினை நேஷனலைஸ் பண்ணப் போவதில்லை
என்கிறீர்கள். அதைப் போலவே பஸ் டிரான்ஸ்போர்ட்டில்
உங்கள் கொள்கை என்ன? ஏற்கெனவே சட்டம் போட்டு
அது டெல்லிக்குப் போய் ஜனாதிபதியின் கையெழுத்தும் பெறப்
பட்டுவிட்டு இங்கே வந்திருக்கிறது.
—ஆக்ட்—ஆக வந்திருக்கிற நிலையில்—இதை நிறுத்தி வைக்கப்
போகிறோம் என்று சொல்லுகிறீர்கள். அப்படிப்பட்ட நிலையில்
நிறுத்தி வைக்க முடியும்? அது என்ன ஜி.ஓ.வா? ஒரு ஆக்ட்டை எப்படி
நேஷனலைஸ் பண்ணப் போகிறோம் என்று சொல்லுங்கள்— ஒன்று
தேசிய மயம் என்றால் உடனே அறிவியுங்கள். எல்லா பஸ்
களையும் எடுக்கப் போகிறோம் என்று சொல்லுங்கள். அல்லது
5 பஸ் அல்லது 3 பஸ் என்று அறிவியுங்கள். டாமின் போல்
இதில் மட்டும் ஏன் முடிவெடுக்கவில்லை? (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 2 பேரும்
சிரித்துக் கொண்டே இருந்தால் எங்களுக்குப் பசித்துக்
கொண்டே இருக்கும். (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு முதல்வர் அவர்கள்
[illegible] கம்பெனிக்கு வெளிநாட்டு நிறுவனத்தோடு
[illegible] ஒப்பந்தத்தை மாற்றியது நாங்கள். அல்ல



1989 மே 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

என்றும், கவர்னர் ஆட்சிதான் மாற்றியது என்றும் விளக்கம்
சொல்லுகிறார். அந்த கவர்னர் ஆட்சி மாற்றினாலும் சரி—
நீங்களாக இருந்தாலும் சரி—இப்படி மாற்றிக் கொண்டே
போவது சரியில்லை. இன்றைக்கு நீங்கள் ஒரு உத்திரவைப்
போட்டு வெளிநாட்டு கம்பெனி வேண்டாம்—உள்நாட்டு
கம்பெனியோடு ஒப்பந்தம் போடுகிறோம் என்று சொன்னால்—
இப்படி ஒவ்வொருவரும் மாற்றிக் கொண்டே போனால்
தமிழ் நாட்டு அரசாங்கத்தோடு ஒப்பந்தம் போட யாரும்
முன்வர மாட்டார்கள். காரணம் அடுத்த அரசு வந்தால்
மாற்றி விடுவார்கள் என்று பயந்து முன்வர மாட்டார்கள்.
அப்படிப்பட்ட சூழ்நிலைதான் ஏற்படும். எனவே இறுதியாக்
ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில்
இருக்கிற அனைத்து வசதிகளையும் பயன்படுத்தி, அதிகமாக
தொழில் வளர்ச்சிக்கு வித்திடுகிற அளவுக்கு மாநில அரசும்
நிதி ஒதுக்கி, மத்திய அரசின் தொழில் முதலீட்டையும் வற்
புறுத்தி, தொழில் வளம் பெருக்க அதிக கவனம் செலுத்த
வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி
கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, தொழில் வளர்ச்சி குறித்த
இன்றைய மானியத்தில் எதிர்க் கட்சிகளினுடைய தலைவர்
களும், உறுப்பினர்களும், ஆளும் கட்சியினுடைய உறுப்பினர்
களும் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்து
வைத்து இருக்கின்றார்கள். முடிவு எடுப்பது என்பது குறித்து
நம்முடைய எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் நண்பர்
திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூறிய அந்த வாசகத்திற்கு மாத்திரம்
ஒரு விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். முதலமைச்சர்
விரைவில் முடிவு எடுப்பார் என்று குறிப்பிட்டார். கூடுமான
வரையில் எடுத்த முடிவுகளை நான் மாற்றுவது இல்லை
என்பது அவருக்குத் தெரியும். அண்மையிலே கூட இந்த
மாமன்றத்தினுடைய பொன் விழாவையொட்டி பழைய
உறுப்பினர்களுக்கு, முன்னாள் பேரவைத் தலைவர்களுக்கு,
துணைத் தலைவர்களுக்கு எல்லாம் மரியாதை செய்வது என்று
ஒரு முடிவு எடுக்கப்பட்டபோது அவர்கள் ஒரு பதினான்கு
ஆண்டுக் காலம், பதினைந்து ஆண்டுக் காலம் இந்த அவை
யிலே பணியாற்றியவர்களாக இருக்க வேண்டுமென்ற வரிசை
யிலே ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்படுகிற
நேரத்திலே என்னுடைய அருமை நண்பர் திருநாவுக்கரசு
அவர்களும், மற்றொரு அருமை நண்பர் கே. கே. எஸ். எஸ். ஆர்
அவர்களும் தங்களிடத்திலும் பேசி, என்னிடத்திலும் பேசி,
செயலாளரிடத்திலும் பேசி நாங்கள் நான்கு முறை இருந்திருக்
கிறோம்; எனவே எங்களையும் அந்தப் பட்டியலிலே இணைக்க

வேண்டுமென்று சொன்னபோது அவர்கள் குறிப்பிட்டதைப்
போல் நான் விரைந்து முடிவு எடுத்து உடனடியாக அந்தப்
பட்டியலில் அவர்களுடைய பெயர்களும் இணைக்கப்பட
வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொண்டேன். தாங்களும்
பெருந்தன்மையோடு அதனை ஏற்றுக் கொண்டீர்கள். அவர்
களால் இன்னொரு பத்துப் பேருக்கு அந்தப் பட்டியலிலே
பிறகு தொடர்ந்து இடம் கிடைத்தது. ஆனால் இன்றைக்கு
நான் கேள்விப்படுகிறேன். அவர்கள் அந்த விழாவிலே கலந்து
கொள்வது இல்லை என்று முடிவு எடுத்து விட்டதாக. ஆக
அவர்கள் பெருந்தன்மைக்குத் தருகின்ற மதிப்பு இதுதான்.
எடுக்கிற முடிவு நல்ல முடிவாக இருக்க வேண்டுமென்று எண்ணி
இந்த முடிவுகள் எடுக்கப்படும்பொழுது, அந்த முடிவுகளை
நிறைவேற்ற முடியாத அவஸ்தையிலே அவர்கள் இருப்பது
எனக்குப் புரிகிறது. இருந்தாலும் கூட நீங்கள் எடுத்த முடிவு,
முடிவு தான். அவர்கள் வந்து விழாவைச் சிறப்பிக்காவிட்டாலும்
எங்கிருந்தாலும் வாழ்க என்று அண்ணா சொன்னாரே,
அவருடைய தம்பிகள் என்ற முறையிலே எங்கு இருந்தாலும்
வாழ்த்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
(மேசையைத் தட்டும் ஒலி) முடிவு பற்றி அவர் இங்கு
முழங்கிய காரணத்தால். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாழ்த்துவதோடு
அந்தப் பரிசுப் பொருள்களை வீட்டுக்கே அனுப்பி வையுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப் பெற்றுக்
கொள்வார்களோ என்னமோ எனக்குத் தெரியாது. வர
இயலாமல் இருந்தால் பரிசுப் பொருள்களை வீட்டுக்கு அனுப்பி
வைக்கலாம்; வர முடியாது என்று சொன்னால் அனுப்பி
வைப்பது சிரமம். ஏனென்றால் முன்பு இந்தியத் திருநாட்டி
னுடைய வெள்ளி விழா கொண்டாடப்பட்டபோது தாமிரப்
பத்திரங்கள் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்ட
பொழுது, பெருந்தலைவர் காமராசருக்கு, தந்தை பெரியாருக்கு,
மூதறிஞர் ராஜாஜிக்கு எல்லாம் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்
படும் என்று பத்திரிகைகளிலே விளம்பரம் வந்தபொழுது மூதறிஞர்
ராஜாஜி எனக்குக் கடிதம் எழுதி இருந்தார். "அந்தத் தாமிரப்
பத்திரங்கள் எனக்கும் உண்டு என்று பத்திரிகையில் படித்தேன்.
அதை, யாரையாவது அனுப்புகிறேன், கொடுத்து அனுப்புங்கள்"
என்று எனக்கு எழுதி இருந்தார். தாமிரப் பத்திரங்களைக்
கொடுப்பதற்கு விழா எதுவும் ஏற்பாடு செய்யப்படாமல்
இருந்தபொழுதே அவருடைய பெருங்குணம், "ஒரு ஆளை
அனுப்புகிறேன், கொடுத்து அனுப்புங்கள்" என்று எழுதி இருந்
தார். ஆனால் நான் அதை எடுத்துக்கொண்டு தந்தை



பெரியாருடைய இல்லத்திற்கும், பெருந்தலைவர் காமராசர்
இல்லத்திற்கும், அதைப் போலவே மூதறிஞர் ராஜாஜி இல்லத்
திற்கும், நானே சென்று அந்தத் தாமிரப் பத்திரங்களை அவர்
களுடைய கரங்களிலே ஒப்படைத்து வந்தேன். எனவே
எத்தனை மாறுபாடுகள், எத்தனை கருத்து வேறுபாடுகள்
இருந்தாலும் கூட இது போன்ற பொது நிகழ்ச்சிகளிலே
அவர்களே ஒரு புதிய முறையை வகுத்துக் கொடுத்துவிட்டு
அந்த முறையை ஏற்றுக் கொண்ட பிறகு ஒரு வேளை இப்படி
மறுப்பதற்காகவே எங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று
சொன்னார்களோ என்று எண்ணுகின்ற அளவுக்கு ஒரு நிலைமை
ஏற்பட்டதற்காக நான் வருத்தப்படுகின்றேன். இதை நான்
முன்கூட்டியே சொல்வதற்குக் காரணம் இன்று நான் இந்தத்
தொழில் துறை மானியத்தில் பேசிய பிறகு அதிலே ஏதாவது
நான் தவறாகப் பேசி இருந்து, அதை வைத்துக் கொண்டு
முதலமைச்சர் இப்படிப் பேசிவிட்டார், அதற்காகப் புறக்
கணிக்கிறோம் என்று சொல்லி விடக்கூடாதல்லவா, எனவே
தான் முன்கூட்டியே அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்தியை
இங்கே தெரிவிக்க வேண்டியது எனக்கு தவிர்க்க முடியாததாக
ஆகிவிட்டது. என்னுடைய உருக்கமும், உணர்வும் நம்முடைய
நண்பர்கள் திருநாவுக்கரசுக்கும், கே. கே. எஸ். எஸ். ஆருக்கும்
நிச்சயமாகப் புரியும் என்று கருதுகின்றேன்.

தொழில் துறை மானியத்திலே எடுத்துச் சொல்லப்பட்ட
கருத்துக்களுக்குச் சில விளக்கங்களை நான் இங்கே அளிக்க
விரும்புகிறேன். நேரம் அதிகமாகி விட்டது என்ற போதி
லும் கூட சில முக்கியமான கருத்துக்களை, சில அறிவிப்புகளைத்
தொழில் துறை தொடர்பாக அறிவிக்க வேண்டியவனாக இருக்
கின்றேன்.

பொதுவாக ஒரு இருபதாண்டுக் கால திராவிடக் கட்சிகளி
னுடைய ஆட்சியில் தொழில் வளம் சுருங்கிவிட்டது, குறைந்து
விட்டது என்ற ஒரு பிரச்சாரத்தைத் தேர்தல் நேரத்திலேயே
மத்தியிலே இருந்து வந்த அமைச்சர்கள் தொடர்ந்து செய்து
வந்தார்கள். அதற்கு நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்
கள் அளித்த விளக்கங்கள், நான் அளிக்க இருக்கின்ற விளக்கங்கள்
இவை இரண்டும் போதுமான பதில்களா, அல்லவா என்பது வேறு
விஷயம். இருந்தாலும் எதுவுமே நடைபெறாமல் இருந்து விட
வில்லை. நடைபெற்றவைகளிலே சில குறைபாடுகள் இருந்திருக்
கலாம்; சில தயக்கங்கள், தாமதங்கள் இருந்திருக்கலாம்.
எனவே, எதுவுமே நடைபெறவில்லை இருபதாண்டுக் காலத்தில்,
திராவிடக் கட்சிகளினுடைய ஆட்சிகளில் என்பது ஒரு தவறான
குற்றச்சாட்டு என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டி
ருக்கின்றேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 3

இதே மாமன்றத்திலேதான் 1957-ஆம் ஆண்டு பேரறிஞர்
அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
குழுத் தலைவராக-எதிர்க்கட்சித் தலைவராகக் கூட அல்ல.
எதிர்க்கட்சித் தலைவர் அப்பொழுது வி. கே. இராமசாமி முதலி
யார்—முன்னேற்றக் கழகத்தினுடைய குழுத் தலைவராக
இருந்தபொழுது அன்றைக்கிருந்த முதலமைச்சர் பெருந்தலைவர்
காமராஜரைப் பார்த்துச் சொன்னார்கள். நாங்கள், தமிழகம்
புறக்கணிக்கப்படுகிறது; தென்னகம் புறக்கணிக்கப்படுகின்றது
என்று முழங்குகிற முழக்கத்தை நீங்கள் சாதகமாக எடுத்துக்
கொண்டு, எங்களைக் காட்டியாவது, தமிழகத்தினுடைய தேவை
களைப் பெறுங்கள் என்று அன்றைக்கு அண்ணா அவர்கள்
எடுத்துச் சொன்னார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பதினெட்டு ஆண்டுக்
காலம்-49-இலே தொடங்கி, பதினெட்டு ஆண்டுக் காலம் எதிர்க்
கட்சியாக இருந்த அந்தக் கால கட்டத்திலேயெல்லாம் தமிழகத்
திற்குத் தொழில் வளம் தேவை; வட மாநிலங்களிலே தொழில்
வளம் பெருகுகிறது; இங்கே தொழில் வளம் இல்லை என்பதை
எடுத்துக்காட்ட எத்தனையோ சான்றுகளை மேடைகளில், ஏடு
களில், கருத்தரங்குகளில் எடுத்துச் சொன்ன வரலாறு மறந்து
விடக் கூடிய ஒன்று அல்ல.

அன்றைக்கு நெய்வேலி நிலக்கரி என்றும், காவிரி வட்ட
எண்ணெய் என்றும், சேது சமுத்திரத் திட்டம் என்றும், சேலம்
இரும்பு என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா அவர்
களுடைய தலைமையிலே குரலெழுப்பியபோது அந்தக் குரல்
கேலிக்குரியதாக ஆக்கப்பட்டதும் உண்டு. தட்டினால் தங்கம்
என்கிறார்கள். தோண்டினால் இரும்பு என்கிறார்கள் என்
றெல்லாம்கூட கேலி பேசப்பட்டதுண்டு.

ஆனால், அன்றைக்கு அண்ணா தலைமையிலே, திராவிட
முன்னேற்றக் கழகம் சொன்ன அந்தக் கருத்துக்கள், நெய்வேலி
யிலே நிலக்கரி இரண்டாவது சுரங்கம் அமைகிற அளவிற்கு ஆகி
யிருக்கிறது என்பதையும், காவிரி வட்டத்திலே எண்ணெயாவது,
இவர்களுக்கெல்லாம் ஏதோ கோளாறு என்று கேலி பேசப்பட்ட
காலம் மாறி இன்றைக்கும் காவிரி வட்டத்திலிருந்து என்
ணெய் பெருக்கெடுத்து, அதனை எடுக்கின்ற சூழ்நிலை உருவாகி
யிருப்பதையும் காணும்பொழுது, தமிழகத்தினுடைய தொழில்
வளர்ச்சிக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக
வருவதற்கு முன்பிருந்தே குரல் கொடுத்த ஒரு இயக்கம், அந்தக்
குரலை மதித்துத்தான் தீர வேண்டும் என்ற அளவிற்கு அன்
றைக்கு டெல்லி அரசு தமிழகத்திற்குத் தொழில்களைத் தர முன்
வந்த அந்தக் காலகட்டத்தை யாரும் மறந்து விட இயலாது.



1989 மே 3] [டாக்டர் மு. கருணாநிதி]

இங்கே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியி
னுடைய நண்பர் வரதராசன் அவர்கள் பேசிய பொழுது சொன்
னார்கள். மத்திய அரசினுடைய முதலீடுகள் இந்த மாநிலத்
தைப் பொறுத்தவரையில் மிகக் குறைவாக இருக்கிறது என்பதைச்
சுட்டிக்காட்டி, வேதனையையும் தெரிவித்து, தன்னுடைய கண்ட
னத்தையும் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னால் வியப்பாகவும்
இருக்கும்; வேதனையாகவும் இருக்கும்.

(பிற்பகல் 1–50)

1969-70-ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் மத்திய அரசி
னுடைய தொழில் முதலீடு மாத்திரம்—நான் மாநில அரசினுடைய
தொழில் முதலீட்டையெல்லாம் சொல்லவில்லை. 69-70 ஆம்
ஆண்டு ஆந்திர மாநிலத்திலே மத்திய அரசினுடைய தொழிலுக்
கான முதலீடு 98 கோடி ரூபாய். 86-87-இல் 6,761 கோடி
ரூபாய். 69 மடங்கு அதிகம். மராட்டியத்தில் 69-70 ஆம்
ஆண்டு மத்திய அரசினுடைய முதலீடு 120 கோடி ரூபாய். 1986—
87-ல் 10,905 கோடி ரூபாய். அதாவது 91 மடங்கு அதிகம்.
குஜராத் மாநிலத்தில் 1969-70 ல் மத்திய அரசினுடைய முதலீடு
97 கோடி ரூபாய். 1986-87-ல் 3,179 கோடி ரூபாய். அதா
வது 33 மடங்கு அதிகம். பஞ்சாபில் 1969-70-ல் மத்திய அர
சினுடைய முதலீடு 34 கோடி ரூபாய். 1986-87-ல் 641 கோடி
ரூபாய். 19 மடங்கு அதிகம். இராஜஸ்தானில் 1969-70-ல்
34 கோடி ரூபாய். 1986-87-ல் 780 கோடி ரூபாய். 23 மடங்கு
அதிகம். உத்தரப் பிரதேசத்தில் 1969-70-ல் 154 கோடி ரூபாய்.
1986-87-ல் உத்தரப் பிரதேசத்தில் 3,913 கோடி ரூபாய். அதா
வது 25 மடங்கு அதிகம். தமிழ்நாட்டில் 1969-70-ல் 311 கோடி
ரூபாய் மத்திய அரசு முதலீடு. 1986-87-ல் 3,018 கோடி
ரூபாய். சுமார் 10 மடங்கு தான் அதிகம். ஆந்திராவில் 69
மடங்கு அதிகம். மகாராஷ்டிராவில் 91 மடங்கு அதிகம். குஜ
ராத்தில் 33 மடங்கு அதிகம். பஞ்சாபில் 19 மடங்கு அதிகம்.
இராஜஸ்தானில் 23 மடங்கு அதிகம். உத்தரப் பிரதேசத்தில்
25 மடங்கு அதிகம். தமிழ்நாட்டில் மாத்திரம் 10 மடங்குதான்
அதிகமாகி இருக்கிறது, 1969-லிருந்து 1987 வரையில். எனவே,
இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட வாதங்கள் மத்திய அரசினுடைய
முதலீடு நம்முடைய மாநிலத்தில் மிகக் குறைவாகத் தான் ஆண்டு
தோறும் செய்யப்பட்டிருக்கிறது என்ற உண்மைக்கு மேலும் வலு
ஊட்டுகின்றன என்ற வகையில்தான் இந்தப் புள்ளி விவரங்கள்
அமைந்திருக்கின்றன. மாநில அரசைப் பொறுத்தவரையில்
தொழில் வளர்ச்சியைப் பற்றிக்குறிப்பிட வேண்டுமென்றால், திரா
விட முன்னேற்றக் கழக ஆட்சியில் நான் சேலம் உருக்குத் தொழிற்
சாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, அதனுடைய பணிகள்
தொடங்கப்பட்டன. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.
அன்றைக்கு ஏடுகள் படித்த யாரும் மறந்திருக்கவும் இயலாது.
முதலமைச்சராக நான் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 3

பொறுப்பேற்றவுடன் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்
குழுவினுடைய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நேரத்
தில் சேலம் திட்டத்தை வலியுறுத்திப் பேசியும் கூட நான்காவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் அது அன்றைக்கு இடம் பெறாத காரணத்
தால் அன்றைக்குத் தமிழ் நாட்டு மக்கள் அத்தனை பேர்களுடைய
சார்பாகவும், இந்த நான்காவது திட்டத்தின் வரைவை நான்
புறக்கணிக்கிறேன் என்று எடுத்துச் சொன்னேன். இவ்வளவு வேக
மாக கருத்தைச் சொல்லிவிட்டீர்களே என்று அன்றைக்கு மத்தி
யிலே அமைச்சராக இருந்த திரு. சி. எஸ். அவர்கள் கூட என்னிடத்
தில் வருத்தப்பட்டுக்கொண்டார். ஆனால் அபடி நான் பேசிய
அடுத்த வாரமே அன்னை இந்திரா காந்தி அவர்கள் சேலம் இரும்
பாலைத் திட்டத்திற்கான அறிவிப்பைச் செய்து, என்னை டெல்
லிக்கு உடனடியாக வரச்செய்து, அந்த அறிவிப்பை என்னுடைய
கரங்களில் ஒப்படைத்தார்கள். இப்படிப் போராடிப் பெற்ற உருக்
காலைத் திட்டம் இன்றைக்கு அது உருக்காலைத் திட்டமாக
இல்லை. வெறும் உருட்டாலைத் திட்டமாகி விட்டது என்பதை
நாம் மறந்துவிடக் கூடாது. அதை மீண்டும் உருக்காலைத் திட்ட
மாக மாற்றியமைக்கிற வரையில் இந்த அரசு ஓயாது-அதற்காகப்
பாடுபடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே நெய்வேலியில் இரண்டாவது அனல் மின்
நிலையம் அமைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றி கண்டன. அதைப்
போலவே, மேட்டூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் கழக
ஆட்சியில்தான் தொடங்கப்பட்டன. ஒரு குறிப்பைச் சொல்ல
வேண்டுமென்றால் 1967-ம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பை
ஏற்றபோது மின்சார உற்பத்தி 1,470 மெகாவாட்டாக இருந்தது.
1976-ம் ஆண்டு மின்சார உற்பத்தி 2,364 மெகாவாட். 894
மெகாவாட் உற்பத்தி அப்போது பெருகியது. அடுத்து இப்
போது 3,900 மெகாவாட்டாக மின் உற்பத்தி உயர்ந்திருக்கிறது
என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டாலுங்கூட, அது போது
மானதாக இல்லை; இந்த உற்பத்தியில் ஏற்படுகிற இடையூறுகள்,
இன்னல்கள், அதனால் இன்றைக்கு இந்த மாநிலத்தில் விவசாயி
களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிற தொல்லை, இவை
களையெல்லாம் நாம் மறந்து விட முடியாது.

நெய்வேலி முதல் திட்டம் காங்கிரஸ் ஆட்சியிலே எப்படி
ஆரம்பிக்கப்பட்டதோ, அதைப்போலத்தான் கல்பாக்கம் மின்
நிலையத் திட்டமும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே
நடைபெற்றபோது, முன்பு ஆரம்பிக்கப்பட்டது என்பதை
யாரும் மறந்துவிடக்கூடாது.

அதுமாத்திரம் அல்லாமல், ஆசியாக் கண்டத்திலே மிகப்
பெரிய உரத் தொழிற்சாலை, ஸ்பிக் உரத் தொழிற்சாலை
கூட்டுத் துறையிலே நிறுவப்பட்டது திராவிட முன்னேற்றக



1989 மே 3] [டாக்டர் மு. கருணாநிதி]

கழக ஆட்சிக் காலத்திலேதான். 1969-லேயிருந்து 1976 வரை
யில் 23 தொழிற்சாலைகளை பொதுத் துறையிலேயும், கூட்
டுத் துறையிலேயும் இந்த அரசு ஏற்படுத்தியது. இதற்கு மொத்த
முதலீடு சுமார் 300 கோடி ரூபாயாகும். 1967-க்கு முன்னாலே
மாநில அரசு பொதுத் துறையிலே செய்த முதலீடு 14.54 கோடி
ரூபாய், 68-லேயிருந்து 76 வரை. பொதுத்துறையிலே செய்த
மொத்த முதலீடு 40.92 கோடி ரூபாய். அவை Asbestos pipe,
Asbestos sheet, Ariyalur cement, Arakonam steel, Alankulam
cement இரண்டாவது கட்டம், இவைகள் எல்லாம் அந்தத்
தொகைக்குள்ளே அடங்கும்.

ஜாயின்ட் செக்டார், அதாவது கூட்டுத் துறை என்ற
தத்துவத்தை இந்தியாவிலே முதன் முதலாகக் கொண்டு
வந்தது, தமிழ்நாட்டிலே கழக ஆட்சிக் காலத்திலேதான்.
அதன் காரணமாக இன்று அந்த ஜாயின்ட் செக்டார். கூட்டுத்
துறையிலே சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள்
இருக்கின்றன. 26 சதவீதம் அரசும் 25 சதவீதம் தனியாரும், 49
சதவீதம் பொதுமக்களுடைய பங்கும் என்ற வகையிலே
அமைவதுதான், ஜாயின்ட் செக்டார்—கூட்டுத்துறை என்பதாகும்.
சில தொழில்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காகவே,
கழக ஆட்சியிலே சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்,
சிட்கோ, Small Industries Development Corporation, 1971-ல்
நிறுவப்பட்டது. நடுத்தரத் தொழில்களை அமைக்கவும் மற்
றும் பெரிய தொழில்களுக்கான அடிப்படைத் தேவைகளை
நிறைவு செய்து கொடுக்கவும், அதற்கான நிதி ஆதாரத்தைப்
பெற்றுத் தரவும் சிப்காட் State Industries Promotion
Corporation of Tamil Nadu என்ற நிறுவனம் 1971-லே கழக
ஆட்சியிலே நிறுவப்பட்டது. 67-க்கு முன்பு, காங்கிரஸ் ஆட்சியில்
நிறுவப்பட்ட டிட்கோ Tamil Nadu Industrial Development Corpo-
ration நிறுவனத்தோடு இணைந்து தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய
உதவிகளை சிப்காட் தொடர்ந்து செய்து வருகிறது. டிட்கோ
வும், சிப்காட்டும் சேர்ந்து சுமார் 1400 கோடி ரூபாய் அளவிற்
கான மூலதனத்திற்கு வழி செய்துள்ளன. டிட்கோ, பொதுத்
துறையிலே இதுவரையில் ஆரம்பித்த தொழில்களினுடைய
எண்ணிக்கை 10. இந்த பத்தில், 67-க்கு முன்பு இரண்டும்,
69-லிருந்து 75 வரை ஐந்தும், பின்பு 13 ஆண்டுக்காலத்திலே
மூன்றும் தொடங்கப்பட்டன. இந்த மூன்றில் காட்பாடியில் நிறு
வப்பட்ட வெடி மருந்துத் தொழிற்சாலை மட்டுமே இப்போது
உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. வாலிநோக்கத்தில்
ஆரம்பிக்கப்பட்ட மெக்னிசியம் மெட்டல் தொழிற்சாலையும்,
காட்பாடியில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள அம்மோனியம்
நைட்ரேட் தொழிற்சாலையும் இன்னும் ஆரம்பிக்கப்பட
வில்லை என்ற குறிப்பையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு
நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இப்போதுள்ள கூட்டுத் துறைகளினுடைய, தொழில்களினுடைய எண்ணிக்கை 43, இதிலே 23 தொழிற்சாலைகள் 1971-லேயிருந்து 76 ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன. மீதம் உள்ள இருபதில் 10 தொழிற்சாலைகள் கடந்த ஆட்சியிலே தொடங்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன. இன்னும் ஆரம்ப நிலையிலே உள்ளவை 10 தொழிற்சாலைகள். பொதுத்துறைக்கும், கூட்டுத் துறைக்கும் மொத்த முதலீடு 921 கோடி ரூபாயில், டிட்கோ முதலீடு மாத்திரம் 92 கோடி ரூபாயாகும். மீதம் உள்ள தொகைகளை நிதி நிறுவனங்களும், பொதுமக்களும் தருகின்றார்கள். 92 கோடி ரூபாய் முதலீடு செய்தும் கூட, சரியான டிவிடெண்ட் லாபப் பங்கீடு கிடைக்காத காரணத்தால், இந்த முதலீட்டுக் கொள்கையை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டதையும் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 2-00)

ஏற்கனவே சொன்னதைப் போல, டிட்கோவினுடைய முதலீடு 26 பர்சென்ட், தனியார் முதலீடு 25 பர்சென்ட், பொதுமக்களுடைய பங்கு 49 பர்சென்ட். 26 சதவீதம் டிட்கோ, இதுவரை செய்த மொத்த முதலீடு 92 கோடி ரூபாய். பெரிய தொழிற்சாலை நிறுவவேண்டும் என்றால், அதிக முதலீடு மேலும் தேவைப்படுகிறது. அதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 கோடியிலிருந்து, ரூ. 30 கோடி வரையிலும், தேவைப்படுகிற நிதியை ஒதுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிதியை டிட்கோவிற்கு அரசுதான் ஒதுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ரூ. 30 கோடி ஒதுக்கப்படக் கூடிய சூழ்நிலைக்கு மாறாக அரசு ரூ. 6 கோடி அளவிற்குத்தான் முதலீடு செய்யக் கூடிய அளவிற்கு நிதிநிலை இடம் அளிக்கிறது என்பதையும் நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே தான் இந்த நிலையில் கூட்டுத் துறையில் டிட்கோ 26 சதவீதம் முதலீடு செய்ய இயலாத நிலை. இதே நிலை மற்ற மாநிலங்களில் ஏற்பட்டு, இந்த முதலீட்டு விழுக்காட்டில் மாற்றங்கள் செய்துள்ளன மற்ற மாநிலங்கள். அவைகளையும் கருத்திற்கொண்டு, இனிமேல் அப்படிப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு அரசாங்கத்தின் பங்கு 11 சதவீதம் என்று மாத்திரமே இருக்கும். சில தொழில் முயற்சிகளுக்கு பழையபடி ஜாயின்ட் செக்டார்—கூட்டுத்துறை முறை நீடிக்கும். 11 சதம் என்ற முறையில் அசோசியேட் செக்டர் அதாவது ஊக்கமூட்டும் துறை என்ற தலைப்பில் இந்த முறையானது நடைமுறைக்கு வரும். எனவே கூட்டுத் துறையில் நடைமுறையிலே உள்ள பல தொழில் [illegible]கூட, அவசியமானால் 26 சதவீதம் என்ற முதலீட்டைக் குறைத்துக்கொண்டு, அசோசியேட் செக்டாராக



11 சதவீத முதலீட்டிலே செயல்படலாம் எனவும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. கூட்டுத் துறையிலே செய்யப்பட்டுள்ள முதலீட்டைத் திரும்பப் பெற்றுக்கொள்வது டிஸ்-இன்வெஸ்ட்மென்ட். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு நான் பிறகு வருகிறேன். இப்போது 'டிஸ்-இன்வெஸ்ட்மென்ட்' என்ற கொள்கை ஆராயப்பட்டு, சில தொழில் நிறுவனங்களுக்கு இதை நடைமுறையில் கொண்டுவருவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு முதலீட்டைத் திரும்பப் பெற கூட்டுத் துறையிலே ஏற்பட்ட ஒப்பந்தங்களிலேயே வழிவகை உண்டு. 26 சதவீதம் அரசு கூட்டுத்துறையில் முதலீடு செய்திருக்குமானால், அதைத் திரும்பப் பெற ஒப்பந்தத்திலே வழிவகை இருக்கிறது. அதைத் திரும்பப் பெற்று, இன்னொரு தொழிலுக்கு அதை முதலீடு செய்யவும், தனியார் அந்தத் துறையை ஏற்று நடத்தவும் முதலிலே ஒரு ஆரம்பப் பணிக்காக ஊக்கத்தொகையாக அரசு அதை அளிக்கிறது. அதைத் தான் திருநாவுக்கரசு அவர்கள் கேட்டார்கள். அப்படி இருக்கும் போது அதை ஒத்துக்கொள்கின்ற நீங்கள் முன்பு காரைக்குடியில் இருந்த ஒரு தொழிற்சாலையை இந்த அரசு விற்றதை எப்படி கண்டித்தீர்கள் என்று கேட்டார்கள். அந்த வேறுபாட்டைத் தான் நான் விளக்க விரும்புகிறேன். காரைக்குடியில் தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் என்ற ஒரு தொழில் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டது கூட்டுத் துறையில். அந்தத் தொழிலைத் தொடங்கும்போது அரசு மற்றும் அனந்தசாமி என்ற ஒரு தனியார் அந்தக் கூட்டுத் துறையிலே பங்கு ஏற்று அது ஆரம்பிக்கப்பட்டது. நான் விவரங்களுக்குள்ளே நுழையவில்லை, அது தேவையும் இல்லை என்ற காரணத்தால். அதற்குப் பிறகு 1977-ல் அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு அந்தத் தனியாரிடமிருந்த பங்குகளை எல்லாம் அரசே பெற்றுக்கொண்டு, அரசினுடைய பங்கு 62 சதவீதம் என்று உயர்ந்தது. எனவே அது முழுக்க அரசுத்துறையினுடைய தொழிலாக அன்றைக்கு மாறிவிட்டது. தனியாருக்கும் அரசுக்கும் பங்கு இருந்து, தனியார் 25, அரசு 26 சதவீதம் என்று இருந்து, அரசு ஒதுங்கிக் கொண்ட நிகழ்ச்சியல்ல இது. தனியாரிடமிருந்து அந்தத் தொழிலை அரசே பெற்றுக்கொண்டு, அது அரசுத்துறை தொழிலாக ஆன பிறகு, அரசு அதை விற்க முயன்று வந்ததுதான் கண்டனத்திற்குரியதாக அமைந்ததே தவிர, வேறு அல்ல. அதுமட்டுமல்ல, நிதிச் செயலாளர் அவர்கள் அன்றைக்குப் பக்கம் பக்கமாக எழுதி இருக்கிறார், இதை விற்கக் கூடாது என்று. விற்கப்பட்ட பிறகுகூட, அக்கவுண்டண்ட் ஜெனரல் அதிலே ஏற்பட்ட தவறுகளை எல்லாம் பக்கம் பக்கமாகச் சுட்டிக்காட்டுகிறார். அது முறைகேடாக விற்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டுகிறார். இன்னும் இதிலே வேடிக்கை என்னவென்றால், அரசாங்கத்தினுடைய தொழில்களிலேயே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 கோடி வருமானமுள்ள தொழிலாக இருந்தது இந்த காரைக்குடியிலே இருந்த தொழிற்சாலை ஒன்றுதான். அதை விற்க வேண்டுமா என்பதுதான் பிரச்சினையே தவிர, வேறு அல்ல. எனவே

அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதற்கும் நான் சொல்
கின்ற இந்தக் கருத்திற்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது
என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். இதுபோன்ற தவறுகள் இப்போது நாம் வகுத்
துள்ள இந்த 'டிஸ்-இன்வெஸ்ட்மென்ட்' என்ற கொள்கை
யிலே நடைபெறாமல் பார்த்துக் கொள்வோம் என்ற
உறுதியினை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அரசு சார்பு நிறுவனமான டாமின் பற்றி வைக்கப்
பட்டுள்ள கொள்கைக் குறிப்பைக் குறித்து இங்கே பலரும் தங்க
ளுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சிறிய
நூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்துக்களை அவை உறுப்பி
னர்கள் அனைவரும் படித்திருப்பார்கள் என்று நான் நம்பு
கிறேன். இருந்தாலும் அதிலே ஒன்றிரண்டைக் கோடிட்டுக்
காட்ட வேண்டியது என்னுடைய கடமை. அந்த டாமின்
நிறுவனத்திற்கு 83 ஆம் ஆண்டு நம்முடைய மறைந்த மாண்புமிகு
எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்தக் காலக்
கட்டத்தில் அதை அரசுடைமையாக ஆக்க வேண்டுமென்று சற்
றொப்ப 36 ஆயிரம் ஏக்கரா, அந்தக் கற்கள், பாறைகள் இருக்கிற
அந்த இடத்தை அரசு எடுத்துக் கொண்டது. 36 ஆயிரம்
ஏக்கர் எடுத்துக் கொண்டாலும்கூட அதிலே அந்த
டாமின் நிறுவனம் அதிலே முதன்முதலாக தாங்கள் பயன்
படுத்திக் கொள்ள வேண்டுமென்று மூவாயிரத்து சொச்சம் ஏக்கரா
வைத்தான் அவர்கள் பெற்று அங்கே பணியைத் தொடங்கினார்
கள். அந்த மூவாயிரத்து சொச்சம் ஏக்கராவிலாவது
பணியை முடித்தார்களா, அந்தக் கற்களை எடுத்தார்களா என்
றால் இல்லை. 2,500 ஏக்கராவைத்தான் பயன்படுத்திக் கல்லை
வெட்டினார்கள். அப்படி வெட்டி ஏற்றுமதி செய்யப்பட்டதில்
தனியாருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால்
மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக அது அமைந்து
விடுகிறது. அதனால்தான் அந்த 10 கோடி ரூபாய், 5, 6
ஆண்டுக் காலத்திலே நமக்கு வர வேண்டிய பணம் வராமல்
நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பு வைக்கப்பட்டிருக்
கிறது.

இதையெல்லாம் சொல்லும்போது நான் அதைக் கண்டு பிடிக்க
வேண்டும், குற்றம் சாட்ட வேண்டும் என்ற முனைப்போடு செய்த
தாக யாரும் கருதக் கூடாது. நவம்பர் மாதத்திலே—அதாவது
8-8வது ஆண்டு நவம்பர் மாதத்திலே கவர்னர் அவர்களுடைய
கவனத்திற்கு இது கொண்டு வரப்பட்டு, அப்போதே ஒரு கமிட்டி
போடப்பட்டு, அந்தக் கமிட்டி இவைகளையெல்லாம் ஆராய்ந்து
அந்த டாமின் நிறுவனத்திலே நடத்தப்பட்டு வருகிற முறை
கேடுகளையெல்லாம் வெளிக்கொணரத் தலைப்பட்டது. வெளிக்
கொணர்ந்த பிறகு அந்த அதிகாரி மீது அப்போது நடவடிக்கை



எடுக்கப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்த
அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அது கூட
போதுமான நடவடிக்கை அல்ல என்று நம்முடைய திரு. பி. எச்.
பாண்டியன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார். இது நட
வடிக்கையிலே ஒரு படி. அடுத்த படி, மூன்றாவது படி, நான்கா
வது படி, இவைகள் எல்லாம் வேறு இருக்கிறது. இருந்தாலும்
முதல் படியாக அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டி
ருக்கிறார். அதற்கு மேல் நடைபெறுகின்ற விசாரணை எல்
லாம் வேறு இருக்கிறது. நடவடிக்கை வேறு இருக்கிறது.
ஆனால் எப்படி அந்தத் தவறுகள் நடைபெற்றன என்று பார்த்
தால் உள்ளபடியே நாம் மிகவும் வேதனைப்பட வேண்டியவர்
களாக இருக்கிறோம்.

1983-84 ஆம் ஆண்டு தனியாரும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட
இடத்திலேயிருந்து கற்களை எடுக்கிறார்கள். நாமும் டாமின்
என்ற நிறுவனத்திற்கு எடுத்துக் கொண்ட அந்தப் பகுதியிலே
யிருந்து கற்களை எடுக்கிறோம். சாம்பல் வண்ணப் பாறை,
அதைப்போல கருப்பு வண்ணப் பாறை என்று இரண்டு ரகம்.
அந்த சாம்பல் வண்ணப் பாறையை தனியார், நாம் இரண்டு
பேரும் ஏற்றுமதி செய்யும்போது, தரம் குறைந்த சாம்பல் வண்
ணப் பாறையை ஒரு கன மீட்டருக்கு 420 டாலர் என்ற விலை
யிலே தனியார் ஏற்றுமதி செய்கிறார்கள். அதே நேரத்தில்
நம்முடைய டாமின், தரம் சிறந்த சாம்பல் வண்ணப் பாறையை
ஒரு கன மீட்டருக்கு 277 டாலரிலிருந்து 294 டாலர் என்ற
விலைக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். தனியார் தரம் குறைந்த
பாறையை ஒரு கன மீட்டருக்கு 420 டாலர் என்று ஏற்றுமதி
செய்ய, நாம் தரத்திலே சிறந்த சாம்பல் வண்ணப் பாறையை
277லிருந்து 294 டாலர் என்ற அளவிற்கு ஏற்றுமதி செய்திருக்
கிறோம். இது 1983—84 இல்.

1984-85-ல் இதே சாம்பல் வண்ணப் பாறையை தரம் குறைந்
தது தனியார் ஏற்றுமதிக்கு ஒரு கன மீட்டர் 475 டாலர். நாம்
தரம் உயர்ந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்ட
ருக்கு 258லிருந்து 269 டாலர் என்று ஏற்றுமதி செய்திருக்கி
றோம். 1985—86-ல் தனியார் ஏற்றுமதி செய்த சாம்பல் வண்
ணப் பாறை, தரம் குறைந்தது ஒரு கன மீட்டர் 460 டாலர்.
அதே நேரத்தில் நம்முடைய டாமின், தரம் உயர்ந்த
சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்டருக்கு
299 டாலர் என்று ஏற்றுமதி செய்கிறது. 1986—87-ல் தனியார்
ஏற்றுமதி செய்த தரம் குறைந்த சாம்பல் வண்ணப் பாறை
கன மீட்டர் 475 டாலர். நமது டாமின், தரம் உயர்ந்த சாம்பல்
வண்ணப் பாறையை ஒரு கன மீட்டர் 404லிருந்து 427 டாலர்.
1987—88-ல் தனியார் ஏற்றுமதி செய்த தரம் குறைந்த சாம்பல்
வண்ணப் பாறை ஒரு கன மீட்டர் 575 டாலர். நமது டாமின்

நிறுவனம், தரம் மிக உயர்ந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு
கன மீட்டருக்கு 512லிருந்து 538 டாலர். இது சாம்பல்
வண்ணப் பாறை.

கருப்பு வண்ணப் பாறை விஷயத்தில் அதை விட அதிகத் தவறு.
1986–87ஆம் ஆண்டு குன்னங்கிராமம்–இந்தக் குன்னங்கிராமம்
தான் இந்தக் கற்பாறைகளுக்கு சிறந்த இடம் என்று புகழப்படு
கிற இடம்—அந்தக் குன்னங்கிராமத்தில் டாமின், தனியார் இரு
சாராரும் கருப்புப் பாறைகளை வெட்டி வெளிநாடுகளுக்கு ஏற்று
மதி செய்கிறார்கள்.

(பிற்பகல் 2-10)

அதில் டாமின் வெட்டிய பாறைகள் தனியார் அனுப்பிய
பாறைகளை விட உயர்ந்த தரம் உள்ளவை. அந்தப் பாறை
ஏற்றுமதியில் 1986–87ல் டாமின் நிறுவனம் பெற்ற சராசரி
விலை ஒரு கன மீட்டருக்கு 714 டாலர். அதே ஆண்டு ஜெம்
கிரானைட்ஸ் என்ற தனியார் ஒரு கனமீட்டருக்கு 1,500 டாலர்
என்ற விலையிலே ஏற்றுமதி செய்திருக்கிறார். 2 மடங்கு
அதிகமாக. நாம் ஏற்றுமதி செய்தது கன மீட்டருக்கு
714 டாலர். தனியார் நிறுவனம் ஒரு கன மீட்டருக்கு 1,500
டாலர் என்ற விலையிலே ஏற்றுமதி செய்தது. இதன் காரண
மாக மாத்திரம் ஒரு சுரங்கத்திலே ஏற்பட்ட நஷ்டம் ஒரே
ஆண்டில் 48 இலட்சம் ரூபாய். ஒரு சுரங்கத்திலே மாத்திரம்.
1986ஆம் ஆண்டு திருவக்கரையிலே உள்ள ஒரு சுரங்கப் பாறை
யில் ஒரு கன மீட்டருக்கு 1,281 டாலர் கொடுக்க ஜப்பானிய
நிறுவனமான ஓரியண்ட் சாங்கியோ என்ற நிறுவனம் முன் வந்
தது. ஆனால் நம்முடைய டாமின் அவர்களுக்குக் கொடுக்க
வில்லை. அதற்கு மாறாக மிட்சுபிஷி கார்ப்பரேஷனுக்கு ஒரு
கன மீட்டருக்கு 550 டாலர் விதம் 1983 ஆம் ஆண்டு கொடுத்த
அதே விலைக்கே ஏற்றுமதி செய்தது. இன்னொருவன் 1,281
டாலருக்குக் கேட்கிறான், அவனுக்குக் கொடுக்காமல் 1983 ஆம்
ஆண்டு விலையை வைத்து 1986 ஆம் ஆண்டில் 550 டாலருக்கு
அந்த நிறுவனம் தருகிறது. இதனால் ஒரு சுரங்கத்திலே மாத்தி
ரம் ஏற்பட்ட இழப்பு ரூ. 41 இலட்சம். கவர்னருடைய ஆட்சி
யில் இதனுடைய பழைய மேனேஜிங் டைரக்டரை மாற்றிவிட்டு
புதியதாக மேனேஜிங் டைரக்டர் நியமிக்கப்பட்டவுடன் — உங்
களுக்குச் சொல்கிறேன்—1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்
கருப்புப் பாறைக்கு ஒரு கன மீட்டருக்கு 714 டாலர் என்ற நிலை
மாற்றப்பட்டு டிசம்பர் மாதம் 2,050 டாலராக உயர்த்தப்படு
கிறது. டிசம்பர் மாதம் 2,050 டாலர் கன மீட்டருக்கு விற்கப்
படுகின்ற அந்தக் கல் முதல் மாதம்—நவம்பர் மாதம் ஒரு கன
மீட்டர் 714 டாலர் என்று தான் விற்கப்படுகிறது. கவர்னர்
ஆட்சியிலேகூட இந்த நடவடிக்கைகளை அவர் பொறுப்பு
ஏற்று சில மாதங்களுக்கெல்லாம் தொடர்ந்து எடுத்திருப்பாரா
னால் இன்னும் அதிகத் தொகை, அரசுக்குக் கிடைத்திருக்கக்கூடும்.





அவரும் நவம்பர் மாதத்திலே தான் — அந்த ஆட்சியிலே நட
வடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் ஒரு மாதம் தான் தப்ப
முடிந்தது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கி
றேன். இந்த முறைகேடுகளால் டாமின் இதுவரை பயன்படுத்
திய 2,500 ஏக்கரில் 10 கோடி ரூபாய் 1983 ஆம் ஆண்டு முதல்
இழப்பு ஏற்பட்டிருக்கிறது அது மாத்திரமல்ல. குளோபல்
டெண்டர் — உலகத்திலே பல பகுதிகளிலேயிருந்து கோரப்படு
கின்ற டெண்டருக்குப் பெயர் குளோபல் டெண்டர். இதற்கு
மாறாக முதலில் கொடுக்கப்பட்ட தனிப்பட்ட ஒருவருக்கே
தான் அடுத்த ஆண்டு டெண்டர் கோரப்படாமலேயே தொடர்ந்து
தனியாரை விடக் குறைந்த விலையிலே தரப்பட்டு வந்திருக்கிறது.
இதை வைத்துக் கொண்டு பொதுத் துறையே மோசம்
என்று யாரும் சொல்லிவிட முடியாது. நான் எந்த அமைச்சர்கள்
மீதும்—அவரும் சொன்னார். அப்போது நான் இந்தத் துறைக்கு
அமைச்சராக இல்லை என்று கூடச் சொன்னார்—எனவே
இந்தத் துறையை நிர்வகித்து வந்தவர்கள் அல்லது நிர்வகித்து
வந்த அந்த எம்.டிக்கு மேலேயிருந்து அவரை ஊக்கப்படுத்திய
வர்கள், இவர்கள் எல்லாம் எந்த முறையிலே எவ்வளவு பெரிய
ஊழலை இந்தத் துறையில் நடத்தி இருக்கிறார்கள் என்பதை
நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இதை வைத்துக்
கொண்டு பொதுத் துறையே தேவையில்லை என்ற முடிவுக்கு
இந்த அரசு வந்துவிடுகிறதா என்றால் இல்லை. பொதுத்துறையே
மோசம் இல்லை. பொதுத் துறையிலும் மோசமானவர்
கள் புகுந்து விடுவதுண்டு என்பது உண்மையே தவிர பொதுத்
துறையே மோசமான ஒன்று அல்ல. கவர்னர் ஆட்சிக் காலத்
தில் 3 ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்
பட்டு அந்தக் குழு டாமினுக்கு போக மீதம் உள்ள நிலங்களை
தொழிற்சாலை வைத்துள்ள தனியாருக்கு குத்தகை உரிமம் தர
லாம் என்ற ஒரு முடிவு எடுத்தது. அதைத்தான் இப்போது நம்
முடைய திருநாவுக்கரசு அவர்கள் உங்களுக்கு என்ன கொள்கை
தேசியமயத்தில், பஸ் தேசியமயம் என்கிறீர்கள், இதைத் தனி
யாருக்குத் தருவதாகச் சொல்கிறீர்கள், என்ன கொள்கை?
அதைப்போல சர்க்கரை ஆலை கூட்டுறவு என்கிறீர்களே, என்ன
கொள்கை என்றெல்லாம் கேட்டார்கள். நாம் எந்த ஒரு கொள்
கையிலும் முழுமையாக தேசியமயக் கொள்கை என்று இந்தியா
முழுமையும் இன்றைக்கு யாரும் நிலைநாட்டிவிட முடியாது. மிகச்
சிறந்த கம்யூனிஸ்ட் நாடுகளிலே கூட தனியார் துறைக்கு இடம்
இருக்கிறது. அறவே தனியார் துறை அழிக்கப்பட்டு விட
வில்லை. இதிலே நாம் எண்ணிப் பார்க்க வேண்டியது என்ன
வென்றால் மொத்தம் இருப்பது 38,000 ஏக்கரா. கொஞ்ச
நஞ்சமல்ல. இந்த 38,000 ஏக்கராவையும் டாமின் நிறுவனமே
வெட்டியெடுப்பது என்றால் நம்முடைய பேரப் பிள்ளைகள்
அல்ல, கொள்ளுப் பேரன், அந்த கொள்ளுப் பேரனுக்கும்
கொள்ளுப் பேரன் காலத்திலே கூட அது முடிவடையாது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 3

அதையும் நாம் மறந்து விடக்கூடாது. இப்போது அரசிற்கு
வரக்கூடிய வருமானத்தை இழந்துவிடலாமா என்பதையும்
எண்ணிப் பார்க்க வேண்டும். என்னதான் நாம் முயற்சியை
எடுத்தாலும், நம்முடைய அரசுடைமையாக்கப்பட்ட 'டாமின்'
நிறுவனத்தின் மூலம் 36,000 ஏக்கராவையும் வெட்டி
எடுக்க முடியாது. 10 ஆண்டுக் காலத்திலே 2,500 ஏக்கராவைத்
தான் வெட்டி எடுத்து இருக்கிறோம். 36,000 ஏக்கராவிலும்
வெட்டி எடுக்க முடியாது. அது மாத்திரமல்ல. இன்னொரு
உண்மையை உங்களுக்குச் சொல்வேன். ஒரு கன மீட்டருக்கு—
ஒரு தனியாருக்கு நாம் அதைக் கொடுத்தால் ஒரு கன மீட்டருக்கு
அவர்கள் அரசாங்கத்திற்கு, கருப்புக் கல்லுக்குத் தரக்கூடிய
கட்டணம் 400 ரூபாய். தொடர்புடைய பஞ்சாயத்து
யூனியனுக்கு ஒரு கன மீட்டருக்கு அவர்கள் தர வேண்டிய
கட்டணம் 1,000 ரூபாய். சாம்பல் வண்ணப் பாறையாக
இருந்தால் ஒரு கன மீட்டருக்கு அரசிற்கு அவர்கள் தரவேண்டிய
கட்டணம் 200ரூபாய். தொடர்புடைய பஞ்சாயத்து யூனியனுக்கு
தரவேண்டிய கட்டணம் 500 ரூபாய். இதன் மூலம் அரசிற்குக்
குறைந்தது 10 முதல் 15 கோடி ரூபாய் வரை அதிக வருவாய்
வரும். தொடர்புடைய பஞ்சாயத்து யூனியன்களுக்கு மொத்தத்
தில் சுமார் 30 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் வரும்.

இதை இழக்கலாமா, தேசியமயக் கொள்கை என்கின்ற
பெயரால் என்று தான் நான் கேட்க விரும்புகின்றேன். தேசிய
மயக் கொள்கைக்கு விரோதமான கருத்து அல்ல இது. தேசிய
மயக் கொள்கையை எது, எதிலே இன்றைக்கு நிறைவேற்ற
முடியுமோ அவைகளில் நாம் நிறைவேற்றத் தயங்கமாட்டோம்.
அந்த நேரத்தில் தேசியமயக் கொள்கையையும் கடைப்பிடித்து,
படிப்படியாக அரசுடைமையாக்கப்பட்ட இடங்களில் அரசே
இந்த விற்பனை நடத்தி ஏற்றுமதி செய்கின்ற ஒரு நிலை
வளர்கிற வரையில் தற்காலிகமாக இதைத் தனியாருக்குத்
தருவதன் மூலம் அரசிற்கு ஆண்டொன்றிற்கு சுமார் 15 கோடி
ரூபாயும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு, தொடர்புடைய
பஞ்சாயத்து யூனியன்களுக்கு எல்லாம் 30 கோடி ரூபாயும்
கிடைக்கின்ற அந்த நிலையை இழந்து விடலாமா என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் தீவிரமாக
அரசு பரிசீலித்து வருகிறது என்று குறிப்பிட்டேனே அல்லாமல்,
திடீர் முடிவு ஏன் எடுக்கவில்லை என்று திருநாவுக்கரசு
அவர்கள் கேட்டார்கள். அன்றைக்கே அவர்கள் வேறு
ஒரு விவகாரத்திலே பேசும்போது, இன்னும் முடிவு எடுக்க
வில்லை இந்த அரசு, இது கவர்னர் ஆட்சி எடுத்த முடிவு
என்று அன்றைக்கே அவர்கள், தான் சொன்னது தவறு
என்று திருத்திக் கொண்டு பேசினார்கள். நான் இன்றைக்கும்
சொல்கிறேன். இந்தத் தனியார்களுக்குத் தருகிற நேரத்தில்
என்னென்ன நிபந்தனைகளோடு தரலாம், கேட்டவர்களுக்
கெல்லாம் தந்துவிடலாமா என்றெல்லாம் பார்க்கவேண்டுமே.
சில உறுப்பினர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள்.



1989 மே 3] [டாக்டர் மு. கருணாநிதி]

சொக்கர் அவர்கள் என்று கருதுகிறேன்.
நம்முடைய சொக்கர் அவர்கள் என்று கருதுகிறேன்.
சொக்கருடைய பேச்சில் நான் சொக்கியே போனேன். காரணம்,
அவருடைய பேச்சிலே முக்கால் பகுதி பாராட்டுரையாகவே
இருந்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன். சில அறிவுரை
களையும் தந்தார். ஆராய்ந்து பார்க்கக்கூடிய சில செய்தி
களையும் சொன்னார், அவர் சொன்னார். இதில் ஏன்
தொழில் நிலையம் இருக்கிறதா, இல்லையா என்றெல்லாம்
எதற்காகத் தரம் பிரித்துப் பார்க்க வேண்டும், எல்லோருக்கும்
கொடுத்து விடலாம் என்று சொன்னார். அப்படி எல்லோருக்கும்
கொடுப்பதால் தான் பல தீய விளைவுகள் ஏற்படும். எனவே
தான் இவைகளை ஒழுங்காக வெட்டி எடுத்து ஏற்றுமதி
செய்யக்கூடிய பொறுப்பானவர்களுக்கு, அந்த வசதி
படைத்தவர்களுக்கு, அந்த வாய்ப்புப் படைத்தவர்களுக்கு,
அந்தத் தொழிற்சாலையை இயக்கக்கூடியவர்களுக்குத் தரக்
கூடிய அந்த நிலைமைகளை எல்லாம் ஆராய வேண்டும்
என்பதற்காகத்தான் உடனடியாக நாம் முடிவு எடுக்காமல்
இதைப் பற்றி இன்றைக்கு ஆய்வு செய்து கொண்டு இருப்பதாக
அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்னொன்றை
யும் நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

பொறுத்த ஒன்றல்ல. அதனைப்
இது அமைச்சர்களைப் பொறுத்த ஒன்றல்ல. அதனைப் பற்றிக்
நம்முடைய முன்னாள் அமைச்சர்கள் யாரும் அதைப் பற்றிக்
கவலைப்படத் தேவையில்லை. ஆனால் சொல்ல வேண்டிய
விஷயம் இது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர்
எம்.ஜி.ஆர். அவர்களையே, அவரிடத்திலிருந்த செயலாளர்கள்
எந்த அளவுக்கு அவர் உடல் நலம் இல்லாமல் இருந்தபோது
அவர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்காக நான்
இதைச் சொல்ல விரும்புகிறேன்.

நாள்தோறும்
திருச்சியில் முதுவத்தூர் என்ற இடத்தில் நாள்தோறும்
20 டன் சிமெண்ட் தயாரிக்கின்ற ஒரு சிறிய தொழிற்சாலையை
சுமார் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1967 இல் அரசு
அமைத்தது. இந்தத் தொழிற்சாலை 1974 ஆம் ஆண்டில்
மத்திய அரசின் சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு, சிமெண்ட்
ஆராய்ச்சி முறை நடத்த மத்திய அரசு ஆராய்ச்சி நிறுவனத்
திற்கு வழங்கப்பட்டது. 1967-லே ஆரம்பிக்கப்பட்ட அந்த
மினி சிமெண்ட் தொழிற்சாலை, 20 டன் தயாரிக்கின்ற
தொழிற்சாலை, மத்திய அரசினுடைய சிமெண்ட் ஆராய்ச்சி
நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் அந்த
நிறுவனம், அந்தத் தொழிற்சாலையை தமிழ்நாடு சிமெண்ட்
நிறுவனத்திடம் ஒப்படைத்து விட்டது. அதை நடத்த இயலாத
காரணத்தால், தனியாருக்கு அதை விற்று விடலாம் என்று
முடிவு எடுத்து, 1986 இல் அரசு ஒப்பந்தப் புள்ளிகள் கோரியது.
அந்த ஒப்பந்தப் புள்ளிகள் 18—7—1986-க்குள் அரசிற்கு
வந்து சேர வேண்டும் என்று அரசு அறிவித்தது. நான்கு பேர்
ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பினார்கள். யார் அந்த நான்கு

[டாக்டர் மு. கருணாநிதி] [1988 மே 3

(பிற்பகல் 2-10)

[illegible] ஆ. கோபாலராவ், சென்னை, ஒப்பந்தப் புள்ளி 11.70 [illegible] எம்.என். அப்துல் சலாம், சென்னை, ஒப்பந்தப் புள்ளி 57.51 லட்சம் ரூபாய்; கேதார்நாத் அகர்வால், [illegible] ஒப்பந்தப்புள்ளி 44.46 லட்சம் ரூபாய்; என். பழனிச் [illegible] கோயம்புத்தூர் ஒப்பந்தப்புள்ளி 45 லட்சம் ரூபாய். [illegible] நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்ட நிபுணர் குழு குறைந்த [illegible] 'அப்கொட் மினரல்ஸ்' 44 லட்சம் ரூபாய்க்கு நிறுவனத்தை விற்கலாம் என்ற ஆலோசனையைக் கூறியிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளியிலிருந்து 4 நபர்களில் பழனிச்சாமி என்பவர் தான் 45 லட்சம் ரூபாய் தர முன்வந்தார். அதை ஏற்கலாம் என்று அப்போதைய நிதிச் செயலாளர் கோப்பில் கருத்துத் தெரிவிக் கிறார். அதை அப்படியே ஏற்றுக் கொண்டு 29—8—1986-ல் தொழில் அமைச்சர் திரு. இராஜாராம் அவர்கள் கையெழுத்து இடுகிறார். பிறகு அடுத்த மாதம் 28—9—1986-ல் முதல்வருக் காக என்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கையெழுத்து இடுகிறார்; அப்போது முதலமைச்சர் அவர்கள் கையெழுத்து இல்லை. அமெரிக்காவில் இருக்கிறார். அவர்கள் இங்கே யாக சிகிச்சைக்காகச் சென்றதாக நினைவு. இரண்டாவது முறை இருக்கிறார். திரு. இராஜாராம் அமெரிக்காவில் நாவலர்—29—8—1986-ல் கையெழுத்து இட்ட பிறகு 28—9—1986-ல் இராஜாராம் கையெழுத்து இட— முதலமைச்சருக்காக என்று நாவலர் கையெழுத்து இடுகிறார். அப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவில் இருக்கிறார். பிறகு 2 நாளில், இந்தக் கையெழுத்து இடப்பட்ட 2 நாளில் முதலமைச்சர் 30—9—86-ல் சென்னை திரும்பி விடுகிறார். திரும்பி வந்தவுடன் இந்தக் கோப்பை முதலமைச்சர் பார்க்க விரும்புகிறார் என்று அந்தத் துறையினுடைய செயலாளர் 6—10—1986-ல் எழுதுகிறார். உடனே முதலமைச்சர் அலுவலகத்திற்கு அந்த கோப்பு வருகிறது. செயலாளர் எழுதுகிறார். கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு வருகிறது. வந்தவுடன் அது முதலமைச்சருக்கு அனுப்பப்பட் டதா—இல்லை. 4½ மாதம் அலுவலகத்தில் இருக்கிறது. முதல மைச்சருக்கு காட்டப்பட்டதா? இல்லையா? தெரியாது. 4½ மாதம் இருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிகமாக கேட்ட தொகை 45 லட்சம் ரூபாய்க்கு தரப்பட்டு அவருக்கு அந்த [illegible] தொழிற்சாலையைத் தந்து விடலாம் என்று முடிவான அந்த [illegible]. அந்தக் கோப்பு 4½ மாதங்களுக்கு மேலாக முதலமைச்சர் அறையிலே இருக்கிறது. அதை வரவைத்தது முதலமைச்சரின் செயலாளர் பரமசிவம் அவர்கள். ஒப்பந்தப்புள்ளியிலே அவர் எழுதுகிறார் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நீண்ட காலம் கடந்து விட்டபடியால்—ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நீண்ட காலம் கடந்து விட்டதாம். கடந்ததா, கடக்க வைக்கப்பட்டதா? 4 மாத காலம் வைத்து இருந்தது யார்? இவர்கள் வைத்து விட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நீண்ட [illegible]



1988 மே 3] [டாக்டர் மு. கருணாநிதி]

படியால் இந்தக் கோப்பில் மறு ஒப்பந்தப்புள்ளி பெற்று நட வடிக்கை எடுக்கலாம் என்று செயலாளர் பரமசிவம் எழுதுகிறார். அப்போதும் முதலமைச்சருக்குத் தெரிந்து இருக்க நியாயம் உண்டோ இல்லையோ எனக்குத் தெரியாது. 24—2—87-ல் அந்த கோப்பை திரும்ப அந்தத் துறைக்கு அனுப்புகிறார். அதாவது முதலமைச்சர் அப்படி விரும்புவதாகத் தெரிவித்து செயலாளர் எழுதி அந்தத்துறைக்கு அந்தக்கோப்பினை அந்த பைலை அனுப்பு கிறார். மீண்டும் அந்த சிமின்ட் தொழிற்சாலையை [illegible] போட்டு வைக்காமல் ஏற்கனவே கொடுத்தபடி மத்திய அரசின் ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் திரும்பவும் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு 28-5-87 அன்று அந்தக் கோப்பு முதலமைச்சரின் ஆணையினைப் பெற அனுப்பப்படுகிறது. அந்தக் கோப்பு முதல [illegible] மாதம் 28 ஆம் தேதி அனுப்புகிறது. டிசம்பர் மாதம் வரை, டிசம்பர் மைச்சர் அலுவலகத்திலேயே டிசம்பர் மாதம் வரை [illegible] மறைவுக்குப் பிறகு மாதம் முடிய இருந்து விட்டு அவருடைய மறைவுக்குப் பிறகு ஆட்சி திரும்ப வருகிறது. அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சி யில் அந்தக் கோப்பு பரிசீலனைக்கு வந்தபோது மைய ஆராய்ச்சி நிறுவனம் அந்த சிமின்ட் தொழிற்சாலையை ஏற்று நடத்த இயலாது என்று கூறிவிட்ட காரணத்தால் மீண்டும் டெண்டர் விடப்படுகிறது. அப்படி டெண்டர் விடும்போது 5 பேரிடமிருந்து [illegible] வருகிறது. அதிலே மிக அதிகமாகக் கிடைத்தது 34 லட்சம் ரூபாய் அதிக டெண்டர். முதலிலே கேட்டது 45 லட்சம் ரூபாய். அதற்கு தரப்படவில்லை. இப்போது அதிகபட்ச டெண்டர் 34 லட்சம் ரூபாய்க்கு [illegible] நிறுவனம் 30-12-88-ல் பயோனியர் இன்ஜினியரிங் [illegible] கொள்கிறது. 34 லட்சம் ரூபாய்க்கு அதை வாங்கிக் காலம் தாழ்த்தி 45 லட்சம் ரூபாய்க்குக் கொடுக்க மறுத்து அதிலே ஆணையே பிறப்பிக்காமல் கோப்புகள் பந்தாடப்பட்டு அதிலே இந்தத் தொழிற்சாலையை விற்றதிலே 11 இருந்ததன் விளைவாக இந்தத் தொழிற்சாலையை விற்றதிலே 11 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஏன்? என்ன காரணம்? முதலில் 45 லட்சம் ரூபாய்க்குக் எந்தக் காரணமும் இல்லை. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நன் கேட்டவர் நம்முடைய பொங்கலூர் பழனிச்சாமி, இராவியமுள் றாகத் தெரிந்த நண்பர் சேர்ந்தவர். இந்த ஒரே ஒரு காரணம் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். இந்த ஒரு காரணத்திற்காக 11 லட்சம் ரூபாயை இந்த தான். இந்த ஒரு காரணத்திற்காக 11 லட்சம் ரூபாயை இந்த அரசு இழந்தது. அந்தக் காம்ப்புணர்வோடு முதலமைச்சர் அவர் களுடைய செயலாளர் செயல்பட்டு இருக்கிறார். முதலமைச்ச ருக்கே தெரியாமல்; இதைத்தான் முன்பு, திருநாவுக்கரசு அவர்கள் கேட்டார்கள், வந்தவுடனே இப்படி அதிகாரிகளையெல்லாம் மாற்றி விட்டீர்களே என்று. இப்படி முதலமைச்சரைக் காட்டிக் கொடுத்த அதிகாரியை நான் மாற்றாமல் இருக்க முடியுமா என்று இப்போது நான் நண்பர் திருநாவுக்கரசு அவர்களைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போகட்டும், என்ன செய்யப் போகிறோம். நடந்தவைகளைச் சொல்லிவிட்டோம். என்ன நடக்கப்போகிறது என்பவைகளை அறிவிக்க வேண்டும் [illegible] இ ருக்கக் கட்டத்திற்கு வருகிறேன்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 3

236 கோடி ரூபாய்க்கான தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவு அடையாமல் அல்லது அரைகுறை நிலையிலே இருக்கிற தொழிற்சாலைகளைப்பற்றிய விவரங்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

'டிட்கோ' நிறுவனத்திற்குக் கிடைத்த உரிமங்களை அடிப்படையாக வைத்து கடந்த காலத்திலே பல்வேறு தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் சில தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துகிற முறையில் வேகமும் விறுவிறுப்பும் இல்லை என்று உணர்ந்து இந்த அரசு குறிப்பிட்ட காலத்தில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

முதலாவதாக, மத்திய அரசும் மாநில அரசும் முதல் முறையாக கூட்டு முயற்சியில், ஜெல்லி ஃபீல்ட் கேபிள்ஸ் தொழிற்சாலை—தொலைபேசிக் கம்பி மற்றும் வடம் மற்றும் தொலைபேசிக்கு வேண்டிய சில உபகரணங்களை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலையை 22 கோடி ரூபாய் மூலதனத்திலே வடஆற்காடு மாவட்டத்திலேயுள்ள அரக்கோணத்தில் நிறுவ உள்ளது. இவற்றுக்குத் தேவையான நிலத்தை மாநில அரசு இந்தத் தொழில் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. மொத்த மூலதனத்தில், மாநில அரசு 25 சதவீதத்தையும் மத்திய அரசு 26 சதவீதத்தையும் கொடுத்து புதிய தொழில் நிறுவனத்தை நிறுவுகிறது. இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. விரைவாக இதை முடிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

(2) இத்தாலி நாட்டின் தொழில் நுணுக்கத்தைக்கொண்டு பெட்ரோ-கெமிக்கல்ஸ் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலை.

'டிட்கோ' நிறுவனமும் யூ-பி பெட்ரோவும் சேர்ந்து கூட்டுத் துறையில் மணலியில் 71 கோடி ரூபாய் மூலதனத்தில் பெட்ரோ-கெமிக்கல்ஸ் தொழிற்சாலையை நிறுவி வேலைகள் நடந்து வருகின்றன.

(3) 'டைனாவிஷன்' என்ற நிறுவனம் கழகம் ஆட்சியில் இருக்கும்போது 1972-ல் ஆரம்பிக்கப்பட்டது. இது தொலைக் காட்சிப் பெட்டிகளை 1975-ல் உற்பத்தி செய்ய ஆரம்பித்தது. அதற்குப் பிறகு இந்நிறுவனம் விரிவாக்கப்படாமலே இருந்தது. எந்தவிதமான நவீன முயற்சிகளையும் மேற்கொள்ளாமலே இருந்தது. ஆகவே தொலைக்காட்சிப் பெட்டிகள் உற்பத்தியில் சில நவீன சாதனங்களையும் முறைகளையும் கையாளும்படி 'டிட்கோ' நிறுவனம் அவர்களுக்கு ஆலோசனை கூறியது. இந்த நிறுவனம் அமெரிக்காவிலேயுள்ள தொழில் நுணுக்கத்தைக் கொண்டு கும்மிடிப்பூண்டிக்கு அருகில் 40 கோடி ரூபாய் முதலீட்டில்



1989 மே 3] [டாக்டர் மு. கருணாநிதி]

கூட்டுத்துறையில் 'டிட்கோ' நிறுவனத்தோடு கூட்டு சேர்ந்து 'டையனோ லாம்ப்ஸ்' என்ற மின் விளக்குகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுகிறது. இதற்கு அரசு தரவேண்டிய மூலதனத் தொகையை இப்போது தந்துள்ளது. இந்தத் தொழிற்சாலை மின்சார விளக்கு உற்பத்தியில் ஒரு நவீன முறையைக் கையாளக் கூடிய தொழிற்சாலை என்று கூறலாம். இந்த மின் விளக்குகள் மின்சாரத் தேவை குறைவதோடு விளக்குகளும் சற்று அதிகமான ஒளி தரும்.

நான்காவதாக, ஸ்பெயின் நாட்டு தொழில் நுண்ணறிவைக் கொண்டு 'மார்ட்டர் பிளாஸ்' தயாரிக்கும் தொழிற்சாலையை கும்மிடிப்பூண்டிக்கு அருகில் 4½ கோடி ரூபாய் மூலதனத்தில் 'டிட்கோ' நிறுவனமும் ஒரு தனியார் நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையில் நிறுவும்.

பலமாடிக் கட்டிடங்கள் பெருகி வரும் இந்நாளில் மழை மற்றும் புயல் காரணமாக கட்டிடங்களில் நீர் தேங்கி கட்டிடங்களைச் ரெகுப்படுத்தாமல் அம்மாதிரிக் கட்டிடங்களின் மேல்தளத்திலே நீர்க் சுரிவு ஏற்படாதவாறு அவற்றைத் தடுக்க 'மார்ட்டர் பிளாஸ்' என்ற ஒருவிதப் பொருளை வெளிநாடுகளிலே இப்போது உபயோகிக்கும் முறை இருந்து வருகிறது. அத்தகைய பொருளைத் தயாரிக்கும் தொழில் நுண்ணறிவை ஸ்பெயின் நாட்டிலிருந்து பெற்று இப்பொருளைத் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை கும்மிடிப்பூண்டிக்கு அருகிலே 4½ கோடி ரூபாய் மூலதனத்திலே 'டிட்கோ' நிறுவனமும் தனியார் நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையிலே ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலே இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு உற்பத்தியைத் தொடங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

(5) ஃபிரெஞ்ச் நாட்டுத் தொழில் நுண்ணறிவைக் கொண்டு தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரில் 5½ கோடி ரூபாய் மூலதனத்தில் நிறுவப்பட்டுள்ள 'டைட்டான்' கடிகாரத் தொழிற்சாலை.

'டிட்கோ' நிறுவனமும் 'டாட்டா' நிறுவனமும் இணைந்து கூட்டுத் துறையில் கடிகாரம் தயாரிக்கும் தொழிற்சாலை. இந்தியாவின் மொத்தத் தேவையில் 52 சதவீதம் கடிகாரங்களை இத்தொழிற்சாலை பூர்த்தி செய்கிறது. இத்தொழிற்சாலை இந்தியாவிலேயே தயாரிக்கும் 'குவார்ட்ஸ்' கடிகாரங்கள்தான் அதிகமாக விற்பனையாகின்றன. இத்தொழில் நிறுவனம் கடிகாரங்களுக்குத் தேவையான 'கேஸ்'-களை, கூடுகளை, வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்து உரிமம் பெற்று வந்தது. இப்போது அந்தக் 'கேஸ்'-களையும் இங்கேயே

[டாக்டர் மு. கருணாநிதி] 1989 மே 3

தயாரிப்பதற்கு அனுமதியைப் பெற்றிருப்பதால் இந்த [illegible] 20 கோடி ரூபாய் மூலதனத்தில் இந்தக் "கேஸ்" தயாரிக்கும் தொழிற்சாலை பூர்த்தி செய்யப்பட்டு உற்பத்தியைத்தொடங்கும்.

(6) சோயா பீன்ஸ் எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை. சோயா பீன்ஸ் என்ற 'புரதச் சத்து' நிறைந்த [illegible] பயிர் செய்து அதிலிருந்து சோயா எண்ணெய் [illegible] தொழிற்சாலையை கூட்டுத் துறை 'டிட்கோ'-வும் '[illegible] வனமும்' இணைந்து 27 கோடி ரூபாய் மூலதனத்திலே பொள்ளாச்சிக்கு அருகில் நிறுவி உள்ளன. ஆண்டு ஒன்றுக்கு இதற்குத் தேவையான 90 ஆயிரம் டன் சோயா விதைகள் இந்த மாநிலத்திலே உற்பத்தி செய்யப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு அந்த இலக்கினை நோக்கி இத்தொழிற்சாலை முன்னேறிக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 2-30)

(7) செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகத்தில் 17 கோடி ரூபாய் மூலதனத்தில் 'ரெலையன்ஸ் சிராமிக்ஸ்' தொழிற்சாலை 'டிட்கோ' நிறுவனமும் 'லைட் ரூபிங்' என்ற நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையில் 17 கோடி ரூபாய் மூலதனத்தில் மெருகூட்டப்பட்ட தரை மற்றும் சுவர் ஓடுகள் தயாரிக்கும் ரெலையன்ஸ் சிராமிக்ஸ் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது.

(8) வடார்க்காடு மாவட்டத்தில் வேலூரிலிருந்து வாணியம்பாடிக்குச் செல்லுகின்ற வழியில் தோல் பதனிடும் தொழிற்சாலை, தோல் பொருள்களைப் பதனிட்டு அவற்றிலிருந்து பல்வகையான பொருள்களைச் செய்வதற்காக கூட்டுத் துறையில் 1.6 கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட்டு, இப்போது பூர்த்தியாகின்ற நிலையில் உள்ளது. இந்தத் தொழிற்சாலை தன் உற்பத்தியை இந்த ஆண்டே தொடங்க அரசு வழிவகைகளைச் செய்யும்.

இந்த 8 தொழிற்சாலைகள் மட்டுமல்லாமல் ஏற்கெனவே "டிட்கோ' நிறுவனம் கூட்டுத் துறையில் எடுத்துக்கொண்ட இரண்டு தொழிற்சாலைகளினுடைய உற்பத்தித் திறனைப் பெருக்கவும் அந்தத் தொழில் நிறுவனங்களுடைய உற்பத்தி சதவீதத்தை மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது.

(9) தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரில் 19 கோடி ரூபாய் மூலதனத்தில் செயற்கை இனிப்பு தயாரிக்கும் தொழிற்சாலை கல்கத்தாவைச் சேர்ந்த 'உஸ்தாதே' என்ற நிறுவனத்தோடு டிட்கோ நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையில் [illegible]



1989 மே 3] [டாக்டர் மு. கருணாநிதி]

இருக்கும் 'பையோ-டெக்' என்ற நிறுவனமும் மரவள்ளிக் கிழங்கிலிருந்து கிடைக்கும் ஸ்டார்ச்சை அடிப்படையாகக் கொண்டு செயற்கை இனிப்புப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை இது. இது ஒரு புது முயற்சி.

(10) ஓசூருக்குப் பக்கத்தில் தேன்கனிக்கோட்டையில் 6.14 கோடி ரூபாய் முதலீட்டில் கூட்டுத் துறையில் நிறுவப்பட்ட சங்கம் அலுமினியத் தொழிற்சாலை. இப்போது இதன் மூலதனம் 10.35 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதன் உற்பத்தியும் 4,000 மெட்ரிக் டன்னிலிருந்து 7,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. அலுமினியம் தகடுகள், பட்டைகள் ஆகியவற்றை இது உற்பத்தி செய்து வருகிறது. இந்த உற்பத்தியையும் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய 10 தொழில் நிறுவனங்களுக்கும் உரிய மொத்த மூலதனம் 236.8 கோடி ரூபாய் ஆகும்.

அடுத்து, மத்திய அரசால் நிறுவப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தன்னுடைய பணிகளை இப்போது செய்து வருகின்றது. சுமார் ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் நாப்தா கிராக்கர் திட்டத்தை நிறைவேற்ற ஆர்.ஜி.பி. என்டர்பிரைஸ் நிறுவனம் முயற்சிகளை எடுத்து வருகிறது. அதற்கு வேண்டிய நாப்தா பெருமளவில் இந்தியாவில் கிடைக்காத காரணத்தால் நமக்குத் தேவையான முழு அளவையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. அந்த இறக்குமதியைக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, நூறு சதவீதம் ஏற்றுமதி சார்புடையதாக அமைக்க வேண்டுமென்பது இந்த நிறுவனத்தின் செயல்பாட்டு திட்டங்கள். அதற்கான பேச்சுவார்த்தைகளை அந்த நிறுவனம் தமிழக அரசோடு அண்மையிலே நடத்தி முடித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கு வேண்டிய அனுமதியை மத்திய அரசு கொடுத்தவுடன் இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் நிறுவத் தேவையான வழிவகைகளை நம்முடைய அரசு செய்துகொடுக்கும்.

ஏனென்றால் இத்தகைய பெரும் தொழில், அதுவும் பெட்ரோ கெமிக்கல் தொழில் அமைவதால் அதனைச் சார்ந்த பல்வேறு தொழில்கள் வளர வாய்ப்பு உள்ளது. இதனால் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்புக்கும் வழிவகுக்கும் என்பதால் அரசு இதிலே முழுக் கவனம் செலுத்தி வருகின்றது.

அடுத்து தொழில் மையங்கள், ஏதோ நிதிநிலை அறிக்கையிலே சொன்னீர்கள், ஒன்றையும் காணோமே என்று நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் மெத்த வருத்தப்பட்டார்

கள். மத்திய அரசு அண்மையிலே அறிவித்துள்ள தொழில்
மையங்கள் அமைத்திடும் பொறுப்பு சிப்காட் நிறுவனத்திடத்
திலே தரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு 3 இடங்கள் மைய
அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் மையங்
களுடைய நோக்கம் என்னவென்றால் பிற்பட்ட பகுதிகளிலே
தொழில் வளம், அதைப்போல முன்னேற்றத்தை ஊக்குவிப்
பது ஆகியவைகளாகும். அதற்கு அடிப்படையாக இருப்பது,
ஒரு பகுதியில் மலிந்திருக்கும் வறுமை, வேலைவாய்ப்பு இல்
லாமை, குறைந்த வசதியுள்ள வாழ்க்கைத் தரம் ஆகிய
வற்றை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தத் தொழில்
பேட்டைகளை அமைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது.

ஏற்கெனவே ஹோசூர், இராணிப்பேட்டை, மானாமதுரை
போன்ற இடங்களில் இந்தத் தொழில் பேட்டைகள் இருந்த
போதிலும் கூட, மத்திய அரசு நீங்கள் 6 இடங்களை எங்
களுக்கு எழுதுங்கள்; அதில் நாங்கள் 3 இடங்களைத் தேர்வு செய்து
அனுப்புகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கூட
கேட்டார்கள். 25 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு 3 இட
மாவது 6 இடமாவது? ஒரு இடத்திற்கு 30 கோடி ரூபாய்
தேவை என்று கேட்டார்கள். கேள்வி சரியானதுதான். ஆனால்
மைய அரசு அதற்குரிய தொகையைத் தருகின்ற காரணத்தால்
நம்முடைய 25 கோடி ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்படுகிற
தொகை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட 6 இடங்கள் குறித்து நாம்
மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்கிறோம். ஒன்று மயிலாடுதுறை,
தரங்கம்பாடிக்கு அருகே, பூம்புகாருக்கு அருகே உள்ள இடம்.
பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் அதற்கடுத்த புறநகர் பகுதி
யிலே உள்ள இடம்: திருநெல்வேலியிலே புறநகர் பகுதியிலே
உள்ள இடம்; மதுரை மாவட்டத்தில் திருமங்கலத்திற்கும், விருது
நகருக்கும் இடைப்பட்ட பகுதியில்; திருச்சி மாவட்டத்தில் ஜெயங்
கொண்டத்திற்கும், அரியலூருக்கும் அருகில்; சேலம் மாவட்டத்
தில் ஓமலூர்; ஒரு மையம் ஏற்படுத்துவதற்கு 25 கோடி முதல்
30 கோடி ரூபாய் வரையில் செலவாகும். இந்த 6 மையங்
களையும் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்
துவோம். அவர்கள் மூன்றுதான் தர முடியும் என்று சொல்லி
விடுவார்களேயானால் அதை ஏற்றுக் கொண்டு மீதம் உள்ள 3
மையங்களை அமைக்கிற முயற்சியிலே மாநில அரசு ஈடுபடும்
என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்
(மேசையைத் தட்டும் ஒலி).

நான் முதலிலேயே குறிப்பிட்டதுபோல் தமிழ்நாட்டில் பொது
வாகக் காவிரி தீரத்தில், தஞ்சை, தென்னாற்காடு பகுதியில்
எண்ணெய் மற்றும் எரிவாயு கிடைக்கிற சாத்தியக் கூறுகள்
மிக அதிகமாகியுள்ளது. இதை மூலப் பொருளாகக் கொண்டு



ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் டன் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை
நிறுவ ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி மத்திய அரசின்
பரிசீலனைக்காக அனுப்பி இருக்கிறோம். இந்த எண்ணெய்
சுத்திகரிப்பு ஆலை நன்னிலத்திற்கு அருகே பனங்குடி என்ற
இடத்தில் அனேகமாக நிறுவப்படக் கூடும். இந்த எண்ணெய்
சுத்திகரிப்பு ஆலையால் தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்
களில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு உகந்த சூழ்நிலை ஏற்படும்.

அடுத்து சர்க்கரை ஆலைத் தொழில் பற்றி இங்கே பலரும்
பேசி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தற்போதுள்ள சர்க்கரை
ஆலைகளின் மொத்த எண்ணிக்கை 27. கூட்டுறவுத் துறையிலே
உள்ள ஆலைகள் 12. பொதுத் துறையிலே உள்ள ஆலைகள்
3. தனியார் துறையிலே உள்ள ஆலைகள் 12. கடந்த ஆண்டு
மத்திய அரசு அனுமதி வழங்கிய புதிய ஆலைகள் 9. அவற்
றில் கூட்டுறவுத் துறை ஆலைகள் 4. தனியார் துறை ஆலை
கள் 5. தனியார் துறை எல்லாம் ஆரம்பித்து விட்டார்கள்.
கூட்டுறவுத் துறையிலேதான் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்று
திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். தனியார் துறை
யிலே கூட தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்ட ஆலையைப்
பொறுத்தவரையில் இன்னும் எந்தவிதமான ஆரம்ப வேலைகளும்
நடக்கவில்லை என்பது எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர்
அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும் என்று நான் நம்புகிறேன்.
கூட்டுறவுத் துறை ஆலைகள் செய்யாறு, சிதம்பரம் ஆகிய இடங்
களில் வேலைகளைத் தொடங்குவதற்கான முயற்சிகளில் ஈடு
பட்டுவிட்டன. செய்யாறு கூட்டுறவு ஆலை வரும்போது,
போளூருக்கும் ஆலை வேண்டும் என்ற குரலை அந்த வட்டாரத்
தில் உள்ளவர்கள் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அத்தனை
பேருடைய குரல் எதிரொலியாக நம்முடைய திரு. லத்தீப் அவர்
கள் இங்கே போளூர் சர்க்கரை ஆலை வேண்டும் என்று கேட்
டார்கள். நல்ல வேளையாக கோப்பாக்கத்திற்கும் கேட்காமல்
அவர்கள் போளூருக்கு வேண்டும் என்ற கேட்ட வரையில் திருப்தி.
இந்த ஆண்டு உள்ள நிதி நிலைமையிலே அது இயலாது. எதிர்
காலத்தில் போளூருக்கும் சர்க்கரை ஆலை வரும் என்ற தித்திப்
பான செய்தியை நான் திரு. லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலேயும், புதுக்கோட்டை மாவட்டத்
திலேயும் இரண்டு இடங்களில் சர்க்கரை ஆலைகள் துவங்கும்
வேலைகள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கின்றன.

தர்மபுரியில் எங்கே துவக்குவது என்பதில் இரண்டு எம்.எல்.ஏ.க்
களுக்கு இடையே பெரிய போட்டா போட்டி நடைபெற்றது.
எனவே அந்த இரண்டு எம்.எல்.ஏ.க்களுக்கும் நடு இடமாகப்
பார்த்து அரூர் தாலுக்காவில் கோபாலபுரம் என்ற ஊரில் —
ரொம்ப விசேஷமான இடம் என்று கருதி அந்த இடத்தில் —
சர்க்கரை ஆலை அமைக்கப்படும். அந்தக் கோபாலபுரத்

அரூர் தொகுதியிலே உள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
எம்.எல்.ஏ. தொகுதியிலே உள்ளது. ஆனால் அதற்கான கரும்பு
விவசாயிகள் எல்லாம் மொரப்பூர் தொகுதியில் அதாவது
தி.மு.க. உறுப்பினருடைய தொகுதியிலே உள்ளனர். புதுக்
கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியிலே நிறுவுவதாக இருக்
கிறது. பார்க்கலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அரசுத் துறையிலேயும், கூட்டுறவுத் துறையிலேயும்
4 தொழிற்சாலைகளுக்கு உரிமம் பெற்று இரண்டு ஆரம்பிக்கப்
பட்டு இருக்கிறது. அதில் ஒன்றின் இடத்தை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். புதுக்கோட்டை
மாவட்டத்தில் அறந்தாங்கியில் நாகுடி என்ற இடத்தில் கூட்டு
றவுச் சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டும் என்று இடம்
எல்லாம் தேர்வு செய்து முடிந்து விட்டது. ஆனால் இப்
போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்
பார்த்தால் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையின்
கவலையாக இருக்கிறது. நாகுடியிலே ஆரம்பித்தால் பக்கத்
திலே இருக்கிற பட்டுக்கோட்டை, பேராவூரணியிலே இருந்து
கரும்பு வருவதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பகுதி.சி.எம்.
பி. ஏரியா. அறந்தாங்கியில் ஒரு பகுதியில் காவிரித் தண்ணீர்
கிடைக்கிற வசதி இருக்கிறது. அதுபோல் பேராவூரணி, பட்டுக்
கோட்டை பகுதிகளிலும் கிடைக்கின்ற காரணத்தால் அதுதான்
பொருத்தமான இடம். எனவே அதை மாற்றாமல் அங்கேயே
அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்
டும். அதனை அரசியல் ரீதியாக இப்போது வேறு பகுதிக்கு
மாற்ற முயற்சி நடக்கிறது. அதனை உறுதிபடுத்துகிற
வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பார்க்கலாம்
என்று சொல்கிறபோது எங்கே அந்தத் தொகுதியை விட்டுப்
போய்விடுமோ என்று கவலையாக இருக்கிறது. லைசன்ஸ்
நாகுடிக்குத்தான் கிடைத்திருக்கிறது. எனவே அங்கேயே ஏற்
படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர்
அவர்களே, என்றைக்கும் எனக்கு குறுகிய நோக்கம் இருந்த
தில்லை என்பது திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு நன்
றாகத் தெரியும். பிரச்சினை என்னவென்றால் அங்கே தண்ணீர்
வசதி இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இருந்தாலும்
நானே நேரில் வந்து அந்த இடத்தைப் பார்த்து அந்த
ஆலை அமைக்க முடியுமா என்று பார்க்கிறேன். எம்.எல்.ஏ.
என்ற முறையில் அவர்கள் கூட வருவார்களோ, அனுமதி
கிடைக்குமோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது.
(சிரிப்பு).



பாவமாக இருக்கிறது எனக்கு. சர்க்கரை ஆலைகளைக்
குறித்த இந்த ஆட்சியினுடைய கொள்கை. .... .... ....
(பிற்பகல் 2-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு குறிப்பிட்டது,
ரொம்பப் பேர் சாப்பிடாமல் இருக்கின்றார்கள் என்று தான்.
(சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த சர்க்கரை ஆலைகளைக் குறித்த
இந்த ஆட்சியினுடைய கொள்கை, பொதுத் துறையிலே, கூட்
டுறவுத் துறையிலே அமைந்திடவேண்டும் என்பதுதான் இந்த
அரசினுடைய கொள்கையாக இருந்து வருகிறது. எனவே
எல்லா உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருப்பதைப்
போல, கொள்கை விளக்கக் குறிப்பிலே எடுத்துச்
சொல்லியிருப்பதைப்போல, வருங்காலத்தில் நிறுவப்படும் சர்க்கரை
ஆலைகள் எல்லாம் கூட்டுறவுத் துறையிலேதான் அமையும் என்
பதை இங்கே நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளுடைய மிகப் பெரிய பிரச்சினையாக
இருப்பது மாசுக்கட்டுப்பாடு. அதாவது,பொல்லூஷன் கண்ட்ரோல்.
அதைப் பற்றிக் கூட சொன்னார்கள். தோல் தொழிற்சாலை
பற்றிக்கூட சொன்னார்கள். அந்த மாசுகளையும்
அது போல கழிவு நீரால் ஏற்படக்கூடிய உபாதைகளையும்
அகற்ற வேண்டும் என்று பல லட்சம் ரூபாய்கள் செலவிலே
அரசு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. வெகு
விரைவிலே இந்த ஆண்டே கூட, அந்தத் திட்டங்கள் மிக முனைப்
பாக செயல்படுத்தப்படும் என்பதையும் நான் இந்த அவைக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்கு
நான் சொல்லியாக வேண்டும். வட சென்னையில் அனல் மின்
நிலையம் ஒன்று அமைக்கின்ற திட்டத்தை ஏற்கெனவே இருந்த
அரசு தொடங்கியது. அந்தத் திட்டத்தின்படி முதல் கட்டத்தில்
210 மெகாவாட் கொண்ட 3 அலகுகள், இரண்டாவது
கட்டத்தில் 210 மெகாவாட் கொண்ட 2 அலகுகள், மூன்றாவது
கட்டத்தில் 500 மெகாவாட் கொண்ட 2 அலகுகள், ஆகமொத்தம்
2,050 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம்
அமைக்கத் திட்டங்கள் இடப்பட்டுள்ளன. முதல் கட்ட
மின் நிலையத் திட்டத்திற்கு மைய மின் அதிகார மன்றம் மார்ச்
1984-லிலும், மைய திட்டக்குழு ஏப்ரல் 1987-லும் அனுமதி
தந்துவிட்டன. இதற்கு 547 கோடி ரூபாய் செலவாகும் என்று
1984ஆம் ஆண்டிலே கணக்கிடப்பட்டது. இப்போது திருத்திய
மதிப்பீடு இவ்வளவு நாள் ஆன காரணத்தினாலே 721 கோடி
ரூபாய் ஆகிறது. தாமதத்தால் ஏற்பட்ட திருத்திய மதிப்பீடு

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 3

இது. 541 கோடி ரூபாய் என்பது 721 கோடி ரூபாயாக
தாமதத்தால், திருத்திய மதிப்பீடாக ஆகியிருக்கிறது. இத்
திட்டத்தின் முதல் இரண்டு ஆலைகளுக்கு 150 மில்லியன் டாலர்
நிதி உதவி அளிக்க, அதாவது இந்திய நாணயத்தின்படி 225
கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி
முன் வந்துள்ளது. அவர்கள் முன்வந்து விட்ட காரணத்தினாலே
நாம் அந்தக் காலத்திலிருந்து இப்போதும் வட்டி செலுத்திக்
கொண்டு இருக்கிறோம். அவர்கள் முன்வந்த காலத்திலிருந்து
வட்டி செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை மாநில
அரசுக்கு ஏற்பட்டது. இந்தத் திட்டத்திற்கு செங்கை - அண்ணா
மாவட்டத்தில் எண்ணூர், புழுதிவாக்கம் கிராமங்களில் 2171
ஏக்கர் நிலம் கையகப்படுததும் பணி 1986-ல் தொடங்கப்பட்டது.
ஆனால் வி. ஜி. பன்னீர்தாஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான
சுமார் ஆயிரம் ஏக்கர் நிலமும், கிருஸ்தவ நகர் சங்கத்துக்குச்
சொந்தமான 117 ஏக்கர் நிலமும் அங்கே இருக்கிறது. அவர்
கள் வட்டாரத்திலே அந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதை
எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார்கள்.
அந்த வழக்கு தள்ளப்பட்டது. அவர்கள் உச்ச நீதிமன்றம்
சென்றார்கள். கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக அந்த
வழக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எந்த முடிவும்
ஏற்படவில்லை. இப்போது இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன்
அவர்களுடன் கலந்து பேசப்பட்டது. அவர்கள் ஒரேயடியாக
மறுத்துவிட்டார்கள். அங்கே 'ஒன்டர் லேண்ட்' ஏற்படுத்த
வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுடைய அண்ணா
வினுடைய கனவு, ஒண்டர் லேண்ட் ஏற்படுத்துவது. ஆகவே
தரமுடியாது என்று சொன்னார்கள். நான் சொன்னேன். உங்க
ளுடைய அண்ணன் கனவு 'ஒன்டர் லேண்ட்'. எங்களுடைய
அண்ணாவின் கனவு என்ன தெரியுமா? தமிழ்நாட்டிலுள்ள
மக்களை வாழவைப்பது. அதற்கு மின்சாரம் தேவை என்று
நான், 'வலியுறுத்தி, வலியுறுத்தி, வலியுறுத்தி' நம்முடைய
குமரி அனந்தன், நமது இலக்கியச் செல்வர், அடிக்கடி சொல்வார்
கள், மூன்று முறைகள் சொல்வார்கள். ஒவ்வொரு 'வலி
யுறுத்தி' என்பதிலும் சில பொருள்கள் அடங்கியிருக்கிறது.
அதை வெளியிலே சொல்ல விரும்பவில்லை. எனவே, 'வலி
யுறுத்தி, வலியுறுத்தி, வலியுறுத்திக்' கேட்டுக்கொண்டதன்
பேரில், கேட்டுக் கொண்டதன் பேரில், கேட்டுக்கொண்டதன்
பேரில் (சிரிப்பு) இப்போது அவர்கள் உச்ச நீதி மன்றத்திலே
யிருந்து வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டார்கள்.
எனவே இந்த இடத்திலே ஜூன் முதல் வாரத்திலேயே இந்தத்
திட்டப் பணிகள் தொடங்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சி
யோடு நான் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.
இவ்வளவு அறிவிப்புகளை உங்களுக்கு மகிழ்ச்சி ஊட்டக்கூடிய
வைகளை எடுத்துச் சொல்லி, இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட
கருத்துக்கள் யாரையும் புண்படுத்துவதற்காகச் சொல்லப்பட்ட
வைகள் அல்ல, நடந்தவைகள் நடந்தவைகளாக இருந்தாலும்



1989 மே 3] [டாக்டர். மு. கருணாநிதி]

கூட, நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கவேண்டும் என்ற
முறையில், தமிழ்நாடு தொழில் வளம் கொழிக்கின்ற பூமியாக
இருக்கவேண்டுமென்ற முறையில், எல்லோருடைய ஒத்துழைப்
பும் தேவை என்று கேட்டுக்கொண்டு, தொழி
லாளர்களுடைய அரசாக இருக்கின்ற காரணத்தினால்,
இந்த அரசு தொழிலதிபர்களையும் அழைத்துப் பேசி தொழில்
அமைதி ஏற்படுகின்ற வகையிலே எல்லா வகையான சலுகைகளை
அவர்களுக்கு அளிக்கும் என்று எடுத்துக் காட்டவிரும்புகிறேன்.
கவர்னர் அளித்த சலுகைகளும் சட்ட வடிவமாகும்
என்பதை எடுத்துச் சொல்லி, தொழிலுக்கு எல்லா வகையிலும்
ஊக்கமளித்திருக்கிறது, அந்த வகையிலே நீங்களும் ஊக்க
மளிக்க வேண்டும், ஆக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, தந்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்
பெற வேண்டுமென்று பணிவன்போடு கூறி, இந்தளவில் அமை
கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, நேரம்
இப்போதே 3 மணியாகிறது. விரைவிலே முடித்துவிடுகிறேன்.
ஒரு சின்னப்பிரச்சினை. பிளாஸ்டிக் பைகள் தயாரிக்கிற
தொழிற்சாலைகள் தமிழ் நாட்டிலே 80, 85 இருக்கின்றன.
ஜூட் லாபி காரணமாக, டெல்லியிலே ஒரு ஆர்டர் போட்டு,
எல்லாம் சணல் பைகளிலே போட வேண்டுமென்று உத்தரவு
போட்டிருக்கிறார்கள். அதனால் 60 தொழிற்சாலைகள் பாதிக்
கப்பட்டிருக்கின்றன. அதிலே 50,000 தொழிலாளர்கள் பணி
யாற்றுகிறார்கள். சிறுசிறு தொழிற்சாலைகள் அவை. அறந்
தாங்கியில் மட்டும் 10 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அது
தான் பிரச்சினை. மற்ற இடங்களிலும் இருக்கின்றன. அதிலே
60 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களைக்கூட அந்த அசோசியேஷனைச்
சேர்ந்தவர்கள் வந்து பார்த்து, பிரச்சினைகளைச் சொல்லி
இருக்கிறார்கள். சிப்காட், டிக் நிறுவனங்களிடமிருந்து லோன்
வாங்கியிருக்கிறார்கள். அவை மூடி இருக்கிற காரணத்தாலே,
சிறுசிறு தொழிற்சாலைகள் நஷ்டத்திலே இருக்கின்றன.
தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவே
ஒரு கமிட்டி போட்டு, விசாரித்து அவர்களுக்கு எப்படிப் பரிகாரம்
காணலாமென்று பார்க்கலாம்.

இரண்டாவது, இங்கேயுள்ள சிமெண்ட் பேக்டரி, சுகர்
பேக்டரி எல்லாம் வேறு மாநிலங்களிலிருந்து வாங்காமல்,
தமிழ் நாட்டிலே இருக்கிற யூனிட்டுகளுக்கு பிரையாரிட்டி
கொடுத்து வாங்க வேண்டுமென்று ஆர்டர் போட்டால்
அந்தச் சிறு தொழிலதிபர்கள் காப்பாற்றப்படுவார்கள். தொழி
லாளர்களுக்கும் வேலை கிடைக்கும். இதை மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அதற்கு ஒரு
கமிட்டி போட்டு விசாரிக்கலாம்.

அடுத்து, முதலமைச்சர் அவர்கள் சொன்ன செய்தி பத்திரிகையில் வந்தால், ஒரு சலுகையை நானும், திரு கே.கே. எஸ்.எஸ். ஆரும் கேட்டோமென்று தவறாகச் செய்தி வந்து விடக்கூடாது. அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கி றேன். எம். எல். ஏ-க்களைப் பாராட்டுகிற விஷயத்திலே, 13 வருடங்கள் என்று முடிவெடுக்கிறபோது, 3 தடவை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலே போதும். அவர்களுக்கு அந்தப் பாராட்டு கிடைத்து விடுகிறது. அவர்கள் அதற்குத் தகுதி பெற்றுவிடுகிறார்கள். நாங்கள் 4 முறை வெற்றி பெற்று வந்தும், அந்த உரிமை, அந்த மூத்த உறுப்பினர்கள் பட்டியலில் வரவில்லையே என்பதற்காகக் கேட்டோம். வரவில்லை என்பது கட்சியினுடைய முடிவு. அப்படிக் கேட்டதற்குக் காரணம் உரிமை—சலுகையில்லை— உரிமை. 4 முறை வெற்றி பெற்ற காரணத்தால் அது உரிமை. அந்த அறிவிக்க வேண்டுமென்று கேட்டோம். அவ்வளவுதான். முன்னாலே சொன்ன பிரச்சி னையில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கமிட்டி போட்டு விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலே எடுத்து வைத்த வேண்டுகோளுக்கு நன்றி. அது கவனிக்கப்படும். கடைசியாகச் சொன்னதற்கு என்னுடைய அனுதாபம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே தெரிவித்ததுபோல், புதுக்கோட்டை மாவட்டத்தில் நாகுடியில், நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தொகுதியில் சர்க்கரை ஆலை வைப்பதற்கு நான் மனப்பூர்வமான இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த நாகுடியில் வைக்க முடியாவிட்டால், அருகில் உள்ள பேராவூரணி நிரம்ப வசதிகள் படைத்தது. அங்கே வைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, முதலமைச் சரவர்கள் இதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் அமைச்சராக இல்லாமல் போன பிறகும் கூட, 7 முறை டெல்லிக்குப் போய், அப்போது ஜாயின்ட் டைரக்டராக இருந்த திரு. லட்சுமி ரதனை, முன்னாள் அமைச்சர் என்ற முறையில் தனிப்பட்ட முறையில் பார்த்து அவரிடம் சொல்லிச் சொல்லி, அதிகாரிகளைப் பார்த்து, அமைச்சர்களைப் பார்த்து அனுமதி வாங்கி வந்தேன். தயவு செய்து அங்கே ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல திட்டங்களை இங்கே அறிவித்தார்கள். ஆனால் ஏற்கெனவே



சாங்ஷன் செய்யப்பட்டு, மதுரை மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பிலே இண்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ் போடவேண்டுமென்று இடமெல்லாம் பார்த்து, கடைசியில் என்ன கொமையோ தெரியவில்லை, சார், அதை இல்லை என்று முடித்துவிட்டார்கள், முந்தைய அரசினர். அதை துறையிலிருந்து அறியும்போது, மிகவும் வருத்தமாக இருக்கிறது. செம்பட்டி என்ற இடத்தில் ஆயிரம் ஏக்கர் நிலம் பார்த்தார்கள். அதை ஆரம்பிப்போம் என்று சொன்னார்கள். தயவு செய்து நம்முடைய மாண்புமிகு முதல் வரவர்கள் திண்டுக்கல்— அது என்ன மாவட்டம் (குறுக்கீடு) காயிதே மில்லத் திண்டுக்கல் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. நேரம் அப்படி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அங்கே ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இண்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் ஆரம்பிக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பரிசளிப்பு விழாக்களில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு மூன்றாம் பரிசு என்று உண்டு. யாருக்காவது கொடுக்க முடியாவிட்டால் கொடுக்க வாய்ப்பு இல்லாவிட்டால், ஆறுதல் பரிசு என்று உண்டு. அம்மையார் அவர்களுக்கு ஆறுதல் பரிசு உண்டு.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே: ஆலங்குளம் சிமெண்ட் பேக்டரி தூசியால் விவசாயம் கெடுகிறது. தொழி லிலும் நஷ்டம் ஏற்படுகிறது. அரியலூர் பேக்டரியை மாடர்னி சேஷனுக்கு எடுத்துகொள்ளும்போது, ஆலங்குளம் சிமெண்ட் ஆலையும் அதோடு சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; கவனிக்கப்படும்.

(பிற்பகல் 2-50)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பாதிக்கும் அளவுக்குக் கடுமையான மின் பற்றாக்குறை இருக் கிறது. எனவே மின் பற்றாக்குறை நீங்க [illegible] முதலாளித்துவ நாடுகளின் தவறான பிரச்சாரத்[illegible] கணித்து. சோவியத் யூனியன் உதவியோடு [illegible] கூடங்குளத்திலே அமைக்க இருக்கிற அணு[illegible] நிலையத்திற்கு தமிழக அரசு உதவிகளைப் புரிந்து விரை[illegible] அது வர துணை புரியுமா என்று அறிய விரும்புகிறேன்.



D
Y211,31(N89
N89.1L-2
44830
600 00

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மின்சாரத் தட்டுப் பாட்டை நாளைக்கே கூடங்குளம் போக்கும் என்று நண்பர் உறுதி அளித்தால் இன்றிரவே கூடங்குளம் மின்நிலையம் அமைக் கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூட்டுறவு நூற்பாலை ஒன்று பெரியார் மாவட்டம் பவானிசாகர் பகுதியில் துவக்கப்படுவதற்கு உத்திரவிடப் பட்டதாகச் சொல்லப்பட்டு, தொழில்துறை அமைச்சர் மாற்றப் பட்டதால் அதுவும் மாறியதாகச் சொல்லப்பட்டது. பெரியார் மாவட்டம் நிறைய பஞ்சு உற்பத்தியாகிற மாவட்டம். பெரு வாரியான விவசாயிகள்—ஆயிரக் கணக்கில்—லட்சக் கணக்கில் உற்பத்தி செய்கிறார்கள். அங்கே உற்பந்தியாகும் பஞ்சை திருப்பூரிலிருந்து வெளி மாநிலத்தினர்கள்கூட வாங்கிச் செல்கிறார்கள். அது புதுக்கோட்டைக்குப் போனதாகத் தகவல். எனவே எங்கள் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, எங்கள் மாவட்டத்தின் இரண்டு சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையில் இயங்குகின்றன. பெரியார் மாவட்டத்தில் அதிகப்படியான கரும்பும் விளைகிறது. எனவே அங்கே கூட்டுறவுத் துறையில் ஒரு ஆலைக்கு அனுமதி வழங்குவ தாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்து, கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையும் ஒரு நூற்பாலையும் துவங்க வருங்காலத்திலாவது அரசு ஆவண செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. மாண்புமிகு உறுப் பினர் திரு. திருநாவுக்கரசு அறந்தாங்கியை விட்டுக் கொடுத்தால் அது உங்கள் தொகுதியில் வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 24—தொழில்கள்.

திருவாளர்கள் கோ. வீரையன், பொன். விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,24,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.





### கோரிக்கை எண். 51.—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் எஸ். ஏ. தங்கராஜன், பொன். விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,23,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (4—5—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

121. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 19—1—1988-ஆம் நாளிட்ட 33-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

122. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 4—8—1988-ஆம் நாளிட்ட 1101-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

123. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 9—12—1987-ஆம்

நாளிட்ட 1353 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை [1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது].

124. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின்
15—6—1988-ஆம் நாளிட்ட II(1) 96/88 ஆம் எண்
அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-
சமய அறக்கட்டளைகள் துறையின் 9—12—1988-ஆம் நாளிட்ட
1488-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது].

125. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின்
1984–85-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை.
[1959-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்
1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]
(தமிழ்).

126. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1985–86-
ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1959 ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956
619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

149. கோரிக்கை எண். 24—பெருந் தொழில்கள் பற்றிய
கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 மற்றும் கிராமைட்
தொழில்கள் பற்றிய கொள்கைக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

150. தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1989–90
(தமிழ், ஆங்கிலம்).

151. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம்,
1989–90 (தமிழ், ஆங்கிலம்).

152. புவியியல் மற்றும் சுரங்கத்துறை பற்றிய செயலாக்கத்
திட்டம், 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

153. தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனம் பற்றிய
புத்தகம் (தமிழ்).





## இணைப்பு I.

29-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

### தொழில் கொள்கையும் திட்டங்களும்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த பல்
வேறு திட்டங்களை மேற்கொள்வதென மாநில அரசு கொள்கை
முடிவு எடுத்துள்ளது.

2. பொருளாதார வளர்ச்சியிலும், வேலை வாய்ப்பு பெருக்
கத்திலும் நம் மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்கள் ஆற்றும்
பங்கு குறிப்பிடத்தக்கது என்று கூற முடியாத நிலை தற்போது
இருந்து வருகிறது. சில தொழில்களுக்கு, அதிலும் குறிப்பாக
பிற்பட்ட பகுதியில் உள்ள சிறு தொழில்களுக்கு எப்போதும்
போல் முன்னுரிமை அளிப்பது என்பது அரசின் முடிவு. அதே
நேரத்தில் பெருந் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்ப
திலும் அதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதிலும் அரசு
கவனம் செலுத்தி வருகிறது.

3. தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்த வேண்டும் என்ற
நோக்கத்தைக் கருத்திற் கொண்டு இம்மாநிலத்திலுள்ள எல்லா
பெரிய தொழில் நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளும்
முயற்சியில் இவ்வரசு ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சியால்
தொழில் துறையில் அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினை
களைத் தீர்க்கவும், நீண்டகால செயல்திறன் உள்ள திட்டத்தில்
ஈடுபடவும் அதற்கான ஒரு கொள்கை நெறிமுறையை வகுக்கவும்
இவ்வரசு முயற்சி எடுத்து வருகிறது.

4. இவ்வரசின் புதிய முயற்சியின் பயனாக தொழில்
வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக ஒரு உயர்மட்டக் குழு
நிறுவப்பட்டுள்ளது. இக் குழு நீண்ட தொலை நோக்குக்
கொண்ட திட்டங்களை ஆயும் குழுவாகும். முதற் கட்டமாக
இக் குழு தொழில்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும்
பல்வேறு சலுகைகளைக் குறித்து ஒரு மறு ஆய்வு செய்தது.
மத்திய அரசு தன் முதலீட்டு மானிய திட்டத்தை 30–9–1988க்கு
மேல் கைவிட்ட காரணத்தால் ஏற்பட்ட விளைவுகளையும்
இக்குழு ஆய்ந்தது. இக்குழு ஆய்ந்த பல்வேறு சலுகைகளின்
விவரங்கள் வருமாறு:—

மத்திய அரசின் கொள்கையின்படி 'ஏ', 'பி', 'சி' என்று
வகைப்படுத்தப்பட்ட பின்தங்கிய வட்டங்கள் தற்போது இல்லை.
எனவே 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படை
யிலும், தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பை பெறுபவர்களின்
எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டும், பெரிய மற்றும்
நடுத்தரத் தொழில்களில் செய்யப்பட்ட முதலீட்டின் அடிப்
படையிலும் இந்த வகைப்பாடுகளைச் செய்ய இவ்வரசு முடிவு

எடுத்துள்ளது. இந்த அடிப்படையில் வட்டங்கள் பிரிக்கப் பட்டால் சுமார் 80 முதல் 100 வட்டங்கள் வரை அமைந்திட லாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. இத்தகைய வட்டங்களில் தொழில்களைத் துவங்க 15 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் 10 சதவீதம் தமிழக அரசு முதலீட்டு மானியம் வழங்கும்.

6. தமிழ்நாடு 'சிப்காட்' நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தொழிற்பேட்டைகள் மற்றும் வளர்ச்சி மையங்களுக்கு 20 இலட் சம் ரூபாய்க்கு மேற்படாமல் 15 சதவீதம் முதலீட்டு மானியம் இவ்வரசு வழங்கும்.

7. மின் சக்தியை அதிகமான அளவில் பயன்படுத்தும் தொழில் களுக்கும் மற்றும் மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்கெனவே வழக்கில் இருந்து வரும் தொழில்களுக் கும் இந்த மானியம் கிடைக்காது.

8. அதைப் போலவே சென்னை மாநகராட்சி எல்லை யிலிருந்து 50 கிலோ மீட்டர் சுற்று வட்டத்திற்கப்பாலும், கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளின் எல்லையிலிருந்து 15 கிலோ மீட்டர் சுற்று வட்டத்திற்கு அப்பாலும் அல்லது எல்லா நகராட்சி எல்லைகளுக்கு அப்பாலும் துவங்கப்படும் தொழில்களுக்கும் இந்த மானியம் கிடைக்கும்.

9. ஏற்கெனவே மின்னணு மற்றும் தோல் தொழில்களுக்குக் கிடைத்து வந்த சிறப்பு மானியம் தொடர்ந்து கிடைக்கும்.

10. 10 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் 10 சதவீதம் சிறப்பு மானியம் ஏற்கெனவே பெற்று வரும் தொழில்கள்:—

1. வாகன உதிரி உறுப்புகள்.

2. மருந்து பொருட்கள்.

3. சூரிய சக்தி உபகரணங்கள்.

4. ஏற்றுமதிக்கான தங்க மற்றும் வைர நகைகள்.

5. மாசு கட்டுப்பாடு உபகரணங்கள்,

6. சணல் தொழில்,



மேலும் இதோடு கூட—

1. விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரிகள்.

2. உணவுப் பொருள் தயாரிப்பு.

3. அலுமினியம், பி.வி.சி. கதவு மற்றும் ஜன்னல் சட்டங் கள் போன்ற சிக்கன கட்டிட தளவாட சாமான்கள் ஆகிய தொழில்களையும் சேர்ப்பதென அரசு முடிவு எடுத்துள்ளது.

### வட்டியில்லா விற்பனை வரி கடன் திட்டம்.

11. வட்டியில்லா விற்பனை வரி கடன் திட்டம் செயல்படு வதை இந்த அரசு மறு ஆய்வு செய்தது. மறு ஆய்வு செய்ததின் அடிப்படையில் நடைமுறைக்கேற்ப சில மாறுதல்களைச் செய்ய இவ்வரசு உத்தேசித்துள்ளது.

12. ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகள் மேலும் விரிவு படுத்தப்பட்டாலோ அல்லது மாற்றுத் தொழிலுக்கு விண்ணப் பித்தாலோ (Diversification) அவர்களுக்கு வழங்கப்படும் வட்டியில்லா விற்பனைக் கடன் கீழ்க்கண்ட அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்:—

கடன் அளவு-அந்த தொழில் நிறுவனம் கடந்த மூன்றாண்டு களில் மொத்தமாகச் செலுத்திய விற்பனை வரி அளவிலோ அல்லது புதிய மூலதனத்தில் 25 சதவீதமோ அல்லது மூன்று கோடி ரூபாய்—இவைகளில் எது குறைந்ததோ அந்த அளவில் வட்டியில்லாக் கடன் கிடைக்கும். 'சிப்காட்' நிறுவனம் நிறுவி யுள்ள தொழிற்பேட்டைகளிலும் மற்றும் வளர்ச்சி மையங் களிலும் மற்றும் பின்தங்கிய வட்டங்களிலும் உள்ள தொழில் அமைப்புகள் இந்தச் சலுகையைப் பெறுவதற்குத் தகுதியுடைய வைகள்.

13. புதியதாக நிறுவப்படும் தொழில்களுக்கு விற்பனை வரியின் வசூல் ஐந்தாண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்படும். அவ்வாறு ஒத்தி வைக்கப்படுகிற விற்பனை வரி, அந்தத் தொழிலில் 80 சதவீதம் மூலதனமோ அல்லது 3 கோடி ரூபாயோ அதில் எது குறைவாக இருக்கிறதோ அந்தத் தொகை ஒத்தி வைக்கப்படும்.

'சிப்காட்' நிறுவனத்தின் கீழ் அமைந்துள்ள தொழில் மையங்களுக்குத்தான் இந்த 80 சதவீத விற்பனை வரி ஒத்தி வைப்பு பொருந்தும். மற்ற பின் தங்கிய வட்டங்களுக்கு இந்த விற்பனை வரி ஒத்தி வைப்பு 70 சதவீதமாக இருக்கும்.

[1989 மே 3

மின்சார கட்டணச் சலுகை.

14. புதிய தொழிற்சாலைகளுக்கு மின்சார கட்டணச் சலுகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| முதலாண்டு | .. | .. | .. | 40 சதவீதம். |
| இரண்டாம் ஆண்டு | .. | .. | | 30 சதவீதம். |
| மூன்றாம் ஆண்டு | .. | .. | | 20 சதவீதம். |

15. தொழிற்சாலைகளுக்கு மின் பற்றாக்குறை இருப்பதை கருத்திற் கொண்டு அத்தகைய தொழில் நிறுவனங்கள் புதியதாக வாங்கும் ஜெனரேட்டர் செட்டுகளுக்கு 15 சதவீதம் மானியம் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் மானியம் 5 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கும்.

16. 'சிப்காட்' தொழில் மற்றும் வணிகத்துறை மற்றும் 'சிட்கோ' விடமிருந்து தொழில் துவங்குவதற்காக நிலத்தை அல்லது தொழில்கூடங்களை விலைக்கோ அல்லது குத்தகைக்கோ வாங்கினால் அவர்களுக்கு முத்திரைக் கட்டணத்திலிருந்து (Stamp Duty) முழு விலக்கு அளிக்கப்படும்.

17. இம்மாநிலத்தில் தொழில் நிறுவுவதற்குள்ள சாத்தியக் கூறுகளை ஆய்ந்து அறிக்கை (Feasibility Report) தயாரிப் பதற்கான செலவில் 50 சதவீதம் மானியம் அளிக்கப்படும்.

18. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி மந்தத்திற்கு ஒரு முக்கியக் காரணம் மத்திய அரசு இந்த மாநிலத்தில் பொதுத் துறையில் செய்ய வேண்டிய முதலீடு குறைந்ததுதான்.

மத்திய அரசு துறையின் கீழ் இந்த மாநிலத்தில் செய்ய வேண்டிய முதலீட்டின் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள் ளது. அதனால்தான் புதிய முதலீடுகள் செய்ய மத்திய அரசு முன் வர வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்துகிறது. இதற்கு முன் மாதிரியாக தொலைச் செய்தி போக்குவரத்து துறையில் ஒரு ஆதாரமான தொழிலை தமிழ்நாட்டில் நிறுவ முன் வர வேண்டும் என்று மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தியுள்ளது.

19. இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு தொழில் அமைதி இன்றியமையாதது என்பதை ஏற்று அரசு தொழில் அமைதிக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது. தொழிலாளர்களுக்குரிய பங்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதிலும் இந்த அரசு கருத்தாக உள்ளது. தொழிலாளர் உற்பத்தித் திறனையும், தரமான உற்பத்தியையும் பெருக்குவதன் [illegible]ம்மாநிலத்தில் உள்ள



1989 மே 3]

தொழில்கள் தொடர்ந்து மற்ற மாநிலங்களில் உள்ள தொழில் வளர்ச்சியோடு விலையிலும், தரத்திலும் போட்டியிடுகின்ற நிலை காப்பாற்றப்பட வேண்டும் என்று இவ்வரசு கருதுகிறது.

20. இம்மாநிலம் எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச் சினை மின்சக்தி பற்றாக்குறை. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு மின் உற்பத்திக்காக 1988–89 ஆம் ஆண்டு 350 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீட்டை 1989–90 ஆம் ஆண்டுக்கு 460 கோடி ரூபாயாக அரசு உயர்த்தியுள்ளது. இதில் 385 கோடி ரூபாய் திட்டத்திலும் அதற்கு மேலாக 75 கோடி ரூபாயும் அரசு அளிக்க முன் வந்துள்ளது.

21. மேட்டூரில் உள்ள 210 மெகாவாட் மூன்றாவது அனல் மின் நிலையத் திட்டம் இந்த நடப்பாண்டு இறுதியில் மின் உற் பத்தியைத் துவங்கும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு அரசு முன்னுரிமை தந்ததன் மூலம் அதன் மின் உற்பத்தி 1991-ல் 420 மெகாவாட் அதிகமாக கிடைக்கும்.

22. 2,050 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையத்தின் உற்பத்தி வேலைகள் துரிதப்படுத்தப் படுகின்றன.

23. மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றை மேம்படுத்த கணிசமான அளவு நிதியுதவி அளித்து அந்தப் பணி களைச் செம்மைப்படுத்த அரசு முன் வந்திருக்கிறது. காவிரிப் படுகையில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கண்டு பிடிக்கப் பட்டிருப்பதையொட்டி, மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியுமென அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

24. புதிய தொழில்களைத் தொடங்க அனுமதி வழங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைப் போக்கி சீரமைத்து, செம்மைப் படுத்தி அரசு ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொண்டு வருகிறது. இதனால் இந்த நடைமுறைகளில் உள்ள சிக்கல்கள் களையப்பட்டு சீராகி வருகிறது.

25. தொழிலுக்குப் பெறப்பட்ட இசைவுக் கடிதம் (Letter of Intent) தொழில் உரிமமாக (Licence) மாறும்வரை, அந்த நிறுவனத்தின் வளர்ச்சி உன்னிப்பாக கண்காணிக் கப்படும். கடந்த நிதியாண்டில் (1988–89-ல்), மத்திய அரசிட மிருந்து 32 தொழில் உரிமங்களுக்கான இசைவுக் கடிதங்கள் இம்மாநிலத்திற்குக் கிடைத்தன. இதைப் போலவே வர்த்தக வளர்ச்சி தலைமை இயக்ககத்திற்கு 6 தொழில்களுக்கு பதிவும் கிடைத்துள்ளது.

ர்க்கரைத் தொழில் :

26. நாள் ஒன்றுக்கு 2,500 டன் கரும்புச்சாறு பிழியும் உற்
பத்தித் திறன் கொண்ட 9 சர்க்கரை ஆலைகளை இம்மாநிலத்
தில் நிறுவ மத்திய அரசு ஏற்கெனவே இசைவுக் கடிதங்களை
வழங்கியுள்ளது. இவற்றில் 4 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும்,
5 ஆலைகள் தனியார் துறையிலும் செயற்படுத்த முன்னரே
அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதோடு கூட ஏற்கெனவே
உள்ள 13 ஆலைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், இசை
வுக் கடிதங்கள் கிடைத்துள்ளன. இந்த அடிப்படையில் கூடுதல்
உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்கு 36,750 டன் கரும்புச்சாறு
பிழியும் அளவில் அமையும். இது தற்போதுள்ள உற்பத்தித்
திறனில் 15 சதவீதமாகும்.

27. இந்த அரசின் கொள்கையின்படி இனி அமையவுள்ள
எல்லா சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையிலும், கூட்டு
றவுத் துறையிலும் மட்டுமே அனுமதிக்கப்படும்.

28. இத்துறையில் புதிய முயற்சியாக மின் சக்தியை உற்
பத்தி செய்து சீரான மின்சாரத்தை வழங்குவதற்காக இரண்டு
கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்திக்கான இயந்திரங்
கள் இரண்டை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த
இயந்திரம் ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவு ரூபாய் 483 இலட்சம்
என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் கடுமையான
மின்சார பற்றாக்குறை இருப்பதால் அந்த மின்சார பற்றாக்
குறையைச் சமாளித்து அதே நேரத்தில் உற்பத்தியின் அளவைக்
குறைக்காமல் இப்போதுள்ள சர்க்கரை ஆலை அனைத்திற்கும்
மற்றும் இனி வரப்போகும் ஆலைகளுக்கும் இந்தத் திட்டத்தின்
மூலம் ஊக்கம் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. தேவை
யான மின்சக்தி கிடைக்க இத்தகைய கூடுதல் மின்சக்தி உற்
பத்தி முறை உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) :

29. 1965 இல் நிறுவப்பட்ட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்
கழகம் இதுவரை 53 தொழில் நிறுவனங்கள் ஏற்பட உதவி
யுள்ளது. இத் திட்டங்களில் செய்யப்பட்ட மொத்த முதலீடு
921 கோடி ரூபாய். 'டிட்கோ' தொழில் முயற்சியின் பயனாக
கிடைத்த வேலை வாய்ப்பு சுமார் 40 ஆயிரம். 'டிட்கோ'
வினால் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களில் 8 பொதுத் துறை
யிலும், 33 கூட்டுத் துறையிலும் இயங்கி வருகின்றன. கூட்டுத்
துறையிலே 'டிட்கோ' வின் முதலீடு 26 சதவீதமாகவும் தனியார்
முதலீடு 25 சதவீதமாகவும் இருக்கும். எஞ்சியுள்ள முதலீடுகள்
பொது மக்களுடையது (Public Issue).





30. கூட்டுத் துறையில் தனியாருடன் சேர்ந்து முதலீடு
செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூட்டுத் துறை
யில் நிறுவப்பட்ட தொழிற்சாலை வணிக உற்பத்தியை ஆரம்
பித்து வந்த பின்பு அந்த முதலீட்டிலிருந்து ''டிட்கோ'' விலகிக்
கொண்டு சில தகுதிகளின் அடிப்படையில் அதை தனியாரிடம்
அளித்துவிட வாய்ப்பு உள்ளது. இந்த ஒப்பந்தம் நடைமுறைப்
படுத்தப்படாமல் கொள்கை அளவிலேயே பெரும்பாலும்
இருந்தது. இதனால் ''டிட்கோ'' வின் முதலீடு இந்தக் கூட்டுத்
துறையிலேயே முடக்கப்பட்டுள்ளது. அந்த முதலீட்டுக்கான
இலாபம் பெரும்பாலும் திருப்திகரமாகவும் இல்லை. ஆகவே,
இதுபோன்று கூட்டுத் துறையில் புதிய தொழில்களை அமைக்கத்
தொடர்ந்து 26 சதவீதம் நிதியுதவி அளிக்க ''டிட்கோ''வில்
நிதிநிலை சரியில்லை. ஆனால், கூட்டுத் துறையில் உள்ள
தொழில்களில் சில குறிப்பிட்ட தொழில்களைத் தவிர (Flagship)
மற்றத் தொழில்களிலிருந்து ''டிட்கோ'' விலகிக் கொண்டு
அதனால் கிடைக்கும் நிதி ஆதாரத்தைக் கொண்டு புதிய
தொழில்களில் முதலீடு செய்யவும், புதிய தொழில்களை ஊக்கு
விக்கவும் அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இந்த
முதலீட்டிலிருந்து விடுபடும் கொள்கை (Disinvestment Policy)
தொழில் நிறுவனங்களின் தகுதியின் அடிப்படையிலும், தேவையின்
அடிப்படையிலும் முடிவு செய்யப்படும்.

31. தொழில்களுக்குக் குறைந்த முதலீடு இருந்தகாலத்தில்
''டிட்கோ''விற்கு 26 சதவீதப் பங்கு முதலீடு ஒரு பிரச்சினையாக
இருந்ததில்லை. ஆனால் இப்போதுள்ள பெருந் தொழில்களுக்கு
உள்ள முதலீடு அதிகமாக இருப்பதால், அவைகளைக் கூட்டுத்
துறையில் நிறுவும்போது 26 சதவீதம் முதலீடு செய்வது எல்பது
மிகப் பெரிய நிதிச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அதனால்,
ஏற்கெனவே உரிமங்கள் பெறப்பட்ட தொழில்களை ஆரம்பிப்பதில்
காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் சிக்கலைத் தீர்த்து
தொழில் வளர்ச்சியை விரைவில் ஊக்குவிக்கும் பொருட்டும்,
நமக்குக் கிடைத்த தொழில் உரிமங்களை விரைவில் துவங்கு
வதற்காக ''டிட்கோ'' வினுடைய முதலீட்டை 26 சதவீதத்
திலிருந்து 11 சதவீதமாகக் குறைத்துக் கொண்டு அரசு ஊக்கு
விக்கும் துறையில் (Associate Sector) புதிய தொழில்களை
ஊக்குவிப்பது என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த நடைமுறை, குஜராத், மராட்டியம், ஆந்திரம், பஞ்
சாப் ஆகிய மாநிலங்களில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து
வருகிறது. இதனால் அதிக எண்ணிக்கையில் தொழில் முதலீடு
செய்வதற்கும், அரசின் உதவியினால் புதிய வளர்ச்சியை ஊக்
கப்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கும். இந்தக் கொள்கை
இந்த தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

வேதாரண்யம் சலவை உப்புத் தொழிற்சாலை :

32. வேதாரண்யத்தில் கிடைக்கும் உப்பை மூலப்பொருளாகக்
கொண்டு ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன்
சலவை உப்பு தயாரிக்கும் திட்டத்தை அரசு ஆய்ந்து வருகிறது.
இதன் முதலீடு 220 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
இதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்கவும், அந்தத் திட்
டத்திற்கான குறிப்புகளைத் தயார் செய்யவும் அரசு முயற்சி
எடுத்து வருகிறது.

சிமெண்ட் :

33. இப்போது அரியலூரில் இயங்கி வரும் தமிழ்நாடு
சிமெண்ட் நிறுவனத்தின் சிமெண்ட் உற்பத்தித் தொழில் பிரிவை
நவீனப்படுத்த, விரிவு படுத்த ஒரு திட்டம் அரசின் பரிசீலனை
யில் இருந்து வந்தது. இதன் உற்பத்தித் திறனை ஆண்டு ஒன்
றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக்
டன்னாக உயர்த்த மத்திய அரசு இப்போது இசைவு அளித்துள்
ளது. இந்த விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்த 129 கோடி
ரூபாய் செலவாகும். ஏற்கெனவே சிமெண்ட் உற்பத்தி செய்து
வந்த இந்த நிறுவனத்தில் சில குறைபாடுகள் இருந்து வந்தன.
அங்கு கிடைக்கும் சுண்ணாம்புக் கல்லில் அதிக ஈரப்பதம் உள்ள
தின் காரணமாக கல் ஒட்டும் தன்மையுடையதாக இருந்தது.
இதனால், இந்தத் தொழிற்சாலை அதனுடைய வரையறுக்கப்
பட்ட உற்பத்தித் திறனை அடைய முடியாமல் இருந்தது. இப்
போதுள்ள புதிய திட்டத்தின்கீழ் இந்தப் பிரச்சினையைப் போக்கி
இந்த தொழிற்சாலையை நவீனப்படுத்த, விரிவுபடுத்த 129
கோடி ரூப்பாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்
சாத்தியக் கூறுகள் பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.
இந்த ஆய்வுக்குப் பின்பு அடுத்த ஆண்டில் இந்தத் திட்டத்தைச்
செயல்படுத்த இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

''சிப்காட்'' :

34. 1971ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை
கருத்திற்கொண்டு State Industries Promotion Corporation—என்ற
நிறுவனத்தை அரசு நிறுவியது. நடுத்தர மற்றும் பெருந்
தொழில்கள் நிறுவுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது
இந்த நிறுவனத்தின் நோக்கம். இந்த நிறுவனம் இந்நாள் வரை
சுமார் 407.1 கோடி ரூபாய் நிதியுதவி செய்துள்ளது. இந்த
நிறுவனத்தின் தொழில் முயற்சியால் சுமார் 1 இலட்சத்து 10
ஆயிரம் பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.
தேவையின் அடிப்படையில் வசதிகளைச் செய்துகொண்டு தொழில்
வளர்ச்சி மையங்களை அமைத்துச் செயல்பட்டு 7 இடங்
களில் ''சிப்காட்'' தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. இவை
களில் இராணிப்பேட்டையும் மற்றும் ஒசூரும் 1974ஆம் ஆண்டுக்கு



முன்பே நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகளாகும். இப்
போதுள்ள 7 தொழிற்பேட்டைகளில் மிகவும் வளர்ச்சி அடைந்
துள்ள தொழிற்பேட்டைகள் இராணிப்பேட்டையும் ஒசூரும்தான்.

35. தர்மபுரி மாவட்டத்தில் ஒசூரில் உள்ள மின்னணுப்
பொருள்களுக்கான தனி தொழிற்பேட்டை தொடங்கும் பணி
யிலும், தோல்பொருள் தொழிலுக்கான ஒரு தொழிற்பேட்டையை
உருவாக்கும் பணியிலும் இப்போதுள்ள ''சிப்காட்'' நிறுவனம்
ஈடுபட்டுள்ளது.

36. வளர்ச்சி மையங்களை அமைக்கும் பணியை ''சிப்காட்''
மேற்கொண்டுள்ளது. இன்றியமையாத அடிப்படை வசதி
செய்ய வளர்ச்சி மையம் ஒவ்வொன்றுக்கும் 25 கோடியிலிருந்து
30 கோடி ரூபாய் வரை செலவிடப்படும்.

சிங்கிள் விண்டோ ஏஜென்சி கமிட்டி :

37. ''சிங்கிள் விண்டோ ஏஜென்சி கமிட்டி'' என்ற ஒரு
முறை தமிழ்நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.
இந்த முறைப்படி மாநில அளவில் சிப்காட் நிறுவனத்தின் பொறுப்
பில் அதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக் குழு ஒன்றும் அதைப்
போலவே மாவட்ட அளவில் மாவட்டத் தொழில் மையங்
களின் பொறுப்பில் உயர் மட்டக் குழுக்களும் இயங்கி
வந்தன. இந்தக் குழுக்களில் உள்ள பல்வேறு துறைகளைச்
சேர்ந்த அதிகாரிகள் ஒரு தொழிலை நிறுவுவதற்கு விண்ணப்பம்
செய்தவுடன் அந்த விண்ணப்பத்தை ஆய்ந்து அந்தத் தொழிலை
நிறுவுவதற்கான அடிப்படைத் தேவைகளை வழங்குவதில் ஒரு
கூட்டு முயற்சியை எடுக்க வேண்டும் என்பதுதான் இதன்
குறிக்கோள். தொழில் நிறுவ விண்ணப்பங்கள் வந்த 45 நாட்
களுக்குள் அந்த விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். ஆனால், தமிழ்
நாட்டில் பல ஆண்டு காலமாகவே இந்த முறை சரியாகச் செயல்
படவில்லை என்பது ஆய்விலிருந்து தெரிய வந்தது. இந்தத்
திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தவும், இந்தக் குழு
உறுப்பினர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை
நிறைவேற்றவும், புதிய முறையில் உதவும் வகையில் இந்தக்
குழுக்கள் சீரமைக்கப்படும். எதிர்காலத்தில் இவர்களுக்குக்
கொடுக்கப்பட்ட கால வரையறையை கருத்திற்கொண்டு
துரிதமாகச் செயல்படுவதற்கு அவர்களுக்கு அரசு ஆணை
பிறப்பித்துள்ளது.

தொழில் முதலீட்டு நிறுவனம் :

38. 1949இல் நிறுவப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டு
நிறுவனம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கு கடன் வழங்கி
தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நிறுவனமாகும்.

[1989 மே 3

இதுவரை இந்த நிறுவனம் 49,459 சிறுதொழில் நிறுவனங்களுக்கு கடன் உதவி வழங்கியுள்ளது. கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை 778 கோடி ரூபாய். கடந்த ஆண்டில் மட்டும் 194 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதனால் பலன் பெற்றவர்கள் 2,858 பேர். இவற்றில் சுமார் 86 கோடி ரூபாய் பின்தங்கிய மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவியாக கொடுக்கப்பட்டுள்ளது.

39. புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு தமிழ்நாடு முதலீட்டு நிறுவனம் சிறப்புத் திட்டம் ஒன்றை இவ்வாண்டு செயல்படுத்தவுள்ளது. சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ, வாடகை கார் ஓட்டுநர்கள் ஆகியவர்களுக்கு உதவும் வகையில் அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஏற்கெனவேயுள்ள சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவதற்காக மோட்டார் விலையில் 50 சதவீதம் கடனாகவும், 37.5 சதவீதம் மானியமாகவும் இந்த நிறுவனம் வழங்கும். அதாவது மோட்டாரின் விலையும், அவற்றைப் பொருத்துவதற்கு ஆகும் செலவும் சேர்ந்து 4,000 ரூபாய் ஆகிறதென்றால் அவற்றில் இரண்டாயிரம் ரூபாயை கடனாகவும், 1,500 ரூபாயை மானியமாகவும் வழங்கும்.

40. ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்களே, சொந்தமாக ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு 85 சதவீதம் கடனாகவும், 7.5 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படும். கடன் தொகையை தாமதமில்லாமல் திருப்பிச் செலுத்தினால் வட்டியில் இரண்டு சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். இதில் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் மேலும் இரண்டு சதவீதம் வட்டி உதவித் தொகை வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

நலிவுற்ற தொழில்களுக்கு புத்துயிர் அளித்தல் :

41ᵖ. இம்மாநிலத்தின் நலிவுற்ற சிறு தொழில்களுக்கு புத்துயிர் அளிக்க ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்தி செயல்படுத்தலாம் என்ற முயற்சியை அரசு பரிசீலித்து வருகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களைக் களைந்து, சிறு தொழில்களை நலிவுற்ற நிலையை மாற்றி புத்துயிர் அளிக்க சிறு தொழில் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை அரசு விரைவில் ஏற்படுத்தவுள்ளது.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை :

42. 1957இல் தொழில் மற்றும் வணிகத் துறையின் ஒரு பிரிவாக இயங்க ஆரம்பித்த புவியியல் மற்றும் சுரங்கத் துறை 1983-லிருந்து ஒரு தனித் துறையாகவே இயங்கி வருகிறது. ஒரு



1989 மே 3]

விரிவான ஆய்விற்குப் பின்னர் வேதாரண்யம் வட்டத்தில் காரியாப்பட்டினம் பகுதியில் 6 மில்லியன் டன் சிலிகான் இருப்பதை இந்தத் துறை கண்டறிந்தது.

43. அதைப்போலவே திருச்சிராப்பள்ளி, சேலம், பெரியார், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளில் நல்ல தரமுள்ள படிகக்கல்லும் (Quartz) களிமம் (Felspar) இருப்பதைக் கண்டறிந்தது. இப்போது அவைகளை வெட்டியெடுத்து கண்ணாடி, மண்பாண்டத் தொழில்களில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனுடைய ஆய்வுப் பணியில் தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் தங்கம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள படிமங்கள் எந்த அளவிற்குக் கிடைக்கும் என்பதையும், பொருளாதார வகையில் இலாபம் தரக்கூடியதாக இது அமையுமா என்பதையும் கண்டறியத் தங்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தரும் 6 இடங்களில் பாறைகளை வெட்டியெடுக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

44. விலை உயர்ந்த மணிக்கற்கள் (Gems) கிடைப்பது பற்றியும், வணிக நடைமுறை பற்றியும் தகவல் சேகரிக்க கரூரில் விலை உயர்ந்த மணிக் கற்கள் சேகரிப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூரில் விலை உயர்ந்த மணிக் கற்களைச் சேகரிப்பவர்கள் அவ்வப்போது தாங்கள் சேகரித்த மணிக் கற்களை இந்த நிலையத்தில் சேர்ப்பதை ஊக்கப்படுத்துவதே இந்த நிலையத்தின் நோக்கமாகும். அப்போது தான் ஏலம் விடுவதன் மூலம் அவர்கள் அதற்கு நியாயமான விலையைப் பெற முடியும். இதன் மூலம் ஆதாயம் முழுவதையும் பெறுகின்ற இடைத்தரகர்களைத் தவிர்க்க முடியும். நல்ல மணிக் கற்களைக் கண்டறிந்து நம்பகத் தன்மை சான்றிதழ் வழங்குவதற்காக புவியியல் ஆய்வுக்கூடம் ஒன்றையும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் :

45. தமிழ்நாட்டில் பரவலாக அதிக அளவில் கிடைக்கும் கருப்பு, சாம்பல் வண்ண மற்றும் பலவித வண்ணப் பாறைகளை நவீன முறைகளைப் பயன்படுத்தி திறமையாக வெட்டியெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அரசுக்கு வருவாயைப் பெருக்குதல், கிராமப் புறங்களில் தொழில் வளத்தை மேம்படுத்துதல், புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற நோக்கங்களுக்காக தமிழ்நாடு கனிம நிறுவனம் "டாமின்" 1978ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

46. இந்நிறுவனம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் கருப்பு மற்றும் சாம்பல் வண்ணப் பாறைகளை வெட்டியெடுக்கும் குத்தகை உரிமம் தனியார் யாருக்கும் வழங்கப்படாமல் அப்பகுதிகள் முழுவதும்

''டாமின்'' நிறுவனத்திற்கே ஒதுக்கப்பட்டன. கருப்பு வண்ணப்
பாறை பரவியுள்ள சுமார் பதினோராயிரம் ஏக்கர் நிலப் பரப்பும்,
சாம்பல் வண்ணப்பாறை நிரம்பியுள்ள சுமார் 25 ஆயிரம்
ஏக்கர் நிலப்பரப்பும் ஆக மொத்தம் 36 ஆயிரம் ஏக்கர் நிலப்
பரப்பு ''டாமின்'' நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டது. இந்த 36
ஆயிரம் ஏக்கரில் டாமின் தன்னால் 3,854 ஏக்கர்தான் உடனடி
யாக பயன்படுத்த திறன் இருக்கிறது என்று கேட்டுக் கொண்டதன்
பேரில் அந்த 3,854 ஏக்கர் டாமின் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்
பட்டது. இதைக் கூட முழுவதும் பயன்படுத்தாமல் சுமார்
2,500 ஏக்கர்தான் டாமின் பயன்படுத்தியிருக்கிறது. ''டாமின்''
நிறுவனததிற்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் காணப்
படும் கருப்பு மற்றும் சாம்பல் வண்ணப் பாறைகள் தனியார்
களுடைய பட்டா நிலங்களில் காணப்படும் பாறைகளை விட
தரத்தில் உயர்ந்தவை. அப்படியிருப்பினும் ''டாமின்'' நிறு
வனத்தினுடைய ஓராண்டு ''டர்ன் ஓவர்'' ரூபாய் 8 முதல் 11
கோடி தான்.

47. அதே நேரத்தில் மிகக் குறைவான நிலங்களை குத்த
கைக்கு பெற்று பாறைகளை வெட்டி ஏற்றுமதி செய்யும் ஒரு
சில தனியார் நிறுவனங்களின் சராசரி ஆண்டு ''டர்ன் ஓவர்''
15 கோடி முதல் 20 கோடி ரூபாய் வரை உள்ளது. மேலும்,
''டாமின்'' நிறுவனம் நவீன முறைகளைப் பயன்படுத்தி பாறை
களை வெட்டியெடுக்கும் பணிகளைச் செய்யாததால் மிகவும்
குறைவான அளவே மீட்பு (Recovery) பெற முடிகிறது.

48. பொதுவாக ''டாமின்'' நிறுவனம் திருப்திகரமாகச்
செயல்படவில்லை என்றும் அதனுடைய செயல்பாடுகளில் சில
முறைகேடுகள் உள்ளன என்றும் அடிக்கடி புகார்கள் வந்ததை
யொட்டி குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் 3 ஐ.ஏ.எஸ்.
அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்
பட்டது. அக் குழுவும் தனது அறிக்கையைக் கொடுத்துள்ளது.
அவ்வறிக்கையில் ''டாமின்'' நிறுவனம் சரியாகச் செயல்பட
வில்லை என்ற கருத்தை உறுதிப்படுத்தியது. இவ்வறிக்கையின்
மீது இவ்வரசு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

49. குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலில் இருக்கும்போது
''கிரானைட்'' தொழில்களுக்கு அனுமதி வழங்குவது சம்பந்த
மாக ஏற்கெனவே இயங்கி வரும் தனியார் நிறுவனங்களுக்கும்,
குறிப்பிட்ட தொழிற்சாலைகளைத் துவங்க இசைவுக் கடிதங்
களைப் பெற்றுள்ள தனியார்களுக்கும் குத்தகை உரிமம் வழங்கு
வதில் முன்னுரிமை கொடுக்கப்படுமென்றும் இவர்களது விண்
ணப்பங்களைத் தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குநர்,
புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநர், அரசு தொழில்
துறையின் துணைச் செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழு
ஒன்று ஆய்வு செய்து பரிந்துரைக்கும் என்றும், எடுக்கப்பட்ட



முடிவை அமுல்படுத்துவது குறித்து இந்த அரசு ஆய்வு செய்து
வருகிறது. இதைப பற்றிய குறிப்பு ஒன்று தனியே வைக்கப்
பட்டுள்ளது.

50. மணலியில் உள்ள கிரானைட் தொழிற்சாலையில்
M morials and Monuments ஆகியவற்றை தயார் செய்து அயல்நாடு
களுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

51. பல்லாண்டுகளாகச் செயல்படாமல் இருக்கும் அம்பத்
தூர் Vermiculite அளவுப் பெருக்கம் பிரிவு (Exfoliation) மீண்டும்
இயங்கச் செய்ய இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

52. பல வண்ண கிரானைட் ஓடுகளுக்கு (Granite tiles)
வெளிநாட்டில் இருக்கும் பெரும் விற்பனை வாய்ப்பைக் கருத்திற்
கொண்டு 100 சதவீதம் ஏற்றுமதி நோக்கம் கொண்ட திட்டம்
ஒன்றை சுமார் 4 கோடி ரூபாய் முதலீட்டில் ''டாமின்'' மூலம்
செயல்படுத்த இந்த அரசு உத்தேசித்துள்ளது.

சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை :

53. பசும்பொன்-தேவர் திருமகன் மாவட்டத்தில் நல்ல
உயர்வகைக் கிராபைட் கனிமம் நிறையக் கிடைக்கிறது.
மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹம்போல்ட் வெடாக் (எஜி) என்னும்
நிறுவனத்தின் உதவியுடன் 96 விழுக்காடு முதல் 99 விழுக்காடு
கனிச்சத்துள்ள கிராபைட் தயாரிக்கும் சுத்திகரிப்பு ஆலை
அமைக்கும் திட்டம் ஒன்று முந்தைய அரசின் ஆய்வில் இருந்தது.
கிராபைட் கனிமத்தைச் சுத்திகரிக்க வேறு பல வழி முறைகள்
உள்ளதையும் மேலும் அதன் மூலம் முதலீட்டுச் செலவு கணிச
மான அளவில் குறையுமென்றும் இறக்குமதி செய்யப்பட்ட இயந்
திரங்களை அதிகம் சார்ந்திருக்க வேண்டியதில்லை என்றும் அர
சாங்கத்தின் கவனத்திற்கு வந்ததால், இத்திட்டத்தைத் திருத்தி
அமைக்கும் நோக்கத்துடன் திருவாளர்கள் ''இன்ஜினியர்ஸ் இந்
தியா லிமிடெட்'' என்ற நிறுவனம் திட்ட ஆலோசகர்களாகத்
தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

54. இத்திட்டத்தின் செலவு சுமார் 25 கோடி ரூபாயாக
இருந்தது. தற்பொழுது சுமார் 10 கோடி ரூபாயாக குறையும்
என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருவாளர்கள் இன்ஜினியர்ஸ்
இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து திட்ட அறிக்கை
கிடைக்கப்பெற்று அரசின் ஒப்புதல் பெற்று இத்திட்டம் 1989–90
ஆம் ஆண்டு முடிவுக்குள் துவக்கப்படும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது.

55. பல ஆண்டுக் காலமாக மூடப்பட்டுள்ள ''டாமினுக்குச்''
சொந்தமான கிருஷ்ணகிரி கிரானைட் தொழிற்சாலையை மீண்
டும் இயங்கச் செய்ய இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து
வருகிறது.

தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (எல்காட்):

56. மின்னணுவியல் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்து
வதற்காக தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் நிறுவப்பட்டது.
ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் அனைத்திந்திய
உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு குறைந்த பட்சம் 10 சத
வீதம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந் நிறுவனம்
செயல்பட்டது. இதுவரை 11 கூட்டுத் துறைக்கு இந்த நிறு
வனம் ஊக்கம் அளித்துள்ளது. இதற்கான திட்டச் செலவு 18
கோடி ரூபாய் மூலதனச் செலவு சுமார் இரண்டரை கோடி
ரூபாய், இத்திட்டத்தில் பெரும்பாலானவை கடந்த மூன்று
ஆண்டுகளில் தொடங்கப்பட்டவை. உயர் தொழில் நுட்பத்
துறையில் அமைந்துள்ள பெரிய வாய்ப்பைக் கருத்திற்கொண்டு
"எல்காட்" நிறுவனம் தொலை தகவல் தொடர்புத் துறையி
லும் நாட்டம் செலுத்தி வருகிறது. அரசு ஏற்படுத்தியுள்ள
10 திட்டங்களின் செயல்பாடு பல்வேறு நிலைகளில் உள்ளது.
இதற்கான திட்டச் செலவு 45 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்
பட்டுள்ளது. அதற்காக "எல்காட்" மூலம் தேவைப்படும் முத
லீடு சுமார் ஐந்தரை கோடி ரூபாயாகும்.

57. தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் விதத்தில் அமை
யும் தொழில் கொள்கையே இவ்வரசின் முன்னுரிமை என்பது
அனைவரும் அறிந்ததே. குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ்
தமிழ்நாடு இருந்தபோது அறிவிக்கப்பட்ட ஊக்க உதவிகளும்,
சலுகைகளும் இப்போதும் தொடரும். அப்போது செயல்படுத்த
தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்த
படும்.

58. தொழில் வளர்ச்சி தொடர்பாக இந்த
உள்ள தொழில் நிறுவனங்களின் [illegible] மாநிலத்தில்
கலந்து பேசி தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு [illegible]
அரசு முடிவெடுத்துள்ளது. இத்தகைய கலந்துரையாடல் வாயிலாக
தொழில் துறையில் அன்றாடம் ஏற்படுகிற பிரச்சினைகள் குறித்
தும், மாற்றங்கள் குறித்தும், தேவைகள் குறித்தும், அரசு பல்
வேறு முடிவுகளை எடுப்பதற்கு வழிவகைகள் செய்யும். இந்த
அரசு தொழில் வளர்ச்சிக்கு ஆலோசனைகளை கேட்டு அறிவ
தற்காக தொழில் அதிபர்களின் கூட்டம் ஒன்றை மார்ச் மாதம்
கூட்டி நல்ல பல கருத்துக்களை அறிந்து கொண்டது. தொடர்ந்
தாற்போல் இந்த முயற்சியில் அரசு ஈடுபடுவதால் மாநிலத்தி
லுடைய தொழில் நிலைமையை (Industrial Climate) தொடர்ந்து
கண்காணிக்கவும் அவ்வப்போது சில முடிவுகளை எடுத்து
தேவைக்கேற்ப ஊக்கப்படுத்துவதற்கும் இந்த முயற்சி பயன
ளிக்கும் என்று அரசு கருதுகிறது. சுருக்கமாகச் சொன்னால் தமிழ
நாட்டை விரைவில் தொழில்மயமாக்க மேற்கண்ட தான
வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்:



(1) முற்போக்கான தொழில் கொள்கையை அரசு
முனைப்பாகச் செயல்படுத்த முயற்சி செய்யும். இந்த முயற்
சியை தொடர்ந்து பின்பற்றுவதோடுகூட அவ்வப்போது
அவற்றை ஆய்ந்து தொழில் துறையில் ஏற்படும் புதிய சவால்
களை ஏற்று தொழில் முயற்சியில் ஈடுபடும்.

(2) தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிர்வாக இயந்
திரத்தை சீரமைத்து, பயிற்சியளித்து, திறமையுள்ளதாக்கிப்
பொறுப்போடும், பொருளோடும் செயல்பட தயார் செய்யப்
படும்.

(3) தொழில் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டுள்ள ஒவ்வொரு
வரையும் இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் நிபுணத்
துவத்தை அடைவதற்கு வழிவகைகள் செய்வது. திட்டங்
களை தீவிரமாகத் தனியார் துறையிலும், கூட்டுத் துறையிலும்
பொதுத் துறையிலும் அமைத்து நிறைவேற்ற முயற்சிப்பது.

(4) உற்பத்தியை அளவுகோலாகக் கொண்டு மூலப்
பொருள்களை திறமையாக உபயோகப்படுத்துதல், நிர்வாகா
ரத்தை செம்மையாகவும், சீராகவும் கிடைக்கும் வகையில் வழி
வகுத்தல், தொழில் வளர்ச்சிக்கு உள்ள அடிப்படைத் தேவை
களை தடையின்றி துரிதமாக வழங்குவதே அரசின் கொள்கை.

## இணைப்பு II

### கிரானைட் தொழில் பற்றிய கொள்கைக் குறிப்பு

(479-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த 'கிரானைட் பாறைகள்'
அதிகம் கிடைக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. குறிப்பாக
தமிழ்நாட்டில், வெளிநாடுகளில் விரும்பி வாங்கக் கூடிய தர
முள்ள கிரானைட் பாறைகள் பரவலாகக் கிடைக்கின்றன. கிரா
னைட் பாறைகள் பல வண்ணங்களில் கிடைத்தாலும் கருப்பு
மற்றும் சாம்பல் வண்ணப் பாறைகள்தான் அதிகமாக விரும்பி
எல்லோராலும் வாங்கப்படுபவை. இவற்றுள் சாம்பல் வண்ணப்
பாறைகள் தருமபுரி மாவட்டத்தில் மிக அதிக அளவு கிடைக்
கிறது. இந்தியாவிலே, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்
நாடகா மாநிலங்களில் மட்டும் தான் சிறந்த கருப்புப் பாறைகள்
படிவங்கள் உள்ளன. கருப்புப் பாறைகள் செங்கை-அண்ணா,
வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், பெரியார் மற்றும் தரும
புரி மாவட்டங்களில் அதிகளவு கிடைக்கின்றன. தமிழ்நாட்டில்
சுமார் 11,000 ஏக்கர் நிலப்பரப்பில் கருப்புப் பாறைகள் காணப்
படுவதாகவும், அப் பாறைகளின் இருப்பளவு 1.36 மில்லியன்
(13,60,000) கன மீட்டர் எனவும் ஆய்வு செய்து கண்டு பிடிக்கப்
பட்டுள்ளது. இவற்றுள் தென்னார்க்காடு, சேலம், தருமபுரி
மாவட்டங்களில் கிடைக்கும் கருப்புப் பாறைகள் மிகவும் விலை
உயர்ந்தவையாகும். உலகச் சந்தையில் அதிக வரவேற்பு
பெற்றவையாகும்.

ஏற்றுமதிக்குகந்த தரமுள்ள சாம்பல் வண்ணப் பறைகள்
(Grey Granite) தருமபுரி மாவட்டத்தில் சுமார் 25,000 ஏக்கர்
நிலப்பரப்பில் காணப்படுகிறது. இதன் இருப்பளவு (Reserve)
சுமார் 100 மில்லியன் கன மீட்டர் ஆகும்.

1970 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் கிடைக்கும் கரும்
பாறைகளுக்கு உலகச் சந்தையில் நல்ல கிராக்கி ஏற்படத் துவங்கி
யது. ஆரம்பக் காலத்தில் மெருகூட்டப்படாத பாறைகளாகவே
(Rough Dressed Block) ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி
செய்யப்பட்டு வந்தன. தற்போது அறுத்து மெருகூட்டப்பட்டப்
பாறைகளாக (Cut and Polished) ஜப்பான் நாட்டிற்கு
மட்டுமல்லாமல் மேற்கு ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து,
அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி
யாகிறது.

இதனால் 100 சதவீதம் ஏற்றுமதி நோக்குடைய (100 per cent
Export oriented) தொழிற்சாலைகள் தனியார் துறையில்
அதிக அளவு துவக்க சமீப காலத்தில் ஆர்வம் காட்டப்
படுகிறது.







மேலே விவரித்தபடி தரமுள்ள கிரானைட் பாறைகள்
தமிழகத்தில் அதிகம் கிடைப்பதால் ஒரு அரசு நிறுவனத்தை ஏற்
படுத்துவதன் மூலம் அப்பாறைகளை வெட்டி எடுத்து வெளிநாடு
களுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை பெருக்கலா
மென்றும், அதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கலா
மென்றும் கருதப்பட்டது. அதற்காகத்தான் 'டாமின்' (தமிழ்
நாடு கனிம நிறுவனம்) 1978-ல் துவக்கப்பட்டது.

சாம்பல் வண்ணப் பாறைகளை வெட்டி எடுப்பதற்காக தரும
புரி மாவட்டத்தில் 25,000 ஏக்கரும், கருப்புப் பாறைகளை வெட்டி
எடுப்பதற்காக 6 மாவட்டங்களில் 11,000 ஏக்கரும் ஆக மொத்
தம் 36,000 ஏக்கர் டாமின் நிறுவனத்திற்கு ஒதுக்கி வைக்கப்
பட்டது. இந்த 36,000 ஏக்கரில் டாமின் தன்னால் 3,854
ஏக்கர்தான் உடனடியாக பயன்படுத்த திறன் இருக்கிறது என்று
கேட்டுக் கொண்டதன் பேரில் அந்த 3854 ஏக்கர் டாமின் நிறு
வனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டது. இதைக்கூட முழுவதும்
பயன்படுத்தாமல் சுமார் 2,500 ஏக்கர் மட்டும் தான் டாமின்
பயன்படுத்தியிருக்கின்றது. இதிலும் விஞ்ஞான ரீதியான
தொழில் நுட்பங்களை கையாண்டு அதிக அளவு கனிமங்களை
வெட்டி எடுப்பதற்கு பதிலாக குறைவான கனிமங்களையே
வெட்டி எடுத்தது. 'டாமின்' நிறுவனம் அடைந்த பயன்
(Recovery) 5 சதவீதம் மட்டுமே. ஆனால் சிறந்த தொழில்
நுட்பங்களைப் பயன்படுத்தி ஒழுங்கீனங்களை தவிர்த்திருந்தால்
சுமார் 50 சதவீதம் பயன் (Recovery) பெற்றிருக்க வாய்ப்
புள்ளது.

'டாமின்' நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பகுதிகளில்
கிடைக்கும் பாறைகள் தரத்தில் சிறந்தவை. தனியாருக்குச்
சொந்தமான பட்டா நிலங்களிலுள்ள பாறைகள் தரத்தில் குறை
வானவை. இருப்பினும் 'டாமின்' நிறுவனம் கடந்த 3 ஆண்டு
களில் ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி முதல் ரூ. 11 கோடி வரை
தான் மொத்த வியாபாரம் செய்துள்ளது. ஆனால் தனியார்
நிறுவனங்கள் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஆண்டொன்றுக்கு
ரூ. 15 கோடி முதல் ரூ. 20 கோடி வரை மொத்த வியாபாரம்
செய்துள்ளது. இந்நிறுவனம் சரிவர செயல்படவில்லையென்று
அரசுக்கு அடிக்கடி வந்த புகார்களை விரிவாக ஆய்வு செய்து
அரசுக்கு அறிக்கை கொடுக்க 3 உயர்மட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்
அடங்கிய குழு ஒன்று ஆளுநர் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்
பட்டது. அக்குழு வேண்டிய விவரங்களை 'டாமின்' நிறுவனத்
திடமிருந்து பெற்று ஆய்வு செய்து தனது அறிக்கையைச் சமர்ப்
பித்துள்ளது. அவ்வறிக்கையில் 'டாமின்' நிறுவனத்தில் நிகழ்ந்
துள்ள முறைகேடுகள் விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கிய
மான சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. வெளிநாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்களுக்கு கருப்பு
மற்றும் சாம்பல் வண்ணப் பாறைகளை ஏற்றுமதி செய்வதில்
உலகச் சந்தையில் அவ்வப்போது அமுலிலிருந்த விலையை விட

மிகக் குறைவான விலைக்கே விற்கப்பட்டுள்ளது. 'டாமின்' நிறு
வனம் ஏற்றுமதி செய்த பாறைகளின் தரம் தனியார் நிறுவனங்
கள் ஏற்றுமதி செய்த பாறைகளின் தரத்தைவிட மிகச் சிறந்ததாக
இருந்தும் கூட குறைவான விலையைத் தொடர்ந்து பெற்று
வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1983–84 ஆம் ஆண்டில் தனியார் ஏற்றுமதி செய்த தரம்
குறைந்த சாம்பல் வண்ணப் பாறைக்கு 1 கன மீட்டருக்கு 420
டாலரும், டாமின் ஏற்றுமதி செய்த தரம் சிறந்த பாறைக்கு 1
கன மீட்டருக்கு 277-லிருந்து 294 டாலர் வரையிலும் கிடைத்
துள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் தனியார் ஏற்றுமதி செய்த
தரம் குறைந்த சாம்பல் வண்ணப் பாறைக்கு 1 கன மீட்டருக்கு
475 டாலரும், டாமின் ஏற்றுமதி செய்த தரம் சிறந்த பாறைக்கு
258 லிருந்து 269 டாலர் வரையிலும், 1985–86 ஆம் ஆண்டில்
தனியார் ஏற்றுமதி செய்த தரம் குறைந்த சாம்பல் வண்ணப்
பாறைக்கு 1 கன மீட்டருக்கு 460 டாலரும், டாமின் ஏற்றுமதி
செய்த தரம் சிறந்த பாறைக்கு 299 டாலரும், 1986–87 ஆம்
ஆண்டில் தனியார் ஏற்றுமதி செய்த தரம் குறைந்த சாம்பல்
வண்ணப் பாறைக்கு ஒரு கன மீட்டருக்கு 475 டாலரும், டாமின்
ஏற்றுமதி செய்த தரம் சிறந்த பாறைக்கு 404-லிருந்து 427
டாலர் வரையிலும், 1987–88 ஆம் ஆண்டில் தனியார் ஏற்றுமதி
செய்த தரம் குறைந்த சாம்பல் வண்ணப் பாறைக்கு 1 கன
மீட்டருக்கு 575 டாலரும் டாமின் ஏற்றுமதி செய்த தரம் சிறந்த
பாறைக்கு 512-லிருந்து 538 டாலர் வரையிலும் கிடைத்தது
குறிப்பிடத்தக்கது.

2. ஏற்றுமதி செய்யப்படவுள்ள வண்ணப் பாறைகளுக்கு
உலகின் பல பாகங்களிலிருந்தும் விலைகள் கோரப்பட வேண்டும்
(Global Tenders should be called for) என்று அரசின் அறிவுரை
'டாமின்' நிறுவனத்தால் பின்பற்றப்படவில்லை.

3. 'ஸ்ரீ கிரானைட்' ஏற்றுமதியில் டெண்டர் எதுவும்
கோரப்படாமல் 'டாக்லோ கிரானைட்' என்ற மேற்கு ஜெர்மனியி
லுள்ள தனியார் நிறுவனத்திற்குத் தொடர்ந்து 10 ஆண்டு கால
மாக விற்கப்பட்டு வந்துள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும்
உலகச் சந்தையில் ஏற்பட்ட விலை உயர்வின் பலனை 'டாமின்
நிறுவனம் பெற முடியவில்லை.

4. 'டாமின்' நிறுவனம் விஞ்ஞான ரீதியான தொழில்
நுணுக்கங்களைப் பின்பற்றி பாறைகளை வெட்டி எடுக்காததால்
குறைவான ரெக்கவரி (Recovery) பெற்று அதன் காரண
மாக வருவாய் இழப்புக்கு உள்ளானது.

இதைத் தொடர்ந்து 'டாமின்' நிறுவனத்தில் கிரானைட்
ஏற்றுமதி செய்த வகையில் ஏற்பட்ட வருவாய் இழப்பு பற்றி
விரிவாக கணக்குகளை ஆய்வு செய்வதற்கென ஒரு



அகத்தணிக்கைக் குழு (Internal Audit party) ஏற்படுத்தப்
பட்டு அக்குழுவும் தற்போது தனது பணியைச் செய்து வருகிறது.
முறைப்படி டெண்டர் கோரி விற்கப்படாததாலும் ஓரே நப
ருக்குத் தொடர்ந்து உலக சந்தை விலைக்குக் குறைவாக சாம்பல்
வண்ணப் பாறைகளை விற்று வந்ததாலும் உண்மையான விலை
யைத் கணக்குக்குக் கொண்டு வராததாலும் ஏற்பட்ட உத்தேச
மான வருவாய் இழப்பு ரூ. 10 கோடிக்கும் மேல் இருக்கும் என்று
மேற்படி தணிக்கைக் குழு கண்டறிந்துள்ளது.

விலை வித்தியாசத்தால் 'டாமின்' நிறுவனத்திற்கு ஏற்பட்ட
இழப்புக்கு உதாரணங்கள் :

தென்னாற்காடு மாவட்டம் குன்னம் கிராமத்திலுள்ள சுரங்கங்
களிலிருந்து வெட்டப்பட்ட கருப்புப் பாறைகளை 'டாமின்' நிறு
வனம் போலவே சில தனியார் நிறுவனங்களும் வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்துள்ளன. 'டாமின்' சுரங்கத்திலிருந்து வெட்டப்
பட்ட பாறைகள் தனியார் சுரங்கப்பாறைகளை விட தரத்தில்
சிறந்தவை. 1986–87 ஆம் ஆண்டு ஒரு கன மீட்டருக்கு 'டாமின்'
நிறுவனம் பெற்ற சராசரி விலை 714 அமெரிக்க டாலர்கள்.
அதே ஆண்டு 'ஜெம் கிரானைட்ஸ்' என்ற தனியார் நிறுவனம்
பெற்ற விலை 1,500 அமெரிக்க டாலர்கள்'' ஒரு கன மீட்டருக்
கான விலை வித்தியாசம் 786 டாலர்கள். இந்த ஆண்டில்
'டாமின்' 479.42 கன மீட்டர் கருப்புப் பாறை ஏற்றுமதி
செய்துள்ளது. இந்த ஒரு ஆண்டில் இந்த, ஒரு சுரங்கத்தில்
இருந்து மட்டும் கருப்பு வண்ணப் பாறைகள் ஏற்றுமதி செய்த
வகையில் 'டாமின்' நிறுவனத்திற்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு
3,76,824 டாலர் அதாவது 48,15,812 ரூபாய் ஆகும். தென்
னாற்காடு மாவட்டம் திருவக்கரை கிராமத்திலுள்ள சுரங்கத்தி
லிருந்து 'மிட்சு பிஷி' என்ற ஜப்பான் நிறுவனத்திற்கு
கன மீட்டர் ஒன்றுக்கு 550 அமெரிக்க டாலர்
என்ற விலையில் 100 கன மீட்டர் ஏற்றுமதி செய்ய 'டாமின்
1982-ம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதே சுரங்கப்
பாறைக்கு 1986ல் 1 கன மீட்டருக்கு விலையாக 1,281 அமெரிக்க
டாலர்கள் கொடுக்க ஜப்பானிய நிறுவனமான ஓரியண்ட் சாங்
கயோ முன் வந்தது. இருப்பினும் 'மிட்சுபிஷி' நிறுவனத்திற்கு
439 கனமீட்டர் கருப்புப் பாறை 550 டாலர் விலையிலேயே
1986 ஆம் ஆண்டிலும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு
குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் மட்டும்
'டாமினுக்கு' ஏற்பட்ட இழப்பு 3,20,009 டாலர் அதாவது
சுமார் ரூ. 41 இலட்சங்கள்.

மேலும் ' குன்னம் ' சுரங்கத்திலிருந்து வெட்டப்பட்ட
கருப்புப் பாறைகளுக்கு 1988 நவம்பர் மாதம் வரை ' டாமின்'
பெற்று வந்த விலை கன மீட்டர் ஒன்றுக்கு சராசரி
அமெரிக்க டாலர்கள் மட்டுமே பழைய ஒப்பந்தத்தின் கீழ் விலை
யேற்றம் பற்றி மட்டும் விவாதித்து 1988 டிசம்பர் மாதம்

[1989 மே 3

முதல் கன மீட்டர் ஒன்றுக்கு 1,550-லிருந்து 2,050 டாலர்கள்
வரை உயர்த்தப்பட்டுள்ளது. இதைப் போல மற்ற சுரங்கங்
களிலிருந்து எடுக்கப்படும் பாறைகளுக்கு டாமின் நிறுவனத்தி
னால் தற்போழுது விலையேற்ற முடிந்தது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இது தொடர்பான விவரங்
களை விரிவாக ஆய்வு செய்து முன்னாள் தலைவர் மற்றும்
நிர்வாக இயக்குநரை தற்காலிக வேலை நீக்கம் செய்து உத்தர
விட்டது. இம்மாதிரியான இழப்பிற்கு பொறுப்பான அது
வளர்கள்மீது விஜிலன்ஸ் துறை மூலம் விரிவான விசாரணை
நடந்து வருகிறது. விஜிலன்ஸ் கமிஷனர் அறிக்கையையும்
அகத் தணிக்கைக் குழு அறிக்கையையும் பெற்று 'டாமின்'
நிறுரவனத்தில் நடந்துள்ள மொத்த ஊழலையும் கணக்கிட்டு
சம்பந்தப்பட்டவர்கள்மீது தேவையான நடவடிக்கையை
இவ்வரசு எடுக்கும்.

இந்தப் பின்னணியில் கருப்பு மற்றும் சாம்பல் வண்ணப்
பாறைகள் சம்பந்தப்பட்ட தொழில் கொள்கை சிந்திக்கப்பட
வேண்டும். இது தொடர்பாக கீழ்க்கண்ட விவரங்களை கருத்தில்
கொள்ளவேண்டும்.

ஒய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கே. வி. இராமநாதன்
'டாமின்' செயல்பாடுகள் சம்பந்தமாக ஆய்வு செய்து
கவர்னர் ஆட்சிக் காலத்தில் ஒரு அறிக்கை கொடுத்தார்.
அவ்வறிக்கையில் அவர் அரசுக்கு அதிக வருவாய்
ஈட்டவும் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் அந்நிய செலாவணி
அதிக அளவில் கிடைப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டு
மானால் தனியார் துறையை கருப்புக்கல் (கிரானைட்) வெட்டும்
தொழிலில் ஈடுபத்தி 'டாமின்' நிறுவனத்திற்குத் தான்
கொடுக்கவேண்டுமென்ற கொள்கையில் இருந்து விலகி 'டாமின்'
நிறுவனத்தால் அதனுடைய அதிகபட்சத் திறனாய்விற்கு எவ்
வளவு புறம்போக்கு நிலங்களும் மற்றைய பகுதிகளும் தேவையோ
அவற்றை ஒதுக்கி மீதியுள்ள பகுதிகளையும் மற்றும் தனியார்
நிலங்களையும் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கலாம் என
கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் கவர்னர் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட
3 மூத்த ஐ.ஏ. எஸ். அதிகாரிகளைக் கொண்ட குழு தனது
அறிக்கையில் கிரானைட் பாறை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள
தனியார் நிறுவனங்களுக்கும் சில பகுதிகளை ஒதுக்கீடு செய்வதில்
நியாயமுள்ளது என்ற அடிப்படையில் தற்போதைய தொழில்
கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும். என்று சிறந்த
தரமுள்ள கரும்பாறைகளை 'டாமின்' நிறுவனத்திற்கென்று
தனியாக ஒதுக்கீடு செய்து விட்டு மீதமுள்ள இடங்களை தகுதி
யின் அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதிப்பதன்
மூலம் அரசு வருமானத்தைப் பெருக்கவும் தொழில் வளம்
பெறச் செய்யவும் வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.



1989 மே 3]

கனிமத் தொழில் வளர்ச்சி பற்றி குடியரசுத் தலைவர்
ஆட்சிக் காலத்தில் ஆய்வு செய்த அரசு. 24—11—1988
அன்று நடந்த நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் சம்பந்தப்பட்ட
விதிகளில் சில மாற்றங்களைச் செய்ய முடிவெடுத்தது. இந்த
முடிவுப்படி 100 சதவீகிதம் ஏற்றுமதி நோக்குடைய தொழில்
நிறுவனங்களுக்கு குத்தகை உரிமம் வழங்குவதில் முன்னுரிமை
வழங்கப்படும். குத்தகை உரிமம் பெற்று ஓராண்டுக்குள்
தொழிற்சாலை தொடங்க இருப்பவர்களின் விண்ணப்பங்கள்
ஏற்கப்படும். தொழில் துறை ஆணையாளர் மற்றும் தொழில்
வணிக இயக்குநர், அரசு துணைச் செயலாளர், புவியியல்
மற்றும் சுரங்கத் துறை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஒரு
குழு விண்ணப்பங்களை பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை
செய்யவேண்டும்.

கவர்னர் ஆட்சி காலத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவுப்படி
இதுவரை எந்த ஒரு தனியார் நிறுவனத்திற்கும் இந்த அரசு
குத்தகை உரிமம் வழங்கவில்லை.

தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களுக்கு சுரங்கக் குத்தகை
உரிமம் வழங்குவதால் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் வேலை
வாய்ப்புகளைப் பெருக்கவும் அதன் மூலம் கிராமப்புறப் பொரு
ளாதாரத்தை மேம்படுத்தவும் ஏதுவாகுமென்று கருதப்படு
கிறது. ரூபாய் ஒரு கோடி முதலீட்டில் இயங்கும் ஒவ்வொரு
சுரங்கத் தொழிற்சாலையும் கல் உடைக்கும் இனத்தைச்
சேர்ந்த சுமார் 1,500 ஏழைத் தொழிலாளர்களுக்கு வேலை
வாய்ப்பளிக்க முடியும் என்றும் கருதப்படுகிறது. மேலும்
பல்வேறு கனிமங்கள் தமிழ் நாட்டில் கணிசமான அளவு
கிடைப்பதால் புதிய தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதன்
காரணமாக 'சீனியரேஜ்' வசூல் மூலம் அரசுக்கு வருவாயைப்
பெருக்க முடியும் என்றும் கருதப்படுகிறது. இது பற்றி
விரிவாக ஆய்வு செய்து முடிவெடுக்கப்படவேண்டும்.

மேலே விவரிக்கப்பட்ட பின்னணியில் கருப்பு மற்றும்
சாம்பல் வண்ணப் பாறைத் தொழில் பற்றிய கொள்கை
சம்பந்தமாக சிந்தித்து உறுப்பினர்கள் அவர்களது மேலான
கருத்துக்களை வழங்கும்படி கோரப்படுகிறது.

## இணைப்பு III

(29 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பொருளடக்கம்.

1 தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் .. .. ..
2 தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் .. .. ..
3 தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் .. ..
4 தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் .. ..
5 தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. ..
6 தமிழ்நாடு உப்பு நிறுவனம் .. ..
7 தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் .. ..
8 நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.
9 புவியியல் மற்றும் சுரங்கத் துறை
10 சர்க்கரைத் தொழில் .. .. .. ..
11 பெரிய-நடுத்தரத் தொழில்கள் .. ..
12 சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம் .. ..
13 தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்)
14 மத்திய அரசு முதலீடுகள் .. .. ..



### தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கடந்த இருபது
ஆண்டுகளாகத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் முன்னோடி
யாகத் திகழ்ந்து வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில்
பொதுத் துறையின்கீழ் ஆலங்குளம் சிமெண்ட்ஸ் ஆலையையும்
அரக்கோணம் தொடர் உருக்கு ஆலையையும் நிறுவும் நோக்கத்
துடன் தமிழக அரசால் 1965ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
பின்னர் அரசின் கொள்கைக்கிணங்க, கூட்டுத் துறையில் இந்
நிறுவனம் தனது நடவடிக்கையை விரிவுபடுத்தி, பெரிய மற்றும்
நடுத்தரத் தொழில் திட்டங்களின் செயலாக்கத்தில் ஈடுபட்
டுள்ளது.

2. 'டிட்கோ' பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும்
பல்வேறு வகையான திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.
இந் நிறுவனம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மேம்பாட்டிற்
காகவும், பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும்.
சிமெண்ட்டு, இரும்பு, உரம், இரசாயனம், மருந்துப் பொருள்கள்,
தோல் பொருள்கள், வெடி மருந்துகள், தொலைக் காட்சிப்
பெட்டிகள், கைக்கடிகாரங்கள் போன்ற பல்வேறு தரப்பட்ட
பொருள்கள் உற்பத்தி செய்யும் திட்டங்களைத் தமிழ்நாடு
முழுவதும், குறிப்பாகப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் நிறை
வேற்றி வருகிறது.

3. 'டிட்கோவின் பெரும்பான்மையான திட்டங்கள் கூட்டுத்
துறையில் அமையப் பெற்றுள்ளன. கூட்டுத் துறைக் கோட்பாடு
களுக்கிணங்க, இந்நிறுவனங்களில் 'டிட்கோ' பங்கு மூலதனத்தில்
26 சதவீதமும், கூட்டுத்துறை தொழில் முனைவோர் 25 சதவீத
மும் பங்கேற்பதுடன், மீதமுள்ள 49 சதவீதம் நிதி நிறுவனங்
களும் பொது மக்களும் பங்கேற்க வழங்கப்படுகிறது. மேலும்,
கூட்டுத் துறை நிறுவனங்களின் நிருவாகம், கூட்டுத் துறை
தொழில் முனைவோர் நிர்வாகக் குழுவின் ஆளுகைக்குட்பட்டுள்
ளது. நிர்வாகக் குழுவில், டிட்கோ, ஒருவரை தலைவராக நிய
மிக்கும் கூட்டுத் துறை நிறுவனங்கள் 'டிட்கோ', வின் மூலம் அரசு
உரிமங்கள், அனுமதிகள், இடம், நீர், மின்சாரம், நிதி நிறுவனங்
களிடமிருந்து கடன் மற்றும் ஏனைய வசதிகளைப் பெறுகின்
றன.

4. 'டிட்கோ', இதுவரை 53 தொழில் திட்டங்களை நிறை
வேற்றியுள்ளது. அவற்றில் பொதுத் துறையில் 10 திட்டங்
களும், கூட்டுத் துறையில் 43 திட்டங்களும் அடங்கும். இத்
திட்டங்களின் மொத்த திட்ட முதலீடு ரூ. 921 கோடியாகும்.
டிட்கோ, இத் திட்டங்களில் ரூ. 92 கோடி முதலீடு செய்துள்ளது.
இத்திட்டங்கள் மூலம் இதுவரை சுமார் 40,000 நபர்களுக்கு
வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவைகளில் பொதுத்
துறையிலுள்ள 8 நிறுவனங்களும், கூட்டுத் துறையிலுள்ள 33
நிறுவனங்களும் உற்பத்தி நிலையிலுள்ள நிறுவனங்களாகும்.
மீதமுள்ள தொழிற் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்
படுத்தப்பட்டு வருகின்றன.

5. பன்னிரண்டு தொழில் திட்டங்கள் ரூ. 285.75 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவைகளில் ஜெல்லிஃபில்டு கேபிள், மின்விளக்கு மற்றும் மின் விளக்கு உதிரி பாகங்கள், பாலியால்ஸ் மற்றும் ப்ரோபலின் ஆக்ஸைட் போன்ற பெட்ரோலியம் பொருட்கள், வாட்டர் புரூபின் பொருட்கள், கிளாஸ்டு தரை மற்றும் சுவர் ஓடுகள், கைக்கடிகார கூடுகள் (watch cases) பிரக்டோஸ் சிரப், அலுமினியம் எக்ஸைட் ருகள் ஆகிய பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் திட்டங்களும் அடங்கும். இத் திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்.

6. ஐந்து திட்டங்களுக்கு விரைவில் அனுமதி வழங்கப்பட்டு நிறைவேற்றப்படும். இவைகளில் டங்ஸ்டன் மெட்டல் பவுடர், டைட்டானியம்-டை-ஆக்ஸைடு முதலிய பல விரிவான திட்டங்களும் அடங்கும். இவற்றிற்கான திட்டச் செலவு சுமார் ரூ. 224 கோடி.

7. மேலும் பென்ஸிலின், புஃளோட் கண்ணாடி, பாலியஸ்டர் நூலிழைத் திட்டம், மின்சார உற்பத்தி திட்டம், மென்னிரும்பு டங்கள் சுமார் 1,300 கோடி செலவில் பரிசீலனையில் உள்ளது. மற்றும் பல இரசாயனப் பொருட்கள் தயாரிப்பது பற்றிய திட் டிட்கோவினால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் புதிய திட்டங்கள் குறித்தும் 1989—90-ல் ஒப்புதல் அளிக்க உள்ள விவரங்கள் பக்கம் 4-ல் தரப்பட்டுள்ளன.

8. டிட்கோவின் 3 பொதுத் துறை துணை நிறுவனங்களின் 8 தொழிற்சாலைகளில் சிமெண்ட், ஆஸ்பெஸ்டாஸ், சிமெண்ட் பைப்ஸ், எஃகுப் பாலங்கள், கம்பிகள், உருளைகள் மற்றும் நைட்ரோ கிளிசரின் அடிப்படையாகக் கொண்ட வெடிமருந்துப் பொருட்கள், மற்றும் திரிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

தவிர 'டிட்கோ' 33 உற்பத்தியிலுள்ள கூட்டுத்துறை திட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில் உரம், மருந்துப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், பதனிடப்பட்ட தோல், தொலைக் காட்சிப் பெட்டி, தொழில் காலணிகள், சிகரெட்ஸ் போன்ற மக்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து தமிழக தொழில் முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

| (1) | தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. (2) | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) (3) | வேலை வாய்ப்பு. (4) |
|---|---|---|---|
| உற்பத்தியிலுள்ள திட்டங்கள்: | | | |
| பொதுத்துறை .. .. | 8 | 12,353.00 | 5,140 |
| கூட்டுத் துறை .. .. | 33 | 53,823.00 | 11,200 |
| மொத்தம் .. | 41 | 66,176.00 | 16,340 |



டிட்கோவின் கீழ்க்கண்ட 4 தொழிற் திட்டங்கள் 1988 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கி உள்ளன.

| திட்டங்களின் பெயரும், உற்பத்திப் பொருளும். (1) | அனுமதிக்கப்பட்டுள்ள இடம். (2) | திட்ட முதலீடு. (ரூபாய் இலட்சத்தில்). (3) | உற்பத்தி தொடங்கிய நாள். (4) | வேலை வாய்ப்பு. (5) |
|---|---|---|---|---|
| 1. யூனி ஆர்கானிக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (சமையல் எண்ணெய்) | மதுராந்தகம் செங்கை-அண்ணா மாவட்டம். | 195 | ஜூலை 1988 .. | 100 |
| 2. இண்டஸ்ரியல் டைமண்ட் இந்தியா லிமிடெட். | மேலூர், மதுரை மாவட்டம். | 750 | செப்டம்பர் 1988 | 150 |
| 3. மெட்ராஸ் மேக்னடிக் மீடியா லிமிடெட். (கணக்குப் பொறிகளில் பயன்படுத்தக்கூடிய வளையத்தக்க டிஸ்கெட்டுகள்). | மறைமலை நகர் செங்கை-அண்ணா மாவட்டம். | 144 | செப்டம்பர் 1988 | 75 |
| 4. டெடொனேட்டர்ஸ் அண்ட் டெடொனேடிங் ஃபியூஸ் திட்டம். | காட்பாடி, வடாற்காடு மாவட்டம். | 3,740 | டிசம்பர் 1988 .. | 500 |

**பின்வரும் திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளன :— [illegible]**

| கம்பெனியின் பெயர். | ஏற்படுத்தப்படவுள்ள இடம். | திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
| --- | --- | --- |
| செயல்படுத்தப்பட்டு வருபவை— | | |
| 1 அமோனியம் நைட்ரேட் மற்றும் நைட்ரிக் அமிலம். | காட்பாடி, வட ஆற்காடு மாவட்டம் | 3,980 |
| 2 த. நா. மக்னீசியம் மற்றும் மரைன் கெமிகல்ஸ். | வாலிநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம். | 915 |
| 3 த. நா. டெலி—கம்யூனிகேஷன் லிமிடெட். | அரக்கோணம், வட ஆற்காடு மாவட்டம். | 2,230 |
| 4 யூ. பி. பெட்ரோபுராடக்ஸ் .. .. | மணலி, செங்கை-அண்ணா மாவட்டம் | 7,100 |
| 5 டைனா லாம்ப்ஸ் .. .. .. | கும்முடிபூண்டி, செங்கை—அண்ணா மாவட்டம். | 4,000 |
| 6 இண்டகிரேடட் வாட்டர் புரூபிங் லிமிடெட். | பொன்னேரி, செங்கை—அண்ணா மாவட்டம். | 455 |
| 7 சிலையன்ஸ் செராமிக்ஸ் .. .. | மதுராந்தகம், செங்கை—அண்ணா மாவட்டம். | 1,700 |
| 8 டைட்டன் கைக்கடிகார கூடுகள் திட்டம். | ஓசூர், தருமபுரி மாவட்டம் | 3,000 |



| | | |
| --- | --- | --- |
| 9 சந்திரசேர்யா .. .. .. .. | பொள்ளாச்சி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். | 2,100 |
| 10 நார்த் ஆற்காடு லெதர்ஸ் .. .. | களரிப்பாக்கம் கிராமம், வேலூர், வட ஆற்காடு மாவட்டம். | 160 |
| 11 உஷ்டிர-டை-பயாடெக் .. .. | கடலூர், தென் ஆற்காடு மாவட்டம் | 1,900 |
| 12 சங்கம் அலுமினியம் .. .. | ஓசூர், தருமபுரி மாவட்டம் .. | 1,035 |
| விரைவில் அனுமதிக்கப்பட உள்ளவை— | | |
| 1 டைட்டானியம்-டை-ஆக்ஸைடு .. | வ.உ.சி. மாவட்டம் .. .. | 14,000 |
| 2 டங்க்ஸ்டன் மெட்டல் புராஜக்ட் .. | ராதாபுரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம். | 4,500 |
| 3 மினரல் செப்பரேஷன் புராஜக்ட் .. | வ.உ.சி. மாவட்டம் .. .. | 2,000 |
| 4 க்னெக்டர்ஸ் புராஜக்ட் .. .. | தண்டையார் கிராமம், செங்கை—அண்ணா மாவட்டம். | 1,000 |
| 5. ஹிட்டர் மைகானைட்ஸ் .. .. | பொன்னேரி வட்டம், செங்கை—அண்ணா மாவட்டம். | 900 |

**நிதி திரட்டுதல் :**

10. தனது கூடுதல் நிதியின் தேவைக்காக பொதுமக்களிட மிருந்து பெறப்படும் வைப்பு நிதிக்கான வட்டி வீதத்தை ஒரு விழுக்காடு உயர்த்த டிட்கோவை அரசு அனுமதித்துள்ளது. டிட்கோ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட உச்சவரம்பு வைப்புத் தொகையை பொதுமக்களிடமிருந்து திரட்டியுள்ளது.

**திட்ட முதலீட்டுக் குழு :**

11. அரசு அண்மையில் பொதுத்துறை நிறுவனங்களில் இட் டங்களைத் துரிதமாக அனுமதிவழங்கும் பொருட்டு திட்ட முத லீட்டுக்குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவின் தலைவர் அர சின் தலைமைச் செயலர் ஆவார். மேலும், இக்குழுவில் அரசின் நிதிச்செயலர், சம்பந்தப்பட்ட துறைச் செயலர், மற்றும் பொதுத் துறை நிறுவனத்தின் தலைமை நிருவாகியும் உறுப்பினர் களாக இருப்பர். இது தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை விரைவு படுத்தும்.

**தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்:**

12. தமிழ் நாடு சிமெண்டு நிறுவனமானது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு (டிட்கோ) முழுவதும் சொந்த மான ஒரு நிறுவனமாக 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது.

ரூபாய் 10 கோடியாக இருந்த அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ரூபாய் 11.00 கோடிக்கு உயர்த்தப்பட்டது. மேலும், 1980 ஆம் ஆண்டு ஜன வரியில், மூலதன மதிப்பு ரூபாய் 12.50 கோடிக்கு உயர்த்தப் பட்டது. இப்பங்கு மூலதனத்தில் ரூபாய் 12.36 கோடி இது வரையில் பங்கு மூலதனமாகச் செலுத்தப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தன் வாணிபத்தை 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கி யது. இதன் முக்கிய செயற்பணிகள் சிமெண்ட் மற்றும் சிமெண்டு சார்ந்த பிற பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்தல் ஆகும். இந்நிறுவனம் நிறைவேற்றி வரும் செயல் பணிகளின் விவரம் பின்வருமாறு:—

| ஆலையின் பெயர். | உற்பத்திப் பொருள். | ஆண்டு ஒன்றுக்கு. (மெட்ரிக் டன்கள்). |
|---|---|---|
| அ. ஆலங்குளம் சிமெண்டு ஆலை. | சிமெண்டு | 4 இலட்சம் |
| ஆ. அரியலூர் சிமெண்டு ஆலை | சிமெண்டு | 5 இலட்சம். |





| ஆலையின் பெயர். (1) | உற்பத்திப் பொருள். (2) | ஆண்டொன்றுக்கு (மெட்ரிக் டன்கள்) (3) |
|---|---|---|
| இ. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் | ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் துணைப் பொருட்கள். | 36,000 |
| ஈ. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ், அழுத்தக் குழாய்கள் உற்பத்தித் திட்டம். | ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள். | 36,000 |

**13. ஆலங்குளம் சிமெண்டு ஆலை :**

ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன்கள் நிறுவு திறனுடன் இந்த ஆலை 1970 ஆம் ஆண்டு முதல் வணிக உற்பத்தியில் ஈடுபட்டது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் இந்த ஆலையை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி (டிட்கோ) நிறு வனத்திடமிருந்து 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் அன்று ரூ. 665 இலட்சம் நிகரக் கணக்கு மதிப்பிற்கு எடுத்துக் கொண்டது. இந்த ஆலை இப்போது தனது 18 ஆண்டு காலப் பணியை நிறைவு செய்துள்ளது.

தேசிய அளவிலான நிலக்கரிப் பற்றாக்குறை, மின்சாரத்தின் மீதான உயர்ந்த பட்சத் தேவையிலான தடை, உயர் மின் நுகர்வு எந்திரங்களின் மீது விதிக்கப்பட்ட மின்வெட்டு, ரயில் பெட்டிகள் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் இந்தத் தொழிற்சாலை முழு உற்பத்தித் திறனை அடைய முடியவில்லை.

இந்த ஆலையின் நவீனமாக்குதல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துதல் திட்டப் பணிகளுக்காக சுமார் ரூ. 490 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியத்தின் 40 சதவீதம் மின்வெட்டு செயல்படுத்தப்பட்ட தாலும் கடுமையான வறட்சியினால் ஏற்பட்ட தண்ணீர் பற்றாக் குறையின் காரணமாகவும், இந்த ஆலை 73 சதவீதம் திறனளவே எய்தியது.

மின் பற்றாக்குறையை ஆலங்குளம் ஆலையில் சமாளிக்க தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தற்போது 2,500 கே.வி.ஏ. ஜப்பானிய டீசல் ஜெனரேட்டர் (மின்பெருக்கப் பெரும் பொறி கள்) எந்திரங்களை ரூ. 281 இலட்சம் மதிப்பில் நிறுவியுள்ளது.

இந்த எந்திரங்களை நிறுவுவது மின்வெட்டுக் காலங்களில் பெரும் விகிதத்தில் உற்பத்தி திறனை எய்துவதில், ஆலைக்கு உதவியாக அமைந்திடும். நிலக்கரி நுகர்வின் அளவைக் குறைக்கும் பொருட்டு தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் இவ்வாலையை ஈரப் பத செயல் முறையிலிருந்து பாதி உலர்ச் செயல் அல்லது உலர் செயல் முறைக்கு மாற்றிட திட்டமுன் வடிவு செய்தது. இத் துடன் தேர்வு பொறி இணைந்த ஓர் அரவை இயந்திரம் (Primary Crusher) ரூ. 7.5 கோடி மதிப்பில் நிறுவுவதற்கான திட்டமுன் வடிவு (Proposed) திட்டமிடப்பட்டுள்ளது. இரு திட்டமுன் வடிவுகளும் சிமெண்டு உற்பத்திக்கு ஆகும் செலவை குறைக்கவும் உற்பத்தி செயற்பாட்டினை மேம்படுத்த வும் உதவும். திருவாளர்கள் ரக்பி சிமெண்ட்ஸ் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட் (இங்கிலாந்து) நிறுவனத்தினர் ஆலைகளை ஈரப்பதச் செயல்முறையிலிருந்து பாதி உலர்ச் செயல் அல்லது உலர்செயல் முறைக்கு மாற்றியமைத்தலுக்குரிய விரிவான வழிமுறைகளை அளிக்கும் ஆலோசனைப் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். திருவாளர்கள் ரக்பி சிமெண்ட்ஸ் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட் (இங்கிலாந்து) நிறுவனத்திடமிருந்து விரிவான வழிமுறைகள் பெறப்பட்டு அவை புதுடில்லி, தேசிய சிமெண்ட் கட்டிடம் மற் றும் தளவாடங்கள் குழுவின், கருத்துக்களை பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

அரவை இயந்திரம் வாங்குவதற்குரிய டெண்டர்கள் உள் நாட்டு வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்டு அவை பரிசீலனை யில் உள்ளன.

இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் தேதி முதல் ஆண்டு வரிசையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆண்டின் உற்பத்தி (மெட்ரிக் டன்களில்). | ஆண்டின் விற்பனை (மெட்ரிக் டன்களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1976-77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977-78 .. .. .. | 3,09,105 | 3,07,607 |
| 1978-79 .. .. .. | 3,10,277 | 3,20,379 |
| 1979-80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980-81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981-82 .. .. .. | 2,93,515 | 2,93,398 |





| ஆண்டு. | ஆண்டின் உற்பத்தி (மெட்ரிக் டன்களில்). | ஆண்டின் விற்பனை (மெட்ரிக் டன்களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1982-83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |
| 1983-84 .. .. .. | 2,43,435 | 2,38,158 |
| 1984-85 .. .. .. | 3,40,031 | 3,44,098 |
| 1985-86 .. .. .. | 3,20,672 | 3,10,893 |
| 1986-87 .. .. .. | 3,12,741 | 3,16,216 |
| 1987-88 .. .. .. | 2,91,009 | 2,94,657 |
| ஜனவரி 1989 வரை .. | 2,33,330 | 2,29,666 |

ஆலங்குளம் ஆலை, இப்பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், அப்பகுதியிலேயே மூலப் பொருட்கள் உற்பத்திப் பொருட்கள் போக்குவரவு வகையில் கணிசமான அளவில் மறைமுகமான வேலை வாய்ப் பினையும், வழங்கி வருகிறது.

14. அரியலூர் சிமெண்ட் ஆலை :

ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன்கள் சிமெண்ட் உற்பத்தி செய்யும் அரியலூர் சிமெண்ட் ஆலை ஓர் உலர் செயல் முறை ஆலை ( Dry Process Plant ) ஆகும். இது முதன் முதலில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி (டிட்கோ) நிறு வனத்தினால் ரூ. 2,876 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உரு வான திட்டமாகும். இத்திட்டத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து சமபங்கு மூலதனமாக (ஈக்விடி கான்ட்ரிபூஷன்) ரூ. 575 இலட்சமும் அனைத்திந்திய நிதி நிறு வனங்களிடமிருந்து தவணைக் கடனாக ரூ. 1,800 இலட்சமும் வணிக வங்கிகளிடமிருந்து ரூ. 501 இலட்சமும் பெறப்பட்டது.

அரியலூரில் இதன் கட்டுமானப்பணி 1977 ஜனவரியில், ஆரம்ப தொடங்கியது. சிமெண்ட் உற்பத்தியானது 1-8-1979-ல் ஆரம்ப மானது. இந்த ஆலை குறிப்பிட்ட கால அளவிலேயே உற்பத்திக் குறியீட்டு அளவை எய்தியது மட்டுமின்றி, அடிக்கல் நாட்டிய முப்பது மாதங்களுக்குள் திட்ட நிதி ஒதுக்கீட்டுக்குள் வணிக உற்பத்தியையும் தொடங்கிவிட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

[1989 மே 3

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரியலூர் சிமெண்ட் ஆலை
யை நவீனப்படுத்தவும், விரிவாக்கவும் கருதியுள்ளது. இந்திய
அரசு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு இந்த ஆலையின்
திறனை ஆண்டுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன்கள் சிமெண்டு
உற்பத்தியிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக் டன்களாக அதிகரித்துக்
கொள்ள இசைவுக் கடிதம் ( Letter of Intent ) வழங்கி
யுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 129 கோடி ஆகும். இவ்
வாலை வணிக உற்பத்தித் திறனை ஆரம்பத்திலிருந்து நிர்ணய
அளவை எய்திட கச்சாப் பொருளான சுண்ணாம்புக் கற்களில்
உள்ள ஈரப்பசை இயல்பு மற்றும் இதர இடர்பாடுகள் தடையாக
இருந்து வந்திருக்கிறது.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், அரியலூர் ஆலையினைப்
பாதிக்கும் பெரும் இடர்பாடுகளைக் கண்டறிந்து பொருத்த
மான தீர்வுகளை வழங்குவதற்கென சுவிட்சர்லாந்தில் உள்ள
திருவாளர்கள் ஹோல்டர் பாங்க்மேனேஜ்மெண்ட் கன்சல்டன்ட்ஸ்
நிறுவனத்தினை நியமித்தது. அவர்கள் ஆலையைத் தொழில்
நுட்ப வகையில் மேம்படுத்தத்தக்க அறிக்கை ஒன்றினை
கொடுத்தனர். அவர்களின் அறிக்கையை பரிசீலனை செய்து
திருவாளர்கள் ஹோல்டர் பாங்க் மேனேஜ்மெண்ட் கன்சல்
டன்ட்ஸ் விரிவான வழிமுறைகளை அளிக்கும் ஆலோசனை
வழங்க நியமித்து, மேற்கண்ட விரிவான விதிமுறைகளை அவர்
களிடமிருந்து பெற்றது.

இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள்
கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | ஆண்டின் உற்பத்தி (மெட்ரிக் டன்கள்). | ஆண்டின் விற்பனை (மெட்ரிக் டன்கள்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979-80 (8 மாதங்களுக்கு) .. .. .. | 1,15,919 | 1,15,525 |
| 1980-81 .. .. .. | 2,46,733 | 2,41,949 |
| 1981-82 .. .. .. | 2,84,350 | 2,87,474 |
| 1982-83 .. .. .. | 2,47,800 | 2,47,836 |
| 1983-84 .. .. .. | 3,01,366 | 2,99,377 |
| 1984-85 .. .. .. | 2,84,366 | 2,80,569 |
| 1985-86 .. .. .. | 2,81,507 | 2,76,028 |



1989 மே 3]

| ஆண்டு. | ஆண்டின் உற்பத்தி (மெட்ரிக் டன்கள்). | ஆண்டின் விற்பனை (மெட்ரிக் டன்கள்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1986-87 .. .. .. | 3,52,102 | 3,51,039 |
| 1987-88 .. .. .. | 4,06,954 | 4,14,883 |
| ஜனவரி 1989 வரை .. .. | 2,95,335 | 2,89,300 |

மின் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கும் பொருட்டு அரியலூர்
ஆலையின் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ஜூலை 1986-ல்
மூன்று 2,500 கே.வி.ஏ. ஜப்பானிய டீசல் ஜெனரேட்டர்
எந்திரங்களை (மின்பெருக்கப் பெருப்பொறிகள்) ரூ. 404
இலட்சம் மதிப்பில் நிறுவியுள்ளது.

சுண்ணாம்பு கற்களில் ஈரப்பசை மிக அதிகமாக உள்ள
காரணத்தால் இவ்வாலை ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து
எண்ணிய அளவு உற்பத்தி செய்ய இயலாமல் போனதுடன்
நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஈரப்பசையை குறைக்க
படிப்படியாக உற்பத்தி முறைகளில் முன்னேற்றம் ஏற்படுத்தப்
பட்டது. வளர்ச்சி ரீதியிலான பல்வேறு ஊக்குவிக்கும் உற்பத்திச்
செயல் முறையினால், இவ்வாலை போதிய ஆதாயத்தை ஜூலை
1986 முதல் ஈட்டத் துவங்கியுள்ளது. 1988-89 ஆம் நிதி
யாண்டில் ஜனவரி 1989 வரை ரூ. 230.30 இலட்சம் நிகர
லாபம் ஈட்டியது.

அரியலூர் சிமெண்ட் ஆலை சுமார் 900 பேருக்கு நேரடி
வேலை வாய்ப்பளிக்கிறது. தவிர மூலப்பொருட்கள், உற்பத்தி
பொருட்கள் முதலியவற்றின் போக்குவரவு வகையில் மறை
முகமான வேலை வாய்ப்பினை வழங்கி உள்ளது.

15. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் ஆலை ;

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பகுதாப்பட்ட பணியில்
நிதிப்படியாக அனைத்து இந்திய நிதி நிறுவனங்களின் நிதி
உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு 36,000 மெட்ரிக் டன்கள் அளவில்
சிமெண்ட் தகடுகள் உற்பத்தி செய்ய ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்
தகடுகள் ஆலை ஒன்றை அமைத்துள்ளது. இந்த ஆலை
ரூ. 259 இலட்சம் செலவில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைப் பகுதி
யிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை தன் வணிக
உற்பத்தியை 1-10-1981-ல் தொடங்கியது.

இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | ஆண்டின் உற்பத்தி (மெட்ரிக் டன்கள்). (2) | ஆண்டின் விற்பனை (மெட்ரிக் டன்கள்). (3) |
|---|---|---|
| 1981–82 (6 மாதங்கள்) .. | 8,251 | 5,067 |
| 1982–83 .. .. .. | 19,091 | 19,867 |
| 1983–84 .. .. .. | 17,839 | 16,[illegible] |
| 1984–85 .. .. .. | 25,606 | [illegible] |
| 1985–86 .. .. .. | 27,443 | 28,370 |
| 1986–87 .. .. .. | 26,790 | 26,309 |
| 1987–88 .. .. .. | 27,973 | 30,054 |
| 1988–89 (31–1–1989 வரை) .. | 24,584 | 24,493 |

1987–88 ஆம் ஆண்டில் மின்வெட்டின் காரணமாக ஆலை 77.7 சதவிகிதம் உற்பத்தியை தான் எட்ட முடிந்தது. ஏப்ரல் 1988 முதல் ஜனவரி 1989 முடிய ஆலையின் சராசரி உற்பத்தி 68 சதவிகிதம் ஆகும். 1988–89 நிதியாண்டில் ஜனவரி 1989 வரை ரூ. 47.43 இலட்சம் நிகர லாபம் ஈட்டியது.

இந்த ஆலை சுமார் 250 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்துள்ளது. மூலப் பொருட்கள் உற்பத்திப் பொருட்கள் வகையில் மறைமுகமாக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

16. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் ஆலை, மாயனூர் ;

இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன்கள் அளவில் 80 மி.மீ. முதல் 800 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் அமைக்கப்பட்டது. இதன் திட்டப் பணிகள் பிப்ரவரி 1983-ல் துவங்கப்பட்டன. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களின் உற்பத்தி வணிக அடிப்படையில் 1–10–1984-ல் திட்டமிட்டபடி துவங்கியது.





ரூ. 945 இலட்சம் செலவு பிடிக்கும் இந்த ஆலை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மூலமாகவும், அனைத்திந்திய நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடனும் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| ஆண்டு. (1) | ஆண்டின் உற்பத்தி (மெட்ரிக் டன்கள்). (2) | ஆண்டின் விற்பனை (மெட்ரிக் டன்கள்) (3) |
|---|---|---|
| 1984–85 (6 மாதங்கள்) .. | 8,427 | 2,558 |
| 1985–86 .. .. .. | 10,007 | 6,684 |
| 1986–87 .. .. .. | 5,153 | 10.436 |
| 1987–88 .. .. .. | 17,041 | 18,853 |
| ஜனவரி 1989 வரை .. .. | 14,411 | 9,310 |

சுமார் 300 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், மேலும் கணிசமான அளவில் துணை வேலைவாய்ப்பும் இத்திட்டம் அளித்துள்ளது. ஜனவரி 1989 வரை ரூ. 25.92 இலட்சங்கள் நிகர நஷ்டம் அடைந்துள்ளது. 1988–89-ல் ஆலையின் உற்பத்தியும், விற்பனையும் கணிசமான அளவுக்கு முன்னேறி இருப்பதால் இந்த ஆண்டில் இழப்பை பெரும் அளவிற்கு குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

17. பைலட் சிமெண்ட் ஆலை :

இந்திய சிமெண்ட் ஆய்வு கழகத்திற்குச் சொந்தமான பைலட் சிமெண்ட் ஆலை திருச்சி மாவட்டத்தில் உள்ள முதுவத்தூர் என்னுமிடத்தில் இருந்தது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் இந்திய சிமெண்ட் ஆய்வு கழகத்திடமிருந்து (Cement Research Institute of India) இந்த ஆலையை எடுத்துக்கொண்டது.

விரிவான ஆய்வு செய்ததின் பேரில் இவ்வாலை பொருளாதார ரீதியில் லாபமற்றது என கண்டறியப்பட்டது. எனவே, அரசின் ஆணைப்படி ஆலையை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசிடமிருந்து இறுதி ஆணை பெறப்பட்டு இந்த ஆலையை விற்பனை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இந்த 1988–89 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

### 18. நோக்கமும் வளர்ச்சியும் :

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971ம் ஆண்டு மார்ச் மாதம் தமிழக அரசிற்கே முழுவதும் சொந்த மாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக தொடங்கப்பட்டு 1972-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தன்னுடைய பணிகளை தொடங்கியது. இந்நிறுவனம் தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும், ஒரு தூண்டுகோலாகவும், இம்மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. இந் நிறுவனம் இந் நாள்வரை பல்வேறு திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 407.10 கோடி அளிக்க ஒப்புதல் அளித்து இருக்கிறது. மேலும் சுமாராக 1,10,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

### சிப்காட்டின் நிதி நடவடிக்கைகளும் தொழில் வளர்ச்சி நடவடிக்கைகளும் :

1. தொழில் முனைவோர்களின் நலனுக்காக அரசாங்கத்தில் பல்வேறு ஊக்க திட்டங்களை நிறைவேற்றுதல்.

2. பின் தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதி களை விரைந்து தொழில் மயமாக்க தொழில் வளர்ச்சிக்கு உகந்த இடங்களை தேர்ந்தெடுத்து தொழில் மையங்களை அமைத்து தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பது.

3. நடுத்தர மற்றும் பெருந்தொழிற்சாலைகளுக்கு தவணைக் கடன் அளிப்பது (இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவி திட்டத்தின்கீழ்).

4. தொழில் முனைவோர்க்கு துணை பணிகளைச் செய்தல் :

''சிப்காட்'' கடந்த 17 ஆண்டுகளாக தமிழ்நாடு அரசாங் கத்தின் ஆதரவுடனும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆதரவுடனும் பல்வேறு திட்டங்களை வகுத்து அவற்றை நிறை வேற்றி தமிழ்நாட்டின் துரித தொழில் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டு வருகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி 1976-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிப்காட்டுக்கு மறுநிதி திட்டத்தின் கீழ் நிதி வழங்க அங்கீகரித்தது முதல் சிப்காட்டின் தவணைக் கடன் உதவித் திட்டங்கள் வலுவடைந்து வருகிறது. மேலும், கடந்த வருடங்களில் தவணைக்கடன் உதவி கணிசமான அள வுக்கு உயர்ந்துள்ளது.



5. ''சிப்காட்'' நிதி ஊக்கத்திட்டங்களாக மத்திய, மாநில மூலதன மானிய திட்டம், வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம் மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதி திட்டத்தின்கீழ் வழங்கும் சலுகை கடன் வசதிகளைக் கொண்டு பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளை பரவலாக நிறுவி வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது.

6. ஏற்கெனவே சிப்காட்டின் இராணிப்பேட்டை மற்றும் ஒசூர் தொழில் இணையங்கள் முழுவதுமாக மேம்படுத்தப்பட்டு பல தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. மேலும் இராணிப்பேட்டை இரண்டாவது இணையம் ஏற்படுத்தப்பட்டு அதில் என்பீல்டு இந்தியா லிமிடெட் தன்னுடைய தொழிற் சாலையை நிறுவி அதனுடைய பணிகளை ஆரம்பித்துள்ளது. மேலும் கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானா மதுரை ஆகிய புதிய இணையங்கள் முழுவடிவில் செயல்படும் தறுவாயில் உள்ளன. மேம்படுத்தப்பட்ட நிலங்கள் பல தொழிற் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த தொழில் இணையங் களில் குறிப்பாக கும்மிடிப்பூண்டி மற்றும் கடலூர் மையங்களில் தொழில்முனைவோர்களின் தொழில் ஆர்வம் அதிகரித்து உள்ளது. மேலும் தூத்துக்குடி தொழில் இணையம் மேம்படுத்தப்பட்டு நில ஒதுக்கீடும் செய்யப்பட்டு வருகிறது.

7. சிப்காட்டில், வெளிநாடுகளில் வாழும் மற்றும் பணி செய்துவரும் இந்தியர்களை தமிழ்நாட்டுத் தொழில்களில் முதலீடு செய்ய ஊக்குவிப்பதற்காக தனியாக பன்னாட்டு ஊக்குழு நிறுவப்பட்டுள்ளது.

### 19. தொழில் தொடங்கப் பெற்ற இசைவுக்கடிதங்களை கண் காணித்து உதவி செய்தல் :

தமிழ்நாடு அரசு, தொழில் தொடங்க முன்னுரிமை பெற்றவர் களின் தொழில் வளர்ச்சியை கண்காணிப்பதற்கான நிரந்தரக் குழு ஒன்று அமைந்துள்ளது.

தொழில் தொடங்க இசைவுக் கடிதங்கள் பெற்றவர்கள் தொழில் நிறுவும்போது ஏற்படும் பிரச்சினைகள் ஏதாவது இருந் தால் அதைத் தீர்த்து வைப்பதற்கும், அதனுடைய வளர்ச்சிகளை கண்காணிப்பதற்கும், இந்த நிலையான குழு அவ்வப்போது சிப்காட்டில் கூட்டப்படுகிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை 1982-ம் ஆண்டு ஜனவரி முதல் 1988-ம் ஆண்டு அக்டோபர் வரை 641 தொழில் முன்னு ரிமைக்கான அனுமதி மத்திய அரசின் தொழில் ஒப்புதல் அளிக்கும் செயலகத்தால் அளிக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி அவற்றில் 187 முன்னுரிமைகள் தொழில

உரிமைகளாக மாற்றப்பட்டுள்ளன. 147 நீக்கப்பட்டன அல்லது காலாவதியாகிவிட்டன. மேலும் 307 இசைவுக் கடிதங்கள் தொழில் தொடங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**20. பிரச்சினைகளைக் களைய உயர்மட்டக் குழு :**

தமிழக அரசு தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் நிறுவப்படும்போது ஏற்படும் பலவித பிரச்சினை களை கண்காணிப்பதற்காக உயர்மட்ட அதிகாரக் குழு ஒன்றை நிறுவியுள்ளது. இந்தக் குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான தன் விளக்க உரைகளை பரிசீலித்து அவற்றிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிப்பதன் மூலமாக அந்தக் குறிப்பிட்ட அரசு அமைப்பு அந்த விளக்கவுரைகளை, நன்றாக பரிசீலித்து ஒப்புதல் அளிக்கிறது. இந்தக் குழு 1985-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இயங்கி வருகிறது. இக்குழு இதுவரையில் 41 முறை கூடி 133 பிரச்சினைகளை பரிசீலித்து உள்ளது. அவைகளில் 129 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. பொது வாக மின் இணைப்பு, சுற்றுப்புற சூழ்நிலை அனுமதி, பஞ்சா யத்து அனுமதி, நிதி உதவிகளை பெறுதல் போன்ற பிரச்சினை கள் முதன்மையாக எடுக்கப்படுகிறது. இங்கு குழு திறமை யாக செயல்பட அதனுடைய செட்ல்முறை சீரமைக்கப்படும்.

**21. பன்னாட்டுத் தொழில் முனைவோரின் முதலீடு :**

தமிழ்நாடு அரசு உயர்நிலைக் குழுவொன்றை அமைத் துள்ளது. இந்தக் குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி அயல்நாட்டில் வாழும் இந்தியத் தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டங்களை தேர்ந்தெடுக்க ஆலோசனைகளை யும் திட்டங்கள் அமுலாக்குவதற்கு அவற்றில் பிரச்சினைகள் இருப்பின் அவைகளைப் பரிசீலித்தும் வருகிறது.

1981-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஏற்படுத்தப்பட்ட அயல் நாட்டுப் பிரிவு தொடங்கிய நாளிலிருந்து 1989 ஜனவரி 31-ம் தேதிவரை பல்வேறு நாடுகளிலிருந்தும் 1,100-க்கும் மேற்பட்ட விசாரணைக் கடிதங்கள் வந்துள்ளன. இதுவரையில் ரூபாய் 3,621.00 இலட்சம் மூலதனத்தில் 37 பன்னாட்டு தொழில் முனைவோரின் தொழிற்சாலைகள் அமுலாக்கப்பட்டுள்ளன. இன்னும் ரூபாய் 5,488.00 இலட்சம் மூலதனத்தில் 18 பன்னாட்டு தொழில் முனைவோரின் தொழிற்சாலைகள் தொடங்குவது பரிசீலனையில் உள்ளன. 25 பன்னாட்டு தொழில் முனைவோரின் திட்டங்கள் சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தில் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன.



**22. நடைமுறையிலுள்ள ஊக்கத் தொகைத் திட்டங்கள் :**

மானியத் திட்டம் நடைமுறையில் கொண்டு வருவதற்கான செயல்முறை :

தற்பொழுது உள்ள திட்டம் ஜூன் 1987-ல் மாற்றியமைக்கப் பட்டது. இந்த மாற்றத்தின் நோக்கம் தொழிற் முனை வோர்க்கு வசதியாக இருக்க வேண்டும் என்பதாகும். இந்த திட்டச் செயல் முறையின் கீழ் 10 சதவீத செலவை தொழிற் முனைவோர்கள் செலுத்த வேண்டும். மேலும் 40 சதவீதம் தொழிற் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது கடனாக மாற்றி அளிக்கப்படும். மீதமுள்ள 50 சதவிகிதம் சிப்காட்டின் மானியமாக தரப்படும். 30 திட்டங்கள் இதுவரை செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மூன்று திட்டங்கள் செயல் படுத்துவதற்காக தீவிர பரிசீலனையில் உள்ளன. சுமார் 35 தொழில் முனைவோர்கள் இந்த திட்டத்தின்கீழ் இதுவரை பயன் பெற்றுள்ளனர்.

**26. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் :**

ஊக்கத் தொகை திட்டங்களின் முக்கியமான பகுதி வட்டி யில்லா விற்பனை வரிக் கடன் ஆகும். இந்த திட்டம் தமிழக அரசின் சார்பாக சிப்காட்டினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் பின்தங்கிய மாவட்டங்களில் மற்றும் சில குறிப்பிட்ட வட்டங்களிலும் தொடங்கப்படும் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு கடன் வழங்கப் படுகிறது. பின்தங்கிய மாவட்டங்கள், திருநெல்வேலி, செங்கை அண்ணா, நீலகிரி, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் சில குறிப்பிட்ட வட்டங்கள் மற்றும் மறைமலை நகர் தொழில் இணையம், செங்கை அண்ணா மாவட்டத்தில் குன்னத்தூர் வட்டாரத்தில் அமைக்கப்படும் நடுத்தர மற்றும் பெருந் தொழில்களுக்கு இத்திட்டத்தில் கடன் வழங்கப்படும். மக்கள் தொகை ஒரு இலட்சம் அல்லது அதற்கு மேல் உள்ள பகுதிகள் மதுரை, திருச்சிராப்பள்ளி நகரத்தை ஒட்டி 8 கி.மீ. எல்லை மானியப் பகுதிகளைச் சாராத இடங்களில் அமைக்கப் படும் தொழில்களுக்கு இச்சலுகை கிடையாது.

இந்த ஊக்க வட்டி இல்லாத விற்பனை வரிக் கடன் திட்டத் தின் கீழ் இதுவரை ரூ. 5,425.76 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ரூ. 4,913.36 இலட்சம் வழங்கப்பட் டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்

தொகையும் வழங்கப்பட்ட தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வருடம். (1) | ஒப்புதல்கள். (2) | வழங்கிய தொகை. (3) |
| --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1985-86 .. .. . | 492.10 | 401.26 |
| 1986-87 .. .. .. | 673.88 | 717.58 |
| 1987-88 .. .. .. | 869.04 | 826.48 |
| 1988-89 (31-1-1989 வரை) | 840.88 | 651.61 |
| தொடக்கத்திலிருந்து 31-1-1989 வரை. | 5,425.75 | 4,913.36 |

24. மத்திய அரசின் முதலீட்டு மானியம் :

இத் திட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றும் பொறுப்பு 1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சிப்காட்டிடம் ஒப்படைக்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் 42 பிற்பட்ட தாலுக்காக்களில் ('பி' பிரிவு இடங்கள்) தொடங்கப்படும் தொழிற்சாலைகள் பயன்பெற தகுதி வாய்ந்தவையாகும். நிலையான சொத்துக்களை நிலம், கட்டிடங்கள், தளவாடங்கள் மற்றும் எந்திரங்களை பிற்பட்ட தொகுதிக்கு மாற்றி தொழிற் சாலை நிறுவினால் அந்த 15 சதவீத மானியத்தை பெறு வதற்கு தகுதி பெற்றவையாகும். ஆனால் இதற்கு முன்பு அந்த இடம், மானியத்தைப் பெறாமல் இருந்திருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிக பட்ச தொகை ஒவ்வொரு சட்டப்படியான யூனிட்டுக்கும் ரூ. 15.00 இலட்ச மாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 85 சதவீத மானியம் தொழிற் சாலைகள் உற்பத்தி தொடங்குவதற்கு முன்பு வழங்கப் படுகிறது. மீதமுள்ள 15 சதவீதம் உற்பத்தி தொடங்கிய பின்னர் வழங்கப்படுகிறது.

1983 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 9 பிற்பட்ட மாவட்டங்களில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் 'இ' பிரிவு இடங்களின் கீழ் சலுகை நிதியான 10 சதவீத மத்திய



முதலீட்டு மானியத்தை பெற தகுதி பெற்றவையாகும். இதன்கீழ் அதிகபட்ச தொகையான ரூ. 10.00 இலட்சம் அளிக்கப்படுகிறது. ஆனால் 'பி' பிரிவு இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் (15 சதவீத மானிய இடங்கள்) நீங்கலாக 1983 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளில் ரூபாய் 30.00 கோடிக்கு மேல் தொழிற்சாலைகளில் முதலீடு செய்த இடங் களும் இத்திட்டத்தில் பயன்பெற தகுதியற்றவையாகும். மைய அரசின் உதவித் திட்டம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்துள்ளது. இறுதியாக 30—9—1988 வரை நீட்டிக்கப் பட்டிருந்தது. அதற்குப் பிறகான ஆணைகள் இதுவரை பெறப் படவில்லை.

மத்திய மானிய திட்டத்தின்கீழ் இதுவரை ரூ. 4,914.31 இலட்சம் ஒப்புதல் அளித்தும் ரூ. 3,878.85 இலட்சம் வழங்கியும் உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் அளித்த ஒப்புதலும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :

| ஆண்டு. (1) | ஒப்புதல். (2) | வழங்கிய தொகை. (3) |
| --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1985-86 .. .. .. | 280.64 | 398.35 |
| 1986-87 .. .. .. | 438.08 | 344.23 |
| 1987-88 .. .. .. | 638.73 | 306.86 |
| 1988-89 (31-1-1989 வரை) | 251.09 | 275.72 |
| தொடக்கத்திலிருந்து 31-1-1989 ஆம் நாள் வரை. | 4,914.31 | 3,678.85 |

25. மாநில முதலீட்டு மானியத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ், அரசாங்கம் 35 பிற்பட்ட வட்டங்களும் கடலூரிலும் தூத்துக்குடியிலும் தென்னாற்காட்டில் உள்ள 15 சதவீதம் அமைந்துள்ள புதிய தொழில் மையங்களும் மானியம் பெற அல்லது ரூ. 15.00 இலட்சம் அதிகபட்சமான மானியம் தகுதி பெற்றவை என அறிவித்துள்ளது. அவைகளில், 24 வட்டங்கள், 'இ' பிரிவில் வரும் இடங்கள், 10 சதவீதம் மானியம் பெற தகுதி பெற்றவையாகும். 24 வட்டங்களில்

அமைக்கப்படும் தொழிற்சாலைகள் 10 சதவீத மத்திய
முதலீட்டு மானியமும், 5 சதவீத மாநில முதலீட்டு மானியமும்
பெற தகுதி பெற்றவை ஆகும். மீதமுள்ள 11 வட்டங்களும்
மற்றும் மேற்கண்ட தொழில் இணையங்களில் அமைக்கப்படும்
தொழிற்சாலைகளும் 15 சதவீத மாநில முதலீட்டு மானியம்
பெற தகுதி பெற்றவையாகும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு
அக்டோபர் 3 ஆம் நாளிலிருந்து சிறிய, நடுத்தர மற்றும்
பெரிய தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்.

மேலும் தமிழக அரசு சில குறிப்பிட்ட தொழிற்சாலை
களை ஊக்குவிப்பதற்காக ஒரு சிறப்பு மானியத் திட்டத்தை
ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட தொழிற்
சாலைகள் மாநிலத்தில் எந்த இடத்தில் அமைக்கப்பட்டாலும்,
மத்திய மாநில அரசின் மானிய திட்டத்தில் பயன்பெறத் தகுதி
யற்றதாக இருப்பின் 10 சதவீத உருவாக்கப்படும் நிலையான
சொத்துக்களுக்கு சமமான மதிப்புள்ள தொகையோ அல்லது
ஒவ்வொரு நிரந்தரமாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு
தலா ரூ. 20,000 தொகையோ அல்லது ரூ. 10.00 இலட்சமோ,
இதில் எந்தத் தொகை குறைவாக உள்ளதோ அதைக் கடனாக
பெற தகுதி உள்ளவையாகும்.

1. ஏற்றுமதி முனைப்புள்ள தங்க நகை செய்தல் மற்றும்
உற்பத்தித் தொழில்கள்.

2. மருந்துகள் தயாரிப்பு.

3. மோட்டார் வாகன உதிரித் தொழில்கள்.

4. சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட கருவிகள்.

5. சணல் தொழிற்சாலைகள் (6 வட்டங்களில்).

இந்த முக்கியமான திட்டம் தமிழக அரசால் தமிழகம்
முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 1981
ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் தேதி முதல் செயல்பட்டு
வருகிறது. மற்றும் தமிழக அரசு தோல் பதனிடும் தொழிற்
சாலைகளில் கழிவை சுத்தம் செய்து அனுப்பும் கருவிகளை
அமைப்பதற்கு தூண்டுகோலாக இருப்பதற்கு இத்திட்டத்தை
விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மத்திய மாநில அரசின்
மானியத்தைப் பெறாத தொழிற்சாலைகள் 10 சதவீத
மதிப்புள்ள உருவாக்கப்படும் நிலையான சொத்துக்களின்
சமமான தொகையோ அல்லது உயர்ந்த பட்சமாக ரூ. 5.00
இலட்சம். இந்த இரண்டில் எது குறைவாக உள்ளதோ அது
மானியமாக வழங்கப்படும்.





26. மின் அணு தொழில்களுக்கு மானியத் திட்டம் :

தமிழ் நாட்டில் எந்தப் பகுதியிலாவது நிறுவப்படும்
மின் அணு தொழிற்சாலைகளுக்குக் கீழ்க்கண்ட மானிய விகிதம்
பொருந்தும் :—

1. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காக மொத்த திட்ட
முதலீட்டில் 20 சதவீதத்திற்கு மேற்படாமலும், முதலீடு
வைப்பு ரூபாய் 100 இலட்சத்திற்கு மேற்படாமலும் இருக்கும்
திட்ட தொழிற்சாலைகளுக்கு 15 சதவீதம் அல்லது ரூபாய்
15 இலட்சம் இதில் எது குறைவோ அது.

2. முதலீடு வைப்பு ரூபாய் 200 இலட்சம் வரைக்கும்
முதல் ரூபாய் 100 இலட்சத்திற்கு 15 சதவீத மானியமும்,
இரண்டாவது ரூபாய் 100 இலட்சத்திற்கு 18 சதவீத மானியமும்
இவை இரண்டும் சேர்ந்து ரூபாய் 30 இலட்சத்திற்கு மேற்படாமல்
இருக்க வேண்டும்.

3. ரூபாய் 200 இலட்சத்திற்கு முதலீடு வைப்புக்கு
மேற்பட்டவைகளுக்கு, முதல் ரூபாய் 100 இலட்சத்திற்கு
15 சதவீதமும், இரண்டாவது ரூபாய் 100 இலட்சத்திற்கு
18 சதவீதமும், அதற்கு மேலுள்ள வைப்புகளுக்கு 15 சதவீத
மும் இவை மூன்றும் இணைந்து ரூபாய் 30 இலட்சத்திற்கு
மேற்படாமல் மானியம் வழங்கப்படும்.

மேற்சொன்ன விரிவாக்கப்பட்ட மின்னணு தொழில்களுக்குக்
கொடுக்கப்பட்ட முதலீட்டு மானிய சலுகைகள் தலா ரூபாய்
50,000 நிரந்தர ஊழியர் கணக்கிலும் அல்லது மேற்சொன்ன
சதவிகித கணக்கிலும் அல்லது மேற்சொன்ன ரூபாய் வரம்பிலும்
இதில் எது குறைவோ அதற்கு வரையறுக்கப்பட்டது.

மேற்சொன்ன திட்டம் 9—5—1988-க்குப் பிறகு
தவணைக் கடன் பெற்ற தொழில் நிறுவனங்களுக்குத் தான்
பொருந்தும். சுயமாகத் தொடங்கும் தொழில் நிறுவனங்
களுக்கு அது நில ஆர்ஜிதம் செய்கிற தேதியோ
அல்லது கட்டிடம் கட்ட ஆரம்பித்த தேதியோ அல்லது
இயந்திரங்கள் வாங்குவதற்கான ஆர்டர் கொடுத்த தேதியோ
இதில் எது முன்னதாக உள்ளதோ அந்த தேதியிலிருந்து
இது பொருந்தும்.

27. தோல் பொருள் தொழில்களுக்கு அளிக்கப்பட்ட தாராளமான
மானியத் திட்டம் :

தமிழ் நாட்டில் எந்தப் பகுதியிலேயாவது 1—10—1988-க்கு
மேல் நிறுவப்படும் தோல் பொருள் தொழில்களுக்கு நிரந்தர
சொத்து மதிப்பில் 20 சதவிகிதமும் அல்லது ரூபாய் 20 இலட்சம்
இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும்.

[1989 மே 3

மாநில மானியத் திட்டத்தின்கீழ் 31—1—1989 வரை ரூ. 1,748.31 இலட்சம் அளிக்க ஒப்புதல் அளித்தும், ரூபாய் 1,168.76 இலட்சம் வழங்கியும் உள்ளன. கடந்த மூன்றாண்டுகளில கொடுத்துள்ள ஒப்புதலும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | ஒப்புதல். (2) | வழங்கிய தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1985–86 .. .. .. | 233.19 | 173.13 |
| 1986–87 .. .. .. | 287.66 | 292.11 |
| 1987–88 .. .. .. | 353.94 | 281.62 |
| 1988–89 (31–1–1989 வரை) .. | 260.17 | 158.76 |
| தொடக்கத்திலிருந்து 31–1–1989-ம் நாள் வரை. | 1,746.31 | 1,168.76 |

28. நேரடி நிதி உதவி :

தவணைக் கடன் :

இந்நிறுவனம் இதுவரை ரூபாய் 27,628.15 இலட்சம் (Term loan) அளிக்க ஒப்புதலும், ரூபாய் 22,254.94 இலட்சம் தவணைக் கடனாகவும் உதவி அளித்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் கொடுக்கப்பட்ட ஒப்புதலும், வழங்கப்பட்ட தவணைக் கடன் ஆகியவற்றின் விவரங்களும் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | ஒப்புதல். (2) | வழங்கிய தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1985–86 .. .. .. | 4,879.42 | 3,166.86 |
| 1986–87 .. .. .. | 4,891.20 | 3,607.26 |
| 1987–88 .. .. .. | 3,849.85 | 3,430.84 |
| 1988–89 (31–1–1989 வரை). .. .. .. | 2,467.02 | 2,432.68 |
| தொடக்கத்திலிருந்து 31–1–1989-ம் நாள் வரை. | 27,628.15 | 22,254.94 |



29. உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா (சிப்காட்) எளிய நிபந்தனையுடன் கூடிய கடன் உட்பட :

இத்திட்டத்தின்படி இதுவரை ரூபாய் 260.82 இலட்சம் ஒப்புதல் அளித்தும், ரூபாய் 160.86 இலட்சம் வழங்கியும் உள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் கொடுக்கப்பட்ட ஒப்புதலும், வழங்கப்பட்ட தொகைகளும் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | ஒப்புதல். (2) | வழங்கிய தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1985–86 .. .. .. | 45.15 | 63.95 |
| 1986–87 .. .. .. | 5.00 | 22.30 |
| 1987–88 .. .. .. | 10.17 | 6.61 |
| 1988–89 (31–1–1989 வரை). .. .. .. | 1.00 | 7.82 |
| தொடக்கத்திலிருந்து (31–1–1989-ம் நாள் வரை). | 260.82 | 160.86 |

30. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதி உதவித் திட்டம் :

இத்திட்டத்தின்படி இதுவரை ரூபாய் 744.17 இலட்சம் ஒப்புதலும், ரூபாய் 661.61 இலட்சம் வழங்கியும் உள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் வழங்கப்பட்ட ஒப்புதலும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | ஒப்புதல். (2) | வழங்கிய தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1985–86 .. .. .. | 154.60 | 103.50 |
| 1986–87 .. .. .. | 123.20 | 169.24 |
| 1987–88 .. .. .. | 60.70 | 36.29 |
| 1988–89 (31–1–1989 வரை). .. .. .. | 11.00 | 51.07 |
| தொடக்கத்திலிருந்து (31–1–1989-ம் நாள் வரை) | 744.17 | 661.61 |

[1989 மே 3

31. இவ்வளர்ச்சி மையங்களின் விபரங்கள் பின்வருமாறு :—

சிப்காட்டால் முன்னேறிய வளர்ச்சி இணையங்களின் அட்டவணை.

| இணையத்தின் பெயர். | பரப்பு. (ஏக்கர்). | மேம்பாடு குறித்த செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| இராணிப்பேட்டை 1 .. .. | 580.73 | 176.26 |
| இராணிப்பேட்டை 2 .. .. | 113.98 | |
| ஓசூர் 1 .. .. .. | 963.18 | 439.18 |
| ஓசூர் 2 .. .. .. | 456.82 | |
| மானாமதுரை .. .. | 382.20 | 155.91 |
| கும்மிடிப்பூண்டி .. .. | 618.00 | 305.67 |
| புதுக்கோட்டை .. .. | 311.49 | 161.31 |
| கடலூர் .. ... .. | 449.54 | 318.88 |
| தூத்துக்குடி .. .. .. | 670.15 | 163.37 |

இராணிப்பேட்டை :

சிப்காட் முதன் முதலாக வட ஆற்காடு மாவட்டத்தில் இத் தொழில் இணையத்தில் 1973 ஆம் ஆண்டில் பூர்வாங்க வேலைகளைத் துவங்கியது. இது எல்லா அடிப்படை வசதி களுடன் முழுவதும் மேம்படுத்தப்பட்ட இணையமாகும். சிப்காட் இந்த இணையத்தின் 1 மற்றும் 2 நிலைகளுக்காக முறையே 29-30, 193-98 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியுள்ளது. இந்த இணையத்தின் 1 மற்றும் 2 நிலைகளில் முறையே 580.73, 113.98 ஏக்கர் நிலங்கள் விற்பனைக்குரியதாக ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து 564.71 ஏக்கர் பகுதி 1-லிருந்தும், 51.89 ஏக்கர் பகுதி 2-லிருந்தும் 84 தொழிற்சாலைகளுக்குத் தரப்பட்டுள்ளன. இதில் 70 தொழிற் சாலைகள் வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கியுள்ளன.



1989 மே 3]

ஓசூர் :

பெங்களூரிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓசூரில் சிப்காட் நிறுவனம் 1976 ஆம் ஆண்டு மற்றொரு தொழில் இணையத்தை வெற்றிகரமாக நிறுவியுள்ளது. நிலை 1-ல், 1,235.86 ஏக்கர் நிலத்தையும் நிலை 2-ல் 456.82 ஏக்கர் நிலத் தையும் சிப்காட் கையகப்படுத்தியுள்ளது. இவற்றில் 963.18 ஏக்கர் நிலம் நிலை 1-லும், 456.82 ஏக்கர் நிலம் நிலை 2-லும் தொழிற்சாலைகள் நிறுவுவதற்காக ஒதுக்க தகுதி வாய்ந்தவை. அவற்றில் 100 தொழிற் பிரிவுகளுக்கு நிலை 1-ல் 925.28 ஏக்கர் நிலமும், 1 தொழிற் பிரிவிற்கு 20 ஏக்கர் நிலம் நிலை 2-லும் ஒதுக்கப்பட்டுள்ளன. 82 தொழிற்சாலைகள் வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கியுள்ளன. எல்லா தொழிற்சாலைகளும் சேர்ந்து செய்துள்ள மொத்த முதலீடு ரூ. 150 கோடிக்கு அதிக மாகும்,

மானாமதுரை :

இவ்வளர்ச்சி மையம் மதுரையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த இணையத்திற்காக 497.07 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 382.20 ஏக்கர் நிலம் தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 153.41 ஏக்கர் நிலம் 52 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 13 தொழிற் பிரிவுகள் வணிக ரீதியில் உற்பத்தியை தொடங்கி யுள்ளன. இந்த இணையத்தில் எல்லா வசதிகளும் அளிக்கப்பட்டு இருப்பினும் இன்னும் முழுமூச்சுடன் செயல்படத் தொடங்க வில்லை. திட்டச் செலவு ரூ. 210.00 இலட்சமாகும்.

புதுக்கோட்டை :

இந்த இணையம் திருச்சி, புதுக்கோட்டை மாநில நெடுஞ் சாலையில் புதுக்கோட்டைக்கு மிக அருகில் அமைந்துள்ளது இதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலம் 412 ஏக்கர் ஆகும். 311.49 ஏக்கர் நிலம் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 32 தொழிற்பிரிவுகளுக்கு 137.43 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள் ளது. இதில் 18 தொழிற் பிரிவுகள் வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. திட்டச் செலவு ரூ. 346 இலட்சங்கள் ஆகும்.

கும்மிடிப்பூண்டி :

சென்னைக்கு அருகே 45 கி. மீ. தொலைவில் அமைந்துள்ள தால் இந்த இணையம் பல தொழிலதிபர்களை ஈர்த்துள்ளது. கையகப்படுத்தப்பட்ட 801.38 ஏக்கர் நிலத்தில் 618 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 498.28 ஏக்கர் நிலம் 149 தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 76 தொழிற் பிரிவு கள் வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. திட்டச் செலவு ரூ. 963 இலட்சமாகும்.

கடலூர் :

இந்த வேதியல் இணையம் கடலூரில் உள்ள பழைய நகருக்கு அப்பால் அமைந்துள்ளது. 516.75 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 469.54 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. 266.46 ஏக்கர் நிலம் 33 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 11 தொழிற் பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. திட்டச் செலவு ரூ. 365 இலட்சங்களாகும்.

தூத்துக்குடி :

இதற்காக சிப்காட் 1,288.00 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது. 145.22 ஏக்கர் நிலம் தென்னக இரயில்வேக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. 309 ஏக்கர் நிலம் சிதம்பரனார் மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத் தொகுதிக்காக அளிக்கப்பட்டது. மீதியுள்ள நிலம் தொழில் பிரிவுகளுக்கும், பயன்பாட்டு வசதிகளுக்கும் பயன்படுத்தப்படுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 139.29 ஏக்கர் நிலம் 19 தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 8 தொழிற் பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

32 சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் :

சென்னைக்கு அருகில் வரியில்லாத வணிக மண்டலம் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக ஒப்படை செய்யப்பட்ட 231.60 ஏக்கர் நிலத்தில் 98.81 ஏக்கர் நிலம் ஏற்றுமதி தொழில் மண்டலம் ( Bc nccc Zcne ) அமைக்க ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைப்பதற்கான முழு செலவையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும்.

சிப்காட் நிறுவனம் முகவரமைப்பாக செயல்படுகிறது. இதற்காக இந்நிறுவனம் பயன்பாட்டிற்கான மொத்தச் செலவில் ஒட்டு மொத்த சேவை கட்டணமாக 5 சதவிகித தொகையை பெற்றுக் கொள்கிறது. இந்த மண்டலத்தின் முழு வளர்ச்சி குறித்த அடிப்படை வசதிகள் அனைத்தும் அளிக்கும் பொறுப்பு சிப்காட்டிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேம்பாட்டு ஆணையாளர், சென்னை ஏற்றுமதி தொழில் மண்டல அலுவலகம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் நுட்ப நிருவாக நிதி மூலதனம் போன்ற இனங்களில் அனுமதி பெற ஒரு அதிகார குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இம் மண்டலத்தை ஏற்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு சிவில் பணிகளுக்கு ரூபாய் 1,128 இலட்சம் செலவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வேலி அமைத்தல்,



அறையுடன் கூடிய காவலர், கோபுரம் அமைத்தல், சாலைகள் அமைத்தல், ஸ்டாண்டர்டு வடிவமைப்பு தொழிற்சாலை அமைத் முடிவடைந்தன.
தல் ஆகியவை உட்பட பெரிய பணிகள்

33. நிதி விளைவுகள் :

1987–88 நிதி ஆண்டில் வருமான வரிக்கு ஒதுக்கப்படுவதற்கு முன்பு ஆனால் மற்ற எல்லாச் செலவுகளும் தேய்மானமும் போக இந்நிறுவனம் ரூ. 113.19 இலட்சம் நிகர வருமானமாக பெற்றுள்ளது. ஆனால் 1986–87 ஆம் ஆண்டில் இதே நிகர வருமானம் ரூ. 79.66 இலட்சமாக இருந்தது.

1989 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாள் வரை 1,10,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு சிப்காட் நிதி உதவி அளித்த தொழிற்சாலைகளின் மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஓசூரில் மின்னணு சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் அமைக்கவும், தோல் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை தக்க இடத்தில் ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

35. கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பில் ஒவ்வொரு திட்டத்தின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) 1987–88-ல் அடைந்த வளர்ச்சி (ஒப்புதலும் வழங்கப்பட்ட தொகையும்).

(2) 1988–89 மற்றும் 1989–90 ஆம் ஆண்டிற்கான செய்யப்போகும் பணியில் முன்திட்டம் (ஒப்புதல், வழங்கப்பட இருக்கும் தொகையும்).

1987–88 மற்றும் 1988–89 (ஜனவரி 1989 வரை)-ல் ஒப்புதல் அளித்த தொகையும் வழங்கப்பட்ட தொகையும் மற்றும் 1987–88, 1988–89 மற்றும் 1989–90-லே பணியின் முன்திட்டத்தின் விவரங்கள் :—

இணைப்பு.

(ரூபாய் இலட்சத்தில்.)

| விவரங்கள். | 1987-88ன் பட்ஜெட் மதிப்பீடு. | 1987-88 இல் அடைந்த வளர்ச்சி. | 1988-89 (ஜனவரி 1989 வரை) அடைந்த வளர்ச்சி | நிர்ணயிக்கப்பட்ட குறியீடு. 1988-89 | 1989-90 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **துவணைக் கடன் :** | | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. | 4,000 | 3,949.85 | 4,000 | 2,467.02 | 4,000 |
| வழங்கப்பட்டவை .. .. | 3,400 | 3,430.84 | 3,000 | 2,432.68 | 3,400 |
| **வட்டியில்லாத விற்பனை வரிக்கடன் :** | | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. | 800 | 869.04 | 800 | 840.98 | 800 |
| வழங்கப்பட்டவை .. .. | 800 | 826.48 | 800 | 651.61 | 800 |
| **மத்திய முதலீட்டு மானியம் (சிப்காட்) :** | | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. | 400 | 638.78 | 400 | 251.09 | 400 |
| வழங்கப்பட்டவை .. .. | 300 | 306.86 | 400 | 275.72 | 400 |
| **மாநில முதலீட்டு மானியம் :** | | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. | 300 | 353.94 | 400 | 260.17 | 400 |
| வழங்கப்பட்டவை .. .. | 300 | 281.62 | 300 | 158.76 | 400 |
| **இ.டி.பி.ஐ. ஆரம்ப மூலதன நிதி :** | | | | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. | 75 | 60.70 | 75 | 11.00 | 75 |
| வழங்கப்பட்டவை .. .. | 75 | 36.29 | 75 | 51.07 | 100 |

[1989 மே 3

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் :

தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ஆண்டுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், ஆண்டுக்கு 40,000 டன் அச்சு எழுது காகிதமும் தயாரிப்பதற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டம் காகிதபுரத்தில் ஆலை ஒன்றை நிறுவியுள்ளது. வணிக அளவிலான உற்பத்தி 18-10-1985 இல் தொடங்கப்பட்டது.

1986-87 ஆம் ஆண்டில் (30-9-1987 வரை) இந்த ஆலை 64,047 டன் செய்தித்தாள் காகிதமும், 20,964 டன் அச்சு எழுது காகிதமுமாக மொத்தம் 85,011 டன் உற்பத்தி செய்து, 94 சதவீத திறனைப் பயன்படுத்தியுள்ளது. இந்த ஆலை, 1985-86இல் ரூபாய் 55.29 இலட்சம் ஆதாயம் ஈட்டியிருக்க 1986-87 இல் ரூபாய் 103.65 இலட்சம் ரொக்க ஆதாயம் ஈட்டியுள்ளது.

1-10-1987லிருந்து 31-1-1988 வரையுள்ள காலத்தில் 69,333 டன் செய்தித்தாள் காகிதமும், 43,439 டன் அச்சு, எழுது காகிதமும் ஆக 1,12,772 டன் உற்பத்தி செய்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் தொடர்ந்து உயரளவு திறன் பயன்படுத்தப்பட்ட போதிலும், இந்த ஆலைக்கு, நிகர இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு பெருமளவு வட்டித் தொகையும், மத்திய அரசால் செய்தித்தாள் காகிதத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆதாயமில்லா விலையும் (இதில் செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்வதற்கான அடக்க விலையை உள்ளடக்கவில்லை) முக்கிய காரணங்களாகும்.

செய்தித்தாள் காகிதத்தின் விற்பனை விலையைத் திருத்தியமைககும்படி இந்நிறுவனம் மத்திய அரசைக் கேட்டுள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் தயாரிக்கப்படும் செய்தித்தாள் காகித உற்பத்திக்கான அடக்க மதிப்பை தொழில் முறை உற்பத்தி செலவு-விற்பனை விலைப் பிரிவு ஏற்கெனவே ஆய்வு செய்துள்ளது. அந்த ஆய்வின் அடிப்படையில், செய்தித்தாள் காகிதத்தின் விலையை கணிசமான அளவிற்கு அதிகரிப்பதற்காக தொழில் அடக்க மதிப்பு விலை நிர்ணயக் கழகம் பரிந்துரைத்துள்ளது எனத் தெரிகிறது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

வட்டிச் சுமையைக் குறைத்து, இந்நிறுவனம் செவ்விய வகையில் செயல்பட, நிதியுதவிக்கான செயற்குறிப்பு ஒன்றை இந்நிறுவனம் அனுப்பியது. இதற்கு முதன்மையான நிதியுதவி நிறுவனமான இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஒப்புதல்



1989 மே 3]

பெறப்பட்டது. 1987 அக்டோபர் 1 ஆம் நாளிலிருந்து நிதியுதவிக்கு செய்திறன் கொடுக்கும் வகையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில், தவணைக் கடன்கள் மீதான வட்டியை ஆண்டுக்கு 14 சதவீதத்திலிருந்து 11.5 சதவீதமாகக் குறைப்பதும் அரசால் கடன்களை இணையான தொகையளிப்பதன் மூலம் மூலதனப் பங்காக மாற்றுவதுடன் தவணைக் கடன் தொகை ரூபாய் 10.50 கோடியை மூலதனப் பங்காக மாற்றுவதும் அடங்கும். இந்நிறுவனத்தின் கடன் தொகை ரூபாய் 10.75 கோடியை மூலதனப் பங்காக மாற்றுவதற்கு தமிழ்நாடு அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. வங்கிகளும், தவணைக் கடன்கள் மீதான வட்டி வீதத்தை ஆண்டுக்கு 15 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகக் குறைக்க ஒப்புக்கொண்டுள்ளன. இந்த சலுகைகளினால், இந்நிறுவனத்தின் வட்டிச் சுமை ஆண்டுக்கு ரூபாய் 5.70 கோடி அளவிற்குக் குறையும்.

மேற்சொன்ன நிவாரணங்களினாலும், செய்தித்தாள் காகிதத்திற்கு எதிர்பார்க்கப்படும் விலை அதிகரிப்பும், அங்காடியில் அச்சு, எழுது காகிதங்களுக்கான விலை அதிகமாக இருப்பதும், இந்நிறுவனம் செவ்விய வகையில் செயல்பட்டு, 1989 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து தொடங்கும் நிதியாண்டில் நிகர ஆதாயம் ஈட்ட வழிகோலும்.

1986-87-ஆம் ஆண்டில், இந்நிறுவனம், சுமார் ரூபாய் 38 கோடி அளவிற்கு அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தியுள்ளது. 31-1-1989 வரையிலான (16 மாதங்கள்) 1988-89 நிதியாண்டில் செய்தித்தாள் உற்பத்தியின் மூலம் ரூபாய் 50 கோடி அளவிற்கு அந்நியச் செலாவணி மிச்சம் ஏற்படுத்தியுள்ளது. 1986-87-இல் இந்நிறுவனம் 2,55,000 டன் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தியுள்ளது. 31-1-1989 (16 மாதங்கள்) வரையிலான 1988-89 நிதியாண்டில் செய்தித்தாள் காகிதம், எழுது/அச்சுக் காகிதம் தயாரிப்பதற்காக 3,94,575 டன் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தியுள்ளது. இதன் மூலம், விரைவில் அழியும் தன்மையுள்ள வனவளங்களைக் கணிசமான அளவிற்குப் பாதுகாக்கும் நடைமுறைக்கு இந்நிறுவனம் தன் பங்கை ஆற்றுகிறது.

இந்நிறுவனம் சுமார் 1,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பையும், சுமார் 5,000 பேருக்கு வேறு வகையில் வேலைவாய்ப்பையும் அளித்துள்ளது. தொழில் உறவுகள் சுமுகமாக உள்ளன.

இந்நிறுவனம் தன்னுடைய ஆலையிலிருந்து பயன்படுத்தப்பட்ட கழிவு நீரைப் பயன்படுத்தி சுமார் 2,000 ஏக்கர் வறண்ட நிலத்திற்குப் பாசனம் அளிக்கும் திட்டம் ஒன்றையும் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் :

### தோற்றம் மற்றும் பணிகள் :

37. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கம்பெனிகள் சட்
டத்தின்கீழ் 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். இக்கழகம்
தமிழ்நாடு அரசால் தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றத்தை
விரைவுபடுத்தத் தொடங்கப்பட்டதாகும். நமது நாட்டில்
மாநில அளவில் தொடங்கப்பட்ட முதல் தொழில் முன்னேற்ற
நிதியுதவி நிறுவனம் இதுவேயாகும். இக்கழகம் கம்பெனிகள்
சட்டத்தின்படி நிறுவப்பட்டிருப்பினும் மாநில நிதியுதவி
கழகங்கள் சட்டம் 1951-ன் பல பிரிவுகளின்படி இயங்கி
வருவதால், தமிழ்நாட்டின் மாநில நிதியுதவிக் கழகமாகச்
செயல்பட்டு வருகிறது.

இக்கழகம் புதிய தொழில்கள் தொடங்கவும், ஏற்கெனவே
இயங்கிவரும் தொழிலகங்களை முன்னேற்றம் அடையச் செய்
யவும், நவீனமாக்கவும் கடனுதவி அளிக்கிறது. இவ்வாறு அளிக்
கப்படும் கடனுதவி சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு
நிலையான சொத்துக்கள் அதாவது தொழிற்சாலைகளுக்குத்
தேவைப்படும் நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரத் தளவாடங்
கள் வாங்குவதற்கு அளிக்கப்படுகிறது. இக்கழகத்தில் அளிக்கப்
படும் கடனுதவி ரூபாய் 5 ஆயிரம் முதல் அதிகபட்சம் ரூபாய் 60
இலட்சங்கள் வரையிலாகும்.

இக்கழகம் தொடங்கப்பட்டது முதல் 20 ஆண்டுகளில் தமி
ழகத்தில் பல பெரிய தொழில் நிறுவனங்கள், நூல் மற்றும்
துணி, சர்க்கரை, சிமெண்டு, காகிதம், இரசாயனப் பொருள்கள்,
பொறியியல் தொழில்கள் போன்றவை அமைப்பதற்குப் பெரும்
பங்கு வகித்துள்ளது. இக்கழகத்தின் பணி கடந்த 10 ஆண்டு
களில் சிறு தொழில்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் சிறந்த முறை
யில் அமைந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் ஒப்பளிப்பு
அளித்த மொத்தத் தொழில் நிறுவனங்களில் 99 சதவீதம் சிறு
தொழில் நிறுவனங்களுக்காக அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர,
மகளிர் தொழில் முனைவோர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மற்
றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும்
முன்னாள் படை வீரர்களுக்கும், முதல் முறை தொழில்
முனைவோர்களுக்கும் ஊக்கமளிக்கப்பட்டு முன்னுரிமையுடன்
கடனுதவி வழங்கப்படுகிறது.

### மூலதனமும் நிதி ஆதாரங்களும் :

38. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 50
கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் 30-6-1988 வரை
29.99 கோடியாகும். இம் மூலதனத்தில் தமிழ்நாடு அரசின் பங்கு
53.42 விழுக்காடாகும். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின்



பங்கு 45 விழுக்காடுகளாகும். மீதி பங்கினை புதுவை அரசு,
பொதுக்காப்பீட்டு நிறுவனம், கூட்டுறவு மற்றும் நாட்டுடைமை
யாக்கப்பட்ட வங்கிகள் அளித்துள்ளன.

39. இக்கழகத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களில், தமிழ்
நாடு அரசு மற்றும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவை
அளித்து வரும் மூலதனமும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி
அளித்துவரும் மறு நிதி உதவியும் தமிழ்நாடு அரசு உத்திரவாதம்
அளிக்கப்பட்டுள்ள கடனீட்டுப் பத்திரங்களும் முக்கியமானவை
யாகும். 31-3-1988-இல் இதற்கான விவரம் வருமாறு :—

| | (ரூபாய் கோடிகளில்) |
|---|---|
| 1 இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவி. | 152.00 |
| 2 கடனீட்டுப் பத்திரங்கள் .. .. .. | 101.19 |
| 3 பங்கு மூலதனம் .. .. .. .. | 29.99 |

### கழகத்தின் மண்டல/கிளை அலுவலகங்கள் :

40. சிறுதொழில் பிரிவினருக்கு, முன்னுரிமையளித்து சிறந்த
முறையில் பணியாற்றிட இக்கழகம் நீலகிரி மாவட்டம் நீங்கலாக
மற்ற எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் கிளை அலுவலகங்
களைக் கொண்டுள்ளது. மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்
களை கோவை, சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி
ஆகிய இடங்களிலும் அமைத்துள்ளது. இக்கழகத்தின் பல்வேறு
அலுவலகங்களின் நிதியுதவியளிக்கும் வரம்புகள் கீழ்க்கண்டவாறு
உள்ளன :—

| | |
|---|---|
| 1 கிளை அலுவலகங்கள் .. | ரூபாய் 3 இலட்சங்கள் வரை. |
| 2 மண்டல அலுவலகங்கள் .. | ரூபாய் 3 இலட்சங்களுக்கு மேல் 7.5 இலட்சங்கள் வரை. |
| 3 தலைமை அலுவலகம் .. | ரூபாய் 7.5 இலட்சங்களுக்கு மேல் 12.5 இலட்சங்கள் வரை. |
| 4 செயற்குழு .. .. | ரூபாய் 12.5 இலட்சங்களுக்கு மேல் ரூபாய் 25 இலட்சங்கள் வரை. |
| 5 நிர்வாகக் குழு .. .. | ரூபாய் 25 இலட்சங்களுக்கு மேல் (60 இலட்சங்கள் வரை), |

கிளை அலுவலகங்கள் ரூபாய் 12.5 இலட்சங்கள் வரை ஒப்பளிக்கப்பட்ட கடனைத் தொகுத்து வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

41. இந்நிறுவனத்தின் சாதனைகள் பின்வரும் அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) மொத்த உதவிகள் :—

(ரூபாய் இலட்சங்களில்.)

(31-12-1988 வரை)

| (1) | 31-12-1988 வரையிலான உதவி. | | 1988-89 ஆம் ஆண்டு உதவி. | |
|---|---|---|---|---|
| | எண். | தொகை. | எண். | தொகை. |
| | (2) | (3) | (4) | (5) |
| ஒப்பளிப்பு அளிக்கப்பட்டவை. | 40,559 | 77,800 | 2,858 | 10,397.3 |
| வழங்கப்பட்டவை. | .. | 57,802.65 | .. | 8,077.68 |



(ஆ) ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மற்றும் வசூல் ஆகிய விவரங்களைக் (கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு) காட்டும் புள்ளி விவரப் பட்டியல் :—

(ரூபாய் கோடிகளில்)

| நிதியாண்டு. | ஒப்பளிப்புகள். | | விநியோகங்கள். | | வசூல்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை. | வளர்ச்சி விகிதம். | தொகை. | வளர்ச்சி விகிதம். | தொகை. | வளர்ச்சி விகிதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1983-84 .. | 59.74 | 6.9 | 41.11 | 3.9 | 25.23 | 27.1 |
| 1984-85 .. | 68.11 | 14.0 | 48.70 | 18.5 | 32.38 | 28.3 |
| 1985-86 .. | 92.39 | 35.7 | 63.44 | 30.3 | 42.30 | 30.6 |
| 1986-87 .. | 101.48 | 9.8 | 68.59 | 8.1 | 51.50 | 21.7 |
| 1987-88 .. | 124.67 | 2[illegible].9 | 79.5[illegible] | 16.0 | 61.6 | 18.6 |
| 1-4-1988 முதல் 31-12-1988 வரை .. | 103.97 | .. | 60.7[illegible] | .. | 2.04 | .. |

(இ) சிறுதொழில் பிரிவினருக்கான உதவி விவரங்கள் :—

(ரூபாய் இலட்சங்களில்)

| வருடம். | எண். | தொகை. | மொத்த ஒப்பளிப்பின் விழுக்காடு. | |
|---|---|---|---|---|
| | | | எண். | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1983-84 .. .. .. .. | 3,800 | 5,353 | 99 | 90 |
| 1984-85 .. .. .. .. | 4,008 | 6,269 | 99 | 92 |
| 1985-86 .. .. .. .. | 4,398 | 8,607 | 99 | 93 |
| 1986-87 .. .. .. .. | 3,922 | 9,274 | 99 | 91 |
| 1987-88 .. .. .. .. | 4,115 | 10,909 | 99 | 88 |
| 31-3-1988 வரையிலான (நிகர ஒப்பளிப்புகள்) | 36,189 | 50,593 | .. | .. |
| 1-4-1988 முதல் 31-12-1988 வரை .. | 2,825 | 9,392 | .. | .. |





(ஈ) கழகத்தின் நிகர இலாபம் :—

கடந்த ஐந்து ஆண்டுகளில் இக்கழகத்திற்குக் கிடைத்த நிகரம் (வரி ஒதுக்கீட்டிற்குப் பின்) பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| வருடம். | தொகை. |
|---|---|
| (1) | (2) |
| 1983-84 .. .. .. .. .. | 133.16 |
| 1984-85 .. .. .. .. .. | 196.54 |
| 1985-86 .. .. .. .. .. | 195.40 |
| 1986-87 .. .. .. .. .. | 281.52 |
| 1987-88 .. .. .. .. .. | 203.04 |

(உ) பின்தங்கிய பகுதிகளுக்கான நிதி உதவி :

இந்திய மற்றும் தமிழ்நாடு அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குபவர்களுக்கு இக்கழகம் சலுகை வட்டி வீதம், தொழில் முனைவர்கள் அவர்தம் பங்குத் தொகைக் கடனைத் திரும்பச் செலுத்தும் காலம் இவற்றில் பல்வேறு சலுகைகளை அளித்து நிதி உதவி செய்கிறது. பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் தொடங்கியோருக்கு 31-3-1988இல் முடிவுற்ற நிதியாண்டில் வழங்கப்பட்ட நிதியுதவி ரூ. 3,287 இலட்சத்திலிருந்து ரூ. 4,968 இலட்சங்கட்கு அதிகரிக்கப்பட்டது. 1-4-1988 முதல் 31-12-1988 வரை 1,247 விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 3,475.02 இலட்சம் அனுமதித்தது.

42. நடைமுறையிலுள்ள திட்டங்கள் :

இக்கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

1. சிறுதொழில்கள், 2. நடுத்தரத் தொழில்கள், 3. தொழில்நுட்பப் பணியாளர்கள், 4. கலபக் கடன் மற்றும் ஆதார மூலதனக் கடன், 5. மின் உற்பத்தி செய்யும் கருவிகள் (ஜெனரேட்டர்கள்) வாங்க, 6. தங்கும் விடுதிகள் (ஹோட்டல்கள்) கட்ட, 7. பதிவு பெற்ற மருத்துவர்கள், 8. போக்குவரத்து வாகனக் கடன், 9. ஒருங்கிணைந்த கடனுதவி, 10. மீன்பிடி படகுகள், 11. சிறு மருத்துவ மனைகள், 12. நவீனப்படுத்தும் திட்டம், 13. சாதன மறு உதவித் திட்டம், 14. நலிவுற்ற தொழில்களின் புனரமைப்புத் திட்டம்.

43. மானிய உதவி :

இந்திய மற்றும் மாநில அரசுகள் அறிவித்துள்ள பின் தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் தொழில்களின் நிலையான சொத்துக்களின் மீது 15 சதவீதம் மற்றும் 10 சதவீதம் மானிய உதவிகளை மத்திய, மாநில அரசிடமிருந்து பெறுவதற்கு முன்னரே தன்னிடமுள்ள நிதி ஆதாரங்களிலிருந்து இக்கழகம் மானிய நிதியுதவி அளித்து தொழில் முனைவோர் விரைவில் தொழில் திட்டங்களை நிறைவேற்ற உதவி புரிந்து வருகிறது. 31-12-1988 இல் முடிவுற்ற நிதியாண்டில் இக்கழகம் தமிழ்நாடு அரசின் மானிய உதவியாக ரூபாய் 800.00 இலட்சமும் மத்திய அரசின் மானிய உதவியாக ரூபாய் 1,310.00 இலட்சமும் வழங்கியுள்ளது.

44. இந்நிறுவனத்தினால் கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன :

அ) சுலபக் கடன் :

சுலபக் கடன் திட்டத்தின் கீழ் தாமே சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்குத் தேவையான மூலதனமில்லாத தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு ரூபாய் நான்கு இலட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. நான்கு இலட்சத்திற்கு மேல் தேவைப்படும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு ஆதார முதலீட்டுத் திட்டத்தின் கீழ் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடம் இருந்து நிதியுதவி பெற்று வழங்கப்படுகிறது. 31-3-1988இல் முடிவுற்ற நிதியாண்டில் சுலபக் கடன் திட்டத்தின் கீழ் 2,231 நிறுவனங்களுக்கு ரூபாய் 785 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஆ) மின் உற்பத்தி செய்யும் கருவி (ஜெனரேட்டர்) வாங்க நிதியுதவி :

மின்வெட்டு காரணமாக உற்பத்தி பாதிக்காமல் இருக்க தொழிலகங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மின் உற்பத்தி செய்யும் கருவி (ஜெனரேட்டர்) வாங்குவதற்கு விரைவாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. 31-12-1988 வரை இத்திட்டத்தின் கீழ் 1,240 நிறுவனங்களுக்கு ரூபாய் 1,221 இலட்சங்கள் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

இ) தொழில் நுட்பப் பணியாளர்களுக்கான திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் பொறியியல் பட்டதாரிகளுக்கு மட்டுமல்லாமல் அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற தொழில் நுட்பப பணியாளர்களுக்கும் தாராளமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. 31-12-1988 முடிய இக்கழகம் 680 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 990 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.



(ஈ) போக்குவரத்து வாகனத் திட்டம் :

சுற்றுலா ஊர்திகள், சரக்கு ஏற்றிச் செல்ல லாரிகள் மற்றும் வாகனங்கள் வாங்குவதற்கு ஓட்டுநர்களுக்கும் ஓட்டுநர் அல்லாதவர்களுக்கும் இக்கழகம் நிதியுதவி அளிக்கிறது. 31-12-1988 முடிய இக்கழகம் 9,502 விண்ணப்பதாரர்களுக்கு ரூபாய் 11,153 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

(உ) பதிவுபெற்ற மருத்துவர்களுக்கு நிதியுதவி :

பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு இக்கழகம் ரூபாய் 15 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கிறது. கிராமப்புறங்களிலும் முதல் தர நகராட்சிகள் உள்ளிட்ட பகுதிகளிலும் மருத்துவமனைகள் தொடங்குவதற்கு ரூபாய் 5 இலட்சம் வரையிலும் மற்றும் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் நவீனமான மருத்துவ மனைகள் தொடங்குவதற்கு ரூபாய் 15 இலட்சம் வரையிலும் இக்கழகம் நிதியுதவி அளிக்கிறது. 31-12-1988 முடிய 413 விண்ணப்பதாரர்களுக்கு ரூபாய் 916 இலட்சம் வரையில் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

(ஊ) நலிவுற்ற தொழில்களுக்கு புத்துயிர் அளிக்கும் உதவித் திட்டத்தின் கீழ் 24 நலிவுற்ற தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்கு ரூபாய் 142 இலட்சம் வரை 1987-88 நிதியாண்டில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு புத்துயிர் அளிக்கும் தமிழக அரசின் முனைப்புத் திட்டத்தின்கீழ் 422 தொழில் நிறுவனங்களுக்கு 31-3-1988 முடிய ரூபாய் 2,348 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

(எ) சிறிய மருத்துவமனைகள் மருத்துவ இல்லங்கள் :

பதிவு பெற்ற தனிப்பட்ட மருத்துவர்களுக்கு ரூபாய் 15 லட்சம் வரை அளிக்கப்படுவது தவிர, சிறு தனியார்/பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்களாக அமைக்கப்படும் சிறு மருத்துவமனைகளுக்கு பின்வரும் கூறுகளை அவை நிறைவு செய்தால் அவற்றிற்கும் உதவி வழங்கப்படும்.

(அ) 20-க்கு மேற்பட்டு, 50-க்குட்பட்ட படுக்கைகள் கொண்டு நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை வசதி கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பெறும் கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய அளவிற்கு வருவாய் கொண்டதாய் இருக்கவேண்டும்.

(இ) மருத்துவ வல்லுநர்களது சேவை கிடைப்பது உறுதிப் படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

[1989 மே 3.

(ஓ) குறைந்த வருவாய் கொண்ட குடும்பத்தினருக்கு.
சமூக அடிப்படையில் வசதிகளை அளித்திட முன்வர வேண்டும்

(ஐ) பழங்குடியினர்/தாழ்த்தப்பட்டோர்/உடல் ஊனமுற்றோர் நிதியுதவி.

இத்திட்டத்தி கீழ் தொழில் முனைவோர்களுக்கு தாராள
மாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. தொழில் தொடங்குவதற்குத்
தேவையான நிதி ஆதாரத்தில் தொழில் முனைவோர் 10
விழுக்காடு தங்கள் பங்காகச் செலுத்தினால் போதுமானதாகும்.
ரூபாய் 50,000 வரை பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட
டோர் தொழில் முனைவோர்களுக்கு 10 விழுக்காடு வட்டி
விகிதத்தில் கடனுதவி அளிக்கப்படுகிறது.

(ஏ) மகளிர் தொழில் வினைஞர்களுக்கான நிதியுதவி.

இத்திட்டத்தின் கீழ் மகளிர் தொழில் முனைவோர்கள்
தங்கள் தொழில் திட்டத்தின் மொத்த தொகையில் தங்கள்
பங்காக 15 விழுக்காடு செலுத்தினால் போதுமானதாகும்.
12.5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி அளிக்கப்படு
கிறது. இத்திட்டத்தின் கீழ் 5 விண்ணப்பதாரர்களுக்கு ரூபாய்
38.40 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

(ஓ) முன்னாள் படை வீரர்களுக்கான நிதியுதவி (செம்பேக்ஸ்)

இத்திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்களுக்கு கூட்டு
றவு அமைப்பின்கீழ் அல்லது கம்பெனி அமைப்பின் கீழ்
தொடங்கப்படும் தொழில் திட்டங்களுக்கு 10 முதல் 12
விழுக்காடு வட்டி விகிதத்தில் 10 விழுக்காடு தொழில் முனை
வோரின் பங்காகப் பெறப்பட்டு ரூபாய் 12 இலட்சம் வரை
கடனுதவி அளிக்கப்படுகிறது.

(ஔ) தரக்கட்டுப்பாடு திட்டங்களுக்கு கடனுதவி.

இத்திட்டத்தின் கீழ் தரக்கட்டுப்பாடு வசதிகளுக்கான
தளவாடங்கள் வாங்கும் ஒவ்வொரு திட்டங்களுக்கும் ரூபாய்
7.5 இலட்சம் கடனுதவி ஆண்டொன்றுக்கு 11.5 விழுக்காடு
சலுகை வட்டி விகிதத்தில் அளிக்கப்படுகிறது.



1989 மே 3]

45. புதிய திட்டங்கள்.

(அ) நலிவுற்ற தொழில்களுக்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்தின்
படி புதிய தொடக்க உதவித்தொகை அளிக்கும் திட்டம்.

தமிழ்நாட்டில் மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட தொடக்க
உதவித்தொகை அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.
தற்போது இத்திட்டத்தின் கீழ் ரூ. 50,000 வரைதான் நிதியுதவி
செய்யவியலும். நலிவுற்ற செயற்படக்கூடிய சிறுதொழில் நிறு
வனங்களுக்கு தொடக்க உதவித் தேவை ரூ. 50,000-க்கு மேல்
தேவைப்படுமானால் அதற்காக இக்கழகம் ''புதிய தொடக்க
உதவித் தொகை திட்டம்'' என ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.
இத் திட்டத்தின்கீழ் உச்ச வரம்பாக ரூ. 5 லட்சம் வரை
தொடர்ந்து பண உதவி சிறு தொழிலுக்கு வழங்கப்படும்.

இந்தியத் தொழில் மறு சீரமைப்பு வங்கியிடமிருந்து பெறப்
படும் ரூ. 50 இலட்சம் கடன் தொகை இந்திய தொழில்
வளர்ச்சி வங்கியின் வரையறை முறைகளுக்கு ஏற்ப உரிய
வகையில் வழங்கப்படும். இந்த கடன் உதவிக்கு தமிழ்நாடு
அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. மேலும் இத்திட்டத்
திற்கு இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் பொது இசைவும்
பெறப்பட்டுள்ளது.

(ஆ) ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன்.

இந்நிறுவனம் அதன் கடந்த கால சிறப்பான செயல்பாட்டின்
அடிப்படையில் நாட்டில் அதன் நிதி உதவி பெறத் தகுதி பெற்ற
எட்டு மாநில நிதி நிறுவனங்களில் ஒன்றாக ஆசிய அபிவிருத்தி
வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழில்
அபிவிருத்தி வங்கியின் மூலம் செயல்படுத்தப்படும் இந்த
ஏற்பாட்டின் மூலம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுப்பினர்
நாடுகளிலிருந்து இயந்திர சாதனங்களைப் பெறுவதற்குரிய
கடன் உதவி புதிய தொழில்களுக்கும் விரிவாக்கம் செய்திடும்
தொழில்களுக்கும் கிடைத்திடும். இத்திட்டம், 1988-89 முதல்
செயல்பாட்டில் உள்ளது.

(இ) தவணைக் கடன் மற்றும் நடைமுறை மூலதனக் கடன்
ஒருங்கிணைந்த ஒப்பளிப்பு நிதியுதவி.

இத்திட்டத்தின் கீழ் ரூ. 5 இலட்சத்திற்குட்பட்ட தொழில்
திட்டங்களுக்கு தவணை கடன் முறையிலும் நடைமுறை
மூலதனத்திற்காகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதில்
நடைமுறை மூலதனத்திற்கு ஒதுக்கப்படும் அதிகபட்சத்
தொகை ரூபாய் 2.5 இலட்சம் ஆகும். இக்கடன் தொகையை
10 ஆண்டுகளில் திருப்பித்தரவேண்டும். இத்திட்டம் இவ்வாண்
டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

46. பயிற்சி நிலையம்.

இக் கழகத்தில் பணியாற்றும் அதிகாரிகளின் [illegible] செயல் பாட்டுத் திறமைகளை உயர்த்தவும் அத்தகைய உயர்வு தொடர்ந்து அளிக்கவும் வழி செய்யும் வகையில் இக் கழகத்தின் தலைமையகத்தில் இந்த வாய்ப்பு தொடர்ந்து கிடைக்கத் தக்க வகையில் சிறப்பு அம்சங்களுடன் ஒரு பயிற்சி நிலையம் உருவாக் கப்பட்டுள்ளது.

47. முடிவுரை.

தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்தை மேலும் விரைவு படுத்தவும் தொழில் முனைவோர்களுக்கு, குறிப்பாக சிறு தொழில் முனைவோர்களுக்கு சிறப்பான பணியாற்றிடவும் அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்திடவும் மேலும் அவர்கள் தொழில் திட்டங்களைத் தாமதம் இன்றி விரைவில் நிறைவேற்றிடவும் தற்போது இக்கழகத்தின் தலைமை அலுவலகத்தில் ஓர் உதவி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதில் [illegible] தடைகளை நீக்குவதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

சிறு தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் வகையில் விண்ணப்பப் படிவங்கள் சீரமைத்து எளிமைப்படுத்தப்பட் டுள்ளன. கடன்களை வழங்குவதிலும் விநியோகம் செய்வதிலும் வழிமுறைகள் சீரமைக்கப்பட்டு எளிதாக்கப்பட்டுள்ளன. இதனால் தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் திட்டங் களை விரைவில் நிறைவேற்றிட ஏதுவாகிறது.

இக்கழகத்தின் நடப்பு ஆண்டு சாதனைகள் (1-4-1988 முதல் 31-12-1988 வரை) கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

இணைப்பு.

நடப்பு ஆண்டு சாதனைகளின் விவரம் 1-4-1988 முதல் 31-12-1988 வரை.

(ரூபாய் இலட்சத்தில்)

| | எண். | தொகை. |
|---|---|---|
| 1. மொத்த உதவிகள் : | | |
| ஒப்பளிக்கப்பட்டவை | 2,858 | 10,[illegible]7.57 |
| சிறு தொழில்களுக்கு உதவி | 2,825 | 9,391.54 |
| நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | 33 | 1,005.[illegible] |
| பின்தங்கிய மாநிலங்கள் | 1 [illegible]47 | 3,475.0[illegible] |







(ரூபாய் இலட்சத்தில்)

| | எண். | தொகை. |
|---|---|---|
| 2. சிறப்பு திட்டங்கள். | 5 | 15.50 |
| தொழில் நுட்பப் பணியாளர்களுக் கான கடன். | [illegible] | 1,[illegible].[illegible] |
| போக்குவரத்து வாகனங்கள் | 11 | 9.87 |
| மின்உற்பத்தி செய்யும் கருவிகள். | 48 | 250.69 |
| பதிவு பெற்ற மருத்துவர்கள் .. | | |
| 3. பொது : | 16,500 | .. |
| வேலை வாய்ப்புகள் .. .. | .. | 6,077.05 |
| விநியோகம் .. .. .. | .. | 4,204.45 |
| வசூல் .. .. .. | .. | 4,240.15 |
| மறு நிதியுதவி (இந்திய தொழில் வங்கியிடமிருந்து). | | |

தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்.

48. தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசால் நிறுவப்பட்டது. மிகவும் பின்தங்கிய இட மாகவும், வேறு தொழிற்சாலைகளோ, [illegible] அல்லது [illegible] வேலை வாய்ப்பு அளிக்க இயலாத கிராமங் களில் வாழும் மக்களுக்கு உப்பு உற்பத்தித் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சமூகப் பொருளாதார மேம் பாட்டுத் திட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் [illegible] கடற்கரையின் ஓரமாக உள்ள இடங்களில் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப் பட்ட மூலதனம், செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. [illegible] இலட்சம், ரூ. 180 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் கடல் நீரிலிருந்து உணவு உப்பு, தொழிற்சாலை களுக்கு உகந்த உப்பு மற்றும் எல்லா வகையான உப்புக் களுக்கு [illegible] இரசாயனப் பொருட்கள், தயாரிப்பதுடன் உப்பைச் சார்ந்த உப பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதாகும். இந்நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கம் என்னுமிடத்தில் மாரியூர் வாலிநோக்கம் உப்புத் திட்டத்தையும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தம்பிக்கோட்டை என்னுமிடத்தில் சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

2. இந்நிறுவனம் முழு வளர்ச்சி அடைந்த நிலையில் 500 முதல் 500 பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதுடன், 1,500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் அளிக்கும். தற்போது,

இத்திட்டத்தில் 230 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை அளிப்பதுடன் 250 பேருக்கு பருவ கால வேலை வாய்ப்பும் அளித்து வருகிறது. இத்திட்டத்தில் இப்பொழுது 50 அலுவலர்கள் (staff) நிரந்தரமாகப் பணி புரிகிறார்கள்.

49. மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டமும் சர்தார் வேதரத்னம் உப்புத் திட்டமும்.

மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டு திட்டத்தின் மொத்தப் பரப்பளவான 5,617.66 ஏக்கராக்களில் இதுவரை 2,137 ஏக்கராக்கள் வாலிநோக்கத்தில் இதுவரை மேம்படுத்தப்பட்டுவிட்டன தம்பிக்கோட்டையில் உள்ள சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டத்தில் உள்ள மொத்தப் பரப்பளவான 2,875.68 ஏக்கராக்களில் 400 ஏக்கராக்கள் மேம்படுத்தப்பட்டு விட்டன. 1988-ஆம் ஆண்டு மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட 25,000 டன்களுக்கெதிராக 11,767 டன்களே உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்விதமான மிகக்குறைந்த உற்பத்திக்குக் காரணம் தொழிலாளர்களின் மெத்தன நடவடிக்கையும், இவ்வாண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தமுமேயாகும். சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டத்தில் 9,000 டன்களாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கெதிராக 5,500 டன்களே உற்பத்தி செய்யப்பட்டன. இதற்குக் காரணம் உற்பத்திப் பருவத்தில் இங்கு ஏற்பட்ட இடைவிடாத மழையும், வெள்ளமுமே ஆகும். இவ்வாண்டின் ஆரம்ப இருப்புச் சரக்கு 64,619 டன்களாகும். இவ்வாண்டின் விற்பனை 32,029 டன்களாகும்.

50. மெக்னீஷிய உலோக திட்டத்திற்கான உப்பு கழிவுநீர்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமானது தமிழ்நாடு மெக்னீஷிய உலோகத் திட்டம் ஒன்றை ரூ.915 இலட்சம் செலவில் மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டத்திற்கு அருகாமையில் ஆரம்பித்து உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான உப்புக் கழிவு நீரை ஆண்டுக்கு 12,000 டன் முதல் 18,000 டன்கள் வரை வழங்குவதற்கு தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. இது இத்திட்டத்திற்குத் தேவையான முக்கிய மூலப்பொருளாகும். இத்திட்டத்திற்குத் தேவையான உப்புக் கழிவு நீரைத் தேக்கி வைப்பதற்குரிய தொட்டியை கட்டத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

51. இரும்பு ஊட்டச்சத்து நிறைந்த திட்டம்.

இரத்தச் சோகை நோய் வரக் காரணம் இரும்பு ஊட்டச் சத்துக் குறைவேயாகும். இந்நோய், குழந்தைகள், தாய்மார்கள் ஆகியோருக்கு 25 முதல் 75 சதவீதம் வரை பாதிக்கு



சீர்கேடாகும். இதை நிவர்த்தி
கூடிய ஒரு பொது உடல்நலச் சத்தை அதிகம் சேர்க்க
செய்ய, சாப்பிடும் உணவில் இரும்புச் ஊட்டச் சத்து உப்பைச்
வேண்டும். இவ்வாறு, செய்ய இரும்பு தயாரிக்கத் தமிழ்நாடு
சேர்க்க வேண்டும். இவ்வுப்பைத் நிறுவனமும் தேர்ந்
நிறுவனத்தை மத்திய அரசும் யூனிசெப் கட்டிடக் கட்டுமானப்
தெடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான அரசு வழங்கியுள்ளது.
பணிகளுக்காக ரூ. 6.50 இலட்சம் மத்திய இலட்சம் செலவில்
இதற்காக யூனிசெப் நிறுவனம் ரூ. 11.97 இதுவரை இத்திட்டத்
இயந்திரக் கருவிகளை வழங்கியுள்ளது. சோதனை
திற்காக ரூ. 18.47 இலட்சம் செலவழித்துள்ளது. ஆண்டுக்கு 15,000
முறையில் உப்பு தயார் செய்யப்பட்டுள்ளது. தீர்மானிக்கப்பட்டுள்ளது.
டன் உப்பு உற்பத்தி செய்ய இயந்திரத்தை இன்னும்
யூனிசெப் நிறுவனம் 'டிரையர்' என்னும் மானியம் குறித்தும்
வழங்கவில்லை. மத்திய அரசு வழங்கும் எல்லாப் பிரச்சினை
இன்னும் முடிவு எடுக்கவில்லை. மேற்கூறிய இந்நிறுவனம்
களும் நீக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டவுடன்
உற்பத்தியினைத் தொடங்கும்.

52. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், சேலம்.

சுமார் 578.92 ஏக்கர் பரப்புள்ள சேலத்திலுள்ள அரசு
மேக்னசைட் சுரங்கம் 1978 ஆம் ஆண்டு வரை ஒரு தனியார்
நிறுவனமான சேலம் மேக்னசைட் பிரைவேட் லிமிடெட்டிற்கு
குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மேற்சொன்ன குத்தகை
காலம் முடிவடைந்தவுடன், மேற்சொன்ன சுரங்கத்தை அரசே
ஏற்று நடத்த முடிவு செய்து, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்
என்ற புதிய நிறுவனத்தை ஏற்படுத்தியது. தனியார் நிறுவனத்
தின் தொழிற்சாலையை தமிழ்நாடு மேக்னசைட் ப்ராடக்டஸ்
நிறுவனம் என்ற இணை நிறுவனம் 1982 வரை நடத்தி வந்தது.
மேற்படி இணை நிறுவனத்தின் ஒப்பந்த காலம் முடிவடைந்த
வுடன் மேற்படி இணை நிறுவனம் தற்போது தமிழ்நாடு
மேக்னசைட் நிறுவனத்திற்கு முழுதும் சொந்தமான நிறுவன
மாகியுள்ளது.

அரசின் முடிவின்படி தனியார் நிறுவனத்தில் பணியாற்றிய
பணியாளர்களின் குறைகளைத் தீர்க்க தமிழ்நாடு மேக்னசைட்
நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மேக்னசைட் ப்ராடக்ட்ஸ் நிறு
வனம் ஆகியவைகளில் அந்த தனியார் நிறுவனத்தில் தொடர்ந்து
பணியாற்றிய மற்றும் நிரந்தரமான பணியாளர்களை
பணிக்கு அமர்த்தி தனியார் நிறுவனம் கொடுப்பதாக ஒப்புக்
கொண்ட ரூ. 54 இலட்சத்தின் அடிப்படையில் அவர்களுடைய
பணிக்கொடை தரவேண்டிய பொறுப்பினையும் இந்நிறுவனம்
ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி ரூ. 54 இலட்சத்தில் ரூ. 27
இலட்சம் ஏற்கெனவே பெறப்பட்டு மீதித் தொகை இன்னும்
பெறப்படாத நிலையில் உள்ளது.

53. சுரங்க வேலைகள் :

நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து சுரங்க வேலைகள் திருப்திகரமாக நடந்து வருகின்றன. உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| ஆண்டு. | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|
| | குறியீடு இலக்கு. | எட்டியுள்ள சாதனை. | குறியீடு இலக்கு. | எட்டியுள்ள சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | டன். | டன். | டன். | டன். |
| 1979–80 .. .. .. .. | .. | 1,14,857 | .. | 1,05,079 |
| 1980–81 .. .. .. .. | 1,15,000 | 1,13,454 | 1,15,000 | 1,20,398 |
| 1981–82 .. .. .. .. | 1,27,000 | 1,32,993 | 1,26,000 | 1,27,846 |
| 1982–83 .. .. .. .. | 1,13,000 | 1,18,626 | 1,07,500 | 1,10,147 |
| 1983–84 .. .. .. .. | 1,20,000 | 1,17,916 | 1,07,000 | 1,07,818 |
| 1984–85 .. .. .. .. | 1,10,000 | 1,09,845 | 1,03,000 | 1,02,474 |
| 1985–86 .. .. .. .. | 1,15,000 | 1,33,[illegible] | 1,10,000 | 1,26,172 |
| 1986–87 .. .. .. .. | 1,70,000 | 1,44,[illegible] | 1,40,000 | 1,18,540 |
| 1987–88 .. .. .. .. | 1,20,000 | 1,19,[illegible] | 97,000 | 1,09,[illegible] |
| 1988–89 .. .. .. .. (1989 சனவரி முடிய) | 1,19,167 | 1,18,142 | 1,02,642 | 1,02,500 |





54. சுழலும் சூளைத் திட்டம்.

அருகிலுள்ள தனியார் தொழிற்சாலைகள் இந்நிறுவனத்திற்குட்பட்டது. கச்சா மேக்னசைட் வாங்கி அவற்றை நடுத்தர/இறுதி பொருளாக மாற்றி அதன் மூலம் நிறைய இலாபம் ஈட்டியதால், நிறுவனமே மேற்படி நடுத்தர/இறுதி பொருளைத் தயாரித்து அதன் மூலம் தனியார் நிறுவனங்களுக்கு செல்லும் அதிக இலாபத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு ஒரு சுழலும் சூளைத் திட்டத்தினை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது. அதன்படி, சுமார் 8.57 கோடி ரூபாய் செலவில் ஒரு சுழலும் சூளை நிறுவப்பட்டு, அது சென்ற 1985 டிசம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது. மேற்படி சூளையின் புகைபோக்கியில் 1986 ஜூலை செப்டம்பர் மாதங்களில் பழுது ஏற்பட்ட போதிலும் அது உடனே பழுது பார்க்கப்பட்டு, தற்போது சூளை நிறுவப்பட்ட உற்பத்தித் திறனைக் காட்டிலும் அதிக உற்பத்தியைக் கொடுத்து திருப்திகரமாக செயல்பட்டு வருகிறது. சூளை தொடங்கப்பட்டதில் இருந்து 1989 சனவரி வரை உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (டன்னில்). | | |
| 1985–86 .. .. .. .. | 2,000 | 2,611 | 2,000 | 369 |
| 1986–87 .. .. .. .. | 27,000 | 18,385 | 18,000 | 18,972 |
| 1987–88 .. .. .. .. | 30,000 | 30,362 | 30,000 | 30,423 |
| 1988–89 .. .. .. .. (1989 சனவரி முடிய) | 25,000 | 27,740 | 25,000 | 26,890 |

**55. நிறுவனத்தின் நிதிநிலை நடைமுறை விளைவுகள்.**

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் நிறுவப்பட்டது முதற்கொண்டு வருமான வரி சட்டத்தின்படி சுழலும் சூளைக்கு அதிக தேய்மானம் கணக்கிடப்பட்டமையால் 1985–86, 1986–87 மற்றும் 1987–88 ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பினைத் தவிர இதர ஆண்டுகளில் நல்ல இலாபம் ஈட்டியுள்ளது.

ஈட்டியுள்ள இலாபம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ரொக்க ஆதாயம். | தேய்மானம். | நிகர ஆதாயம். | வரிக்கான ஒதுக்கீடு. | வரிக்கு ஆதாயம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1979–80 .. .. | 71.40 | 36.05 | 35.35 | 6.83 | 28.52 |
| 1980–81 .. .. | 41.78 | 29.65 | 12.13 | 4.80 | 7.33 |
| 1981–82 .. .. | 72.86 | 40.52 | 32.34 | 8.20 | 24.14 |
| 1982–83 .. .. | 43.89 | 25.31 | 18.58 | 6.10 | 12.48 |
| 1983–84 .. .. | 90.42 | 58.10 | 32.32 | 7.50 | 24.82 |
| 1984–85 .. .. | 126.63 | 84.81 | 41.92 | 7.35 | 34.57 |
| 1985–86 .. .. | 130.41 | 170.79 | (—) 40.38 | .. | (—) 40.38 |
| 1986–87 .. .. | 93.33 | 239.07 | (—) 145.74 | .. | (—) 145.74 |
| 1987–88 .. .. | 217.64 | 239.33 | (—) 5.69 | .. | (—) 5.69 |
| மொத்தம் .. | 888.36 | 907.53 | (—) 19.17 | 40.78 | (—) 59.95 |



## எதிர்கால திட்டங்கள்.

**56. வேதியியல் தரம் பிரிக்கும் திட்டம்.**

முழுவதும் எரியூட்டப்பட்ட மேக்னசைட் இரும்புத் தொழிற்சாலைகளுக்கு மிகவும் தேவையாக உள்ளது. உலகச் சந்தையில் நல்ல தரம் வாய்ந்த எரியூட்டப்பட்ட மேக்னசைட் கிடைப்பதால் தற்பொழுது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முழுவதும் எரியூட்டப்பட்ட மேக்னசைட் விற்பனை செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. தற்பொழுது இரும்பு தொழிற்சாலைகளில் நவீன தொழில் நுட்பங்கள் பின்பற்றப்படுவதால், நல்ல தரம் வாய்ந்த முழுவதும் எரியூட்டப்பட்ட மேக்னசைட் தேவையாக உள்ளது. தற்போதுள்ள உற்பத்தி முறைகளினால் சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் கச்சா மேக்னசைட்டில் கழிவுப் பொருள் அதிகமாக உள்ளது.

கச்சா மேக்னசைட்டின் தரத்தினை உயர்த்த வேதியியல் தரம் பிரிக்கும் திட்டத்தினை நிறுவ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், இந்திய அரசிடம் இருந்து பெற்ற ஒப்புதல் ஆணை தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான தொழில் நுட்ப முறையை சுவிட்சர்லாந்தில் உள்ள சுல்சர் பிரதர்ஸ் லிமிடெட்டால் வழங்கப்படுவதற்கான ஒப்பந்தம் 1984 ஜனவரியில் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் அக்டோபர் 1984-இல் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்பு தொழில் நுட்பக் கட்டணத் தொகையில் இரண்டு தவணையாக மொத்தம் ரூ. 159 இலட்சம் வெளிநாட்டு நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக, கல்கத்தாவிலுள்ள எம். என். தஸ்தூர் மற்றும் கம்பெனி லிமிடெட்டால் விரிவான தொழில் திட்ட அறிக்கை தயாரிக்கவும், பொறியியல் தேவைகளுக்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். சுல்சர் பிரதர்சிடம் தொழில் நுட்பம் பெறப்பட்டு, தஸ்தூர் மற்றும் கம்பெனியினரால் விரிவாகத் தொழில் திட்டம் தயாரிக்கப்பட்டு, மேற்படி திட்டம் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடம் நிதியுதவி பெற சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 105 கோடியாகும்.

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| நிதி வாயில்கள் : | |
| அரசின் மூலதனப் பங்குகள் .. .. .. | 42 |
| இந்தியத் தொழில் வளர்ச்சி மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து கடனாக. | 63 |
| மொத்தம் .. | 105 |

இத்திட்டத்திற்கான மொத்தத் தொகைக்கும் தமிழக அரசு
ஒப்புதல் அளித்துள்ளது. மூலதனப் பங்குக்கான நிதிவாயில்கள்
இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இந்நிலையில் முக்கிய இயந்
திரங்களைப் பெறுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
தமிழக அரசிடமிருந்து ரூபாய் ஏழு கோடியும், தமிழ்நாடு போக்கு
வரத்து வளர்ச்சிக் கழகத்திடம் நிதியாக ரூ. 2 கோடியும் பெறப்
பட்டுள்ளது. மேற்கண்ட தொகையில் ரூ. 7.25 கோடி செலவு
செய்ததன் விவரங்கள் கீழ்வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| தொழில் நுட்ப ஆலோசனைக்காக திருவாளர்கள் கல்சர் பிரதர்சிடம் .. .. .. | 1.59 |
| ஆலோசனைக்காக திருவாளர்கள் எம். என். தஸ்தூர் அண்ட் கம்பெனி லிமிடெட் அவர்களிடம் .. .. .. .. .. | 0.86 |
| நிலம் வாங்கிய செலவு .. .. .. .. | 0.77 |
| ஆரம்ப ஏற்பாடுகளுக்கான செலவு .. .. | 0.50 |
| இயந்திரங்களை நமக்கு அளிப்பவர்களுக்கு முன் பணம் கொடுத்தது .. .. .. .. | 3.53 |
| மொத்தம் .. | 7.25 |

மீதித் தொகை, குளைக் கற்கள் தயாரிக்கும் திட்டத்திற்குக்
கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்பட்டது :—

| | (ரூபாய் கோடியில்). |
|---|---|
| தொழில் நுட்ப ஆலோசனைக்காக திருவாளர்கள் ரிப்ரேக்டரீஸ் அண்ட் கன்சல்ட்டிங் இன்ஜினிய ரிங், ஆஸ்திரியாவிடம் .. .. .. | 1.14 |
| ஆரம்ப ஏற்பாடுகளுக்கான செலவு .. .. | 0.10 |
| | 1.24 |

மைய அரசின் இரும்பு எஃகு ஆணையம் இந்நிறுவனத்தின்
பங்குகள் பெற்று கூட்டு நிறுவனமாக இதனை நடத்துதல் பற்றி
பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.



**57. குளைக் கற்கள் தயாரிக்கும் திட்டம்.**

நமது தரம் பிரிக்கும் தொழிற்சாலையில் கிடைக்கும் உயர்
தர லிஸ்டர்டு மேக்னிசியா மற்றும் சுழற்சூளை தொழிற்சாலை
யில் உற்பத்தியாகும் உயர்தர முழு எரியூட்டம் பெற்ற மேக்ன
சைட் ஆகியவற்றைக் கொண்டு உயர்தர வெப்பந் தாங்கிக்
கற்கள் தயாரிக்கும் திட்டத்தை இந்நிறுவனம் செயலாக்க
உள்ளது. தற்சமயம் மதிப்பு மிகுந்த இவ்வகை உயர்தர வெப்பந்
தாங்கிக் கற்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு
வருகின்றன. இத்திட்டத்திற்காகத் திருவாளர்கள் ரிப்ராக்டரி
கன்சல்ட்டன்ஸ் இன்ஜினியரிங், ஜி.எம்.பி.எச். அவர்களுடன்
தொழில்நுட்ப ஒப்பந்தம் செய்வதற்கான முடிவை இந்திய அரசு
ஏற்கெனவே அங்கீகரித்துள்ளது. இந்திய அரசுக்கு உரிமையான
திருவாளர்கள் மெட்டலர்ஜிகல் மற்றும் இன்ஜினியரிங்
கன்சல்ட்ன்ஸ் (இந்தியா) லிட்., ராஞ்சி, அவர்களை இத்திட்டத்
தின் செயலாக்கத்திற்கான ஆலோசகர்களாக நியமிக்கப்பட்
டுள்ளன. அத்தொழில் நுட்ப விவரங்களை அடிப்படையாகக்
கொண்டு தயாரிக்கப்படும் விரிவாக்கத் திட்ட அறிக்கைக்கு அரசு
ஒப்புதல் அளித்துள்ளது.

**58. நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.**

தவறான நிருவாகம், நிதி வசதிகள் முறையாகக் கிடைக்காதது,
விற்பனையில் இடர்பாடுகள், இது போன்ற வேறு பல
காரணங்களினால் நலிவுறும் தொழில் நிறுவனங்களுக்கு
இந்நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலத்
தினைக் கருத்தில்கொண்டு, அரசு உதவி செய்து வருகிறது.
இந்நிறுவனங்களுக்குச் சில குறிப்பிட்ட நேர்வுகளில் வட்டியில்லா
விற்பனை வரி கடன்கள் சிறப்பு வகையாக அனுமதிக்கப்படு
கின்றன. மேலும், 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரணம்
பெறும் நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டத்தின் கீழ்
நிவாரணம் பெறும் நிறுவனமாகவும் அறிவிக்கப்படுகின்றன.
இவ்வாறு அறிவிக்கப்படுவதினால், நலிவுற்ற நிறுவனங்கள்
விரைவில் புத்துயிர் பெற்று இயங்கவும் கடன் கொடுத்தவர்
களின் பிடியில் இருந்து தற்காலிகமாக அதிகபட்சம் 10 ஆண்டுகள்
வரை பாதுகாப்பு பெறவும் வழி செய்யப்படுகிறது. இந்த
அடிப்படையில் கீழ்க்காணும் நிறுவனங்கள் தற்சமயம் நிவாரணம்
பெறும் நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டு நிவாரணம் பெறும்
நிறுவன சட்டத்தின் கீழ் பெறப்படும் சலுகைகளைப் பெற்று
வருகின்றன :—

(1) திருவாளர்கள் லாயல் மெஷின் ஒர்க்ஸ், கோயம்
புத்தூர்.

(2) திருவாளர்கள் ஜெனரல் கிலக் எலக்ட்ரானிக் பிரை
வேட் லிமிடெட், சென்னை.

(3) ஈஸ்வரன் அண்ட் சன்ஸ் என்ஜினியரிங் லிமிடெட்,
சென்னை.

(4) திருவாளர்கள் ரிநௌன்ட் ஆட்டோ புராடக்ட்ஸ்
அண்டு சர்க்கஸ் லிமிடெட், சென்னை.

(5) திருவாளர்கள் குன்னியூர் பேப்பர் அண்ட் போர்ட்டு
மில்ஸ் லிமிடெட், சென்னை.

(6) திருவாளர்கள் இராமச்சந்திரா கெமிக்கல்ஸ் பிரைவேட்
லிமிடெட், சென்னை.

59. தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமம்.

இந்திய அரசு, நலிவுற்ற தொழில் நிறுவனங்களை புன
ரமைப்பதற்காக, நலிவுற்ற தொழில் (சிறப்பு காப்புரை)
நிறுவனச் சட்டத்தின் கீழ் தொழில் மற்றும் நிதி புனரமைப்புக்
குழுமம் ஒன்றை உருவாக்கியது. இது 15–5–1987 முதல்
செயல்படத் தொடங்கியது. இக்குழுமத்திற்கு தலைவர் ஒருவர்,
மற்றும் உறுப்பினர் ஆறு பேர். இச்சட்டம் தனியார் மற்றும்
கூட்டு அமைப்பிலுள்ள பெரும் தொழில் மற்றும் நடுத்தர
தொழில் பிரிவுகளுக்குப் பொருந்தும். இச்சட்டம் பொதுத்
துறை நிறுவனங்கள், கூட்டுறவுத் துறை நிறுவனங்கள், சிறிய
நிறுவனங்கள், சார்பு நிறுவனங்கள் மற்றும் கப்பல் தொழில்
களுக்குப் பொருந்தாது. இச்சட்டத்தின்படி நலிவுற்ற தொழில்
நிறுவனம் என்பதன் வரையறை பின்வருமாறு: நிறுவனம்
நிறுவப்பட்டு குறைந்தது 7 ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும்.
கூட்டு மொத்த இலாப இழப்பானது அந்நிறுவனத்தின் நிகரத்
திறனுக்குச் சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருக்க
வேண்டும். தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் இலாப இழப்
பில் ஓடியிருக்க வேண்டும்.

தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமம் தொழில்
நிறுவனம் நலிவுற்றதா என ஆய்வு செய்யும். தொழில்
நிறுவனம் நலிவுற்றுள்ளதா, அதன் காரணங்கள் யாவை
என்பதை ஆராய்ந்து புனரமைப்பதற்கு திட்டம் தயாரிக்க
வேண்டுமென்று முடிவு செய்தால், குழுமம் நிதி நிறுவனங்களில்
அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் ஏதாவது ஒன்றினை
நலிவுற்ற தொழில் நிறுவனத்தை ஆராய்ந்து நலிவுற்ற தன்
மையை நீக்க தகுந்த கோட்பாடுகளைத் தொகுக்குமாறு
செயல் முனை நிறுவனமாக நியமிக்கும். இச்செயல் முறை
நிறுவனம் நியமிக்கப்பட்ட 90 நாட்களுக்குள் அறிக்கை
தயாரித்து அளிக்க வேண்டும். இத்திட்டம் சம்பந்தப்பட்ட
நிறுவனங்களுக்கு சுற்றனுப்பப்படும். இத்திட்டத்தில் கூறப்
பட்டுள்ள சலுகைகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் 60




தெரிவிக்க வேண்டும்.
நாட்களுக்குள் தங்கள் ஒப்புகையைத் தெரிவிக்க வேண்டும்.
இதுவரை இக்குழுமம் 13 இனங்களை விசாரித்துக் கொண்
டுள்ளது. 38 நிறுவனங்கள் இக் குழுமத்திடம் பதிவு செய்
துள்ளன.

2. தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்தின் முன்
வரும் நலிவுற்ற நிறுவனங்களின் நலிவுற்ற தன்மையை நீக்க
கீழ்க்கண்ட பொது வழி முறைகளை தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி
உள்ளது:—

(1) மின் வெட்டு அளவை நிர்ணயிக்கும்பொழுது, நிறு
வனத்தின் குறைந்த அளவு திறனைக் கருத்தில் கொண்டு, அடிப்
படைக் காலம் நிர்ணயிக்கப்படும்.

(2) மின் கட்டண நிலுவைகள் செலுத்தும் காலம் மாற்றி
அமைக்கப்படும்.

(3) விற்பனைவரி நிலுவைகளை தவணைகளில் செலுத்து
வதற்கு அனுமதியளிக்கப்படும்.

(4) நலிவுற்ற நிறுனத்தின் பொருள்களை அரசுத் துறை
கள் மற்றும் அரசு நிறுவனங்கள் வாங்குவதற்கு குறிப்பிட்ட
காலம் வரையில் முன்னுரிமையளிக்கப்படும்.

(5) தொழில் தகராறுகள் விரைவாகத் தீர்க்கப்படும்.
பொருளாதார ரீதியாகக் கட்டுப்படியாகாத நிறுவனங்களை
மூடுவதற்கும் அதன் விளைவாக அதிகப்படியான பணியாளர்
களைக் குறைப்பதற்கும் ஆதரவு தரப்படும்.

மேலே கண்ட சலுகைகளை வழங்குவதற்கு முன், நிறு
வனத்தின் நிலைத்திருக்கக்கூடிய தன்மை, நிதி நிறுவனங்கள்
ஒப்புக்கொண்டுள்ள உதவிகள் ஆகியவைகள் ஆராயப்படும்.

5. மேலும் அரசு, விற்பனை வரியை 3 ஆண்டுகள் தள்ளி
வைக்க ஆணை பிறப்பித்துள்ளது. தொழில் மற்றும் நிதி
புனரமைப்பு குழுமம் நலிவுற்ற நிறுவனம் என்று அறிவித்த
நாளிலிருந்தோ அல்லது நிறுவனம் புத்துயிரளிக்கப்பட்ட நாளி
லிருந்தோ, எது பிற்பட்டதோ அந்நாளிலிருந்து 3 ஆண்டு
களுக்கு இச்சலுகை வழங்கப்படும். இந்நிறுவனம் பயன்
படுத்தும் மின் அளவு, இதில் பணியாற்றுவோரின் நபர்களின்
எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இச்சலுகை
வழங்குவது குறித்து ஆராயப்படும்.

[1989 மே 3

பவியியல் மற்றும் சுரங்கத் துறை.
தொழில் கொள்கை மற்றும் 1989-90-ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்.

60. புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் பணிகள்.

1. கனிம ஆய்வுப் பணிகள்,
2. கனிம நிர்வாகம்.

என இரு முக்கிய வகையாகும்.

2. 1957 ஆம் ஆண்டிலிருந்து தொழில் மற்றும் வணிகத்
துறையின் ஒரு பிரிவான புவியியல் அமைப்பு, கனிம ஆய்வுகளை
மேற்கொண்டு வந்தது. 1983-லிருந்து இப்பிரிவு தனித்துறையாக
அமைக்கப்பட்டது. இத்துறை கனிமப் படிவங்களைக் கண்டறிந்து
மதிப்பீடு செய்து. அவற்றைப் பயன்படுத்தி, கனிமம் சார்ந்த
தொழில்கள் அமைய ஏதுவாக இருப்பதுடன், கனிம நிர்வாகப்
பணியின் சிறு பெரிய கனிமங்கள் வெட்டியெடுத்துப் பயன்படுத்து
வதுடன் அவற்றை முறையாக நிர்வகித்தல் அவற்றுக்கான கனிமச்
சலுகைகளை அளித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளது.
இதில் கனிம வருவாய் சேகரித்தலும் அடங்கும். ஏழாவது
ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்துறை பல தொழில் கனிமங்
களுக்கான ஆய்வுகளை மேற்கொண்டதுடன் கனிம நிர்வாகத்தை
முறைப்படுத்தி, கனிம வருவாய் உயர்வதற்கும் வழிவகுத்துள்ளது.

61. கனிம ஆய்வு :

புவியியல் மற்றும் சுரங்கத் துறை, திட்ட பணிகளின் கீழ்
தங்கம், பழுப்பு நிலக்கரி, குறைமணிக்கற்கள் போன்றவற்றின்
ஆய்வுப் பணிகளை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்
மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் வழக்கமாக மேற்கொள்ள
படும் களிமண், கண்ணாடி மணல், சுண்ணாம்புக்கல், வெங்கக்
கல் மற்றும் கனிமம், ஜிப்சம், சுண்ணாம்புக் கல், படிவ
மற்றும் பிற களப்பணிகளுடன் கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட
வையாகும். இத்துடன் மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தில்
அமைக்கப்பட்டுள்ள புவி நுட்பவியல் அமைப்பு, நீலகிரி மாவட்
டத்தில் நிலச்சரிவுகளை கண்காணிக்கும் பொறுப்பையும் ஏற்
றுள்ளது.

62. திட்டப் பணிகளின் செயற்பாடு :

1. தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், மகராச கடைப்
பகுதியில் தங்கம் கிடைப்பது பற்றிய ஆய்வு :

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், மகராச கடைப்
பகுதியில் தங்கம் கிடைப்பது பற்றி அறிய மேற்கொண்ட
ஆய்வுகள் ஊக்கமூட்டுபவையாக உள்ளன. இங்கு சுமார்



1989 மே 3]

1 ச. கி. மீ. பரப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இங்கு
காணப்படும் பாறைகளில் டன்னிற்கு 1 கிராமிலிருந்து 3.5
கிராம் வரை சத்து இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இங்கு
முறையான புவியியல் வரைபடம் தயாரிக்கும் ஆய்வு மேற்
கொண்டதுடன் சுமார் 2,500 மண் மற்றும் பாறை புவி இரசாயன
மாதிரிகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. இங்கு நிலை 1 ஆய்வுப்
பகுதியில் தங்கம் காணப்படும் ஆழ அளவினைக் கண்டறியவும்
இப்படிவத்தைப் பொருளாதார ரீதியில் பயன்படும் சாத்தியக்
கூறுகள் பற்றி அறியவும் 6 சிறந்த கனிமம் கொண்ட பகுதியில்
துறப்பணத் துளைகளிட திட்டமிடப்பட்டுள்ளது.

2. தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி லிக்னைட் நிறு
வனத்தின் சுரங்கக் குத்தகைப் பகுதிக்கு வெளியே பழுப்பு
நிலக்கரி கிடைப்பது பற்றிய விரிவான ஆய்வு :

தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம், காட்டுமன்
னார்குடி வட்டங்களில் வடக்கில் கம்மாபுரத்திற்கும் தெற்கில்
ஸ்ரீமுஷ்ணத்திற்கும் இடையே 30-35 ச.கி.மீ. பரப்பில் சுரங்கக்
குத்தகையற்ற பகுதிகளில் பழுப்பு நிலக்கரி படிவம் கண்டறிய
விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் பழுப்பு
நிலக்கரி சராசரியாக 10 மீட்டர் கனத்தில் காணப்படுகிறது.
இங்கு காணப்படும் மேல் மண் பொதியளவு 47-70 மீட்டர்
ஆகும். மேல் மண் அளவு மற்றும் பழுப்பு நிலக்கரி படிவ
அமைப்பின் விகிதம் 11:1. இப்பகுதியில் 200 மீ. சதுர
இடைவெளியில் சுமார் 30 துறப்பணத் துளைகளிட்டு மேல்
மண் பழுப்பு நிலக்கரி விகிதம், நீரியல் இடையூறுகள் மற்றும்
பிற தகவல்கள் அறிய திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை
1,620 மீட்டர் அளவிற்கு 18 துறப்பணத் துளைகளிடப்பட்டு,
இப்பகுதியில் இருப்பு 100 முதல் 120 மில்லியன் டன்களாக
இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

3. புவி இரசாயன மற்றும் புவி பௌதிக பிரிவுகள் அமைத்தல் :

கூட்டு ஆய்வு முறைகளான புவி பௌதிகம் மற்றும் புவி
இரசாயன முறைகளைப் பயன்படுத்தி, தென் மாவட்டங்களில்
ஆய்வுகள் மேற்கொள்ள சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்
பெறுதல், இத்திட்டத்தில் அடங்கும். அட்டாமிக் அப்சார்ப்சன்
ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர் போன்ற சோதனைக் கூட
உபகரணங்களும் பிளக்ஸ் கேட் மேக்னடோ மீட்டர் புரோட்டான்
பிராசசிங் மேக்னடோ மீட்டர், டைம் டொமைன் இண்டியூசுடு
போலரைசேசன் பிரிவு போன்ற புவி பௌதிக உபகரணங்களும்
உள்நாட்டிலும் வெளி நாட்டிலிருந்தும் மின்சார மற்றும் காந்த
ஆய்வுகளை மேற்கொள்ள தருவிக்கப்பட்டுள்ளன.

புவி இரசாயன ஆய்வுப் பணிகளின் கீழ் தர்மபுரி மாவட்டத்
தில், ஜவ்வாது மலைப்பகுதியில் தெற்கு மற்றும் தென்மேற்குப்
பகுதிகளில் சுமார் 28 ச.கி.மீ. பரப்பில் ஓடை படிம மாதிரிகள்
சேகரித்து, டின் மற்றும் இதர கனிமங்களைக் கண்டறியும்
பணி முன்னேறி வருகிறது.

இத்துடன் வாழப்பாடிக்குத் தெற்கில் 100 ச.கி.மீ. பரப்பிக் டின், தங்கம், பிளாட்டினம் மற்றும் பிறஉலோகங்களைக் கண்டறிய புவி இரசாயன பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

4. காங்கேயம் சின்னதாராபுரம் பகுதிகளில் மணிக்கற்கள் மற்றும் குறை மணிக்கற்களுக்கென விரிவான ஆய்வு.

குறை மணிக்கற்கள் காணப்படும் ஒரு முக்கிய அமைப்பான சின்னதாராபுரம்—காங்கேயம் பகுதியிலும் கரூர் வட்டம் மணவாடி பகுதியிலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூபி, சபையர், கார்னட், மூன்ஸ்டோன், அமெதிஸ்ட் மற்றும் பிற குறை மணிக்கற்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன.

5. திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரில் மணிக்கற்கள் சேகரிப்பு மையம் அமைத்தல்.

மணிக்கற்கள் கிடைப்பது மற்றும் விற்பனை முறைகள் பற்றி ஆய்வுப் பணிகள் மற்றும் மணிக்கற்கள் சேகரிப்பவர்கள் மூலம் விவரங்கள் அறிய கரூரில் மணிக்கற்கள் சேகரிப்பு மையம் அமைக்கப்பட்டது. இவ்வமைப்பின் முக்கிய நோக்கம், மணிக்கற்கள் சேகரிப்பவர்கள் தங்களின் சேகரிப்புகளை அவ்வப்போது இவ்வமைப்பின் பாதுகாப்பில் வைத்து, அவற்றை ஏலத்தில் கொண்டு வருவதன் மூலம் இடைத் தரகர்கள் தவிர்க்கப்பட வாய்ப்புள்ளது. இங்கு மணிக்கற்களியல் சோதனைக் கூடம் அமைத்து அவற்றைச் சரியாகக் கண்டறிந்து, அதிகார பூர்வமான சான்றிதழ் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

63. சிறப்பு ஆய்வுப் பணிகள்.

மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம் :

1985-ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம், குன்னூரில் மலைப் பகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் கூடலூர், உதகமண்டலம், குன்னூர் மற்றும் கோத்தகிரி வட்டப் பகுதிகளில் சுமார் 1,340 ச.கி.மீ. பரப்பில், புவி நுட்பவியல் அமைப்பு அமைக்கப்பட்டது. நிலச்சரிவுகள் ஏற்படாவண்ணம் தடுக்க அல்லது அவற்றின் மூலம் ஏற்படும் சேதத்தினை குறைக்க வழிவகைகள் காண்பது நிலச் சரிவுகள் ஏற்படுவதற்கான அல்லது விரிவடைவதற்கான மூலம் அல்லது காரணங்களைக் கண்டறிதல், சுற்றுச் சூழலில் காடுகளை அழித்தல் தடுப்பு மற்றும் சுற்றுச் சூழல் வளர்ச்சிக்கென சிறந்த முறைகளை வலியுறுத்துதல் போன்ற பணிகளை இவ்வமைப்பு மேற்கொள்கிறது. இப்பிரிவு, திட்டப் பகுதியான 1,340 ச.கி.மீ. பரப்பில் புவியியல் வடிகால் அமைப்பு மற்றும் [illegible] வாட்டம் போன்ற அடிப்படை வரைபடங்களை [illegible]. இதில் 390 ச.கி.மீ. பரப்பில் புவி அமைப்பியல்



வரைபடம் தயாரிப்பு, 450 ச.கி.மீ. பரப்பில் புவியியல் சுற்றுச் சூழலமைப்பு வரைபடம் தயாரித்தல், 530 ச. கி. மீ. பரப்பில் பாறை மண் அமைப்பு வரைபடம் மற்றும் 590 ச. கி. மீ. பரப்பில் நிலப்பயன் பற்றிய வரைபடம் தயாரிப்பு போன்ற பணிகளும் அடங்கும். கத்தேர் மற்றும் மல்லிக்கோரை நிலச்சரிவுகளில் பீசோமீட்டர் மற்றும் டேப் எக்ஸ்டன்ஸோ மீட்டர் கருவிகள் அமைத்து நிலச் சரிவிற்கு உட்படக்கூடிய பகுதிகளில் சாய்வு வாட்ட நகரும் தன்மை கண்காணிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணி திட்டங்கள் நிலச்சரிவு கண்ணோட்டத்தில் இப்பிரிவில் தொழில் நுட்ப அறிவுரை பெற்ற பின்னரே செயல்படுத்தப்படுகிறது.

64. திட்டம் சாராத பணிகள் :

1988-89 ஆம் ஆண்டில் திட்டம் சாராத வகைப்பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 1989-90 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து நடைபெறும். அவையாவன :

1. தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் சிலிக்கா மணல்களுக்கான ஆய்வு.

2. சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், செவிட்டுரங்கம் பட்டியில் மணிக்கற்கள் மற்றும் குறை மணிக்கற்களுக்கான ஆய்வு தொடர்ந்து நடைபெற உள்ளது.

3. தென்னாற்காடு மாவட்டத்தில் தீக்களிமண் அமைப்புகளை மறு மதிப்பீடு செய்தல்.

4. தஞ்சாவூர் மற்றும் சிதம்பரனார் மாவட்ட உப்பங்கழிகளில் சுண்ணாம்பு சிப்பிகளுக்கான ஆய்வு.

5. தென்னார்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், மாமண்டூர் சல்பைடு படிவத்தினை ஆழத்தில் செம்பு கனிம அமைப்பினை கண்டறிய மறு ஆய்வு செய்தல்.

6. திருவண்ணாமலை மாக்னசைட் குவார்ட்ஸைட் இரும்புத் தாதுவைப் பயன்படுத்தி ஸ்பாஞ்சி இரும்பு உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்தல்.

65 சோதனைக் கூடங்கள் :

இத்துறையில் புவி இரசாயன மாதிரிகளில் நுண் அளவில் காணப்படும் மூலகங்களைக் கண்டறிய நுண் பகுப்பாய்வகமும் பாறை, தாதுக்கள், மற்றும் இதர மாதிரிகளை சோதனையிடுவதற்கென வழக்கமான முறைகளைக் கையாளும் சோதனைக் கூடங்களும் உள்ளன. இச்சோதனைக் கூடங்களில் ஆண்டு [illegible]

சராசரியாக 1,800 மாதிரிகள் சோதனையிடப்படுகின்றன. நி சோதனை, கனிம அமைப்புகளை முடிவு செய்வதில் கருத்திற் கொள்ளப்படுகின்றது.

66. கனிம நிர்வாகம் :

கனிம சலுகைகளை அளித்தல், சுரங்கங்களை மேற்பார்வை யிடுதல், கனிம வருவாய் கணக்கீடு மற்றும் சேகரித்தல், சட்டத் திற்குப் புறம்பான முறையில் கனிமங்களை வெட்டியெடுத்தல் முதலிய பணிகளை உள்ளடக்கிய முறைப்படுத்தல் பணிகள், மாவட்ட அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. காஞ்சிபுரம், கடலூர், வேலூர், சேலம், தர்மபுரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், உதகமண்டலம், மதுரை, விருதுநகர், சிவகெங்கை, இராமநாதபுரம், திருநெல் வேலி மற்றும் நாகர்கோவில் முதலிய இடங்களில் 17 மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அலுவலர் கள் கனிம நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவி புரிகின்றனர். கனிம நிர்வாகப் பணியை முறைப்படுத் தலின் மூலம் கனிம வருவாய் ரூ. 7.7 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் கனிம வருவாய் புள்ளி விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

| ஆண்டு. | | | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1983-84 | .. | .. | 283.26 |
| 1984-85 | .. | .. | 394.01 |
| 1985-86 | .. | .. | 442.00 |
| 1986-87 | .. | .. | 408.00 |
| 1987-88 | .. | .. | 768.00 |
| 1988-89 (31—12—1988 முடிய) | .. | .. | 569.00 |

67. 1989-90 ஆண்டுகளில் நடைபெறவுள்ள புதுத்திட்டங்கள்.

1. தர்மபுரி மாவட்டம், காமல்பட்டிக்கருகில் நியோபியம் மற்றும் பிற அரிய கனிமங்களுக்கான புவி இரசாயன ஆய்வு.

2. நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசிக் கும் திருநெல்வேலிக்குமிடைப்பட்ட மலைப்பகுதிகளில் ... தொடர்பு பற்றிய புவி இரசாயன ஆய்வு,



3. சேலம், வடார்க்காடு மாவட்டங்களில் புவிபௌதிகத் தொடர் ஆய்வு.

4. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் ஆலை யில் விரிவாக்கத் தேவைக்கென செந்துறை பகுதியில் சுண்ணாம்புக்கல் கண்டறியும் பணி.

5. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆலங்குளம் ஆலையை நவீனமாக்குதல் தேவைக்கென திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் கண்டறியும் பணி.

6. சேலம் மாவட்டத்தில் பாக்ஸைட் தாதுவிற்காக ஆய்வு.

68. கனிமக் கொள்கைகள்.

சுரங்கத் தொழில் மற்றும் கனிமம் சார்ந்த தொழில்களின் அமைப்பு இவற்றுக்கு ஊக்கமூட்டுவதற்கென குத்தகைக் காலம், கனிம இருப்புகளின் பாதுகாப்பு, சிறு படிமங்களைத் தனியார் துறைக்கு அளித்தல், கனிமங்களை வெட்டியெடுத்து பயன் படுத்தும் தொழில்களில் இடையூறுகளைக் களைய தொழில் நுட்பக் குழுக்கள் அமைத்தல், போன்ற கனிம கொள்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் சிறப்பம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

1. கனிமங்களை வெட்டியெடுத்து, பயன்படுத்தும் பெரிய வகைத் தொழில்களுக்கு 20 ஆண்டுகள் சுரங்கக் குத்தகையும், நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கு 10 ஆண்டுகளும், கனிம வணிகத்திற்கு 5 ஆண்டுகளும் சுரங்கக் குத்தகை காலம் அளிக்கப் பட்டுள்ளது.

2. பெரிய வகைத் தொழில்களின் காலத்தை 40 ஆண்டு களாகக் கொண்டு அவற்றின் நவீனமயம் மற்றும் விரிவாக்கத் திற்கென 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையாக இருமுறை புதுப்பித்தல்.

3. தற்போதுள்ள சிமெண்ட் ஆலைகளின் நவீனமயமாக்கு தல் மற்றும் கொள்ளளவு பெருக்கத்தை கருத்தில்கொண்டு ஆலைகளில் இருந்து 20 கி.மீ. தூரம் வரையிலுள்ள சுண்ணாம்புக் கல் இருப்புக்களை பாதுகாத்தல்.

4. 10,000 டன்களுக்கும் கீழ் இருப்பளவுள்ள வெங்கச்சுல் மற்றும் கனிமம் கனிம அமைப்புகளைத் தனியாருக்கு அளித்தல்,

[illegible] [1989 ஜூலை

7. [illegible] வரைபடங்கள் தயாரிப்பதற்கான கனிம ஆய்வு முடிவுகளை அளித்தல்.

8. [illegible] அமைப்பு சார்ந்த தொழில்களுக்கும், [illegible] மற்றும் வெப்பநாணிகளுக்காகவும், [illegible] இடைபூறுகளைக் களைவதற்கான இரு தொழில் [illegible] தன் அமைக்கப்பட்டன.

9. [illegible] வழிமுறை தொடர்பாக [illegible] சுரங்கத்திலிருந்து 1988-ல் செய்யப்பட்ட திருத்தங்கள் மேலும் எளிதாக்கப்பட்டுள்ளன.

1989 ஜூலை]

பாகம் அ.

| திட்டங்கள். | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1988-89. | திருத்தப்பட்ட மதிப்பீடு 1988-89. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1989-90. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மாநில திட்டம் சார்ந்த வகை அளிப்பு .. | 44.68 | 51.89 | 49.99 |
| திட்டம் சாராதவகை அளிப்பு .. .. .. | 53.98 | 59.48 | 61.39 |
| மொத்தம் .. | 98.66 | 111.37 | 111.38 |

பாகம்—ஆ.

நீதித்தேவை 1988–89.

| வரிசை எண் மற்றும் செயலாக்கத் திட்டம் மற்றும் செயல் துறைத் திட்ட வகை. (1) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1988–89. திட்டம் சாராதவை. (2) | திட்டம் சார்ந்தவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| அ. கரங்கங்கள் மற்றும் கனிமங்கள் .. .. | 53.98 | 44.68 | 98.66 |
| ஆ. நோக்க வகை :— | | | |
| 01. சம்பளங்கள் .. .. .. | 46.11 | 34.44 | 80.55 |
| 02. ஊதியங்கள் .. .. .. .. | 0.70 | 0.85 | 1.55 |
| 03. பயணச் செலவுகள் .. .. .. .. | 2.60 | 3.53 | 6.13 |
| 04. அலுவலகச் செலவுகள் .. .. .. | 1.48 | 1.87 | 3.35 |
| 05. தொழில் துறை சிறப்பு பணித்தொகை .. | 0.05 | .. | 0.05 |
| 06. வாடகை விகிதங்கள் மற்றும் வரிகள் .. | 0.01 | 1.15 | 1.16 |
| 07. விளம்பரச் செலவுகள் .. .. .. | .. | .. | .. |
| 15. இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் .. .. | 0.06 | 0.87 | 0.93 |
| 16. மோட்டார் வாகனம் .. .. .. | 2.30 | 0.85 | 3.15 |
| 17. பராமரிப்பு .. .. .. .. | 0.01 | .. | 0.01 |
| 18. பொருட்கள் மற்றும் வழங்குதல் .. .. | 0.45 | 0.16 | 0.61 |
| 26. இதர செலவினங்கள் .. .. .. | 0.21 | 0.96 | 1.17 |
| மொத்தம் .. | 53.98 | 44.68 | 98.66 |

| வரிசை எண் மற்றும் செயலாக்கத் திட்டம் மற்றும் செயல் துறைத் திட்ட வகை. (1) | திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம், 1988–89. திட்டம் சாராதவை. (5) | திட்டம் சார்ந்தவை. (6) | மொத்தம். (7) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| அ. கரங்கங்கள் மற்றும் கனிமங்கள் .. .. | 59.48 | 51.89 | 111.37 |
| ஆ. நோக்க வகை :— | | | |
| 01. சம்பளங்கள் .. .. .. .. | 51.36 | 38.52 | 89.88 |
| 02. ஊதியங்கள் .. .. .. .. | 0.20 | 0.60 | 0.80 |
| 03. பயணச் செலவுகள் .. .. .. .. | 3.15 | 3.63 | 6.78 |
| 04. அலுவலகச் செலவுகள் .. .. .. | 1.68 | 1.79 | 3.47 |
| 05. தொழில் துறை சிறப்பு பணித் தொகை .. | 0.05 | .. | 0.05 |
| 06. வாடகை வீதங்கள் மற்றும் வரிகள் .. .. | 0.01 | 1.19 | 1.20 |
| 07. விளம்பரச் செலவுகள் .. .. .. | .. | 0.28 | 0.28 |
| 15. இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் .. .. | 0.07 | 3.04 | 3.11 |
| 16. மோட்டார் வாகனம் .. .. .. | 2.25 | 0.72 | 2.97 |
| 17. பராமரிப்பு .. .. .. .. | 0.01 | .. | 0.01 |
| 18. பொருட்கள் மற்றும் வழங்குதல் .. .. | 0.45 | 0.16 | 0.61 |
| 26. இதர செலவினங்கள் .. .. .. | 0.25 | 1.96 | 2.21 |
| மொத்தம் .. | 59.48 | 51.89 | 111.37 |

| வரிசை எண் மற்றும் செயலாக்கத் திட்டம் மற்றும் செயல் துறைத் திட்ட வகை. (1) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1989–90. திட்டம் சாராதவை. (2) | திட்டம் சார்ந்தவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| அ. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் .. | 61.39 | 49.99 | 111.38 |
| ஆ. நோக்க வகை :— | | | |
| 01. சம்பளங்கள் .. | 53.82 | 40.07 | 93.89 |
| 02. ஊதியங்கள் .. | 0.20 | 0.50 | 0.70 |
| 03. பயணச் செலவுகள் .. | 2.75 | 3.13 | 5.88 |
| 04. அலுவலகச் செலவுகள் .. | 1.68 | 1.44 | 3.12 |
| 05. தொழில் துறை சிறப்பு பணித் தொகை .. | 0.05 | .. | 0.05 |
| 06. வாடகை வீதங்கள் மற்றும் வரிகள் .. | 0.01 | 1.18 | 1.19 |
| 07. விளம்பரச் செலவுகள் .. | .. | .. | .. |
| 15. இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் .. | 0.07 | 0.82 | 0.89 |
| 16. மோட்டார் வாகனம் .. | 2.10 | 0.73 | 2.83 |
| 17. பராமரிப்பு .. | 0.01 | .. | 0.01 |
| 18. பொருட்கள் மற்றும் வழங்குதல் .. | 0.45 | 0.16 | 0.61 |
| 26. இதர செலவினங்கள் .. | 0.25 | 1.96 | 2.21 |
| மொத்தம் .. | 61.39 | 49.99 | 111.38 |



பாகம்-1—தொடர்ச்சி.

நிதித்தேவை 1988–89—தொடர்ச்சி.

| மற்றும் திட்ட விவரம். (1) | வரவு செலவுத் திட்ட மதிப்புடு 1988–89. திட்டம் சாராதவை. (2) | திட்டம் சார்ந்தவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| தனித்தனி திட்ட வாரியாகச் செலவினங்கள் .. | 53.98 | 44.68 | 98.66 |
| 2. திட்டம் சாராதவை— | | | |
| 1. புவியியல் இயக்ககம் .. | 27.78 | .. | 27.78 |
| 2. புவியியல் மாவட்ட நிர்வாகம் .. | 3.74 | .. | 3.74 |
| 3. தமிழ்நாடு கனிம மேம்பாட்டுத் திட்டம் .. | 22.46 | .. | 22.46 |
| 3. திட்டம் சார்ந்தவை— | | | |
| 4. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உதவியுடன் கனிம மேம்பாட்டுத் திட்டம் .. | .. | 0.01 | 0.01 |
| 5. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குன்னூர் புவிநுட்பவியல் அமைப்பு .. | .. | 4.00 | 4.00 |
| 6. தென்னாற்காடு மாவட்டத்தின் பழுப்பு நிலக்கா படிக அமைப்பு ஆய்வுப்பணி .. | .. | 1.82 | 1.82 |
| 7. புவிபௌதிக மற்றும் புவி இரசாயனப் பிரிவு .. | .. | 1.11 | 1.11 |
| 8. மாநில புவியியல் விரிவுபடுத்துதல் .. | .. | 11.91 | 11.91 |
| 9. புவியியல் கழக மாவட்ட நிர்வாகம் விரிவு படுத்துதல் .. | .. | 25.83 | 25.83 |
| மொத்தம் .. | 53.98 | 44.68 | 98.66 |

| மற்றும் திட்ட விவரம். (1) | திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 1988-89. திட்டம் சாராதவை. (5) | திட்டம் சார்ந்தவை. (6) | மொத்தம். (7) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| தனித்தனி திட்ட வாரியாகச் செலவினங்கள் .. | 59.48 | 51.89 | 111.37 |
| 2. திட்டம் சாராதவை— | | | |
| 1. புவியியல் இயக்கம் .. .. .. | 31.45 | .. | 31.45 |
| 2. புவியியல் மாவட்ட நிர்வாகம் .. .. | 4.61 | .. | 4.61 |
| 3. தமிழ்நாடு கனிம மேம்பாட்டுத் திட்டம் .. | 23.42 | .. | 23.42 |
| 3. திட்டம் சார்ந்தவை— | | | |
| 4. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உதவியுடன் கனிம மேம்பாட்டுத் திட்டம் .. | .. | 0.01 | 0.01 |
| 5. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குன்னூர் புவிநுட்பவியல் அமைப்பு .. .. | .. | 3.58 | 3.58 |
| 6. தென்னார்க்காடு மாவட்டத்தின் பழுப்பு நிலக்கரி படிக அமைப்பு ஆய்வுப்பணி .. .. | .. | 3.12 | 3.12 |
| 7. புவிபௌதிக மற்றும் புவி இரசாயனம் பிரிவு. | .. | 1.14 | 1.14 |
| 8. மாநில புவியியல் விரிவுபடுத்துதல் .. .. | .. | 13.54 | 13.54 |
| 9. புவியியல் கழக மாவட்ட நிர்வாகம் விரிவு படுத்துதல் .. .. .. .. | .. | 30.50 | 30.50 |
| மொத்தம் .. | 59.48 | 51.89 | 111.37 |

| மற்றும் திட்ட விவரம். (1) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1989-90. திட்டம் சாராதவை. (8) | திட்டம் சார்ந்தவை. (9) | மொத்தம். (10) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| தனித்தனி திட்ட வாரியாகச் செலவினங்கள் .. | 61.39 | 49.99 | 111.38 |
| 2. திட்டம் சாராதவை— | | | |
| 1. புவியியல் இயக்ககம் .. .. .. | 33.32 | .. | 33.32 |
| 2. புவியியல் மாவட்ட நிர்வாகம் .. .. | 4.55 | .. | 4.55 |
| 3. தமிழ்நாடு கனிம மேம்பாட்டுத் திட்டம் | 23.52 | .. | 23.52 |
| 3. திட்டம் சார்ந்தவை— | | | |
| 4. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உதவியுடன் கனிம மேம்பாட்டுத் திட்டம் .. .. | .. | .. | .. |
| 5. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குன்னூர் புவி நுட்பவியல் அமைப்பு .. | .. | 3.50 | 3.50 |
| 6. தென்னாற்காடு மாவட்டத்தின் பழுப்பு நிலக்கரி படிக அமைப்பு ஆய்வுப்பணி .. .. | .. | 2.92 | 2.92 |
| 7. புவி பௌதிக மற்றும் புவி இரசாயனப் பிரிவு. | .. | 1.17 | 1.17 |
| 8. மாநில புவியியல் விரிவுபடுத்துதல் .. .. | .. | 11.33 | 11.33 |
| 9. புவியியல் கழக மாவட்ட நிர்வாகம் விரிவு படுத்துதல். .. .. .. .. | .. | 31.07 | 31.07 |
| மொத்தம் .. | 61.39 | 49.99 | 111.38 |

சர்க்கரைத் தொழில்.

தமிழ்நாட்டில் 25 சர்க்கரை ஆலைகள் தற்போது இயங்கு இன்றன. அவை :—

| | | |
|---|---|---|
| கூட்டுறவுத் துறை | .. | 12 |
| பொதுத் துறை | .. | 3 |
| தனியார் துறை | .. | 10 |
| மொத்தம் | .. | 25 |

மேற்கண்ட ஆலைகளின் அன்றாட அரைவைத் திறன் வரு மாறு :—

| | | டன்கள். |
|---|---|---|
| கூட்டுறவுத் துறை | .. | 20,200 |
| பொதுத் துறை | .. | 3,750 |
| தனியார் துறை | .. | 24,950 |
| மொத்தம் | .. | 48,900 |

தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் நிலையான அளவில் சர்க்கரை உற்பத்தி செய்து வருகின்றன. சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு இந்தியாவின் உற்பத்தியில் சுமார் 10 சத விகிதமாகும். இந்தியாவிலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலை களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டிலுள்ள ஆலைகள்தான் அதிக நாட்கள் அரைவை செய்கின்றன. அதில் இந்திய அளவிலும் தமிழ்நாட்டிலும் கரும்பு அரைவை, சர்க்கரை உற்பத்தி, கட்டு மானம் மற்றும் அரைவை நாட்கள் ஆகிய விவரங்கள் கடந்த 3 அரைவை ஆண்டுகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | கரும்பு அரைவை. | சர்க்கரை உற்பத்தி. | கட்டு மானம். | அரைவை நாட்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1985-86— | (இலட்சம் டன்களில்). | | விழுக்காடு. | |
| இந்தியா .. | 685.76 | 70.16 | 10.23 | 116 |
| தமிழ்நாடு .. | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1986-87— | | | | |
| இந்தியா .. | 852.24 | 85.01 | 9.98 | 141 |
| தமிழ்நாடு .. | 85.20 | 8.14 | 9.55 | 184 |
| 1987-88— | | | | |
| இந்தியா .. | 939.43 | 91.10 | 9.70 | 154 |
| தமிழ்நாடு .. | 85.04 | 7.85 | 9.23 | 182 |

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் முழு அரைவைத் திறனில் இயங்கும்போது சராசரியாக நாளொன்றுக்கு 50,000 டன்கள் கரும்பு அரைவை செய்கின்றன. ஒரு மாதத்திற்கு அனைத்து சர்க்கரை ஆலைகளும் 15 இலட்சம் டன் கரும்பு அரைவை செய்கின்றன.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் சாதனைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**70. கரும்பு அரைவை :**

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் ஊரகத் தொழில் வளர்ச்சியில் சிறப்பான அளவில் தமது பங்கினையாற்றி வருகின்றன. இவ்வாலைகள் 1986-87 ஆம் ஆண்டில் 42.93 இலட்சம் டன்களும், 1987-88 இல் 45.32 இலட்சம் டன்களும் கரும்பு அரைவை செய்துள்ளன. இது கடந்த ஆண்டைவிட 2.39 இலட்சம் டன் கூடுதல் அரைவையாகும்.

**71. சர்க்கரை உற்பத்தி :**

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 1986-87-ல் 4,22,086 டன் சர்க்கரையும், 1987-88 இல் 4,20,993 டன் சர்க்கரையும் உற்பத்தி செய்துள்ளன. இது தமிழ்நாட்டின் சர்க்கரை உற்பத்தியில் 52 லிருந்து 53 சதவிகிதமாகும். 1986-87 இல் ஆறு சர்க்கரை ஆலைகள் சராசரி 10 சதவிதமும் அதற்கு மேலும் கட்டுமானம் ஈட்டியுள்ளன. மேற்கண்ட 6 சர்க்கரை ஆலைகளும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவை என்பது குறிப் பிடத் தக்கது. இதே போன்று 1987-88 இல் 2 ஆலைகள் மட்டும் 10 சதவிதமும் அதற்கு மேலும் கட்டுமானம் ஈட்டி யுள்ளன. மேற்கண்ட 2 ஆலைகளும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவையாகும்.

72. 1987–88 மற்றும் 1988–89 பருவங்களுக்[illegible] சட்டப்பூர்வ
குறைந்தபட்ச கரும்பு விலையும் தமிழ்நாடு அரசு [illegible] பரிந்துரை
விலையும்.

(அ) 1987-88 ஆம் பருவம் :

மைய அரசு, 1987–88 ஆம் ஆண்டிற்கு சட்டப்பூர்வ குறைந்த
பட்ச கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 185 ஆக 8.5 சதவீதம்
அல்லது அதற்கு குறைவாக உள்ள கட்டுமானத்திற்கு இணைத்தும்
8.5 சதவீத கட்டுமானத்திற்கு மேற்கொண்டு ஒவ்வொரு 0.1
சதவீதத்திற்கு அதிகக் கட்டுமானத்திற்கும் குவிண்டால் ஒன்றுக்கு
21.765 பைசா கூடுதலாக தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலை
கள் கொடுக்க வேண்டுமென்று அறிவித்தது.

தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆலைகள் மற்றும் கரும்பு உற்
பத்தியாளர்கள் சங்கங்களிலிருந்து பெறப்பட்ட கோரிக்கை
களைப் பரிசீலனை செய்து தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலை
கள் அனைத்தும் 1987–88 பருவ ஆண்டிற்கு கரும்பு விலை டன்
ஒன்றுக்கு குறைந்தது ரூ. 210 வீதம் 8.5 சதவீதம் அல்லது
அதற்குக் குறைவாக உள்ள கட்டுமானத்திற்கு இணைத்துக்
கொடுக்க வேண்டுமென்றும் மேலும் 8.5 சதவீதத்திற்கு கட்டு
மானத்திற்கும் மேற்கொண்டு ஒவ்வொரு 0.1 சதவீதம் அதிக
கட்டுமானத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 24.7058 பைசா
கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தியது.

(ஆ) 1988-89 ஆம் பருவம் :

மைய அரசு 1988–89 ஆம் பருவ ஆண்டிற்கு சட்டப் பூர்வ
குறைந்த பட்ச கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 195 வீதம்
8.5 சதவீதம் கட்டுமானத்திற்கு இணைத்தும், 8.5 சதவீத
கட்டுமானத்திற்கு அதிகப்படியான ஒவ்வொரு 0.1 சதவீதம்
கட்டுமானத்திற்கும் குறிப்பிட்ட அளவு கூடுதல் அளிக்க வேண்டு
மென்றும் நிர்ணயித்தது. இருப்பினும், தமிழ்நாடு அரசு டன்
ஒன்றுக்கு ரூ. 220 வீதம் 8.5 சதவீதம் அல்லது அதற்கும் குறை
வாகவுள்ள கட்டுமானத்திற்கு இணைத்தும் 8.5 சதவீதம் கட்டு
மானத்திற்கு அதிகப்படியான ஒவ்வொரு 0.1 சதவீதம் கட்டு
மானத்திற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 2?.?823 பைசா கூடுதலாக
வழங்க அறிவிப்பு செய்துள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு
8.5 சதவீதம் கட்டுமானத்திற்கு இணைந்து டன் ஒன்றுக்கு
ரூ. 220-ல் இருந்து ரூ. 225 ஆக உயர்த்தி அறிவித்துள்ளது.
1988–89 ஆம் ஆண்டில் மாநில அரசின் சராசரி கரும்பின் விலை
டன் ஒன்றுக்கு ரூ. 259 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளாக முதலில் கூட்டுறவு சர்க்கரை
ஆலைகளும் பிறகு பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் தாங்கள்
ஈட்டிய இலாபத்தின் அடிப்படையில் கூடுதல் கரும்பு விலை



வழங்கி வருகின்றன. கூடுதல் கரும்பு விலை கொடுப்பதின்
நோக்கம், ஆலைகள் ஈட்டும் இலாபத்தினை நியாயமான வரியாகச்
செலுத்துவதா, இலாபத்தினை கரும்பு பயிரிடுவோர்களுக்குக்
கரும்பு விலையாக பகிர்ந்து அளிப்பதா என்ற இரண்டில் ஒன்று
ஆலைகள் தேர்ந்தெடுப்பது ஆகும். [illegible] இலாபத்தினை
கரும்புக்குக் கூடுதல் விலையாகக் கொடுப்பது சிறந்தது எனக்
கருதப்படுகிறது. இச்செயல் ஆலைகளுக்குத் தேவைப்படும்
கரும்பு நிரந்தரமாகக் கிடைக்க வழிவகை செய்கிறது. அரை
வைப் பருவத்தில் ஈட்டப்பட்ட இலாபத்தின் அடிப்படையில்
10 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளிடமிருந்து கூடுதல்
கரும்பு விலை வழங்க பிரேரணைகள் பெறப்பட்டுள்ளன.
அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலையில்
"கம்ப்யூட்டர்" சாதனத்தை நிறுவியுள்ளதால் கால தாமத
மின்றி சீரான முறையில் கரும்பு விலையை வழங்கி வருகின்றன.

73. கரும்பு விவசாயிகளுடன் இலாபத் தொகையை பகிர்ந்து
கொள்ளுதல்.

சில மாநிலங்களில் சர்க்கரை ஆலைகள் மத்திய அரசு நிர்ண
யித்த சட்டப்பூர்வ விலையை விட அதிகமாகவே கரும்பு விலை
கொடுத்த போதிலும், ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குத்
தங்கள் இலாபத்தில் பங்கு கொடுப்பதில்லை. ஆனால், தமிழ்
நாட்டில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள்
தாங்கள் ஈட்டிய இலாபத்தினை கரும்பு விவசாயிகளுடன் பகிர்ந்து
கொள்கின்றன. தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத்
துறை சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 2,05,898 உறுப்பினர்கள்
உள்ளனர். உண்மையான விவசாயி ஆதரவு நிறுவனங்களாக
கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் தங்களது
இலாபத் தொகையினைத் தமது கரும்பு விவசாயிகளுடன் பகிர்ந்து
கொள்வதால், விவசாயிகளுக்கு ஆதாயமான கரும்பு விலை
கிடைக்க வாய்ப்பளித்து, ஆண்டுதோறும் தங்களுக்கு வேண்டிய
கரும்பு கிடைக்க உறுதி செய்து கொள்கின்றன. கூட்டுறவு மற்றும்
பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் தங்கள் உறுப்பினர்
களுடன் பங்கிட்டுக் கொண்ட இலாபத் தொகை பற்றிய விவரங்
கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வ. எண் (1) | ஆண்டு. (2) | ஆலைகள் எண்ணிக்கை. (3) | கூடுதல் கரும்பு விலையாக வழங்கிய தொகை. (4) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1984–85 .. .. | 5 | 425.76 |
| 2 | 1985–86 .. .. | 6 | 350.77 |
| 3 | 1986–87 .. .. | 9 | 655.83 |
| 4 | 1987–88 .. .. | 10 | 716.10 |

இலாபத் தொகையினை கூடுதல் கரும்பு விலையாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதால் கரும்பினை வெல்லம் அரைக்க அனுப்புவதிலிருந்து தடுக்கப்படுகிறது. மேலும், இவ்வாறு வழங்கப்படும் தொகையின் ஒரு பகுதி ஆலைப் பகுதி அபிவிருத்தி நிதி, ஆலை அபிவிருத்தி நிதி மற்றும் திருப்பித்தரப்படாத வைப்புத் தொகை ஆகிய இனங்களுக்காக ஆலைக்கு வழங்கப்பட்டு ஆலையின் பொருளாதார நிலை மேம்பாடடைய வழி வகுப்பதுடன் ஆலைப் பகுதியில் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

74. இலாபம் :

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 1986-87-ல் வரிக்குமுன் இலாபத் தொகை ரூ. 1,519.55 இலட்சமாகும். 1987–88-ல் தோராயமான இலாபத் தொகை ரூ. 2,699.43 இலட்சமாகும். (வரிக்கு முன்) இது கடந்த ஆண்டை விட ரூ. 1,179.88 இலட்சம் கூடுதலாகும். 1986–87 ஆம் ஆண்டு ஒரு டன் சர்க்கரைக்கு ரூ. 360 வரிக்கு முன் இலாபமாக இருந்தது. 1987–88-ல், ரூ. 641.20 இலாபமாக உயர்ந்து இருக்கிறது.

75. உற்பத்தி மதிப்பு :

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி மதிப்பு 1986–87-ல் ரூ. 19,842 இலட்சமாக இருந்தது. 1987–88-ல் ரூ. 21,423 இலட்சமாக உயர்ந்துள்ளது.

76. நி[illegible]மான சொத்து :

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் 1987–88-ல் [illegible] சொத்தின் மதிப்பு ரூ. 11,[illegible]00 இலட்சமாகும்.

77. புதிய ஆலைகள் :

கரும்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் மேலும் சர்க்கரை ஆலைகள் நிறுவ அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசு, இம்மாநிலத்தில் நான்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் ஐந்து தனியார் சர்க்கரை ஆலைகளும் ஆக மொத்தம் 9 சர்க்கரை ஆலைகள் நிறுவ அனுமதி வழங்கியுள்ளது. இவை ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 2,500 டன் அரைவைத்திறன் கொண்டவைகளாக இருக்கும். மேலும் தற்போது இயங்கி வரும் ஆலைகளில் 13 ஆலைகளுக்கு விரிவாக்கம் செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் 8 கூட்டுறவு மற்றும் பொதுத்துறையையும் ஐந்து தனியார் துறையையும் சார்ந்தவைகளாகும். புதிய



சர்க்கரை ஆலைகளும் மற்றும் விரிவாக்க திட்டங்களை நிறைவேற்றி உற்பத்தி தொடங்கும் போது 1990-91-ல் தமிழகத்திலுள்ள ஆலைகளின் மொத்த அரைவைத் திறன் 85,650 டன்னாக உயரும்.

78. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி திட்டம்:

சிதம்பரம் மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஒவ்வொன்றிலும் சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி இயந்திரம் ரூ. 483 இலட்சம் செலவில் நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி தமிழ்நாடு சர்க்கரை கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உயர் அழுத்த கொதி கலங்களை நிறுவி தற்போது கிடைக்கும் கரும்பு சக்கையைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்து உபரியாகக் கிடைக்கும் மின்சாரம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்கப்படும். இந்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சர்க்கரைத் தொழில் குறிப்பாக நாட்டில் கூட்டுறவு முறையிலேயே முதன்மையாகும். இத்திட்டத்திற்கு மத்திய அரசும் மாநில அரசும் ரூ. 97 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளன. மேலும் ஆண்டு ஒன்றுக்கு பராமரிப்பு மானியமாக ரூ. 52.8 இலட்சம் 6 ஆண்டுகளுக்குத் தேவைப்படும். உபரியாக சுமார் 160 இலட்ச யூனிட் மின்சாரம் உற்பத்தியாகும். அதனை பொது விநியோகத்திற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கிக் கொள்ளும்.

79. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் :

தமிழ்நாடு சர்க்கரை கழகம் 1956 கம்பெனிகள் சட்டத்தின்படி ஒரு கம்பெனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 15.50 கோடி. செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 7.79 கோடி. இக்கழகம் இரண்டு சர்க்கரை ஆலைகளை நிறுவியுள்ளது. அவை :—

1. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.
2. ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எறையூர், பெரம்பலூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

இந்த இரு ஆலைகளைத் தவிர தனியார் துறையில் இயங்கி வந்த மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரத்திலுள்ள மதுரா சர்க்கரை ஆலையைத் தமிழ்நாடு அரசு 26-12-1983-ல் ஒரு அவசர ஆணையின் மூலம் மேற்கண்ட ஆலையும் சர்க்கரைக் கழகத்துடன் இணைத்துள்ளது.]

80. சர்க்கரை இயந்திரம் தொழிற்பட்டறை:

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் சர்க்கரை ஆலைக்கு வேண்டிய கரும்பு அரைவைக்குப் பயன்படும் உருளைகளை சீர் செய்யவும் பொதுவான உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்யவும் தொழிற்

இயக்ககம் அல்லது நடுத்தரத் தொழில்களுக்கான தொழில் ஒப்புதல் பதிவு செயலகம் ஆகியவற்றிலிருந்து வரும் விண்ணப்பங்களையும் இது பரிசீலிக்கிறது. பெரிய, நடுத்தர தொழில்களுக்காக ஒரே மைய அமைப்பின் கீழ் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெறும் ஏற்பாட்டை முகவரமைப்பின் உயர் அதிகாரக் குழுவைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்துடன் ஒருங்கிணைப்புப் பணியையும் இப்பிரிவு கவனிக்கிறது.

3. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த இயக்ககம் பரிசீலித்த இடங்களில் ஆண்டு வாரியாகத் தனித்தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | தொழில் உரிமம். | தொழில் நுட்ப மேம்பாட்டு தலைமை இயக்ககம் பதிவு செய்தவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1986 .. .. .. | 291 | 82 |
| 1987 .. .. .. | 216 | 86 |
| 1988 .. .. .. | 255 | 61 |
| 1989 (31–1–1989 வரையிலும்) .. | 32 | 6 |

உரிமம் வழங்கும் கொள்கை எளிதாக்கப்பட்டதால் எண்ணிக்கை குறைந்துள்ளது.

### சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம்.

83. சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம் இரும்பு சரக்கு பெட்டிகள், பக்கட் வீல் எக்ஸ்கவேட்டர், பழுப்பு நிலக்கரி எடுத்துச் செல்லும் அமைப்பு, கன்வேயர் தாங்கிகள் இயந்திரங்கள், உயர் அழுத்த மற்றும் எரிவாயு எடுத்துச் செல்லும் கலன்கள், நீர் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் குழாய்கள், நீர் அணைகளுக்கான மதகுகள், கப்பல் தளவாட சரக்கு இறக்கும் கிரேன்கள் உள்ளிட்ட பல்வேறு திறன்கொண்ட பலவகைப்பட்ட பளுதூக்கி இயந்திரங்கள் ஆகியவற்றைத் தயாரித்து இரும்பாலைகள், அனல்மின் நிலையங்கள், நீர் மின் நிலையங்கள், கப்பல் தளங்கள், துறைமுக பொறுப்புக் கழகங்கள், தமிழக மின்வாரியம், பாரத கனரக மின் பொருள்கள் நிறுவனம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கு அளித்து வருகிறது. மேலும் தமிழக மின்வாரியம், பாரத கனரக மின் பொருள்கள்

[1989 மே 3

நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம், மெசனான் டாக்
லிமிடெட் குஜராத் மாநில மின் வாரியம், தேசிய அனல்
மின்வாரியம் போன்ற பொதுப்பணி நிறுவனங்கள் உள்ளிட்ட
பல்வேறு அனல்மின் மற்றும் நீர் மின் நிலையங்கள், இரும்பு
கட்டுமான பணிகள், தொழிற்கூட கட்டிடங்களுக்கு வேலை
வரைபடம் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும்
பணிகள் ஆகியவைகளை மேற்கொண்டு வருகிறது.

84. இந்நிறுவனம் ஒ அண்டு கே என்னும் மேற்கு ஜெர்மனி
நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து பக்கட் வீல் எக்ஸ்கலேட்டர்
என்னும் ரூபாய் 45 கோடி மதிப்புள்ள மூன்று மண்வாரி இயந்
திரங்களை தயாரித்து நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திற்கு
அளிக்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே
இரண்டு இயந்திரங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது
இயந்திரமும் மிக விரைவில் முடிக்கும் தருவாயில் உள்ளது.
அரசு நிறுவனங்களிலேயே இம்மாதிரியான மிகவும் சிறந்த
தொழில் நுட்பம் வாய்ந்த எந்திரங்களை தயாரித்து அளிக்கும்
ஒரே நிறுவனம் எஸ்.எஸ்.எல். என்பது குறிப்பிடத்தக்கது.

85. விசாகப்பட்டினம் உருக்காலை, இந்தியன் ரெயில்வே
கனரக ஆயுத வண்டி தொழிலகம் (H.V.F. Avr.j) ஆகிய
நிறுவனங்களிடமிருந்து சுமார் ரூ. 505 இலட்சம் மதிப்புள்ள
24 பளுதூக்கி (கிரேன்) எந்திரங்களை தயாரித்து அளிக்கும்
பணி ஆணையைப் பெற்று இயங்கி வருகிறது. தேசிய அனல்
மின் வாரியத்திடமிருந்து டெல்லிக்கு அருகில் உள்ள தாத்ரி
( Da.iri ) என்னுமிடத்தில் சுமார் 16,000 டன் மற்றும்பீகார்
மாநிலத்தில் உள்ள ககல்கான் ( Kahalg:r.n ) என்னுமிடத்தில்
சுமார் 14,000 டன் இரும்பு கட்டுமான பணிகளுக்கு பணி
ஆணைகளைப் பெற்று செய்து வருகிறது. நெய்வேலி பழுப்பு
நிலக்கரி கழகத்திடமிருந்து பெற்ற பணிகளை செவ்வனே
செய்து முடித்ததன் காரணமாக மற்றுமோர் பக்கட் வீல்
எக்ஸ்கலேட்டர் சுமார் ரூ. 8 கோடி மதிப்புள்ள இயந்திரத்தை
செய்து முடிக்கும் பணி ஆணையை இந்நிறுவனம் பெறும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது.

86. நவீனமயமாக்கப்பட்ட உற்பத்தி வசதிகளைக் கருத்தில்
கொண்டு அதிக இலாபம் ஈட்டக் கூடிய பளுதூக்கும் இயந்
திரங்களை சிறப்பு சரக்கு பெட்டிகள், பக்கட் வீல் எக்ஸ்க
லேட்டர் போன்றவைகளை தயாரித்து அளிக்கும் பொருட்டு,
இந்நிறுவனம் சில அயல்நாட்டு நிறுவனங்களுடன் கூட்டு ஒப்பந்
தம் செய்துள்ளது. மேலும் சர்க்கரை, பெட்ரோகெமிகல்,
மற்றும் காகித தொழிற்சாலைகளுக்கான இயந்திரங்களை
உற்பத்தி செய்யும் துறையில் ஈடுபட தேவையான அனைத்து
முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இதைத் தவிர குமாய்
களைக் கொண்டு செய்யக் கூடிய உயர்ந்த ரக தொழில்நுட்ப
பெரிய அரங்குகள், கோள வடிவ மற்றும் கூடார வடிவ



1989 மே 3]

மேற்கொள்ளும் முயற்சி
தொங்கும் வகை கட்டுமான பணிகளை
யிலும் ஈடுபட்டுள்ளது. மற்றும் இந்திய ரெயில்வே கட்டிட
கம்பெனியுடன் ( Irc.n ) கூட்டு சேர்ந்து நம் நாட்டிலும்
மற்றும் அயல் நாடுகளிலும் தொழில்கள் செய்ய ஏற்பாடு செய்து
வருகிறது. இந்நிறுவனத்தின் பணிகளை ஏனைய பகுதிகளி
லும் நிரம்பபடுத்தவும், உற்பத்தி ஆதாயத்தை அதிகரிக்கச் செய்ய
வும், ரெயில் இந்திய தொழில் நுட்பவியல் பொருளாதார சேவை
நிறுவனத்தை ( RITES ) ஆலோசகராக அமர்த்தியுள்ளது.
தற்போதுள்ள பளுதூக்கி இயந்திரங்களை மாற்றி அமைப்பதற்
கும் மற்றும் நவீனப்படுத்துவதற்கும் தேவையான தொழில்
நுட்ப அறிவுகளை கோனே (KONE) பின்லாந்து நாட்டு நிறுவனத்
திடம் பெறுவதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக்
கொண்டுள்ளது.

87. 1982–83 ஆம் ஆண்டு வரை இழப்பில் இயங்கி வந்த
இந்நிறுவனம் 1983–84 ஆம் ஆண்டு முதல் இலாபம் ஈட்டத்
தொடங்கியுள்ளது. 1982–83 ஆம் ஆண்டு ரூ. 5.70 கோடியாக
இருந்த விற்பனை, 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 26.55 கோடியாக
உயர்ந்தது. மேலும் 1988–89 ஆம் ஆண்டில் இது ரூ. 32.00
கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறு
வனத்தின் கடந்த ஐந்து ஆண்டு கால நிதி நிலைமைகள் கீழே
கொடுக்கப்பட்டுள்ளது :—

| நிதியாண்டு. | விற்பனை. | வட்டி மற்றும் தேய்மான ஒதுக்கீட்டுக்கு முன்பான இலாபம். | நிகர ஆதாயம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1983–84 .. .. | 1,618.24 | 209.03 | 106.20 |
| 1984–85 .. .. | 1,010.35 | 164.59 | 43.00 |
| 1985–86 .. .. | 1,342.25 | 189.59 | 39.21 |
| 1986–87 .. .. | 1,291.47 | 241.90 | 52.51 |
| 1987–88 .. .. | 2,654.81 | 361.38 | 43.23 |
| 1988–89 (திட்டமிடப்பட்டுள்ளது.) | 3,270.63 | 340.00 | 40.00 |
| 1989–90 (திட்டமிடப்பட்டுள்ளது.) | 3,350.00 | 375.00 | 45.00 |

தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்)

88. தமிழ்நாட்டில் மின்னணுத் தொழில் வளர்ச்சியின் தேவையை உணர்ந்த தமிழக அரசு, 1974-75 ஆம் ஆண்டில் ஒரு மின்னணு நிறுவனத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) 1977 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 1980-81 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது. பொதுத் துறையில் சில தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. பெரும்பாலும் கூட்டு முயற்சியில் (Join Venture) கீழ்க்கண்ட மின்னணு பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகள் நிறுவப்படுகின்றன.

செய்தித் தொடர்புக் கருவிகள்.

தொழிற்சாலைக் கட்டுப்பாட்டுக் கருவிகள்.

கணிப்பொறி.

நுகர் மின்னணு பொருட்கள்.

உதிரிப்பாகங்கள் தயாரிப்பு.

சீரிய, தொழில் நுணுக்கம் வாய்ந்த பொருட்கள் உற்பத்தி.

பொதுத் துறை தொழிற்சாலைகள்.

89. எல்காட் தனது நேரடி நிர்வாகத்தின்கீழ் இரண்டு தொழிற்சாலைகளை இயக்குகிறது. அதில் ஒன்று கம்பியில்லா செய்தித் தொடர்புக் கருவிகளைத் தயாரிக்கும் பிரிவு. இப் பிரிவில் மேற்கொண்ட சீரிய ஆராய்ச்சிப் பணியின் விளைவாகக் கம்பியில்லா செய்திப் போக்குவரத்து, பேச்சு வடிவினில் மட்டு மில்லாமல் புள்ளி விவரங்கள் பரிமாற்றத்திற்கும் உதவும்படியும் மற்றும் தொலைபேசி நிலையங்களோடு இணைப்பிற்கும் வழி வகுக்கும் சிலபல கருவிகளை வடிவமைத்துள்ளது. இந்தப் பிரிவு கடந்த ஆண்டில் (1987-88) நடைபெற்ற ஆண்டு விற்பனை ரூபாய் 120 இலட்சத்தில் 33.3 விழுக்காடு கூடுதலாக இந்த ஆண்டு (1988-89) ரூபாய் 160 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது. இப்பிரிவில் இந்த ஆண்டில் சுமார் ரூபாய் 25 இலட்சம் ரொக்க இலாபத்துடன் நிகர இலாபம் ரூபாய் 14 இலட்சம் கிடைக்க சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

மற்றொரு பிரிவில் ஒப்பந்தத்திற்கு ஏற்ப பொருட்கள் தயாரிக் கப்படுகிறது. குறிப்பாக மத்திய அரசின் நிறுவனங்களான பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், இந்துஸ்தான் டெலிபிரின்



டர்ஸ் லிமிடெட் போன்ற நிறுவனங்களுக்கு சில தொழிற் நிறு வனங்களின் ஒத்துழைப்போடு ஒப்பந்தப்படி கருவிகளை உற்பத்தி செய்து வருகிறது.

நடப்பாண்டில் இப்பிரிவின் ஆண்டு விற்பனை ரூபாய் 50 இலட் சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பிரிவின் நடப் பாண்டில் கிடைக்கக்கூடிய ரொக்க இலாபம் ரூபாய் 5 இலட்சத் தில் ரூபாய் 3 இலட்சம் நிகர இலாபம் கிடைக்கும் சாத்தியக் கூறு கள் உள்ளன.

இவை தவிர, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு, அவை தயாரிக்கும் மின்னணுக் கருவிகளைத் தனது விற்பனை உதவித் திட்டம் வாயிலாக எல்காட் நிறுவனம் விற்பனை செய்கிறது.

கூட்டு முயற்சிப் பிரிவுகள்.

90. மேற்கூறிய அரசுக்கு முழுவதும் சொந்தமான பொதுத் துறை பிரிவுகளை நிர்வகிப்பதோடல்லாமல், கூட்டு முயற்சியிலும் பல தொழிற்சாலைகளை எல்காட் நிறுவியுள்ளது. இதன் வாயி லாக தனியார் துறையிலுள்ள நிர்வாகம், தொழில் நுட்பம், மற் றும் நிதிவசதிகள் ஆகியவற்றை எல்காட் நிறுவனத்தின் [illegible], நிர் வாகம் மற்றும் தொழில் நுட்பம் வசதியோடு [illegible] தொழிற் சாலைகளைத் தொடங்குவதால் [illegible] பதிலாகக் கூட்டு ஒரு பொது [illegible] நிறுவி நிர்வகிக்க முடி முயற்சியில் [illegible] தொழிற்சாலைகளைத் கிறது. ஆகவே, கூட்டு முயற்சியில் தொடங்க 'எல்காட்' முக்கியத்துவம் கொடுத்து, மின்னணுத் தொழிற்சாலைகள் விரைவாகவும், பரவலாகவும் வளர்ச்சி பெற வழி கோலுகிறது.

தற்சமயம் உற்பத்தியிலிருக்கும் 11 கூட்டு முயற்சி நிறுவனங் களின் விவரங்கள் (இணைப்பில்) கொடுக்கப்பட்டுள்ளன. ஓசூரில் உள்ள பொதுத்துறை பிரிவான 'அலுமினியம், எலக்ட் ராலிடிக் கெப்பாசிட்டர்' தயாரிக்கும் இந்த நிறுவனம் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 ஆம் நாளிலிருந்து "எல்காட் நியூ எரா டெக்னாலஜிஸ் லிமிடெட்" என்னும் கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. "எல்காட்" கூட்டு முயற்சியில் தொழிற்சாலைகள் தொடங்க திட்ட முதலீடு ஒரு கோடி மற்றும் அதற்குமேல் இருக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தி உள்ளது. மேலும் பொதுவாக இனி எந்த தொழிற்சாலையையும் பொதுத்துறையில் தொடங்க வேண்டாம் என அரசு அறிவுறுத்தியுள்ளது. சீரிய தொழில் நுட்பத்துடன் இனி வரும் புதிய தொழிற்சாலைகளை தொடங்கவிருக்கிறது. [illegible] செய்தித் தொடர்பு கணிப்பொறி ஆகியவற்றிற்கு முத லிடம் கொடுக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட கூட்டு முயற்சி நிறுவனங்கள் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது :—

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் பெயரும் (1) | தயாரிக்கும் பொருள். (2) | கூட்டுப் பங்கு தாரரின் பெயர். (3) |
| --- | --- | --- |
| 1 எலக்ட்ரோ ஸ்கேன் இந்தியா லிமிடெட். | லைன் அவுட்புட் ட்ரான்ஸ்பார்மர்ஸ் | திரு. என். கே. குமார். |
| 2 | மின்சுற்று பலகைகள் | திருவாளர்கள் அமால்கமேசன் |
| 3 இன்செம் கம்யூனிகேசன் லிமிடெட். | 18ஜி. எச். இசர்ட், டிஜிடல் மைக்ரோ வேவ்ஸ் சிஸ்டம்ஸ் | திரு. என். குமார். |
| 4 ஆல்பா எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட். | நுண்ணலை சுற்றுகள் | திரு. செல்லப்ப அவர் பிரேம் குமார். |
| 5 தமிழ்நாடு மைக்ரோ வேவ்ஸ் காம் பொனன்ட்ஸ் லிமிடெட். | நுண் அலை வடி கட்டிகள். | டாக்டர் எம். எஸ். முத்துசாமி. |
| 6 .. | செக்யூரிட்டிமீட்டரிங் ரிக்கார்டிங் சிஸ்டம் | திரு. கே. தங்கராஜு. |
| 7 | தொழிற்சாலை முறை பாதுகாப்பு கட்டுப்பாடு திட்டம். | திரு. பி. வேணு நாதன். |
| 8 | [illegible] இசர்ட் [illegible] [illegible]கேசன் | பிகோ எலக்ட்ரானிக்ஸ் மற்றும் எலக்ட்ரிக்கல் லிமிடெட். |
| 9 சிட்டிசன் எல்காட் லிமிடெட். | கம்பியில்லா [illegible] தொடர்பு [illegible]கள். | திரு. எம். டி. [illegible]ராஜன். |

மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிட்ட நிறுவனங்களில் முக்கியமானவை மின் சுற்றுப் பலகைகள், டிஜிடல் மைக்ரோ வேவ்ஸ் சிஸ்டம், டைம் டிவிஷன் மல்டிபிள் அக்ஸஸ் சிஸ்டம்ஸ், மற்றும் நுண்ணலை சுற்றுகள் போன்றவை தயாரிப்பதற்கான வைகள் ஆகும். அமெரிக்காவின் தொழில் நுட்பத்துடன்



முற்றிலும் ஏற்றுமதி செய்யும் மின் சுற்று பலகைகள் தயாரிக்கும் தொழிற்சாலை 1990-91 ஆம் ஆண்டு தனது உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஹாரிஸ் கோபரேஷன் அமெரிக்க நிறுவனத்தின் தொழில் நுட்பத்துடன் செய்தி தொடர்புக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை தனது உற்பத்தியை 1990-91-ல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல் செய்தித் தொடர்புக் கருவிகள் தயாரிக்கும் மற்றொரு (டைம் டிவிஷன் மல்டிபிள் அக்ஸஸ் சிஸ்டம்ஸ்) நிறுவனத்திற்காக டி.ஆர்.டி.. பிரான்ஸ் வழங்கவிருக்கும் தொழில் நுட்பம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இரண்டு கூட்டுத்துறை தொழிற்சாலைகளின் திட்டங்கள் பரிசீலனையில் இருக்கிறது. அவைகள் பின் வருமாறு :—

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | திட்ட முதலீடு (சுமாராக) (ரூபாய் இலட்சத்தில்). |
| --- | --- |
| 1 ஃபேக்டரி ஆட்டோமேசன் ப்ராடக்ஸ்— சி. என். ஸி. கண்ட்ரோல்ஸ். | 500 |
| 2 பேஸ் லாக் சோர்ஸஸ் அண்ட் ப்ளாக் டவுன் கன்வர்டெர்ஸ். | 167 |

எல்காட்டின் முதலீடு.

91. பொதுத்துறை பிரிவுகளில் எல்காட் நிறுவனம் ரூபாய் 93.75 இலட்சத்தைப் பங்குத் தொகையாக முதலீடு செய்துள்ளது. நீண்ட காலக் கடனுதவியாக நிதி நிறுவனங்களிலிருந்து ரூபாய் 86 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதைத் தவிர, குறுகிய கால கடனுதவியாக ரூபாய் 50 இலட்சம் வங்கிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் தேதி வரை பங்குத் தொகையாக கூட்டு முயற்சியில் ரூபாய் 297.26 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

எல்காட்டின் விற்பனை விவரம் :

எல்காட்டின் கடந்த ஆண்டு (1987-88) பொதுத்துறை மற்றும் கூட்டுத்துறை விற்பனை ரூபாய் 15.34 கோடியாகும். நடப்பாண்டு (1988-89) சுமார் ரூபாய் 22 கோடி விற்பனையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற ஆண்டு விற்பனையிலும் 43 விழுக்காடு கூடுதலாகும். புதிதாக வரவிருக்கும் கூட்டுத்துறை தொழிற்சாலைகள் மற்றும் ஏற்கெனவே உற்பத்தியிலிருக்கும் கூட்டுத்துறையின் வளர்ச்சியினாலும் 1989-90 ஆம் ஆண்டு விற்பனை சுமார் ரூபாய் 31 கோடியை எட்டும். இது நடப்பாண்டு விற்பனையில் 41 விழுக்காடு கூடுதலாகும். 1989-90 ஆம் ஆண்டில் கூட்டு முயற்சியில் முதலீடு செய்யும் பங்குத் தொகை ரூபாய் 5.08 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இணைப்பு.

[illegible] உற்பத்தி [illegible]கள் :

| [illegible] நிறுவனத்தின் பெயரும். (1) | தயாரிக்கும் பொருள். (2) | [illegible] பெயர். (3) |
|---|---|---|
| 1 சியர்ஸ் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட். | கருப்பு வெள்ளை மற்றும் [illegible] தொலைக்காட்சிப் பெட்டிகள். | திரு. ஏ. கே. பட்டாச்சாரியா. |
| 2 எல்காட் நியூ எரா டெக்னாலஜிஸ் லிமிடெட். | அலுமினியம் எலக்ட்ராலிடிக் கெபாசிட்டர். | திரு. [illegible] |
| 3 ருக்மிணி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட். | [illegible] ரெசிஸ்டர்ஸ். | திரு. [illegible] செட்டியார். |
| 4 அட்வெண்ட் கம்ப்யூட்டர் சர்வீஸஸ் லிமிடெட். | சாப்ட்வேர் கம்ப்யூட்டர் தயாரிப்பு (ஏற்றுமதி). | திரு. மைக்கேல் அருள். |
| 5 எல்காட் பவர் கன்ட்ரோல்ஸ் லிமிடெட். | கன்வெர்டர் இன்வெர்டர். | திரு. ஜி. வி. சுகுமார. |
| 6 கோடி எல்காட் லிமிடெட். | மருத்துவப்பயனுக்கான மின்னணுக் கருவிகள். | திரு. கி. பி. வேலுசாமி. |
| 7 லேம்டா எல்காட் லிமிடெட். | மைக்ரோ-பேஸ்டு இன்ஸ்ட்ருமென்டேஷன். | திரு. கே. வி. பிரசாத். |
| 8 எல்காட் விஸ்டாஸ் லிமிடெட். | ஒலிபெருக்கி பாகங்கள். | திரு. டி. வை. விஸ்வநாதன் |
| 9 இன்போடெக் லிமிடெட். | கம்ப்யூட்டர் தயாரிப்பு. | திரு. எல். பட்டாபிராமன் |



1989 மே 3]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 10 டெலிமேட் டிக்ஸ் சிஸ்ட்டம்ஸ் லிமிடெட். | தொலைபேசி கருவிகள். | திரு. ஆர். தேவதாஸ். |
| 11 வின்ஃபில்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட். | கெபாசிட்டர் தயாரிப்புக்கான பாகங்கள். | திரு. எ. அசோகன். |

மத்திய அரசு முதலீடுகள்.

93. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் :

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், 1956 ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மத்திய அரசின் முதலீடு ரூ. 1,343,4348 கோடியாகும். தற்போது இந்நிறுவனம் 26,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இது ஒருங்கிணைந்த தொழில் தொகுதியாகும். இதில் பின்வரும் பிரிவுகள் உள்ளன :

| பிரிவு. (1) | உற்பத்தி. (2) | உற்பத்தி திறன். (3) |
|---|---|---|
| அ. திறந்த வகை நிலக்கரி சுரங்கம்-2. | பழுப்பு நிலக்கரி | 11.2 மில்லியன் டன் ஆண்டுக்கு. |
| ஆ. அனல் மின் நிலையங்கள்-2. | மின் சக்தி | 1,230 மெ.வா. |
| இ. உரத் தொழிற் சாலை. | யூரியா | ஆண்டுக்கு 1,29,200 டன் யூரியா. |
| ஈ. நிலக்கரி பாளங்கள் தயாரிப்பில் கரியாக மாற்றும் ஆலை. | லீகோ கரி, கல்கரி, அதன் துணைப் பொருட்கள். | ஆண்டுக்கு 2,62,000 டன் கல்கரி தயாரித்தல் (லீகோ கரி — கல்கரி). |
| உ. களிமண் சுத்தப்படுத்தும் ஆலை. | கயோலின் | சுத்தப்படுத்தப் பட்ட 6,000 டன் களிமண். |

பு 2 எ 53-102—34

2. மத்திய அரசு, விரிவாக்கப் பணித் திட்டங்களுக்கு 1983 ஆம் ஆண்டு பிப்ரவரியில் அனுமதியளித்தது.

(i) இரண்டாவது சுரங்கம் —நிலை II.
(4.7 மெ. டன்னிலிருந்து 10.5 மெ.டன்).

(ii) இரண்டாவது ஆலை மின் நிலையம்—நிலை II
(630 மெ. வாட்டிலிருந்து 1,470 மெ.வா. வரை).

கூடுதலாக, கீழ்க்காணும் திட்டங்கள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றுக்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

(அ) சுரங்கம் 1.—6.5 மெட்ரிக் டன்னிலிருந்து 10.5 மெட்ரிக் டன்னாக விரிவுபடுத்தல்.

(இ) அனல் மின் நிலையம் 1.— 600 மெகாவாட்டிலிருந்து 1,020 மெகாவாட்டாக விரிவுபடுத்தல்.

(உ) இரண்டாம் அனல் மின் நிலையத்தில் சுரங்கங்களுக்கான மிதவை (BWE) 1,400 லிட்டர் உடன் 210 மெகாவாட் பிரிவு ஒன்றைக் கூடுதலாக சேர்த்தல்.

(எ) சுரங்கம் 3.—ஆண்டொன்றுக்கு 11.0 மெ. டன் பழுப்பு நிலக்கரி.

(ஐ) அனல் மின் நிலையம் III.— 1,500 மெ.வாட்—3,500 மெகாவாட்.

94. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்.

தொலை தகவல் தொடர்புத் துறையில் அரசு நிறுவனமாக இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் நிறுவனம் 1960 ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 742 இலட்சமாகும். தற்போது இந்நிறுவனம் சுமார் 1,800 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. மின் இயந்திர டெலிபிரிண்டர்கள் உற்பத்தியிலும் துணை சாதனங்கள் உற்பத்தியிலும் இது ஈடுபட்டுள்ளது. உலகின் இப்பகுதியில் செய்தித் தொடர்புத் துறையில் இந்நிறுவனம் முதலாவதாக விளங்குகிறது. தற்போது இந்நிறுவனம் மின்னணு டெலிபிரிண்டர் உற்பத்தித் திட்டங்களையும் மின் டெலிபிரிண்டர் உற்பத்தித் திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. கூட்டாகக் கூடுதல் அலுவலகத் தானியங்கி, தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் தயாரிப்பு சாத்தியக்கூறை இந்நிறுவனம் ஆராய்ந்து வருகிறது.



95. இணைப்புப் பெட்டி தொழிற்சாலை.

எல்லா வகையான உருக்கு, பற்றவைப்பு முறை இணைப்பு வகையைச் சேர்ந்த இலேசான கனமுள்ள பெட்டிகளை சுவிட்சர்லாந்து, ஜூரிச்சிலுள்ள சுவிஸ்கார் எலிவேட்டர் கம்பெனி என்கிற நிறுவனத்தின் கூட்டுழைப்புடன் சென்னை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை நிறுவப்பட்டது.

தொழில் நுட்பத் தரத்தை உயர்த்துவது, நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவது ஆகியவற்றின் மூலம் நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தியளவை 1,000 ஆக எட்டுவதென இத்தொழிற்சாலை திட்டங்கள் கொண்டுள்ளது. இதற்காகும் திட்டச் செலவு ரூ. 51.21 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் நடப்பு நிலவரப்படி 15,732 பேர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

96. இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம்.

திரைப்படத் தயாரிப்புத் தொழிலுக்கு கச்சா திரைப்படச் சுருள்களையும் மருத்துவமனைகளுக்கு எக்ஸ்-கதிர் படச் சுருள்களையும் தொழில்முறை, அமெச்சூர் புகைப்படமெடுப்பவர்களுக்குத் தனிவகை புகைப்படச் சுருள்களையும் முறையாக வழங்கும் பொருட்டு, 1960 ஆம் ஆண்டில் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம், 1967-ல் அதன் உற்பத்தியைத் தொடங்கியது.

இந்நிறுவனத்தில் இரண்டு தயாரிப்புத் தொழில் பிரிவுகள் உள்ளன. ஒன்று உதகமண்டலத்திலுள்ள பிரதான தொழில் பிரிவாகும். இங்கு திரைப்படச் சுருள், படத்தாள் ஆகியவற்றின் தயாரிப்புப் பணி அனைத்து நிலைகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. மற்றொன்று சென்னைக்கருகே அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள இறுதிநிலை தயாரிப்புப் பிரிவாகும். இங்கு இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிலிருந்து தொழில் முறை எக்ஸ்-கதிர் படச்சுருள், கிராப்பிக் ஆர்ட்ஸ் வகை திரைப்படச் சுருள் ஆகியவற்றின் இறுதிநிலை தயாரிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்துடன், எக்ஸ்-கதிர் படச்சுருள் 'கிராபிக் ஆர்ட்ஸ்' படச்சுருள் முதலியவற்றுக்காக 'டெவலப்பர்' இரசாயனப் பொருட்களின் உற்பத்தியும் இந்நிறுவனத்தின் தயாரிப்பில் அங்கம் வகிக்கிறது.

1988ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி இந்நிறுவனத்தில் 3,440 பேர் வேலைக்கமர்ந்துள்ளனர். மேலும், சிப்பமிடும் பொருட்கள், நேர்த்திவகை இரசாயனப் பொருட்கள், உதிரிபொருட்கள் ஆகியவற்றை வழங்க இ...

நிறுவனம் ஏற்படுத்தியுள்ள 48 துணை/சிறு தொழில் பிரிவுகளின் மூலமாக கூடுதலாக 1,500 பேருக்கு மறைமுகமாக வேலை வாய்ப்பு வசதிகளையும் இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது.

'மாக்னடிக் டேப்' தயாரிப்பு தொழில் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல், போட்டோ டிஸ்பென்சர் தயாரிப்பு தொழிற் பிரிவுக்கான ஒரு திட்டம், பாலியஸ்டர் எக்ஸ்-கதிர் படச்சுருள் 'கிராபிக் ஆர்ட்ஸ்' படச்சுருள் ஆகியவற்றின் தயாரிப்புக்கான ஒரு திட்டம் ஆகியவை இந்நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தில் அடங்கும்.

97. பாரத கனரக மின் நிறுவனம் (பெல்), திருச்சிராப்பள்ளி.

1965 ஆம் ஆண்டு செகோஸ்லேவாகியா நாட்டின் உடனுழைப்புடன் ரூ. 24.50 கோடி செலவில் கொள்கலன் பாகங்களை தயார் செய்ய உயரழுத்தக் கொள்கலன் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. இதன் திறனை 750 மெகாவாட்டிலிருந்து 4,000 மெகாவாட்டிற்கு உயர்த்துவதற்காக, ரூ. 57.42 கோடி கூடுதல் முதலீடு செய்யப்பட்டது.

திருச்சி பெல் நிறுவனம், 18,600 தொழிலாளர்களுக்கு மேல் வேலைவாய்ப்பு அளித்துள்ள மிகப் பெரிய நிறுவனமாகும். திருச்சி பெல் நிறுவனத்திலுள்ள மனித ஆற்றல் மேம்பாட்டு மையம் மனித ஆற்றலை மேம்படுத்துவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது.

துணை/சிறுதொழில் பேட்டை 1969-ல் தொடங்கப்பட்டது. பெல் துணை/சிறுதொழில் பிரிவுகள் 1969 இல் 200 பேருக்கு வேலை வாய்ப்பளித்ததுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இன்று சுமார் 12,000 பேருக்கு (நேரடியாகவும், மறைமுகமாகவும்) வேலை வாய்ப்பளித்துள்ளது. துணை/சிறுதொழில் பிரிவுகள் தஞ்சாவூர், புதுக்கோட்டை போன்ற அண்டை மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெல் நிறுவனத்தின் முன்னேற்றம் துரித வளர்ச்சிக்கு ஏற்ப, இணையாக துணை/சிறுதொழில் பிரிவுகளும் வளர்ந்துள்ளன.

பெல் நிறுவனம், சமூக விழிப்புணர்ச்சி, சமுதாய பணிகள் ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்தி வந்துள்ளது. இந்நிறுவனம் 20 அம்சத் திட்டத்தின்கீழ் அருகிலுள்ள அதாவது கிருஷ்ண சமுத்திரம், கந்தனூர், தோகூர், கீழக்குறிச்சி ஆகிய நான்கு கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டு அங்கு பள்ளிகள் சமுதாய சுகாதார நிலையங்கள் ஆகியவற்றைக் கட்டியும், தெரு விளக்கு வசதிகளைச் செய்து கொடுத்தும் அக்கிராமங்களின் மேம்பாட்டுக்கு வழி கோலியுள்ளது.





98. பாரத கனரக மின்நிறுவனம், இராணிப்பேட்டை (கொதிகலன் துணைக் கருவிகள் தொழிற்சாலை)

கொதிகலன் துணைக் கருவிகளை எலக்ட்ரோஸ்டேடிக்பிரிசிபிடேட்டர்கள், பீட் ஹீட்டர்கள், தொழிற்சாலை விசிறிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் இத்தொழிற்சாலை வட ஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் அமைந்துள்ளது. இந்தக் கொதிகலன் துணைக் கருவிகளின் நிறுவுத்திறன் 57,000 மெட்ரிக் டன் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 32.80 கோடியாகும். இத்தொழிற்சாலை 2,708 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இத்தொழிற்சாலைக்கு அருகில் 43 துணைத் தொழிற்சாலைகளும் மேம்படுத்தப்பட்ட மனைகளும் உள்ளன. இவை மாநில அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டவையாகும். இவை முழு அளவில் செயல்படுகின்றன. பெல் நிறுவனம் இவற்றிற்கு தேவையானப் பொருட்களை வழங்குவதுடன் தொழில் நுட்ப ஆதரவும் அளிக்கிறது. அவற்றின் தொழிற்சாலைகளைச் சென்று பார்வையிடுவதுடன் பற்றவைப்பு வசதியும் அளிக்கிறது.

99. எண்ணெய் – இயற்கை வாயு கமிஷன்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட எண்ணெய் இயற்கை வாயு கமிஷனின் தென் மண்டல அலுவலக மையம், ஆந்திரப் பிரதேசத்தில் கிருஷ்ணா-கோதாவரி வடிநிலப் பகுதியிலும், தமிழ்நாடு மாநிலத்தில் காவிரி வடிநிலப் பகுதியிலும், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான அந்தமான் நிக்கோபாரில் அந்தமான் வடிநிலப் பகுதியிலும், இக்கமிஷன் பணிகளைக் கவனித்து வருகிறது.

எண்ணெய்-இயற்கை வாயு கமிஷன், இதுவரை பின்வரும் உள்நாட்டுப் பகுதிகளில்/அண்மைக் கடல் பகுதியில் எண்ணெய்/வாயுவை தோண்டியெடுத்துள்ளது/கண்டுபிடித்துள்ளது.

| | |
|---|---|
| 1. நரிமணம்<br>2. நன்னிலம்<br>3. கோவில்களப்பால் | தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு. |
| 4. புவனகிரி | .. தென் ஆற்காடு மாவட்டம், தமிழ்நாடு. |

அண்மைக் கடல் பகுதி :

| | |
|---|---|
| 1. PY—3 | .. தரங்கம்பாடி கடற்கரை. |
| 2. PY—1 | ,, பரங்கிப்பேட்டை கடற்கரை. |

நரிமணம், நன்னிலம், கோவில்களப்பால், புவனகிரி ஆகிய இடங்களில் கிடைத்த மாதிரிகள் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. 8ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வணிகப் பயனுக்காக, கணிசமான அளவுக்கு எண்ணெய்-இயற்கை வாயுவை சேமிக்க முடியும் என்று இக்கமிஷன் நம்புகிறது.

காவிரி வடிநிலப் பகுதியில் PY 3, PY 1 ஆகியவற்றின் வளங்களை அறுதியிடும் பணி நடந்தேறி வருகிறது. 8 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்திலும் இப்பணி தொடர்ந்து நடைபெறும்.

காவிரி வடிநிலப் பகுதியில் இத்திட்டம் தொடங்கப்பட்ட திலிருந்து 1987–88 வரை இக் கமிஷன் ஏறக்குறைய ரூ. 280 கோடி செலவிட்டுள்ளது.

100. சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை மணலியில் அமைந்துள்ள ஒரு மத்திய அரசு நிறுவனமாகும். நாளொன்றுக்கு 750 மெட்ரிக் டன் அம்மோனியா, 885 மெட்ரிக் டன் யூரியா, 1,650 மெட்ரிக் டன் (NPK) கலப்பு உரம் தயாரிப்பதற்காக இத்தொழிற்சாலையில் இதுநாள் வரை ரூ. 90 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

101. சேலத்திலுள்ள சேலம் உருக்காலை.

சேலம் உருக்காலை, இந்திய உருக்கு அதிகார மன்றத்தின் ஒரு தொழில் பிரிவாகும். (SAIL) இது ஒரு இந்திய அரசு நிறுவனமாகும், சேலம் உருக்காலை குறித்த விரிவான திட்ட அறிக்கையின் மூலம் இரு நிலைகளில் இந்த ஆலையினை நிறுவ, வழிவகை ஏற்பட்டது. முதற் கட்டமாக 32,000 TPA குளிர்ந்த நிலையில் உருட்டப்பட்ட எவர்சில்வர் தகடுகளை தயாரித்தல், இரண்டாவது கட்டத்தில், 2,20,000 டன் எவர் சில்வர் தகடுகள் (குளிர்ந்த, உஷ்ணநிலையில் உருட்டப்பட்ட) மின் பயனுக்கான உருக்கு, ஏனைய சிறப்புப் பயனுக்கான உருக்குகள் தயாரித்தல் என்னும் இத் திட்டத்தில் முதற் கட்டமாக ரூ. 181.19 கோடி செலவிலான திட்டத்திற்கே முதலில் அனுமதி வழங்கப்பட்டது. 1–2–1989 ஆம் நாளன்றுள்ளவாறு, இத் தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை தொழில் பழகுநர்களையும் சேர்த்து 1,245 ஆகும்.

இரண்டாவது சென்ஜிமிர் ஆலையைக் கொள்முதல் செய்து, அதற்கான வசதிகளையும் இரண்டாம் நிலை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாகச் செய்து கொடுப் பதற்கு 1988 மார்ச் திங்களில் அனுமதி வழங்கப்பட்டது. இதற்





ஆணைகள் ஜப்பானிலுள்ள திருவாளர்கள்
கான வழங்கல் ஆணைகள் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டது. இத் திட்டத்
நிஸியுவாய் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டது. மதிப்பிடப்பட்
திற்காகும் செலவு ரூ. 69.37 கோடி என்று முடிக்கப்பட
டுள்ளது. இத்திட்டம் 1991 ஜூன் திங்களுக்குள் நிறுவுவதன் மூலம்
வேண்டும். கூடுதல் சென்ஜிமிர் ஆலையை 70,000 TPA ஆக
இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் தொடர்புடைய ஏனைய
உயரும். கட்டுமான, வடிவமைப்பு, நடைபெற்று வருகின்றன.
பணிகள் திட்டமிட்டபடி

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம்.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை 1969ஆம் ஆண்டில்
ரூ. 43 கோடி செலவில் தொடங்கப்பட்டது. இந்த ஆலை
தயாரிக்கும் உற்பத்திப் பொருட்களாவன :—

சமையல் எரிவாயு, மோட்டார் ஸ்பிரிட், வடித்துப் பகுக்
கப்படும் நாப்தா, விமான டர்பைன்களுக்கான எரிபொருள்
தரம் உயர்ந்த மண்ணெண்ணெய், நடுநிலையில் வடித்து சுத்தி
கரிக்கப்படும் உயர் வேக டீசல், உயவு எண்ணெயை அடிப்
படையாகக் கொண்ட சரக்குகள், எரி பொருளுக்கான எண்
ணெய்கள், பாரபின் மெழுகு, ஆஸ்பால்ட், அடிப்படைக்
கந்தகம் ஆகியவையாகும்.

முதலில் 2.5 மில்லியன் டன்னாக இருந்த இதன் நிறுவுதிறன்,
பின்னர் 2.8 மில்லியன் டன்னாக உயர்த்தப்பட்டது. 1984–85
ஆம் ஆண்டில் சுத்திகரிப்பு விரிவாக்கத் திட்டத்தின் I, IIஆம்
கட்டப் பணிகள் முடிவடைந்த பின்னர், இந்த நிறுவுதிறன் இரட்
டிப்பாக, அதாவது 5.6 மில்லியன் மெட்ரிக் டன்னாக உயர்ந்
தது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 170
கோடி ஆகும்.

இந்நிறுவனம், செய்துள்ள பெரும் விரிவாக்க, பல்துறை
நடவடிக்கைகளில் முக்கியமான திட்டங்கள் வருமாறு :—

(1) PTA, ஆர்த்தோஸைலின், பென்சீன் ஆகியவற்றை
உற்பத்தி செய்வதற்காக ரூ. 840 கோடி செலவில் அமைக்கப்
பட்ட நறுமண மருந்துப் பொருள் தொழிற்சாலை ;

(2) ரூ. 126 கோடி செலவில் உயவு எண்ணெயை அடிப்
படையாகக் கொண்ட சரக்குகளை உற்பத்தி செய்யும் திறனை
அதிகரித்தல் (1,30,000 TPA) ;

(3) நன்னிலத்தில் ரூ. 94 கோடி செலவில் [illegible] சா எண்
ணெயை வடித்துச் சுத்திகரிக்கும் [illegible] (0.5 மில்லியன் TPA)
ஆகியவையாகும்.

D
V211,31'N89
N89.14-3
144820

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannadhi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.